28347

# எழுத்துச் சீர்மை

## அறிஞர்கள் கருத்து

அமுதோன்

சேகர் வழங்கும்

# எழுத்துச் சீர்மை

## அறிஞர்கள் கருத்து

# Bibliographical Data



| | |
|---|---|
| Title of the book | ELUTTUCH CHEERMAI |
| Author | Collected Essays |
| Language | Tamil |
| Edition | First, February–1979 |
| Copyright Holder | SEKAR PATHIPPAGAM |
| Paper used | White Printing, D.D.,14. 2 kg |
| Size of the book | Double Demmy<br>21. 3×14 cm |
| Printing Points | 11 Points |
| No. of Pages | 16+224=240 |
| No. of Copies | 1200 |
| Printer | Moovendhar Achagam,<br>Madras-600014 |
| Binding | Card Board |
| **PRICE** | **Rs. 18-00** |
| Publisher | Sundaram<br>Sekar Pathippagam |
| Subject | Linguistics |
| Call number | P, 31, 1; 4 L9 |

# எழுத்துச் சீர்மை

## அறிஞர்கள் கருத்து

தொகுப்பு

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

சேகர் பதிப்பகம்

நூல் வெளியீடுவோர், விற்பனையாளர்

66, பெரியார் தெரு,

எம். ஜி. ஆர். நகர், சென்னை-600 083.

முதற் பதிப்பு
பிப்ரவரி 1979

ரூ. 18-00

அச்சிட்டோர்
மூவேந்தர் அச்சகம்
சென்னை-600 014

# உருவாக்கம்


| | |
|---|---|
| கருத்துரை | அறிஞர்கள் |
| ஓவியம்-முகப்பு | அமுதோன் |
| வரைபடங்கள் | கே. கண்ணன் |
| பிளாக் | தணிகாசலம் |
| | எலிகண்ட் |
| அச்சகத்தார் | கோ. தையமுத்து |
| | மூவேந்தர் அச்சகம் |
| அச்சுக்கோப்பு | க. வீ. தயாளன், பீ. பலராமன் |
| அச்சிட்டவர் | கே. எஸ். மணி |
| முகப்பு அச்சிட்டவர் | சியாம் சுந்தர் |
| | பிரபு பிரிண்டிங் ஹவுஸ் |
| கட்டுக்கோப்பு | க. கோவிந்தன் |
| பிழைதிருத்தம் | மா. ரா. இளங்கோவன் |
| பதிப்பாளர் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |

## நுழைவாயில்

**இருந்தமிழே உன்னால் இருந்தேன்; விண்ணோர்**
***விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்!***

அருந்தமிழ் அறிஞர்தம் எழுத்துச் சீரமைப்பு பற்றிய முயற்சிகள் 1933 முதல் தொடர்ந்து வந்தன; **பெரியார்** நூற்றாண்டு விழா (17-9-78 முதல் 17-9-79) தொடக்கத்தில் தமிழக முதல்வர் **மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்** எழுத்துச் சீர்திருத்தத்தை நாட்டில் நடைமுறைப் படுத்திட ஆணையிட்டார்கள். இது ஒரு பாராட்டத்தக்க சீரிய தொண்டு. மொழி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க அரிய நிகழ்ச்சி.

தக்க சமயத்தில் சரியான முடிவெடுத்து ஒரு நல்ல தொடக்கம் செய்து வைத்த தமிழக அரசுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி உரியது.

பலவித அமைப்புகளுடன் இருந்த தமிழ் எழுத்து வடிவங்கள் கற்போருக்கும் கற்பிப்போருக்கும் குழப்பத்தைத் தந்து வந்தன. அதற்கு ஓரளவு ஆறுதல் தரும் நிலை இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொடக்க நிலைபற்றி நாடெங்கும் பலப்பல விவாதங்கள் நடைபெறுகின்றன. இந்த நூலில் அறிஞர் பலரின் கருத்துரைகள் மட்டும் திரட்டித் தந்துள்ளோம். அக்கருத்துகள், இனி ஏறபட வேண்டிய புதுமைகளுக்கும் காண வேண்டிய வளர்ச்சிகளுக்கும் அடித்தளமாய் அமையும் என நம்புகிறோம்.

இதுவரை இதில் கருத்து ஏதும் கொள்ளாமல் இருந்தவர்கள், 'நாம் எழுதி வருகின்ற எழுத்துகளில் இத்தனைச் சிக்கல்களா? அவற்றுக்கு இத்தனை மாற்று முறைகளா?' என்றெல்லாம் கண்டறியவும் தத்தம் அறிவாராய்ச்சிக் கேற்ப இனிச் சிந்தனை செய்யவும் வாய்ப்பை உருவாக்கும் இந்நூல்.

இந்நூலுக்காகத் தேடித் தொகுத்துள்ள எழுத்தோவியங்களின் படைப்பாளர்களாகிய அறிஞர்கள், புலவர்கள் அனைவர்க்கும் மனமார்ந்த நன்றியைக் கூறிக் கொள்கிறோம். சில கட்டுரைகள் எடுத்துக் கொள்ள இடமாயமைந்த இதழ்கள், ஏடுகள், நூல்கள் ஆகியவற்றைச் சார்ந்தவர்க்கும் எமது நெஞ்சார்ந்த நன்றி.

இத்தொகுப்பிற்கு உறுதுணையாயமைந்த தமிழ் நாடு பொது நூலக இயக்குநர் உயர்திரு. வே. தில்லைநாயகம் எம். ஏ. அவர்கட்கும், நண்பர்கள் திரு. கொடுமுடி ச. சண்முகன், பேராசிரியர் மா. ரா. இளங்கோவன் ஆகியோர்க்கும் நன்றியுடையேன். மற்றும் ஓவியர் அமுதோனுக்கும், மூவேந்தர் அச்சக உரிமையாளர் திரு. முத்து அவர்கட்கும் அனைத்துக்கும் தோன்றாத்துணையாய் உதவும் நண்பர் திரு. துளசிநாதன் அவர்கட்கும் நெஞ்சார்ந்த நன்றி.

கற்றவர் உள்ளமெல்லாம் எழுத்துச் சீர்மை பற்றிய புத்துணர்ச்சி தோன்ற வேண்டும்; மிக விரைவான அறிவியல் வளர்ச்சிக்கு நம் தமிழ் மொழியும் தக்க சாதனமாக அமையவேண்டும்; தாய் மொழித் தமிழால் வையத்தோடு உறவாடி வளர்ந்து தமிழர் முன்னேற வேண்டும் என்ற ஆர்வத்துடன் இத் தொகுப்பினை—கருத்துக் கோவையினை 'தமிழ் உலக' மக்கள் முன் மகிழ்வோடு படைக்கின்றோம்.

எழுத்துச் சீரமைப்புக்கு விரைந்து பணியாற்றும் அரசும், கல்வித் துறையினரும், பொது நூலகத்துறையும் இந்நூல் எல்லோருக்கும் பயன்படும் வகையில் வாங்கி ஆதரிக்க வேண்டுகிறோம்.

**வெள்ளையாம்பட்டு சுந்தரம்**

# உள்ளடக்கம்


| | பக்கம் | ஆசிரியர் | மூலம் |
|---|---|---|---|
| 1 | 1 | பெரியார் ஈ. வெ. ராமசாமி<br>தலைவர், திராவிடர் கழகம் | எழுத்துச் சீர்திருத்தம்<br>பெரியார் சுய<br>மரியாதைப் பிரசார<br>நிறுவன வெளியீடு |
| 2 | 19 | டாக்டர் மு. வரதராசனார்<br>முன்னாள் துணைவேந்தர்<br>மதுரைப் பல்கலைக்கழகம் | ,, |
| 3 | 27 | டாக்டர்<br>தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்<br>முன்னாள் துணைவேந்தர்<br>மதுரைப் பல்கலைக் கழகம் | ,, |
| 4 | 37 | பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்<br>தலைமைப் பதிப்பாளர்<br>கலைக்களஞ்சியம் | ,, |
| 5 | 45 | பேராசிரியர்<br>அ. ச. ஞானசம்பந்தன்<br>முன்னாள் தமிழ்த்துறைத்<br>தலைவர்<br>மதுரைப் பல்கலைக் கழகம் | ,, |
| 6 | 53 | பேராசிரியர்<br>கொண்டல் சு. மகாதேவன்<br>இயக்குநர்,<br>தமிழ்வளர்ச்சித் துறை | |

7 65 கொடுமுடி ச. சண்முகன்
B. E., D. S. S., M. I. E., 'கொங்கு' இதழ்

8 75 சிரம்பான் பரமானந்தம்
மலேசியா கடிதம் 30–8–74

9 79 இலங்கை
கோவிந்தப் பிள்ளை
போதனை வனாகத்தின்
தமிழ்த்துறைத் தட்டச்சர்
இலங்கைப் பல்கலைக் கழகம்

10 81 இலண்டன்
வி. கே. தில்லை நாயகம்
பொறியாளர்

11 89 டாக்டர் சாலினி இளந்திரையன்
தமிழ்ப் பேராசிரியர்
திருவேங்கடவன் கல்லூரி
டில்லி

12 97 வே. தில்லைநாயகம் எம். ஏ,
இயக்குநர்
பொது நூலகத்துறை

130 தமிழக அரசு ஆணை

13 133 பன்மொழிப் புலவர் மாலைமுரசு
கா. அப்பாத்துரையார் 11–11–78

14 139 சிலம்புச் செல்வர்
ம. பொ. சிவஞானம்
தமிழ்நாடு அரசு
மேலவைத்தலைவர் ,,

15 143 டி. பி. எம். பெரியசாமி
சட்டமன்ற உறுப்பினர்
பெரியகுளம்

16 145 பாகூர் புலவர் சு. குப்புசாமி
தூக்கணாம்பாக்கம்

17 149 குடந்தை வீரா. இராசகோபாலன் விடுதலை 7-1-79
பி. ஓ. எல்., எம். ஏ.,

18 152 பேராசிரியர்
கலைமணி எம், ஏ.,
கிறித்தவக்கல்லூரி, தாம்பரம்

19 155 மகாகவி அ. கு. ஆதித்தர் மாலை முரசு
சென்னை 2-12-78

20 159 பேராசிரியர்
மு. உலகநாதன்
எம். ஏ., டிப் டீச்., மதுரை

21 164 புலவர்
முத்து எத்திராசன் எம்., ஏ.,
சென்னை

22 167 கி. வா. ஜகந்நாதன் கலைமகள்
ஆசிரியர் 'கலைமகள்' சனவரி 1979

23 173 டாக்டர்
வா. செ. குழந்தைசாமி தமிழ் எழுத்துச்
துணைவேந்தர் சீரமைப்பு
மதுரை காமராசர் தமிழியல் வெளியீடு
பல்கலைக்கழகம்

24 189 புலவர் ம. அய்யாசாமி எம். ஏ.,
எலம்பிள்ளை, சேலம்

25 191 டாக்டர்
முத்து. கண்ணப்பர்
*பச்சையப்பன் கல்லூரி*
*சென்னை*

26 196 டாக்டர்
பொன் கோதண்டராமன்
*சென்னைப் பல்கலைக் கழகம்*

27 204 டாக்டர்
சி. பாலசுப்பிரமணியன்
*தமிழ்துறைத் தலைவர்*
*சென்னைப் பல்கலைக் கழகம்*

28 209 சிலம்பொலி
சு. செல்லப்பன் எம். ஏ., பி. டி.,
*நிர்வாக அலுவலர்*
*தமிழ் வளர்ச்சித்துறை*

29 218 மா. ரா. இளங்கோவன்
*சென்னை*

# முன்னோர் எடுத்த முடிவு

"தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 216 எழுத்துக்களில் பலஎழுத்துக்கள் உபயோக மற்றவையாயும், அச்சுக் கோப்பவர்களுக்கு வீண் சிரமத்தை உண்டு பண்ணுகின்றவை யாயும் இருக்கின்றன. மேலும் சில சப்தங் களுக்குச் சரியான எழுத்துக்களும் இல்லை. ஆதலால், வேண்டாத எழுத்துக்களை நீக்கி வேண்டிய எழுத்துகளைச் சேர்க்க வேண்டு மென இம்மகாநாடு தீர்மானிக்கிறது."

தமிழன்பர் மகாநாடு
*சென்னை பச்சையப்பன் கலாசாலை*
2 3, 24, *டிசம்பர்* — 1933

மாநாட்டில்

முன்னணி அறிஞர்கள்

செட்டிநாட்டரசர் அண்ணாமலை செட்டியார்

இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதி

உ. வே. சாமிநாத அய்யர்

கா. ரா. நமச்சிவாய முதலியார்

மு. இராகவையங்கார்

பெ. நா. அப்புசாமி

கிருஷ்ணராவ் பான்ஸ்லே



செயற்கரிய செய்தவர்க்கு நன்றிப் படையல்

# மொழி எழுத்து

**[பெரியாரவர்கள் "மொழி" என்னும் பொருள் குறித்தும், "எழுத்து" என்னும் பொருள் குறித்தும், கும்ப கோணம் அரசியலார் கல்லூரியிலும், சென்னைப் பச்சை யப்பன் கல்லூரியிலும் ஆற்றிய விரிவுரைகளின் தொகுப்பி லிருந்து சில பகுதிகள்.]***

'மொழி' என்பதுபற்றிப் பேச, சிறிதும் அதற்கான அறிவோ, ஆராய்ச்சியோ, ஆற்றலோ அற்ற நான், 'மொழி' என்பது குறித்துப் பேசத் துணிந்தது, **மொழி தத்துவத்திலுள்ள என்னுடைய ஆசை மிகுதியின் பொருட்டேயாகும்.**

நான் கூறப்போகும் தத்துவங்களை இலக்கண இலக்கிய ஆதாரங்களுடன் விளக்குவதென்பது எனது தகுதிக்கு மேற்பட்ட காரியம். அதற்கு வேண்டிய இலக்கிய இலக்கணங்களில் பாண்டித்தியமோ, ஆராய்ச்சியோ எனக்கில்லை. ஆராய்ச்சியாளர் மேற்கோள்களையும் என்னால் காட்ட இயலாது.

எனக்குத் தோன்றிய, என் அநுபவத்துக்கு எட்டிய விஷயங்களைத்தான் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லப் போகிறேன். அவற்றில் பெரும்பாலும், உங்களுக்குக்

---

* எழுத்துச் சீர்திருத்தம். பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடு.

குற்றமாகப் படலாம். ஆகவே, நான் கூறுவதை நீங்களும், உங்கள் அறிவையும் அநுபவத்தையும், மற்றும் இது விஷயத்தில் அநுபவமும் ஆராய்ச்சியும் உள்ள பெரியோர்கள் கருத்தையும் கொண்டு சிந்தித்துப் பார்த்து ஏற்கக்கூடியதை ஏற்றும், ஏற்கக்கூடாததைத் தள்ளியும் தெளிவுபெற வேண்டுகிறேன்.

## மொழி

'மொழி' என்றால் என்ன? அது எதற்காகப் பயன்படுகிறது? என்று முதலில் கவனிக்கவேண்டும். ஒருவனுடைய கருத்தை மற்றொருவனுக்குத் தெரிவிக்க, மொழி முக்கிய சாதனமாக இருந்து வருகிறது. அது ஒலி மூலமாகவே பெரிதும் இருக்கிறது. மேலும், இச்சாதனம் மனிதர்களுக்கே சிறப்புடையதாக அமைந்திருக்கிறது. மிருகங்களும், பட்சிகளும்கூட சில செய்கைக் குறிப்புகளாலும், சிலவித சத்தங்களாலும் தம் கருத்தைத் தமக்குள் பரிமாறிக்கொள்கின்றன. ஆனால், அவற்றை மொழி என்று கூறாவிட்டாலும், ஒலிக்குறிப்பு என்று சொல்லலாம். பறவை, மிருகம், சிறுபிராணி ஆகியவை பேசிக்கொள்வது எனக்குத் தெரியும்.

உதாரணமாக, கோழியை எடுத்துக்கொள்வோம். தன் குஞ்சுகளைத் தூக்கிக்கொண்டு போகக்கூடிய அடப்பான், கழுகு, கருடன்-இவை சமீபத்தில் பறப்பதைக் கண்டதும் தாய்க் கோழியானது ஒருவிதமான ஒலி கொடுக்கிறது. அந்த ஒலியைக் கேட்டதும் குஞ்சுகள் தமக்கேதோ ஆபத்தென்று உணர்ந்து ஓடோடியும் வந்து தாய்க்கோழியின் விரிந்த சிறகுகளின் கீழ்ப் பதுங்கிக்கொள்ளுகின்றன. குரங்குகளையும் நான் கவனித்திருக்கிறேன். தாய்க் குரங்கு தொலைவிலுள்ள தன் குட்டியைத் தானாக அடையக் கூடாதபோது அதைத் தன் அருகில் அழைக்க நினைத்தால், அது சிறிது தன் பற்களைக் காட்டித் தன் மேல் உதட்டையும், கீழ் உதட்டையும் சேர்த்து ஏதோ முணு முணுப்பதுபோல் குறிப்பும், சிறிது லேசான சத்தமும் கொடுக்கும். அதைக் கண்டதும் குட்டியானது நேரே தன் தாயை வந்தடையும்.

இதுபோலவே தான் ஒரு ஆண் குரங்கின் இப்படிப் பட்ட சைகையால் பெண் குரங்கும் வந்து சேருகிறது. இதுபோல் காக்கைக்கும் நல்ல சோறு வைக்கும்போதும், 'பிதிர்'ச்சோறு வைக்கும் போதும் கவனித்திருக்கிறேன். நல்ல சோறு வைக்கும் போது நாம், கா! கா! வென்று கூப்பிடுகிறோம். முதலில் ஏதோ ஒரு காகம் வருகிறது. சிறிது பயந்துகொண்டே சாதத்தைத் தொட்டுப் பார்த்து விட்டுத் தன் இனத்தைக் கூவி அழைக்கிறது. அவையும் சத்தம் கேட்டு வந்து சாதத்தை உண்ணுகின்றன. பிதிர்ச் சோறாயிருந்தால் அக்காகம் வேறுவிதமான சத்தம் போட்டதும், மற்ற காகங்களும் அதை ஏதோ ஒரு பொறி என்று நினைத்து அதே ஒலி கொடுத்து, எந்தக் காகமும் அந்தச் சாதத்தை உண்ணாதபடி செய்கின்றன.

பிறகு, ஒரு காகம் கிட்ட வந்து மோந்து பார்த்து ஆபத்து இல்லை என்று தெரிந்தால் மற்றவைகளும் கலந்து சாப்பிடுகின்றன. எறும்புகளைக்கூட கவனித் திருக்கிறேன். எறும்பு சரமாகப் போய்க்கொண்டிருக்கும் போது நாம் ஒன்றிரண்டு எறும்புகளைக் கொன்றுவிட்டு, மற்றொரு எறும்பைச் சிறிது நசுக்கிவிட்டால், அது வேக மாகச் சென்று தனக்கு எதிர்ப்படும் எறும்புகளுக்கெல்லாம் அந்த இடத்தில் உள்ள ஆபத்தை எப்படியோ தெரிவிக் கிறது. மற்ற எறும்புகள் யாவும் எவ்வளவோ வேகமாக வந்து கொண்டிருந்தாலும் உடனே வந்த வழியே திரும்பிப் போய் எறும்புக் குழியில் இருக்கும் எறும்புகளுக்கும் தெரிவித்து அடங்கிவிடுகின்றன.

இப்படி ஏதோ சில குறிப்புகளின் மூலம் மற்றும் சில ஜீவராசிகளும் தம் கருத்தை ஒன்றுக்கொன்று பரிமாறிக் கொள்வதுதான் தெரிகிறதே ஒழிய, நமக்கிருப்பதுபோல் அவற்றிற்கு மொழி என்று ஒன்று இருப்பதாகத் தெரியக் காணோம்.

ஒருவரைப் பார்த்து உங்கள் 'மொழி' என்ன என்று கேட்பதற்கு நீங்கள் எந்த மொழியில் உங்கள் கருத்தைப் பரிமாறிக்கொள்கிறீர்கள் என்றுதான் பொருள். ஆக, மேலே தெரிவித்ததிலிருந்து மொழி என்பது ஒருவருக்

கொருவர் தம் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள உபயோகப்படுத்தும் சாதனம் என்று நன்கு விளங்குகிறது.

## பல மொழி

மக்களிடையே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் சாதனம் மொழி என்றால், அம்மக்களிடையே பல மொழிகள் வழங்க வேண்டுமென்று யாரும் விரும்பியதில்லை என்றும், தற்போது வழங்கப்பட்டுவரும் எம்மொழியும் கற்பனை செய்யப்பட்டதல்லவென்றும், உங்களுக்கு விளக்கிக் காட்ட விரும்புகிறேன்.

தர்மபுரியானும், கொங்குநாட்டுக் கிராமத்தானும், யாழ்ப்பாணத்தானும் இவர்கள் யாவரும் பேசுவது தமிழ் தான். ஆனால், தர்மபுரித் தமிழன் யாழ்ப்பாணத்தான் கூறுவதை இரண்டு முறை திருப்பிக் கூறினால்தான் தெரிந்து கொள்வான். அதேபோல் கொங்குநாட்டுக் கிராமத் தமிழன், தான் கூறுவதை மூன்று முறை திருப்பிச் சொன்னால்தான் தர்மபுரியான் அறிந்து கொள்ள முடிகிறது.

உதாரணமாக, யாழ்ப்பாணத்தான், "அவர்கள் அப்பொழுதே வந்துவிட்டார்கள்" என்று கூறுவதை, திருநெல்வேலியான், "அவர் அப்பமே வந்தா" என்பான். கிராமத்தான், "அவியொ அப்பளையே வந்தாங்கோ" என்பான். இப்படி ஒரே மொழி வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாகப் பேசப்படக் காரணம் என்ன? அவர்கள் ஒருவருக்கொருவர் சுலபத்தில் கலந்துகொள்ள வசதியான போக்குவரத்து சாதனங்கள் இல்லாமையும், அவர்களைப் பிரித்து வைக்கும் மலைகள், ஆறுகள், சமுத்திரங்கள் உள்ளமையும் ஆகிய இவைதான் காரணம்.

நம் நாட்டில் சில மலைவாசிகள் இருக்கிறார்கள். அவர்கள் பேசுவதும் தமிழ் என்கிறார்கள். ஆனால், அவர்கள் கூறுவதைக் குறிப்புகளின் மூலம் புரிந்து கொள்ள முடிகிறதே தவிர, விளக்கமாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் ஆயிரம் ஆண்டு

களாக நம் நாட்டில் தான் இருந்து வந்திருக்கிறார்கள். பின் ஏன் அவர்கள் நம்மைப்போல் பேச முடியவில்லை? அவர்களை நம்மோடு தொடர்பு கொள்ள முடியாமற் செய்த அம்மலைவாசம் தானே காரணம்? அவர்களுக்கு வேண்டிய அளவு ஏதோ குறிப்புகள் வைத்துக்கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்தினார்கள். நமக்கு வேண்டிய அளவு நாம் குறிப்புகள் வைத்துக்கொண்டு நாம் வாழ்க்கை நடத்துகிறோம். இதுதானே நமக்குள் உள்ள வித்தியாசம்? நம்முடன் தொடர்பு வைத்துக்கொண்டு அம்மலைவாசிகள் கொஞ்ச காலம் வாழ்ந்தால் நம்மைப் போல அவர்களும் பேசுவார்கள் அல்லவா?

## சீதோஷ்ணமும் ஒலியும்

மற்றும், மொழியானது அந்தந்த நாட்டுச் சீதோஷ்ணத்திற்கேற்பவும், அவரவர்களுக்கு வேண்டிய வாழ்க்கைப் பழக்க, வழக்க, பண்புக் குறிப்புகளுக்கேற்பவும் அமைந்துள்ளன.

சில மொழிகள் அதிகச் சக்தி (Energy) செலவிடாமல் சுலபமாய்ப் பேசக்கூடிய ரீதியிலும், சில அதிக சக்தியைச் செலவிட்டுச் சிரமத்தோடு பேசக்கூடிய ரீதியிலும் அமைந்திருக்கக் காண்கிறோம். உதாரணமாக, வடமொழியிலுள்ள 'ஹ' போன்ற சப்தங்கள் அடிவயிற்றிலிருந்து ஆள் துளைத்துக் கொண்டு வருவதுபோல் ஒலிக்கிறது. அவர்கள் கொஞ்சிப் பெசிக் கொள்வதுகூடச் சில சமயங்களில் ஏதோ சண்டை போட்டுக்கொண்டு கோபமாய்ப் பேசிக் கொள்வது போல் நமக்கு ஒலிக்கிறது. சீதோஷ்ண நிலையானது மக்களின் மொழியை அவ்விதம் மாற்றியமைத்து விடுகிறது. ஒரே மொழியைக் குளிர்ப் பிரதேசத்திலுள்ளவன் ஒருவிதமாயும், உஷ்ணமான பாலைவனத்திலுள்ளவன் ஒருவிதமாயும் பேசுவதைப் பார்க்கலாம்.

உதாரணமாக, ஆங்கிலேயனை எடுத்துக் கொள்வோம். அவன் சாதாரணமாகக் குளிர்தேசத்தில் வாழ்பவன். குளிரானது அவனுக்கு ஹா, ஹூ என்கின்ற

பெரும் காற்றைத் தள்ளிக்கொண்டு உச்சரிக்க வேண்டிய சப்தத்தை இயற்கையாக உண்டாக்கச் சுலபமாக அம் மொழியும், ஏன்? அதுபோன்ற வடமொழியும் பேச முடிகிறது. ஆனால், என்னதான் அவன் தமிழில் பாண் டித்தியம் பெற்றிருந்தாலும் சுத்தமான தமிழில் இலக்கணக் குற்றமில்லாமல் பேசினாலும், ழ, ள, இந்த சப்தங்களைச் சரியாக உச்சரிக்க முடிவதில்லை. எங்களூரில் தமிழில் வித்துவான் பட்டம் பெற்ற பாதிரியார் பாப்ளி என்று ஒருவர் இருக்கிறார். அவரால் மகாஜனங்கலே! என்றுதான் கூறமுடிகிறதே தவிர, மகாஜனங்களே! என்று உச்சரிக்க முடியாது. இந்தச் சப்தத்திற்கு அவருக்குப் பழக்கமான அந்தச் சீதோஷ்ணம் சரிப்படாமற்போவது தான் காரணம். அந்தச் சீதோஷ்ண நிலைக்கேற்ப அமைக்கப்பட்ட அவர் நாக்கு இந்தச் சப்தத்தை உச்சரிப்பதற்கேற்பச் சுலபத்தில் திரும்ப முடியவில்லை என்பதுதான் காரணம்.

நம்முரிலிருந்து சிலர் வடநாடு சென்று நான்கு, அய்ந்து ஆண்டு சுற்றிவிட்டு பைராகி போல் வேஷம் போட்டுக் கொண்டு இங்கு வந்து சுற்றுவார்கள். அவர்களின் வட மொழி உச்சரிப்பைக் கவனித்தால் அவர்கள் இவ்வூர்க் காரர் என்று சுலபமாய்க் கண்டுபிடித்துவிடலாம். நான் சிலரைக் குறிப்பாகக் கண்டுபிடித்து, ‘ஏம்பா, இந்த ஊரிலி ருந்து போனவன்தானே நீ’ என்று கேட்டதுண்டு. அவர் களும் ‘ஆமாம், எஜமானே’ என்று ஒப்புக் கொண்டிருக் கிறார்கள்.

இந்நாட்டுச் சீதோஷ்ணத்திற்கு ஏற்பப் பழகிய அமைக்கப்பட்ட நாக்கால் வடமொழிச் சப்தத்தைச் சரிவர உச்சரிக்க முடிவதில்லை. அந்தந்த நாட்டு மக்கள் அந்தந்த நாட்டு மொழிகளைச் சரிவர உச்சரிக்க முடிகிற தென்பதும், வேற்று நாட்டு மொழிகளைச் சரிவர உச்ச ரிப்பது அனேகருக்குக் கஷ்டமாயிருக்கிறதென்பதும், தம் நாட்டிற்கு ஒப்பான சீதோஷ்ணமுள்ள வேறு ஒரு நாட்டு மொழியைத் தம்மால் சரிவர உச்சரிக்க முடிகிறதென்பதும் எதைக் காட்டுகிறது? அந்தந்த நாட்டின் சீதோஷ்ண நிலைக்கேற்ப அந்தந்த நாட்டு மக்களின் மொழி ஒலி அமைந்திருக்கிறது என்பதைத்தானே காட்டுகின்றது.

அந்தந்த இடத்திற்கேற்பவும், அந்தந்த சீதோஷ்ண நிலைக்கேற்பவும் மொழிகள் பிரிந்திருக்கின்றன என்பது மேலே கூறியதிலிருந்து பெறப்படுகிறது.

**மொழியில் கருத்து விளக்கம்**

இனியும் கவனிக்கும் பட்சத்தில் ஒரு மொழியில் சுலபமாக விளங்கக்கூடும் ஒரு கருத்தை, மற்றொரு மொழியில் விளக்குவது வெகு கஷ்டமாயிருக்கும். அதாவது, அந்தக் கருத்தை வெளியிடுவதற்கு வேண்டிய வார்த்தைகள் அம் மொழியில் இருக்காது. காரணம் என்ன? அந்த மொழி பேசும் மக்களிடத்து, அந்தக் கருத்து இருந்ததில்லை என்பதுதான். அந்தக் கருத்து அவர்களிடத்து ஏற்பட வேண்டிய அவசியமோ, தேவையோ இருந்ததில்லை என்பதுதான் அதற்குக் காரணம்.

எந்த ஒரு மொழியின் சிறப்பும், பெரும்பாலும் அம் மொழியின் மூலம் அறியக்கிடக்கும் கருத்துக்களைப் பொறுத்துத்தான் இருக்கும். அந்தந்த மொழியிலுள்ள கருத்துக்களைக் கொண்டுதான் பெரும்பாலும் அந்தந்த மொழி பேசும் மக்களின் நாகரிகத்தைக்கூட அறிவைக்கூட ஒருவாறு அறிந்துகொள்ள முடிகிறது. உதாரணமாக ஆங்கில மொழியில் கருதப்பட்டுள்ள சில பிரபலமான புத்தகங்களை வாங்கிப் படித்தால், அவற்றில் காணப்படும் கருத்துக்களைக் கொண்டே அம்மக்களின், நாகரிகத்தின் முன்னேற்றத்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலும் அறிந்துகொள்ள முடிகிறது. ஒரு மொழியை ஏற்பதும், தள்ளுவதும்கூட, பெரும்பாலும் அந்தந்த மொழியின் பாற்பட்ட முன்னேற்றக் கருத்துக்களைப் பொறுத்துத் தான் இருக்கிறது.

**மொழியின் சிறப்பும், வளர்ச்சியும்**

ஒரு மொழியின் சிறப்புக்கும், வளர்ச்சிக்கும் மற்றொரு காரணம் உண்டு. ஒரு மொழியை எவ்வளவுக் கெவ்வளவு சுலபமாகக் கற்றுக்கொள்ள முடிகிறதோ, அவ்வளவு கவ்வளவு அது வளர்ச்சியடைவதும் சுலபமாகிறது.

சுலபமாகக் கற்றுக்கொள்ளப்படுவதற்கு எழுத்துக்கள் சுலபத்தில் எழுதக் கூடியனவாகவும் எண்ணிக்கையில் குறைவாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

இதுவுமன்னியில் மொழியின் வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் சலுகையும் ஆதரவும் மிக முக்கியமாயிருக்கிறது. அரசாங்கத்தின் ஆதரவின்றேல் ஒரு மொழி எவ்வளவு சிறப்புடையதாயினும், அதன் வளர்ச்சி மிகவும் தடைப்பட்டே நிற்கும் என்பது கண்கூடு.

ஆங்கில மொழிக்கு நம் நாட்டில் செல்வாக்கு ஏற்படக் காரணமே அது அரசாங்க மொழியாய் இருந்து வருவது தான். இதுவரை பொதுவாக 'மொழி' என்பது பற்றியும் அதன் அமைப்பு, சிறப்பு, வளர்ச்சி என்ற பலவான தன்மைகளைப் பற்றியும் ஒரு சிறிது ஆராய்ந்து பார்த்தோம். இனி நமது தகைமைசால் தமிழைப் பற்றிச் சற்று விரிவாக ஆராய்ந்து பார்ப்போம்.

## தமிழ் மொழி

தமிழ் என்றால் என்ன? மக்களா? நாடா? மொழியா? நாட்டைப் பொறுத்து, மக்களைப் பொறுத்து மொழிக்கு தமிழ் என்கின்ற பேர் வந்ததா? அல்லது மொழியைப் பொறுத்து நாட்டுக்கும் மக்களுக்கும் தமிழகம், தமிழ்நாடு, தமிழர் என்கின்ற பேர் வந்ததா? என்ற கேள்விகள், தமிழைப் பொறுத்தவரை, வித்து முந்தியா? மரம் முந்தியா? என்ற தர்க்கத்தைப் போன்றதாகவே எனக்குத் தோன்றுகிறது.

எப்படி இருந்தாலும் தமிழ் நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி என்று மூன்று பண்டங்கள் இருக்கின்றன.

இந்த மூன்றையும் முதல் ,பொருளாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் தமிழர், தமிழ் நாடு, தமிழ் மொழி என்கின்ற சொற்களைக் காண்பதற்கு முன்பிருந்தே, இவற்றைக் காணாதவர்களிடமிருந்து இந்த மூன்றையும் குறிக்கும்படியாக திராவிடம், திராவிடர், திராவிட மொழி என்ப

தாகச் சொற்கள் இருந்து வந்ததையும், வருவதையும் பார்க்கிறோம்.

தமிழ் மொழியும், அதன் சிதைவுகள் என்று சொல்லப் படும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழி களும், மக்களும், நாடுகளும்கூடி தமிழைச் சேர்ந்ததே என்றும், அந்தக் கருத்தைக் கொண்டே திராவிடம் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது என்றும் அகராதிகளும் உரைகளும் கூறுகின்றன. நாட்டிலும் இதை வெகு காலமாகவே ஒப்புக் கொண்டு வழக்கத்திலும் கொண்டு வந்திருக்கிறோம்.

வடமொழி ஆதரங்களான இலக்கியம், இதிகாசம், புராணம் ஆகியவற்றிலும், திராவிடம் என்ற சொற்கள் தமிழ் மொழியையும், நாட்டையும் மக்களையும் குறிக்கப் பழங்காலத்திலிருந்தே பயன் படுத்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தேச சரித்திரங்களிலும் திராவிடர், திரா விடம் என்ற சொற்கள் தமிழர், தமிழ்நாடு என்பவற்றிற்குப் பதிலாக உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கிறதையும் நாம் காண்கிறோம்.

ஆனால், தெலுங்கு நாட்டாராகிய ஆந்திரர்களும், கன்னட நாட்டாராகிய கன்னடியர்களும், மலையாள நாட்டாராகிய மலையாளிகளும் இதை ஒப்புக்கொள்ளத் தயங்குகிறார்கள். தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பதுபோல் தமிழும் ஒரு மொழி என்றுதான் சொல்லு கிறார்களே ஒழிய, இவையாவும் தமிழ்தான் என்பதை ஒப்புக்கொள்ள வெட்கப்படுகிறார்கள். சிலர் மறுக்கவும் செய்கிறார்கள். காரணம் அவர்களது மொழியில் ஆரியச் சொற்கள் பெரும்பான்மையாகக் கலந்துவிட்டன.

ஆதியில் ஒரே கூட்டமாக, வாழ்ந்த திராவிட மக்கள், இட நெருக்கத்தால் பல பிரிவுகளாகப் பிரிந்து சென்று ஆங்காங்கு கூடிவாழவும், அந்தந்த இடத்தின் சீதோஷ்ண நிலைக்கேற்ப அவர்களது மொழியில் சில நீட்டலும் குறுக்கலும் ஏற்படவும், அக்காலத்திய போக்குவரத்து வசதிக் குறைவு காரணமாக ஒரு பகுதிக்கும், மற்றோர்

பகுதிக்கும் தொடர்பில்லாமற் போனதால், நாளடைவில் அந்தந்த இடத்தில் வடநாட்டிலிருந்து வந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்கள் தமது மொழிக்குக் கடவுள் பேரால் பல மகத்துவங்களை எடுத்துக்கூறி, அந்தந்தப் பிரதேச மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வடமொழியை அதிக மாக உபயோகப்படுத்தும்படி செய்து, அதன் மூலம் தமது கலை ஆச்சார அனுஷ்டானம் ஆகியவைகளைப் புகுத்தி விட்டனர்.

அந்த வடமொழிக் கலப்பு காரணமாகவும், அந்தக் கலாச்சாரப் புண்புகளினால் ஏற்பட்ட பற்றுதல் காரண மாகவும், அந்தந்த மக்களுக்குத் தமது மொழி தமிழ் அல்லாத வேறு மொழியே யாகும் என்ற கருத்தும் ஏற்பட் டிருக்கிறது.

## மொழி திருத்தம்

தமிழ் மிகுதியும் நம் முற்போக்குக்கு ஏற்றபடி செம் மைப்படுத்தப்பட வேண்டும். மக்கள் கற்க மேலும் இலகு வாக்கப்பட வேண்டும். பயனுள்ள பரந்த மொழியாக்கப்பட வேண்டும்.

> "இன்றைய தமிழ் மிகவும் பழைய மொழி, வெகு காலமாகச் சீர்திருத்தம் செய்யப்படாதது, மற்ற மொழிகளைப்போல் திருத்தப்படாதது."

என்பதான இவைகள் ஒரு மொழிக்குக் குறைவாகுமே தவிர, பெருமையாகாது என்பேன். ஏன்?

பழமை எல்லாம் அநேகமாக மாற்றமாயிருக்கிறது; திருத்தப்பட்டிருக்கிறது. மாற்றுவதும், திருத்துவதும் யாருக்கும் எதற்கும் இழிவாகவோ, குற்றமாகவோ ஆகி விடாது. மேன்மையடையவும், காலத்தோடு கலந்து செல்ல வும், எதையும் மாற்றவும், திருத்தவும் வேண்டும். பிடிவாத மாய்ப் பாட்டிக் காலத்திய, பண்டைக் காலத்திய பெருமை களைப் பேசிக் கொண்டிருந்தால், கழிபட்டுப் போவோம்; பின்தங்கிப் போவோம்.

மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். போர்க்கருவிகள் காலத்திற் கேற்ப மாற்றப்படவேண்டும். அவ்வப்போது கண்டு பிடித்துக் கைக்கொள்ள வேண்டும்.

போர்க்கருவிகள் மாற்றமடைந்திருப்பதுபோல் நமது மொழியும் மாற்றம் அடைய வேண்டாமா?

பிறர் சுலபமாகத் தமிழ் மொழியைக் கற்றுக் கொள் வதற்காகவும், சுலபமாக அச்சுக் கோக்கவும், டைப் அடிக்க வும், தமிழ் எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் செய்யப் படுவது நலம் என்று நினைக்கிறேன்.

தமிழில் எழுத்துக்கள் அதிகம். ஞாபகத்தில் இருத்த வேண்டிய தனி உருவ எழுத்துக்கள் அதிகம். மொத்த எழுத்துக்கள் 216 வேண்டியிருக்கிறது என்றால், இதில் 135 எழுத்து உருவங்கள் தனித்தனி ஞாபகத்தில் வைக்க வேண்டி இருக்கிறது.

## ஆங்கிலத்தின் குறை

தமிழ் எழுத்துக்கள், ஆங்கிலம் முதலிய சில அந்நிய மொழி எழுத்துக்களைவிட, எழுத்துக் கூட்டுவதற்கு ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கிய நேர்முறையைக் கொண்ட தானாலும் எழுக்களைக் கற்கவேண்டியது கஷ்டமாகிறது. ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் உள்ளன. அவைகளில் உயிர் எழுத்துக்கள் 5 அல்லது 6. மெய் எழுத்துக்கள் 20 என்னலாம். எல்லாம் தனி எழுத்துக்களே.

உயிர் மெய் எழுத்துக்கள் அதாவது, உயிரும் மெய்யும் கூடிய எழுத்துக்கள் கிடையாது. வெகு சுலபமாக எழுத் துக்களைக் கற்றுக் கொள்ளலாம். ஆனால், இலக்கண முறை, உச்சரிப்பு முறை ஒரு பொது வரையறைக்குக் கட்டுப்பட்டதல்ல.

## தமிழின் சிறப்பு

தமிழ் அப்படியல்ல. எழுத்துக் கூட்டுதலும் உச்சரிப் பும் அதன் இலக்கணமும் பெரிதும் இயற்கையையே அடிப்

படையாகக் கொண்டதாகும். அப்படிப்பட்ட மொழியை நாம் ஏன் நவீன முயற்சிக்கு ஏற்ற வண்ணம் செப்பனிடக் கூடாது?

## ஐ, ஔ

சாதாரணமாகத் தமிழ் உயிர் எழுத்துக்களில் ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்களைக் குறைத்துவிடலாம். இந்த இரண்டும் தேவையில்லாத எழுத்துக்கள்.

மேலும், இவை கூட்டெழுத்துக்களே ஒழிய, தனி எழுத்துக்கள் அல்ல.

இவை இல்லாமல் எந்தத் தமிழ்ச் சொல்லையும் எழுத லாம்; உச்சரிக்கலாம்.

இவைகளை எடுத்துவிட்டால் சொற்களின் உச்சரிப் பிலோ, பொருளிலோ, இலக்கணத்திலோ எவ்விதக் குறை யும் குற்றமும் ஏற்பட்டுவிடும் என்று தோன்றவில்லை.

சுமார் 40 வருடங்களுக்கு முன்னால் இருந்தே நான் இதைக் கவனித்து வந்திருக்கிறேன். இந்தப்படி எழுத்து கோத்து அச்சடிக்கப்பட்டுள்ள ஒரு குறள் புத்தகத்தையும் நான் 40 வருடத்திற்கு முன்பே பார்த்திருக்கிறேன். இப் படிச் செய்வதில் மொத்தத்தில் 38 எழுத்துக்கள் (அதாவது, உயிரெழுத்து ஐ, ஔ ஆகிய 2ம் அவை ஏறும் மெய் யெழுத்துக்களில் $2 \times 18 = 36$ம் ஆக $36 + 2 = 38$) ஞாபகத்திற் கும் பழக்கத்திற்கும் தேவை இல்லாத எழுத்துக்கள் ஆகி விடும்.

(ஐ-அய்; ஔ-அவ் என எழுதலாம்.)

இவை தவிர உயிர் மெய் எழுத்துக்களில் தனி மாற்றம் பெற்றிருக்கிற ணா, றா, னா, ஆகிய மூன்று எழுத்துக்களுக் கும் தனி உருவம் தேவை இல்லாமல் ணா, றா, னா போல் ஆக்கிவிடலாம்.

மற்றும் மெய் எழுத்துக்களில் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகிய நான்கு குறில் நெடில் எழுத்துக்கள்

கொண்ட $4 \times 18 = 72$ தனி உருவ எழுத்துக்களை நீக்கிவிட்டு தனிச் சிறப்புக் குறிப்பை (அதாவது ககரத்திற்கு ஆகார நெடில் உருவம் காட்ட ஒரு 'ா' (கால்) போட்டு விடுவது போல், ககரத்துக்கு எகரம், ஏகாரம் காட்ட ஒத்தச் சுழிக் கொம்பு இரட்டைச் சுழிக்கொம்பு 'ெ, ே' போடுவதுபோல், மற்ற இகர ஈகாரத்துக்கும் உகர ஊகாரத்துக்கும் சில குறிப்புகளை உண்டாக்கி, உயிர் 10, மெய் 18, குறில் நெடில் குறிகள் 9, ஆயுதம் 1 ஆகிய 38 தமிழ் எழுத்துக்களாகச் சுருக்கிவிடலாம்.

இந்த மாறுதல் செய்வதால் நாம் மொழிக்கோ, பொருளுக்கோ, இலக்கணத்துக்கோ எவ்வித குறைபாடோ, கேடோ செய்தவர்களாக ஆகமாட்டோம்.

## அதோ, ஒரு சாதனை!

துருக்கியில் கமால் பாக்ஷா அவர்கள் எழுத்துக்களின் அடிப்படையையே மாற்றிவிட்டார். அதாவது இருந்த எழுத்துக்களையே ஒழித்துவிட்டு, வேறு மொழி (ஆங்கில) எழுத்துக்களை எடுத்துக் கொண்டார். அதனால் கற்க மிக வசதியும், இலகுவும் ஏற்பட்டுவிட்டது.

அய்ரோப்பாவில் நான் சுற்றிப் பிரயாணம் செய்த ரஷ்யா முதல், போர்த்துகல் வரை சுமார் 10, 15 நாடுகளிலும் எத்தனையோ மொழிகள் இருந்தும், அந்த மொழிகளுக்குப் பெரிதும் ஒரே மாதிரி 26 முதல் 32 எழுத்துக்கள் தான் பயன்படுத்தப்படுகின்றன. சில புதிய தனி 'ஒலி' கொண்ட மொழிகள் இருக்குமானால் அவற்றிற்கு ஏற்ப 2- அல்லது 3, புதிய உருவ எழுத்துகளைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்காவில் சமீப காலத்தில் எழுத்துக் கூட்டும் முறையை மாற்றிக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆகவே மேல் நாடுகளில் எழுத்துகள், எழுத்துக் கூட்டும் முறைகள் இவைகளில் மாற்றம் செய்வதால், இலக்கணத்தில், உச்சரிப்பில், பொருளில் மாற்றம் ஏற்படு

வதாயிருந்தாலும்கூட துணிவாக மாற்றிக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் நான் சொல்லும் மாற்றங்களுக்கு அப்படிப்பட்ட குற்றங் குறைகள் இல்லையென்றே கருது கிறேன்.

நமது தமிழ்ப் பண்டிதர்கள் இம்மாற்றங்களுக்கு ஒப்புக்கொள்ள வேண்டுமே! அதுவன்றோ பெரிய கஷ்டம்.

மேல் நாடுகளில் பண்டிதர்கள் என்றால் புத்துலகச் சிற்பிகளாயிருப்பார்கள்.

நம் நாட்டிலோ, பண்டிதர்கள் என்றால் பழமைக்கு இழுத்துக்கொண்டு போகும் பாட்டிக் கதை வீரர்களாக இருக்கிறார்கள்.

காலஞ்சென்ற மாணிக்க நாய்க்கர் அவர்கள் அக்காலத் தில் சிறிது பாடுபட்டார். ஆனால், அவர் சமயத்தை (ஓங்காரத்தை)த் தலையாக வைத்துக் கொண்டு பாடுபட் டார். ஆதலால் அக்காலத்தில் அவரிடம் எனக்குப் பற்றி ருந்தும் எனக்கு ஓங்காரத்தில் இருந்த வெறுப்பு அவரது முயற்சியையும் அறிவுத் திறனையும் அநுபவிக்க முடியா மற்படி செய்துவிட்டது. அவர் இப்போது இருந்தால் எவ்வளவோ செய்திருப்பார்.

அடுத்தபடியாக, மெய்யெழுத்துக்களில் 'ந, ங, ஞ' ஆகிய மூன்று எழுத்துக்களையும் எடுத்துவிடலாம். 'ன + த = ந' 'ன் + க = ங' 'ன் + ச = ஞ' என்று ஆக்கிவிட லாம். எனவே, மெய் எழுத்தில் ந, ங, ஞ ஆகிய மூன்றை யும் குறைக்கலாம். இவை தனித் தனியாகத் தேவை யில்லை என்றே தோன்றுகிறது. உயிரெழுத்துகளில் அய்யும், அவ்வும் எப்படி கூட்டெழுத்துக்களோ, அப்படி உயிர் மெய்யிலுள்ள கூட்டெழுத்துக்கள்தான் இந்த ந, ங, ஞ என்ற மூன்றும்.

பந்து என்ற வார்த்தையையும், பங்கு என்ற வார்த்தை யையும், 'பஞ்சு' என்ற வார்த்தையையும் எடுத்துக் கொள் வோம். ந, வையும், ங, வையும், ஞ, வையும் எடுத்துவிட்

டால், 'பன்து' 'பன்கு' 'பன்சு' என்று எழுத வேண்டியிருக்கும். இந்தச் சொற்களின் உச்சரிப்பை முதலில் சொல்லிக் கொடுத்துவிடலாம்; அல்லது சாதாரணமாக உச்சரிப்பு பழக்கத்திலேயே இருந்துவரும்.

பொதுவாகவே, 'த'வுக்கு முன் வந்தால் இப்படி உச்சரிக்கவேண்டும் 'க'வுக்கு முன் வந்தால் இப்படி உச்சரிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்துவிட்டால் பிறகு உச்சரிப்பதில் கஷ்டமிருக்காது. ஆங்கிலத்தில் இம்மாதிரி பல உச்சரிப்புகள் இருக்கின்றன.

உதாரணமாக, But (பி. யு. டி.) புட் என்றும், But (பி. யு. டி.) பட் என்றும்தான் உச்சரிப்பார்கள். இந்த வார்த்தைகள் முதலில் அறிமுகமாகாதிருந்தால், ஒரே மாதிரிதான் உச்சரிக்க வேண்டியிருக்கும். ஒரு எழுத்துக்குப் பல சப்தங்கள் இருப்பதும் தமிழுக்குப் புதிதல்ல. 'த' என்னும் எழுத்து, தடி என்ற சொல்லில் ஒருவிதமாகவும், பதம் என்ற சொல்லில் வேறுவிதமாகவும் ஒலிக்கவில்லையா?

அதேபோல் 'ன' என்ற எழுத்துக்கே 'ந' சப்தமும், 'ங' சப்தமும், 'ஞ' சப்தமும் இருந்தால் ஒன்றும் கெட்டு விடாது. இந்தச் சீர்திருத்தங்களைச் செய்தால் தமிழ் தனி உருவ எழுத்துக்கள் வெகு சொற்பமாகிவிடும்.

உயிர் எழுத்துக்கள்—10. நெட்டெழுத்துக்கள் எல்லாவற்றிற்கும், 'ா' (காலே) போட்டுவிடுவதால் அய்ந்து உருவ எழுத்துக்கள்தான் இருக்கும். அதாவது, (ஆங்கில வவ்வல்கள் போல்) அ, இ, உ, எ, ஒ, நெட்டெழுத்துக்கள், அா, இா, உா, எா, ஒா என்றே எழுதலாம்.

மெய்யெழுத்துக்கள் 18-ல் '3' எழுத்துக்கள் (ங், ங், ஞ்) எடுக்கப்பட்டால் 15 எழுத்துக்களையும், மேலே புள்ளி வைக்காமல் பக்கத்தில் ஒரே ஒரு கோடு இழுப்பதன் மூலம் காட்டலாம். அதாவது, க | , ச | , ட | , ண | , த | , ன | என்றபடி எழுதினால், க், ச், என்று அர்த்தப்படுத்திப் படிக்கலாம்.

ஆக, சிறப்புக் குறிகளில்

| | | |
|---|---|---|
| இந்தக் கோடு | | 1 |
| ஆ | ா | 1 |
| இ | ு | 1 |
| ஈ | ூ | 1 |
| உ | ு | 1 |
| ஊ | ூ | 1 |
| ஏ | ெ | 1 |
| ஏா | ே | 1 |
| | குறிகள் | 8 |

ஆக 8-சிறப்புக் குறிகளில்,

இகர, இாகாரத்திற்கும், உகர ஊகாரத்திற்கும், 4-குறிகள் புதிதாகத் தோற்றுவிக்கப்படவேண்டும். ஒகரத்திற்கும், ஓகாரத்திற்கும் எகர, ஏகார ஆகாரக் குறிப்புகளே பயன் பட்டுவிடுவதால் அவற்றிற்காகத் தனிக்குறிப்பு வேண்டிய தில்லை. அல்லது ெ, ே, என்ற இந்தக் கொம்புகளை வேறு வகையில் மாற்றிப் போட்டுக்கொள்ளலாம். கடைசியாக ஆய்தம் 1 இருக்கலாம்.

| | | |
|---|---|---|
| இப்போது, | உயிர் | 5 |
| | மெய் | 15 |
| | சிறப்புக்குறி | 8 |
| | ஆய்தம் | 1 |
| | | 29 |

29 உருவ எழுத்துக்களிலேயே கூட தமிழ் எழுத்துக் களுக்கு எண்ணிக்கையையும் (தமிழ் மொழியை) அடக்கி விடலாம். அல்லது சிலர் கருதுவது போல், 12-உயி ரெழுத்துக்களில் ஐ, ஔ தவிர, மற்ற பத்தில், 'அ'வை

அப்படியேயும் ஆவுக்குப் பதிலாக 'ா' வையும், 'எ', 'ஏ'வுக்குப் பதிலாக 'ெ', 'ே' என்ற குறிப்புகளையும் வைத்துக்கொண்டு, இ, ஈ, உ, ஊ, ஒ, ஓ என்ற ஆறு எழுத்துக்களுக்கு, ஆறு புது எழுத்துக்களை உற்பத்தி செய்துகொண்டு, இவற்றையே உயிர் மெய்யாக்க மெய்யோடு சேர்த்துப் படிப்பதனால், அப்போது

| | |
|---|---|
| உயிர் | 10 |
| மெய் | 15 |
| ஆய்தம் | 1 |
| மெய்க்குறிப்பு | 1 |

ஆக, 27 எழுத்துக்களாகும். இந்த 27 எழுத்துக்களைக் கொண்டே நமது சகல சொற்களையும் அதிசுலபமாக எழுதிவிடலாம்.

பிறமொழிச் சொற்களை நம் மொழியால் எழுதுவதற்குத் தேவைப்பட்டால் ஒன்றிரண்டு வேறு எழுத்துக்களையும் உண்டாக்கிக் கொள்ளலாம்.

அறிஞர்களும் பண்டிதர்களும் தீர்க்கமாய்ச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

எப்படியும் தமிழ்மொழி எழுத்துக்கள் குறைக்கப் பட்டாக வேண்டும்.

அச்சுக்கோப்பதற்கும், டைப் அடிப்பதற்கும் ஆங்கிலத்தைப் போல் இலகுவாக்கப்பட வேண்டும் என்பதும், கற்கும் பிள்ளைகளுக்கும் 3 மாதத்தில் படிக்கத் துவக்கலாம் என்பதும்தான் நமது ஆசை.

# டாக்டர் மு. வரதராசனார்

---

கட்டை வண்டி கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் அது ஒரு விந்தையான படைப்பாகவே போற்றப்பட்டது. ஆனால் அந்தக் காரணம் கொண்டு இன்று அதைப் போற்றத் தேவையில்லை. கார்களும், லாரிகளும் நிறைந்த இந்தக் காலத்திற்கு ஏற்றபடி வாழ்க்கையில் முன்னேற வேண்டுமே தவிர, பழைய கண்டு பிடிப்புக்களின் பெருமையை நினைந்து தேங்கி நிற்கக் கூடாது.

கார்களும், லாரிகளும் இல்லாத இடத்தில் வேண்டு மானால் கட்டை வண்டிகளைப் பயன்படுத்தலாமே தவிர, எங்கள் முன்னோர் படைத்தவை என்று அவற்றை விட மனமில்லாமல் தயங்கக் கூடாது.

**கண்மூடித்தனமான பழமைப் பற்று**

ஒரு மொழியின் எழுத்துக்களைப் பற்றியும் இதே உண்மை.பொருந்தும்; உலக மொழிகளின் எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் பொருந்தும்; தமிழ் மொழியின் எழுத், துக்களுக்கும் பொருந்தும்.

கற்களில் எழுத்துக்களைச் செதுக்கிய காலத்திலும், பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதிய காலத்தி லும், எழுத்துக்களின வடிவங்கள் அவற்றிற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருந்தன.

இன்று, கற்களில் செதுக்கப்படும் தமிழ் மிகமிகக் குறைவு; பிளாஸ்டிக் முதலியவற்றில் எழுத்துக்களைச் செய்து பொருத்தல் பெருகிவிட்டது. பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதும் முறை அடியோடு மறைந்து விட்டது.

வெள்ளைத் தாளில் உயர்ந்த ஊற்றுப் பேனா கொண்டு எழுதும் முறை ஓங்கிவிட்டது. தட்டெழுத்தில் (டைப்) அடிக்கும் முறையும், அச்சுப் பொறியில் எழுத்துக் களைக் கோத்து அச்சிடும் முறையும், குறைந்த நேரத்தில் மிக வேகமாகச் செய்யும் லினோ டைப் முறையும் பெருகி விட்டன.

படித்தல் என்றால், தட்டெழுத்து முறையில் அடிக்கப் பட்டவற்றையும், அவற்றைவிட மிகுதியாக அச்சிடப்பட்ட செய்தித் தாள்களையும் நூல்களையும் படிப்பதே வழக்க மாகி விட்டது.

ஆகவே, பனை ஓலையில் இரும்பாணியால் எழுது வதற்கு உதவியாக அமைக்கப்பட்ட பழங்கால எழுத்து வடிவங்களை இனியும் போற்றிக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை. தட்டெழுத்துப் பொறிக்கும் அச்சுப் பொறிக்கும் ஏற்றவகையில் அவற்றைச் சிறிது மாற்றி யமைக்க முற்பட வேண்டும். இந்த வகையான முன் னேற்றம் கருதிய சீர்திருத்தம் செய்யும்போது, கண் மூடித் தன்மையான பழமைப் பற்று — மொழிப்பற்று என்ற பெய ராலும் குறுக்கிடலாகாது.

## சிறு குறைபாடே பெரும் தடையானது

க் ங் ச் ஞ் முதலான மெய்யெழுத்துக்கள் பதினெட்டு தமிழில் உள்ளன. ஆங்கிலத்தில் k என்னும் மெய்யெழுத் துடன் a என்னும் உயிரெழுத்தைச் சேர்த்து ka என உயிர் மெய் யெழுத்தை அமைக்கிறார்கள். அதுவே இயல்பான அமைப்பு ஆகும். தமிழில் க் ங் ச் ஞ் முதலியவற்றின் மேல் உள்ள புள்ளியை நீக்கிவிட்டால், அகர உயிரோடு சேர்ந்த உயிர் மெய் ஆகின்றன. இது அவ்வளவு இயல்பானது

அன்று என்றாலும், ஒரே வகையான அமைப்பாக இருப்பதால், ஏற்றுக்கொள்ளத் தக்கதே எனலாம்.

தமிழ் எழுத்துக்கள் கூடியவரையில் முற்போக்காக அமைந்த எழுத்துக்களே. சீன எழுத்துக்களும், ஜப்பான் எழுத்துக்களும் போல் (படங்கள் போல்) அமைந்து நூற்றுக்கணக்கில் பெருகியவை அல்ல; அரபி முதலிய எழுத்துக்களைப் போல் புள்ளிகளும் நுண்கோடுகளும் மிகுந்தவைகளும் அல்ல.

உயிரெழுத்து பன்னிரெண்டும் மெய்யெழுத்து பதினெட்டும் ஆகச் சுருங்கிய அளவில் முப்பது எழுத்துக்கள் உடையது தமிழ். அந்த முப்பது எழுத்துகளும் தெளிவான வடிவ வேறுபாடுகள் கொண்டவை; மயக்கத்திற்கு அவ்வளவாக இடம் தராதவகையில் தெளிவு பெற்றவை.

மெய்யெழுத்துகளை அடுத்து உயிரெழுத்துகள் வரும் போது, உயிர்மெய் எழுத்துகள் எனப் பெயர் பெற்றுச் சேர்த்து அமைக்கப்படுவதில் சில குறைகள் உள்ளன.

இன்று அந்தச் சில குறைகளே தட்டெழுத்துக்கும் அச்சுக்கும் இடர்ப்பாடுகளாக உள்ளன.

## அய்ரோப்பிய மொழிகளில் வசதியான நிலை

எடுத்துக்காட்டாக, a e i o u என்னும் ஆங்கில உயிரெழுத்துகள் மெய்யெழுத்துகளோடு சேரும்போது, ka, ke, ki, ko, ku, pa, pe, pi, po, pu என மெய்யும் உயிரும் தனித்தனியே எழுதப்படுகின்றன. அதனால், மெய்யும் உயிருமாகிய 26 எழுத்துக்களைக் கொண்டே தட்டெழுத்தும் அச்செழுத்தும் அமைகின்றன. அதனால் எழுத்துச் சுருக்கமும் வடிவத் தெளிவும் அய்ரோப்பிய மொழிகளுக்கு இயல்பாக உள்ளன.

தமிழிலும் அவ்வாறு அமையவேண்டுமானால், உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாகச் சில எழுத்துகளில் சுருக்கலாம். அவ்வாறானால், க, கா, கி, கீ, ப, பா, பி, பீ

என மெய்யும் உயிரெழுத்தின் சில குறியீடுகளுமாக முப்பது எழுத்துகளுக்கு மேல் பத்து அல்லது பதினொன்று வளர வேண்டி வரும். ஆக நாற்பது நாற்பத்தொன்று வடிவங்கள் அமைக்க நேரும். ஆங்கிலத்தில் முதல் எழுத்து வடிவங்களும் சிறு எழுத்து வடிவங்களும் (capital letters and small letters) ஆக அய்ம்பத்திரண்டு வடிவங்கள் இருப்பதை உணரும்போது, நாற்பது நாற்பத்தொன்று வடிவங்கள் மிகுதி அல்ல.

## அறியாமை அல்ல; கண்மூடித்தனம்

ஆனால், உயிரெழுத்தின் குறியீடுகள் ஒழுங்காக இருந்தால்தான் இது இயலும். கா, ஙா, சா, ஞா, டா, ணா, தா, நா, பா, மா, யா, ரா, லா, வா, ழா, ளா, றா, னா என ஆகாரத்தின் குறியீடு எல்லா மெய்களுக்கும் பின்னர் ா என அமையவேண்டும். ணா என்பது ணா எனவும், றா என்பது றா எனவும், னா என்பது னா எனவும் முறை மாறாக அமைந்துள்ளன.

அதுபோன்ற இடர்ப்பாடுகளைக் களைந்தால்தான் தட்டெழுத்தும் அச்செழுத்தும் ஒழுங்கு பெறும்.

பனையோலையில் எழுதிய காலத்தில் ஆணிகொண்டு ஓலையில் எழுதும்போது, ஓர் எழுத்தை முடிக்கும்போது ஆணியை நிறுத்துவதும், அடுத்த எழுத்தைத் தொடங்கும் போது ஆணியைக் குத்தித் தொடங்குவதும் இடர்ப் பாடாக இருந்திருக்கலாம். அதனால் ணா றா னா என்று எழுதுவது எளிதாக இருந்திருக்கலாம். ணா, றா, னா, என்று எழுதுவது இடையூறாக இருந்திருக்கலாம். அதனால். சேர்த்து எழுதும் அந்த வடிவங்களைக் கையாண்டு பழகியிருக்கலாம்.

ஆனால் ஓலையும் எழுத்தாணியும் இல்லாத இந்தக் காலத்தில், வெள்ளைத் தாளில் ஊற்றுப் பேனாவால் எழுதும் வாய்ப்பு உள்ளபோது, ணா, றா, னா என்று ஒரு முறைப்படுத்தி எழுதுவதுதான் எளிது, இயல்பானது. ஆகையால் இந்தச் சிறு சீர்திருத்தம் செய்யத் தயங்குவது அறியாமை அல்லது கண்மூடித் தன்மை எனலாம்.

## இந்த நூற்றாண்டின் வேகத்துக்கு ஈடு

அவ்வாறே, கி, ஙி என்று இகர உயிரின் குறியீட்டை மெய்யெழுத்துக்களின் பின், தனியே சேர்ப்பதே பொருத்தம் ஆகும். ஆனால், மேற் கூறிய காரணத்தால், பனை ஓலையில் ஆணியை நிறுத்துவதிலும் தனியே தொடங்கு வதிலும் உள்ள இடர்ப்பாட்டால், கி, ஙி, சி, டி, என மெய் வடிவையும் உயிர்க் குறியீட்டையும் சேர்த்து எழுதப் பழகினார்கள்.

இன்று ஒரு முறை வகுத்துக் கொள்ளலாம். ஊற்றுப் பேனா கொண்டு காகிதத்தில் எழுதும்போது மட்டும், பழைய முறைப்படியே கி, ஙி, சி, ஞி, டி, ணி, தி, நி என்று எழுதலாம். தட்டெழுத்திலும் அச்செழுத்திலும் உயிர்க் குறியீடு ஒன்றையே பதினெட்டு மெய்களுக்கும் பொது வாகக் கொண்டு, கி, ஙி என்று மெய் வடிவின் பின் குறி யீட்டைத் தனியே அமைக்கலாம். அதனால் பெறும் நன்மையைக் கணக்கிடுவோம்.

கி, ஙி, சி என்ற வடிவங்களைத் தட்டெழுத்திலும் அச்சிலும் கொண்டால், எத்தனை வடிவங்கள் தேவைப்படு கின்றன? பதினெட்டு மெய் வடிவங்களும் பதினெட்டு உயிர்மெய் வடிவங்களுமாக முப்பத்தாறு வடிவங்கள் தேவைப்படுகின்றன.

ஆனால், மேற்கூறியவாறு, உயிர்க் குறியீட்டைத் தனியே அமைக்கும் முறையை (ஆங்கில எழுத்தில் உள்ள முறையை) மேற்கொண்டால், பதினெட்டு மெய் வடிவங் களும் ஒரே ஓர் உயிர்க் குறியீடும் தேவைப்படுகின்றன.

ஆக பழைய முறைப்படியான முப்பத்தாறு வடிவங் களுக்கு ஈடாகப் பத்தொன்பது வடிவங்கள் போது மானவை ஆகின்றன; பதினேழு வடிவங்கள் குறைகின்றன.

இவ்வாறே ஒவ்வொரு மெய்க்கும் எழுத்து வடிவங் களைக் குறைப்பது இந்த நூற்றாண்டின் வேகத்திற்கு எவ்வளவு பெரிய நன்மை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

## புதுவழி காட்டும் பெரியார்—விடுதலை

இவ்வாறே உ, ஊ, ஐ முதலான உயிர்க் குறியீடுகளைச் சேர்ப்பதிலும் துணிந்து சீர்திருத்தம் மேற் கொண்டால் தான், மொழிக்கும் சமுதாயத்திற்கும் நன்மை விளையும். உ என்ற உயிரின் குறியீடாக ு என்ற வடிவையும், ஊ என்ற உயிரின் குறியீடாக ூ என்ற வடிவையும் ஒரே முறையாக ஒழுங்காக அமைக்க முற்பட்டால், ஙு, சு, ஞு, நு, பு, யு, லு, வு, று, னு ஆகிய வடிவங்களில் சீர்திருத்தம் செய்வது கடமையாகும். அவ்வாறே ஊ என்பதன் குறி யீட்டிலும் சீர்திருத்தம் செய்யவேண்டும்.

ஐ என்ற உயிரின் குறியீடு ை என்பதாகும். கை, ஙை முதலிய உயிர் மெய் வடிவங்களுள் ணை, லை, ளை, னை என்பவை முறைப்படி அமையாதவை. ஆனால், அவை களும் ஒரு காலத்தில் ணை, லை, ளை, னை என இருந்தவைகளே.

பனை ஓலையில் ஆணியால் ஏற்படும் இடையூறு களைக் கருதியே ணை, லை எனச் சேர்த்து எழுத நேர்ந்தது. ஊற்றுப் பேனா மிகுந்த இந்தக் காலத்தில் ஒழுங்கான குறி யீட்டைக் கையாண்டு எழுதுவதில் இடர்ப்பாடு இல்லை. தட்டெழுத்துக்கும் அச்சுக்கும் நன்மையே ஆகும்.

இந்தச் சீர்திருத்த முறையைத் துணிந்து கையாண்டு புது வழி காட்டிய பெருமை விடுதலை ஏட்டிற்கும், தந்தை பெரியார்க்கும் உரியது என்பதை எவரும் மறுக்க இயலாது.

பல ஆண்டுகளுக்கு முன்பே அவரால் புகுத்தப்பெற்ற இந்தச் சீர்திருத்தத்தை இன்னும் நாடு முழுவதுமாக ஏற்றுக் கொள்ளாமலிருப்பது வருந்தத் தக்கது நன்மையும் முற்போக்கும் வெற்றி பெறாமல், கண்மூடிப் பழக்கமே நீடித்திருக்க விட்டிருப்பது அறிவியல் நூற்றாண்டாகிய இக்காலத்திற்குச் சிறிதும் பொருந்தாததாகும்.

## குறை என்று உணர்தல் அறிஞர் கடமை

இன்னுமொரு குறையும் களைய வேண்டும் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. அதாவது: மெய் வடிவிற்குப்

பிறகு உயிர்க் குறியீடு அமைவதே உலக மொழிகள் எல்லா வற்றிலும் உள்ளது; வட இந்திய மொழிகளிலும் உள்ளது; கன்னடம், தெலுங்கு ஆகிய திராவிட மொழிகளிலும் உள்ளது. ஆனால், இதற்கு மாறான — பொருத்தமும், இல்லாத — ஒரு முறை எவ்வாறோ தமிழில் புகுந்துள்ளது.

கெ, ஙெ, செ, ஞெ, டெ, ணெ
கே, ஙே, சே, ஞே, டே, ணே

முதலியவற்றில் மெய்க்குப் பின் வரவேண்டிய உயிர்க் குறியீடு, மெய்க்கு முன் வருகிறது.

கொ, ஙொ, சொ, ஞொ, டொ, ணொ
கோ, ஙோ, சோ, ஞோ, டோ, ணோ

முதலியவற்றில் உயிர்க்குறியீடு மெய்க்கு முன்னும் பின்னு மாகிய இரண்டிடத்தும் வருகிறது. இந்தக் குறையைக் களைதல் கடமை என்று செயலில் முற்படுவதற்குக் காலம் ஆகலாம்; பிறகு கருதுவோம் என்று இது ஒத்திவைக்கப் படலாம். ஆனால், இது குறை என்று இன்றே உணர்தல் அறிஞர் கடமையாகும்.

இவ்வாறு நம் முன்னேற்றத்திற்கு உதவியான எழுத் துச் சீர்திருத்தம் பற்றி ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த முற்போக்கிற்கு முட்டுக்கட்டை இடுவ தற்கு யாரும் முன் வராதவாறு, இதில் உள்ள நன்மை களைப் பலர்க்கும் எடுத்துரைத்து விளக்கவேண்டும். மொழி வளர்ச்சிக்கு உரிய நல்லதொரு தொண்டு இது என்பதைத் தமிழகம் விரைவில் உணர்த்துவதாக.*

---

*எழுத்துச் சீர்திருத்தம், பெரியார் சுயமரியாதைப் பிரசார வெளியீடு, பக். 35-41.

பன்மொழிப்புலவர்

# தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

---

இப்போது நாம் கையினால் மட்டும் எழுதி வரவில்லை. தட்டுப் பொறி கொண்டும் எழுதுகிறோம். அச்சடித்தும் வருகிறோம், அச்சில் லைனோ முதலிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

எவ்வளவுக்கு எவ்வளவு எழுத்து அச்சுகள் குறைவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு செலவும் குறைகிறது; விரைவாகச் செயல்படவும் முடிகிறது.

இப்போது கி என்று தட்ட வேண்டுமானால், க என்பதைத் தட்டிப் பின் தட்டும் பொறி இயங்காமல் வைத்தும் பின் அதன்மேல் சுழியைத் தட்ட வேண்டும் இதனால் காலம் வீணாகிறது. கி முதலியவற்றிற்கே தனித்தனி எழுத்துக்கள் வைத்துக் கொள்வதென்றால் தட்டுப்பொறி மிகப் பெரிதாக அமைய வேண்டிவரும்.

லைனோவில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் எழுத்தச்சுக்களை வைத்துக் கொள்ள முடியாது.

எனவே, அச்சு எழுத்துக்களை எவ்வளவுக்கு எவ்வளவு குறைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது.

## கேள்வியும் விடையும்

எப்படிக் குறைக்க முடியும் என்பது ஒரு கேள்விதான். ஆனால், நாம் எழுதி வரும் எழுத்து முறையே இதற்கு விடையும் தரும். க் முதலாக பதினெட்டு மெய் எழுத்துக்கள் இருக்கின்றன. இவற்றோடு ஆகாரத்தைச் சேர்க்க வேண்டுமானால், பதினெட்டு ஆகார உயிர் மெய்க்கும் கால் என்று கூறும் ா என்பது ஒன்றே போதும். க முதலியவற்றின் பக்கத்தில் கால் போட்டே எழுதி வருகிறோம். முன்னிருக்கின்ற க முதலிய அச்சுகள்தான் முன்னரே இருக்கிறனவே.

அதுபோல இகர முதலிய உயிர்கள் சேர்ந்து உயிர் மெய்கள் வரும்போதும் தனித் தனியே க முதலியவற்றோடு ஒட்டாமல் இகரக்குறியைத் தனித்துப் பக்கத்தில் வரும்படி எழுதினால் ஆ என்பதற்குக் கால் என்ற ஒன்றே ஒன்று குறியாக வேண்டியிருந்தது போல, இ முதலியவற்றிற்கும் ஒவ்வொன்று போதும். இப்போதோ க முதலிய பதினெட்டும், கி முதலியவற்றிற்கு பதினெட்டு என்று இப்படிப் பிறவற்றிற்கும் பல அச்சுகள் வேண்டியிருக்கக் காண்கிறோம்.

இகரத்துக்கும், ஈகாரத்திற்கும் மெய்யெழுத்தின்மேல் முறையே, சுழியாத மேல்விலங்கும், சுழித்த மேல் விலங்கும் இடுகிறோம். இவற்றை மெய்யின் மேலே ஒட்டிக்கொண்டு இராதபடி தனித்து மெய்யெழுத்தின் பக்கத்திலேயே எழுதுவதானால், இகரத்துக்கு 18, ஈகாரத்துக்கு 18 என முப்பத்தாறு வேண்டியதில் சுழியாத மேல் விலங்கு ஒன்று, சுழித்த மேல் விலங்கு ஒன்று ஆக இரண்டுமே போதும்.

## குழந்தைகள் படுகின்ற இடர்

அப்படியே கு முதலியவற்றிற்கும், கூ முதலியவற்றிற்கும் குறி இரண்டிருந்தால் போதும். ஆனால், என்ன வடிவில் அது அமைய வேண்டும். கு, டு, மு, ரு, ழு, ஞு இவை ஒருவகை; நு, சு, பு, யு, வு இவை ஒருவகை; ஙு, ணு, து, ஈு, லு, னு இவை ஒருவகை.

ஊகாரம் சேரும்போது டு முதலியவற்றை டூ என மேலே சுழித்தும், பு முதலியவற்றில் கீழே சுழித்தும் நு முதலியவற்றின் கடைசி நேர்க்கோட்டைக் கால்போல நூ என ஆக்கியும் கூ என்பதில் ஏதோ உகரத்தைச் சேர்த்தாற் போல நீட்டியும் எழுதுகிறோம்.

இவையெல்லாம் சங்கிலிபோல் எழுத்துக்களைத் தொடர்ந்தெழுதும் போக்கிற்கும், எழுதி வந்த ஓலை எழுத் தாணி முதலியவற்றிற்கும் ஏற்றாற்போல மாறி மாறி அமைந்தன.

குழந்தைகள் கற்கும்போது ஒரு முறையிலன்றிப் பல முறையில் உகரத்தை எழுதுவதில் இடர்ப்பட்டு வீணே காலத்தைக் கழிக்கின்றன. எழுத்துச் சீர்திருத்தத்தில் இதனையும் மனம் கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டுக்கெனவே வந்த கிரந்த எழுத்துக்களில் மெய்யெழுத்தை அடுத்து, உயரே உகரத்தைக் கவிழ்த்தது போல உகரத்தைக் குறிக்க எழுதி வருகிறார்கள். கிரந்தம் வடமொழியை எழுதப் பயன்பட்டதால் இந்த உகரக் குறி போலத் தோன்றுவது காணலாம். கிரந்தத்தில் உகரம் தமிழில் வரும் உகரம் போலவே அமையும்.

ஆதலால், உயிர் மெய்யெழுத்தோடு வரும் உகரக்குறி உகரத்தைக் கவிழ்த்துப் போட்டதே ஆகும். இப்போது ஜ முதலிய எழுத்துக்களோடு உகரம் சேர்க்கும்போது இந்தக் குறி தமிழ் அச்சகங்களில் வழக்கில் இருக்கிறது. புதிதாகப் படைக்காமல் அவற்றையே தமிழ் உயிர் மெய்யெழுத்துக் களுக்கும் பயன்படுத்தலாம். இதனைச் சுழித்ததுதான் ஊகாரத்தின் குறி. இவை இரண்டும் மெய்யெழுத்தினை அடுத்து எழுதப் பெறுமானால், உகரத்துக்கு இப்போது 18, ஊகாரத்துக்கு 18 ஆக முப்பத்தாறு இருப்பதற்குப் பதிலாக இரண்டிருந்தால் போதும்.

எ, ஏ, ஐ, ஔ என்பனவற்றில் முன்னமே மேலே கண்ட முறைப்படி சிக்கனம் ஏற்பட்டுள்ளது. ஆனால், கௌ முதலிய எழுதும்போது, அங்கே கௌ என்பனவாகவும் படிக்கலாம்; கெ-ள என்பனவாகவும் படிக்கலாம். இந்த

மயக்கம் தீர ா என்ற காலினும் வேறாக ர கரத்திற்குக் கீழே இடமாகக் கீழ்க்கோடு ஒன்று சிறிதாக இழுத்ததுபோல ள என்பதினும் வேறாக ஔ என்பதில் வரும் ள கரத்தின் கீழாகச் சிறிது இடமாக இழுத்து எழுதி அமைக்க லாம். இதனால் ஓர் எழுத்துக்குறி மிகுந்தாலும் குழந்தைகள் முதலியோரின் மயக்கம் தீருவதால் இது இன்றியமையாத தேயாகும்.

## மயக்கம் நேரிட வழியில்லை

மெய்யெழுத்தாம் க் முதலியவற்றிற்கும் க முதலிய உயிர் மெய்யெழுத்திற்கும் வேற்றுமை என்ன? மெய்யெழுத் தின் மேலே வரும் புள்ளியேயாம். இந்தப் புள்ளியையும் தட்டுப் பொறியை ஓடாமற் பிடித்துப் பின் க முதலிய வற்றின் புள்ளியைத் தட்டவேண்டியுள்ளது. இப்போது க் முதலியன 18; க முதலியன 18 என்று உள்ளன. இதற்குப் பதில் புள்ளியைப் பூச்சியம் போன்றசுழியாக்கி, க முதலியவற்றினை அடுத்து உயர நிற்கவே க° அமைப்போ மானால், க முதலிய பதினெட்டோடு இந்தச் சுழி ஒன்றே போதும். டிகிரியைக் காட்டும் குறியாக இந்தச் சுழி வருகிறது என்பது உண்மையே. ஆனால், அப்போது எண்களை அடுத்தே வருவதால் மயக்கம் நேரிட வழி யில்லை.

இனி, வேறு சில குழப்பங்களும் உள்ளன. கா முதலிய வற்றிற்குக் கால் வாங்கி எழுதுகின்றோம். கால் என்ற ஒன்று போதும்போலத் தோன்றுகிறது. ஆனால், ணா, றா, னா என மூன்று குறிகளும் வேண்டி நிற்கின்றன. இவற்றை யும் கால் வாங்கி ணா, றா, னா என்று ஒரு முறையிலேயே எழுதினால் மூன்று வேறு குறிகள் வேண்டுவதில்லை. எழுத்துக்களின் வளர்ச்சியை வரலாற்று முறையை ஆராய்வோமானால், இவையும் கீழ்வருவனவும் புதியன அல்ல என்பது தெளிவாகும்.

இப்படியே ஐ என்பதற்கு உயிர் மெய்யெழுத்தின் குறியாக ை என்ற குறியை அமைக்கின்றோம். இது உண்மையில் இரண்டு கொம்புகளை ெ விரைவில் சங்கிலி

எழுத்துக்கள் போல எழுதுவதால் ை என அமைந்ததே ஆம். கிரந்த எழுத்தில் இன்றும் இது ெ என இரண்டு கொம்புகளாக எழுதப் பெறக் காண்கிறோம். இங்கே எழுத்தில் மயக்கம்வராதபடி ணை,னை,லை,ளை முதலியவற்றைப் பிற்காலத்தில் கொம்பை மேலே தூக்கி எழுதலானார்கள். **அச்சில் அத்தகைய மயக்கம் வருவதற்கு இடமில்லை.** கை எழுத்திலும் இடம் விட்டு எழுதினால் மயக்கம் வராது. எனவே, ணெ, னெ, லெ, ளெ என்று எழுதுவதாகக் கொண்டால் இந்த மூன்று குறையும்; ை என்ற நான்காவது அச்சும் குறையும். எகர உயிர் மெய்யெழுத்துக்கு அமைந்த கொம்பே போதியதாகும். இந்த மாற்றங்கள் வரலாற்று முறையில் நோக்கும்போது புதியனவும் அல்ல. இவற்றைப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் விடாப்பிடியாகக் கையாண்டு வருகிறார்கள். இந்தச் சிறிய மாற்றங்களையும் பின் பற்றாமையை என் என்பது!

## தந்தை பெரியாருக்குப் பெருமை என அச்சமா?

இவையே அன்றி, வேறாக நாம் மேலே கூறியவற்றில் உகர, ஊகார மெய்ப்புள்ளி நீங்கலானவை சுதேசமித்திரனில் சில காலம் பின்பற்றப் பெற்றன.

> காலம் சென்ற ஓ. பி. ராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்த போது, கல்வி அமைச்சராக இருந்த திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் எழுத்துச் சீர்திருத்தத்தை ஆராய ஒரு குழுவை ஏற்படுத்தினார்.

அதிலே புரட்சியாளர்கள் இல்லை; தமிழைக் கெடுக்கின்றவர்கள் இல்லை.

தட்டுப் பொறி அமைப்போரையும், லைனோ முதலியன அமைப்போரையும் கலந்தே முடிவு செய்தார்கள்.

இந்தக் குழுவில் பேராசிரியர் **திரு K. சுவாமிநாதன்,** **திரு. சொக்கலிங்கம்** முதலியோர் இருந்தனர். நானும் அதில்

இருந்தேன். முதல் அமைச்சரும், கல்வி அமைச்சரும் இதில் ஈடுபட்டுச் சில கூட்டங்களுக்கு வந்தார்கள். ஒரு முடிவாக மேற்கண்ட மாற்றங்களை (நான் மேலே கூறிய உகர, ஊகார மெய்ப் புள்ளி தவிர) 'உடனடியாகச் செய்ய வேண்டும்' எனத் துரைத்தனத்தாருக்குத் தெரிவித்தது அந்தக் குழு.

இதற்குள் அமைச்சர் அவை மாறியது. பின் வந்தவர்கள் இந்த மாற்றங்களை ஒப்புக்கொள்வதால் பெரியார் ஈ. வெ. ரா. வின் கொள்கையே ஒப்புக் கொள்ளப்பட்டது எனப் பொது மக்கள் கருதி ஒரு புதிய பெருமையை அவருக்குத் கொடுத்து விடுவார்கள் என அஞ்சினார்களோ என்னவோ அந்தக் குழுவின் முடிவுகள் எங்கேயோ எறியப்பட்டன.

## தமிழக அரசு செயல்படுத்துமா?

எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் மிகுந்துள்ள நாட்டில் எழுத்துச் சீர்திருத்தம் எனப் பல மாறுதல்களைச் செய்து, எழுதப் படிக்கத் தெரிந்தவர்களையும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக ஆக்கிவிடக் கூடாது என்பது உண்மையே. ஆனல் இவை அப்படிப்பட்டன அல்ல. வரலாற்றுக்கு மாறுபடாதவை. விடுதலையில் பலர் கண்டு பழகியவை. சுதேசமித்திரனிலும் சிலகாலம் நாளிதழ் படிப்போர் படித்து மகிழ்ந்தவை. எனவே இவற்றில் புரட்சி ஒன்றும் இல்லை.

பெரியாரின் 94-வது பிறந்த ஆண்டின் அறிகுறியாக இன்றைய (தி. மு. க.) துரைத்தனம் அந்தக் குழுவின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துமா?

இ, ஈ என்று இரண்டு குறிகள் தொடர்பின்றி வழங்குகின்றன. இ, சுழித்த இ என்ற வழக்கும் பழைய வழக்கே. இதனைக் காலம் சென்ற நமச்சிவாய முதலியார் பழக்கத்திற்குக் கொண்டு வந்தார்கள். கற்கின்ற மாணவர்களுக்கு ஒருவகை எளிமையை உண்டாக்கும் இதனையும் மேலே கூறிய குழு ஒப்புக்கொண்டுள்ளது.

**பெருமூச்சு விட்டு வருந்தி...**

மேலும் பலவற்றிற்கு இடமுண்டு. உயிர் மெய்யெழுத்தில் உயிரின் குறி ஆ முதலியவற்றிற்கு எழுத்தின் பின்னும் ஒ, ஓ, ஔ என்பவற்றிற்கு எழுத்தின் பின்னும் முன்னும் எனவந்து குழந்தைகள் மனதைக் குழப்புகின்றன. இது ஒன்று. மற்றொன்று, பிற மொழிகளைத் தமிழில் எழுதுவது. ஆனால், எளிய மாற்றங்களையே ஒப்புக் கொள்ளாதபோது இவற்றைப் பற்றி எண்ணுவதற்கும் இன்னமும் காலம் வரவில்லை என்றே பெருமூச்சு விட்டு வருந்தி அமையவேண்டும்.

**கோபம் வருவானேன்?***

தந்தை பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னவுடன், சிலருக்குக் கோபம் வருகிறது! ஏன் கோபப்பட வேண்டும்? இன்று ரஷ்ய மொழியும், பிரெஞ்சு மொழியும், ஜெர்மனி மொழியும் உலகத்தின் முதல் மொழிகளாக வளர்ச்சி பெற்றிருக்கின்றன. நம் தமிழ் வளர்ச்சி அடைந்திருக்கிறதா? மொழி வளர்ச்சி அடையவேண்டும் என்ற நோக்கத்தில், 'இன்னும் காட்டுமிராண்டி மொழியாகவே இருக்கிறதே!' என்று சொன்னால் ஏன் கோபப்பட வேண்டும்?

**அறிவோடு சிந்திப்பீர்!**

உணர்ச்சி வயப்படாமல், உணர்ச்சியை அடக்கி வைத்து, அறிவோடு சிந்திக்க வேண்டும்.

**எழுத்துத் திருத்தம் ஏன்?**

இன்றைக்குத் தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது (18-9-78 முதல்). இதனால் மொழியை

---

* 24-12-78-இல் சென்னையில் பெரியார் நினைவுநாளையொட்டிய எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்கில் நிகழ்த்திய தலைமை உரையிலிருந்து ஒரு பகுதி. 'விடுதலை'

யாரும் மாற்றிவிடவில்லை.பொருளிலும் இப்போதுமாற்றம் இல்லை. பேசும்மொழியை எப்படி எழுதுவது என்பதுதான் இப்போது வந்துள்ள மாற்றம். இதற்கும் பண்பாட்டுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. தமிழ் எழுத்துச் சீர்திருத்தத் தால் தமிழ்ப்பண்பாடு அழிந்து விடுகிறது என்று கூக்குரல் போடுவதில் உண்மையில்லை.

**துருக்கியைப் பாருங்கள்**

துருக்கி நாடு விடுதலை பெற்றவுடன், 'துருக்கிமொழி யினுடைய எழுத்துக்களை எல்லாம் ரோமன் மொழி எழுத் துக்களைப் பயன்படுத்தியே எழுதவேண்டும்' என்று கமால் பாட்சா மாற்றம் செய்தார். அதனால், இன்று துருக்கி மொழி அழிந்து ரோமன் மொழியாகிவிட்டதா?

எனவே, இன்று ஏற்பட்டிருக்கிற மாற்றம், மொழி இலக்கணத்தில் மாற்றம் இல்லை; சொல் இலக்கணத்தில் மாற்றம் இல்லை; எழுத்து இலக்கணத்தில் மாற்றம் இல்லை; பொருளதிகாரத்தில் மாற்றம் இல்லை. எழுத்துக் களை எப்படி எழுதுவது என்பதில்தான் மாற்றம் வந்திருக் கிறது.

**கூடாதா மாற்றம்?**

எப்படி எழுதுவது என்பதில் மாற்றம் கூடாது என்று கூக்குரல் போடுபவர்களைக் கேட்கிறேன்.

இன்றைக்கு சுருக்கெழுத்து முறையைப் பயன்படுத்தி எழுதுகிறார்களே, 'அய்யோ இது தமிழ்எழுத்து இல்லையே' என்று எதிர்த்து, அதை ஒதுக்கித் தள்ளி விடுகிறீர்களா?

சட்ட மன்றத்திலும் மற்ற பேச்சுக்களிலும் சுருக் கெழுத்து முறையைப் பயன்படுத்துவதன் மூலமாகத்தானே பேச்சுக்களை முழுதும் எழுத முடிகிறது. தமிழ் எழுத்துக் களைப் பயன்படுத்திஎழுதி முடிக்க முடியுமா?

**விஞ்ஞான வளர்ச்சி**

விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் காலத்தில், உலக மொழியாக தமிழ் பரவ வேண்டுமானால்

எழுத்துச் சீர்திருத்தம் என்பது அவசியத் தேவையாகும். 'க' என்ற எழுத்துக்குக் கட்டம் அடையாளம் போடுவது தான் பழைய எழுத்து முறையாக இருந்தது. மாற்றம் கூடாது என்பவர்கள் அப்படியே பின்பற்றி எழுதத் தயாரா? நச்சினார்க்கினியர் சொன்ன முறையில்தான் இன்றைக்கு எல்லா எழுத்துக்களையும் எழுதிக் கொண் டிருக்கிறோமா?

எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதே! எழுத்து வரலாறு புரியாமல் இன்றைக்கு எதை எதையோ பேசிக் கொண்டிருப்பதா?

கா என்பதை ஆங்கிலம் படித்தவர்களுக்குத் தெரிந்த ஆங்கில எழுத்துக்களில் எழுதிக்காட்டினால் என்ன? இந்தி தெரிந்தவர்களுக்கு இந்தி மொழியில் எழுதிக் காட்டினால் என்ன தவறு? இதற்கும் தமிழுக்கும் என்ன சம்பந்தம்? அவர்களுக்குத் தெரிந்த எழுத்துக்களிலே தமிழைத் தெரிய வைப்பதற்கு விடமாட்டோம்; தமிழ் எழுத்துக்கள் எல்லா வற்றையுமே படித்து விட்டுத்தான் தமிழைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்வதா புத்திசாலித்தனம்?

தமிழ் மொழியைப் படித்த பிறகே தமிழைப் படி; இல்லையேல் சாவு என்றால் சாவதற்கா ஒரு மொழி இருக்கிறது?

மொழிவளர்ச்சிக்கு சுருக்கெழுத்து எப்படி அவசியத் தேவையாகிறதோ, அது போல தட்டச்சுக்களிலும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன.

## "லை" புதியதல்ல!

இன்றைக்கு "விடுதலை" என்று எழுதுவதில் உள்ள "லை" என்ற எழுத்துமுறைதான் தொல்காப்பியர் சொன்ன முறை. "ல" என்ற கொம்பு போட்டு எழுதும் முறை பிறகுதான் வந்தது. காரணம், எழுத்தாணியால் "லை" என்ற எழுத்தை எழுதும்போது, "னல" என்பது போல சில நேரங்களில் எழுத்துக்கள் அமைந்து விடுவதால் இந்த மாற்றம் செய்யப்பட்டது.

தமிழ் வாழ்க, நாடு வாழ்க, மொழி வாழ்க என்று கோஷம் போடுவது பெரிய ஏமாற்று. தமிழ்வாழ்க என்றால் தமிழன் வாழவேண்டும். நாடு வாழ வேண்டும்.

## கேரளத்தைப் பாருங்கள்

இன்றைக்குக் கேரளத்தில் மலையாள எழுத்துக்களில் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து விட்டார்களே. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் எழுத்துச் சீர் திருத்தம் தேவை என்ற உணர்வு நமக்கு வந்திருக் கிறது. "ஜ" என்ற வடமொழி வார்த்தையை "ஜு" என்று எளிதில் தட்டச்சு செய்யுமளவில் வந்திருக்கும் போது அழகான தமிழ்மொழியைத் தட்டச்சுக்கு வசதியாக மாற்றி அமைக்கக் கூடாதா?

## தமிழ்த் துரோகியா?

பழமை என்பதால அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமா? மாற்றம் கூடாது என்பதா? பழசு என்பதால் விஷத்தைக் குடிப்பார்களா? பழசு என்பதற்காக அழுகிய பழத்தைச் சாப்பிட முடியுமா? தமிழ் எழுத்துக்களில் இன் னும் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். 12 உயிர் எழுத் துக்கள் 18 மெய் எழுத்துக்களே போதுமானது.

## விசித்திரக் கேள்வி

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அமுல் படுத்தினால் புதிதாகப் படித்தவர்கள் பழைய தமிழ் இலக்கியங்களை எப்படிப் படிக்க முடியும் என்று கேட்கிறார்கள். இப்போது தமிழ் மூலம் ஆங்கிலம் கற்றுக் கொள்ளவில்லையா? தெலுங்கு படிக்கவில்லையா? அதுபோல இந்த எழுத்து முறை மாற்றத்தின் மூலம் பழைய இலக்கியங்களைப் படிக்க முடியாதா?

பழமையோ, புதுமையோ, பிரச்னை அது அல்ல; மொழி தமிழன் வளர்ச்சிக்கு, வாழ்வுக்குப் பயன்பட வேண்டும். அதுதான் முக்கியம்.

# டாக்டர் ந. சுப்புரெட்டியார்

தமிழ் எழுத்துக்கள் ஒலியெழுத்து, வரியெழுத்து என இருவகைப்படும். ஒலி வடிவாகிய எழுத்தை வரிவடிவால் எழுதுவதே 'வரி எழுத்து' என்பதாகும். முன்னோர் கருத்தைப் பின்னோர் அறிந்து கொள்ள வாய்ப்பு அளிப்பது இதன் துணையாலேயாகும். பொருள்கள் கெடாதவாறு பாதுகாக்கும் சீதள அலமாரி போன்ற இது கருத்துக்கள் மாறாதவாறு காத்து நிற்கின்றது.

### பண்டைய வரியெழுத்துக்கள்

வரியெழுத்துக்கள் வட்டம், சதுரம், கோல் என்னும் மூன்றுறுப்பால் அமைத்து எழுதப்படும். எடுத்துக் காட்டாக, தமிழ் நெடுங்கணக்கில் உள்ள அகரம் (அ) வட்டம், சதுரம், கோல் என்னும் மூன்றுறுப்புக்களாலும் அமைந்தமையைக் கூர்ந்து நோக்கின் அறியலாம். சுழித்தது வட்டம்; இழுத்தது கோல்; மறித்தது சதுரம்; ஒவ்வோர் எழுத்துக்களின் வடிவத்தையும் இங்ஙனம் நோக்கி அறியலாம்.

இங்ஙனம் அமைந்த வரி எழுத்து சாதாரணமாக வட்டெழுத்தென்றும், கெட்டெழுத்தென்றும் இருவகைப் படும். வட்டெழுத்து, ஓலை, கிழிகள், தாமிரம் முதலிய வற்றில் விளக்கமுறத் தெளிவாக வரையப்பட்டுள்ளது. அது நூல் எழுதுவதற்கும், கல்வெட்டுகளுக்கும் பயன்படு கின்றது.

நெட்டெழுத்து சாதாரண விவகாரங்களை எழுதுவ தற்கும் வழங்கும் தொடையெழுத்தாகும். வட்டெழுத்து பள்ளிச் சிறார்களாலும் படிக்கத் தகும். நெட்டெழுத்து பயின்றார்க்கன்றிப் படித்தல் அரிது. முன்னது முதலிலே பயில்வது; பின்னது விவகார நிலையில் அமைவது. தற்காலம் தமிழில் வழங்கும் அச்செழுத்தெல்லாம் வட்டெழுத்துக்களேயாகும்.

## இலக்கணச் சான்றுகள்

பண்டைய தமிழ் எழுத்துக்களின் வரி வடிவு பற்றித் தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், சங்கயாப்பு முதலிய நூல்கள் வாயிலாகவும், அவற்றின் உரை ஆசிரியர்கள் காட்டும் குறிப்புகளாலும், விளக்கங்களாலும் அறியப் பெறும். அவற்றையெல்லாம் இங்கு விளக்குவது இன்றியமையாமை அன்று. எனினும், ஒரு சில குறிப்புக் களை ஈண்டுக் காட்டுவேன்.

தமிழ் நெடுங் கணக்கிலுள்ள ககர (க) முதல் னகர (ன) ஈறாகவுள்ள தனிமெய் பதினெட்டும் புள்ளி பெற்றே நிற்கும் என்பதை இரண்டு நூற்பாக்களினால் குறிப்பிடுவர் தொல் காப்பியர்.

'மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்'

என்பதனால் புள்ளியின்றித் தனி மெய்கள் யாண்டும் வழங்கா என்பதை அவர் குறித்தனராவர்.

இங்ஙனம் மெய்களுக்குப் புள்ளி விதித்த ஆசிரியர் தொல்காப்பியனார் உயிர் எழுத்துக்களில் எகரமும் (எ) ஒகரமும் (ஒ) புள்ளி பெற்று நிற்கும் என்பதனை 'எகர ஒகரத் தியற்கையும் அற்றே' என்ற நூற்பாவால் குறிப் பிடுவர். இதனால் எகர ஒகரக் குறிலும், ஏகார ஓகார நெடிலுமான அவ்விருவகை உயிர்கட்கும் வரிவடிவு பொது என்பதும், அவற்றுள் குறிலின் வேறுபாடு தோன்ற அதற்கு புள்ளியிடப் பெறும் என்பதும் அறியக் கிடக்கின்றன.

ஏகார நெடிலுக்குக் கீழ்க்கோடு இடும் முறையை உண்டாக்கியவர் வீரமாமுனிவர் என்று கூறும் சிலர் கருத்

தினை மறுத்து அங்ஙனம் கோடு இழுப்பது அம்முனிவர்க்கும் முற்பட்ட சாசன வழக்கமாயிருத்தலை எடுத்துக் காட்டுவர் பேராசிரியர் மு. இராகவையங்கார். அன்றியும், மெய்யூர்ந்த எகர ஒகர உயிர்கட்கும் புள்ளியிட்டு வந்த வழக்கு உண்டு என்பதையும் உரையாசிரியர்களின் குறிப்புக் களால் அறியலாம்.

## இதோ ஒரு சுவையான பாடல்

மேற்குறிப்பிட்ட வழக்குகளைப் பண்டையோர் போற்றி வந்தமை சில எடுத்துக் காட்டுகளால் அறியலாம்.

> **"நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்**
> **நீர்நிலையார் புள்ளிபெற நெருப்பாம்"**

என்பது தண்டியலங்கார ஆசிரியர் 'மாத்திரைச் சுருக்கத் திற்கு'க் காட்டிய மேற்கோள் வெண்பா பகுதியாகும். இங்கு நேரிழையார் கூந்தல்— ஓதி; அது புள்ளி பெறவே 'ஒதி' என்றாகி மரத்தைக் குறிக்கும். நீர்நிலை— ஏரி; அது புள்ளி பெறவே 'எரி' என்றாகி நெருப்பைக் குறிக்கும். எகர ஒகர உயிர்கள் புள்ளிபெற எழுதப்பெற்று வந்த பழைய வழக்கு இப்பாடலின் கருத்தாக அமைந்துள்ளமை கண்டு அறியத் தக்கது.

ஆயினும், மெய்யூர்ந்த எகர ஒகரங்கள், புள்ளி பெற்று வழங்கின என்பதற்கு இலக்கியச் சான்றுகள் காண்டல் அரிது. மெய்யூர்ந்த எகரத்திற்கு கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

எ-டு. "நான்காவதெடுத்து", "பெருங்கிணறு செய்து" இவை வேள்விக்குடித் தாமிரப்பட்டயத்திலும் தந்திவர்ம (கி. பி. 800—840) பல்லவனது 4-ஆம் ஆட்சி ஆண்டு திருவெள்ளறைக் கிணறொன்றில் வெட்டப்பட்டுள்ள கல்லெழுத்திலும் கண்டவையாகும்.

சார்பெழுத்துக்களாகிய குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகியவையும், மகரக்குறுக்கமும் புள்ளி பெற்று வழங்கின மையை ஆசிரியர் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

## அச்சு வரும் முன்பே உருவம் மாறியது

மெய்யும் உயிரும் கூடுமிடத்து மெய்கள் வடிவம் திரியாதும் திரிந்தும் நிற்பதை ஆசிரியர் தொல்காப்பியர் குறிப்பிடுவர்.

**"புள்ளி யில்லா எல்லா மெய்யும்**
**உருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலும்**
**ஏனை யுருவோ டுருவுதிரிந் துயிர்த்தலும்**
**ஆயீ ரியல வுயிர்த்த லாறே"**

என்ற நூற்பாவால் இதனை அறியலாம். இவற்றுள் உருவுருதிரிந்து நிற்கும் உயிர் மெய்களின் வடிவுகளைக் குறிக்குங்கால் நச்சினார்க்கினியர் இவ்வாறு விளக்குவர்; "உருவுருதிரிந்துயிர்த்தலாவது— மேலும் கீழும் விலங்கு பெற்றும் கோடு பெற்றும் புள்ளி பெற்றும் புள்ளியும் கோடும் உடன் பெற்றும் உயிர்த்தலாம்.

எ-டு : கி, கீ முதலியன மேல் விலங்கு பெற்றன. கா, ஙா முதலியவை புள்ளி பெற்றன; அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக (ா) எழுதினர். கொ, கோ, ஙொ, ஙோ முதலியன புள்ளியும் கோடும் பெற்றன. இவற்றால் கோ, ஙோ என்பவற்றின் அருகிலுள்ள கால்கள் முற்காலத்தே புள்ளிகளாக எழுதப் பெற்றன என்பது உரையாசிரியரின் கருத்தாதல் விளங்கும். இம்முறையைப் பட்டயங்களிலேனும், கையெழுத்துப் பழம் பிரதிகளிலே னும் காண்டல் அரிது.

ஆயினும்,மேற்கூறப்பெற்ற உரையாசிரியரின் கருத்து தண்டியலங்கார மேற்கோள் வெண்பாவால் பெறப்படும்.

**"சேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்**
**நீர்நிலையோர் புள்ளிபெற நெருப்பாம்—சீரளவும்**
**காட்டொன் றொழிப்ப இசையாம் அதனளவு**
**மீட்டொன் றொழிப்ப மிடறு."**

இந்த வெண்பாவின் முதல் இரண்டு அடிகளின் பொருள் மேலே விளக்கப்பெற்றது. இறுதி இரண்டு அடிகளின் பொருளை ஈண்டு விளக்குவோம்;

காடு— காந்தாரம்; இதில் ஒரு புள்ளியை (ா) நீக்கவே 'கந்தாரம்' என்னும் பண்ணின் பெயராகும். இதில் மீட்டும் ஒரு புள்ளியை (ா)நீக்கவே 'கந்தரம்' என்னும் கழுத்தின் பெயராகும்.

எனவே, ஈண்டுக் குறிப்பிட்ட வெண்பா புள்ளியைக் கூட்டுதலாலும் அதனைக் குறைத்தலாலும் எழுத்தளவு சுருங்கிவரும் 'மாத்திரைச் சுருக்கம்' என்ற சொல்லணியின் இருவேறு வகைக்கும் இரண்டிரண்டு எடுத்துக்காட்டுக்களை இரண்டிரண்டு அடிகளால் கூறவந்தது என்பது போதரும்.

"க.ந்த.ரம்" என்று முன்பு எழுதப்பெற்று வந்த புள்ளியே பிற்காலத்தில் "காந்தாரம்" என்றவாறு காலாக (ா) மாறியது என்ற நச்சினார்க்கினியரின் கூற்றை இப் பாடல் பெரிதும் ஆதரித்து நிற்கின்றது. இவற்றால் அச்சு வடிவ எழுத்துக்கள் தோன்றுவதற்கு முன்பே காலப்போக் கில் தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்களில் மாற்றம் ஏற்பட்டு வந்தமை அறியப்படும்.

## இன்றைய அச்செழுத்துக்கள்

தற்காலத்தில் வழக்கிலுள்ள அச்செழுத்துக்கள் வட்டெழுத்துக்களினின்று தோன்றியவையாகும்.

அச்சுப் பொறி நம் நாட்டிற்கு வந்த பிறகு சென்னை, புதுவையிலிருந்த புகழ்வாய்ந்த புலவர்கள், எழுதுவதையே தொழிலாகக்கொண்டு கர்ணிகர்கள், சிற்ப நுட்பத்தில்வல்ல கம்மியர்கள் ஒன்று கூடி அக்காலத்தில் வழங்கிய வட்டெழுத்துக்களாலான கையெழுத்துப் படிகளையும் கல்வெட்டுக்களையும் தாமிரப் பட்டயங்களையும், கண் ணுற்று ஆராய்ந்து தெளிந்து அச்செழுத்து வடிவங் களைத் துணிந்தனர். அவர்களே பண்டைய கையெழுத் துப் படிகளில் கண்ட வட்டெழுத்தையும் தாம் புதிதாக அமைத்த அச்சு வட்டெழுத்தையும் ஒப்பு நோக்கி இரண்டிற் கும் இயைபு கண்டவர்கள்.

பண்டைய கையெழுத்துப்படியை இப்போது காண்டல் எளிதன்று. தாமிரப் பட்டயம், கல்வெட்டு, மிகப் பழைய

ஏடுகள் இவற்றைத் தேடி அவற்றில் இதனைக் காண்டல் வேண்டும்.

ஆயின், நெட்டெழுத்துக் கைப்படியைக் காண்பது எளிது. தமிழகத்தில் சாசனம் எழுதுவோர் 'நெட்டெழுத்துள் பட இன்னான் கைப்பாத்து' என்று எழுதுவது இன்னும் பயின்று வரும் வழக்காறு ஆகும்.

## தந்தை பெரியார் விரும்பும் திருத்தம்

இங்ஙனம் அமைக்கப் பெற்றுள்ள அச்செழுத்துக்களில் சில யாதொரு நியதிக்கும் கட்டுப்படாது அமைந்து விட்டதைத் தந்தை பெரியார் அவர்கள் நீண்ட காலமாகவே எடுத்துக்காட்டி அவற்றின் மாற்றத்தின் இன்றியமையாமையை வற்புறுத்தி வந்துள்ளார்கள்.

தந்தை பெரியார் அவர்களின் கருத்துக்கள் புதுமையாகவும் புரட்சிகரமாகவும் இருப்பதால் அவை மக்களிடம் உடனே 'செரிமானம்' ஆவதில்லை. ஆனால், அவரிடம் வெறுப்புக்காட்டி வருபவர்களே காலப்போக்கில் அவற்றைச் 'செரிமானம்' செய்து அவற்றின் பெருமையையும் அருமையையும் அறிவர்.

ஆனால், சில சமயம் தம் கருத்துக்களை மந்தமதி மாணாக்கருக்கு விளக்க முடியாத ஆசிரியர்கள், பொறுமை இழந்து சினமுற்று அவர்களைக் கையினாலும் கோலினாலும் புடைப்பது போன்று, நம் தந்தை அவர்களும் தம்முடைய கொள்கைகளை மூடப்பழக்கங்களில் மூழ்கியுள்ள பொதுமக்களுக்கு விளக்கும்போது சில 'முரட்டு முறைகளை'க் கையாள்வர்.

இன்றுள்ள அச்செழுத்துக்களைக் கூர்ந்து நோக்குமிடத்து எல்லா எழுத்துக்கட்கும் நியதிகள் ஒரேமாதிரியாக அமையாதிருப்பதை அறியலாம். ககர, சகர, நகர இனங்களின் உயிர்மெய் எழுதுத்க்களில் அமைந்த நியதி ணகர, னகர, லகர, ளகர இனங்களின் உயிர்மெய் எழுத்துக்களில் அமையவில்லை,

## அங்கே ஷா
## இங்கே தந்தை பெரியார்

அச்சுப் பொறிகளும் குறிப்பாக 'மானோ'', 'லினோ டைப்புள்ள பொறிகளும், டெலிபிரிண்டர்களும் தட்டச்சுப் பொறிகளும் ஏற்பட்டுக் கருத்துக்கள் வேகமாகப் பரவி வரும் இக்காலத்தை நோக்கியே தந்தை பெரியார் அவர்கள் பல்லாண்டுகளாகச் சில எழுத்துக்களின் அமைப்பினை மாற்ற வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றார்கள். ணா றா க்கள் ணா, றா என்றும் ணை னை லை ளை களை ணை னை லை ளை என்றும் மாற்றவேண்டும் என்று, கருது கிறார்கள்.

இந்த ஒழுங்கினை வற்புறுத்தவே பல்லாண்டுகளாக 'விடுதலை' என்ற நாளேடு, ''விடுதலை'' என்ற தலைப் புடன் உலாப்போந்து கொண்டுள்ளது.

தமிழ் அறிஞர்கள் என்றாவது ஒருநாள் இவர் கருத் திற்கு ஒருப்பட்டு இவர் கூறும் எழுத்துச் சீர்திருத்தத்தை ஒப்புக்கொள்வர் என்பது உறுதி.

ஆங்கில மொழியின் சீர்திருத்தத்தை விரும்பிய அறிஞர் பெர்னாட்ஷா சொற்களின் உச்சரிப்பினை ஒட்டியே ஆங்கிலச் சொற்களின் எழுத்துக்கள் எழுதப் பெறல் வேண்டும் என்றும், சொற்களில் ஒலிப்பு இல்லாத எழுத்துக்களை நீக்குதல் வேண்டும் என்றும் வற்புறுத் தினார். அது பெரும் புரட்சிகரமான மாற்றம் என்று இன்னும் அச்சீர்திருத்தத்தை ஆங்கில அறிஞர்கள் ஒப்புக் கொள்ளவில்லை.

அங்ஙனமே நம் தந்தை பெரியார்அவர்களும் காலத்திற் கேற்ற, நடை முறைக்கேற்ற, எளிதில் மேற்கொள்ளக் கூடிய திட்டத்தையே கூறுகின்றார்கள்.

அறிவியல் மனப்பான்மை செல்வாக்குள்ள இக்காலத் திலும் அதனைத் தமிழ் அறிஞர்கள் மேற்கொள்ளா திருப்பது தமிழகத்திற்கு நேரிடும் பெருங்குறையேயாகும்.

## பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்

உலகின் பல்வேறு மொழிகளும் நாளாவட்டத்தில் வரிவடிவம் பெற்றுள்ளன. ஆனால், அவ்வரிவடிவம் ஒரு சில மொழிகளைப் பொறுத்தமட்டில் மிக அதிகமான மாறுதல் அடைந்தும், இன்னும் சில மொழிகளைப் பொறுத்தமட்டில் மிகக் குறைந்த அளவு மாறுதல் அடைந்தும் வந்துள்ளன.

சீனமொழி என்று பொதுவாகக் கூறப்பெறும் 'காண்டினீஸ்' (Cantanese) மொழி வரிவடிவில் அதிக மாறுதலை அடையவில்லை என்று கூறுகின்றனர்.

ஆங்கிலத்தைப் பொறுத்தமட்டில் சென்ற அய்ந்நூறு ஆண்டுகளில் அதிகமான வரிவடிவ மாற்றத்தைப் பெற்றுள்ளது என்றுங் கூறுகின்றனர்.

தமிழ்மொழியைப் பொறுத்தமட்டில் கல்லிலும், ஓலைச் சுவடியிலும் அம் மாற்றம் எழுத்து வடிவத்தைப் பெற்று வளர்ந்துள்ளது. கல்லில் வடித்த வடிவு ஓரளவு அழியாமல் காக்கப்பட்டிருத்தலின் ஏறத்தாழ மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஒவ்வொரு நூற்றாண்டிற்கும் உரிய கல்வெட்டுக்களைக் காண்கிறோம். அவற்றை வரிசைப்படுத்திக் காண்பார் ஒன்றைக் கவனியாமல் இருக்க இயலாது.

### கல்வெட்டில் தமிழ் எழுத்து மாற்றம்

அது, தமிழ் வரிவடிவம் கல்வெட்டைப் பொறுத்தமட்டிலுமாவது ஒவ்வொரு நூற்றாண்டிலும் சிறுகச் சிறுக

மாற்றம் அடைந்துவந்துள்ளது என்பதேயாகும். இன்னுங் கூறப்போனால், ஒரு கல்வெட்டின் வரிவடிவத்தை மட்டும் வைத்துக்கொண்டு கூட அது எந்த நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கூறிவிட முடியும். கல்வெட்டில் தமிழ் எழுத்து வரிவடிவில் பெரிதும் மாற்றத்திற்கு உள்ளாயிற்று என்பதை யாரும் மறுத்தற்கில்லை. இவ்வடிவ மாற்றம் எதனால் தோன்றிற்று என்று இன்றைய நிலையில் ஆராய்ந்து பயனில்லை. கல்லில் எழுத்தைச் செதுக்கும் கல்தச்சர்கள் வசதிக்காக எழுத்து வரிவடிவ மாற்றம் பெற்றது என்று கூறுவது பொருத்த முடையதாகக் காணப்பெறவில்லை.

மன்னனின் கட்டளையை நிறைவேற்றுவோர் தம் விருப்பப்படி எழுத்துக்களைச் செதுக்கினர் என்று கூறுவது பொருந்தாக் கூற்றேயாகும். மேலும், ஒருசில கல்வெட்டுக்களின் அடியில் அதனைச் செதுக்கினவன் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே, அரச ஆணையை மீறிக் கல்தச்சர்கள் தம் விருப்பம்போல் செதுக்கினர் என்பது சரியன்று. அவ்வாறானால், அரசனும் அறிவுடை மக்களும் நூற்றாண்டுதோறும் தோன்றிய இம்மாற்றத்தை ஏற்றுக்கொண்டனர் என்றே கூறல்வேண்டும்.

## ஓலையில் புள்ளி வைத்தால்

கல் எழுத்தின் கதை இவ்வாறாக, ஏட்டெழுத்தின் கதை எவ்வாறு என்பதை ஓரளவு காண்டல்வேண்டும். மிகப் பழைய இலக்கணமாகிய தொல்காப்பியம் மொழி இலக்கணத்தை மிகச் செம்மையாகக் கூறியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னர், ஓர் இனத்தார் தம் மொழிக்கு, இற்றைநாள் மொழி ஆராய்ச்சியாளரும் கண்டு வியக்கின்ற முறையில், இலக்கணம் அமைத்திருந்தனர் எனில், அந்த இலக்கணம் தோன்று முன்னரே பன்னூறு இலக்கியங்கள் இருந்திருத்தல் வேண்டும்.

அத்துணை அளவு இலக்கியம் தோன்றவேண்டு மாயின், எழுத்து வரிவடிவில் நன்கு பயின்றிருக்க

வேண்டும். எனவேதான், எல்லா எழுத்துகட்கும் வரி வடிவு காட்டாமல் ஒரு சிலவற்றிற்கு மட்டும் தொல் காப்பியனார் வரிவடிவு காட்டிச் செல்கிறார்.

'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்'

''எ'கர 'ஒ' கரத்து இயற்கையும் அற்றே'

(எழுத்ததிகாரம், நூல்மாபு, 15, 16)

இவற்றுள் முதலாவதாக உள்ள நூற்பா மெய் யெழுத்துக்கள் புள்ளியுடன் எழுதப்பெறும் என்றும், எ, ஒ என்ற இரு குற்றெழுத்துக்களும் புள்ளியுடன் எழுதப்பெறும் என்றும் கூறுகிறது. இதில் உள்ள சிறப்பு யாதெனின், புள்ளிவைத்து எழுதும் பழக்கம் இல்லாநாளில் இந்நூற்பா எழுந்தது என்பதேயாகும்.

ஓலையில் எழுதுங்கால் ஒற்றெழுத்துக்களையும் புள்ளி இல்லாமலே எழுதுவார்கள். காரணம் ஓலையில் புள்ளி வைத்தால் அது பொத்துப்போகும்.

## ஓலை எழுத்திலும் வேறுபாடு

எழுதுகின்ற காலத்தில், புள்ளிவைக்காமல் எழுதும் அக்காலத்தில் இவ்வாறு எழுத்துக்களின் வரிவடிவத்தைப் பேசுவது ஏன்? இதுபற்றிச் சிந்தித்தால் இடைக்காலத்தில் ஓலையில் எழுதும் முறைக்கும் பழங்காலத்தில் ஓலையில் எழுதும் முறைக்கும் வேறுபாடு உண்டு போலும் என்று கருதத் தோன்றுகிறது. நமக்கு இன்று கிடைப்பவை பிற் காலத்தில் எழுதப்பெற்ற ஓலைகளேயாகும். அவற்றில் ஒற்றெழுத்துகட்குப் புள்ளிவைக்கும் பழக்கம் இல்லை என்றால், பழங்காலத்தில் வேறு ஏதோ ஒருவகையில் ஒற் றெழுத்துகட்குப் புள்ளி வைத்தனர் என்று நினைக்க வேண்டியுள்ளது.

ஆனால், எ, ஒ என்ற இரு எழுத்துக்களின் குறில் வடிவம்பற்றித் தொல்காப்பியர் கூறிய வரிவடிவம் பிற்காலத்தில் மாற்றம் பெற்றுவிட்டது.

உயிர் மெய் எழுத்துக்கள்பற்றிக் கூறவந்த ஆசிரியர்,

''புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருஉரு ஆகிய அகரமொடு உயிர்த்தலும்,
ஏனை உயிரொடு உருவுதிரிந்து உயிர்த்தலும்,
ஆயீர் இயல— உயிர்த்தல் ஆறே''

(நூல் மரபு, 17)

உயிர் மெய் எழுத்துக்களில் அகரத்தோடு சேர்ந்த உயிர் மெய் எழுத்துக்கள் வரிவடிவம் மாறுபடாமல் மேலே உள்ள புள்ளியை விட்டுவிட்டு எழுதப்பெறும். ஏனைய உயிர் மெய்கள் தம் வடிவம் திரிந்து எழுதப் பெறும் என்பதே இதன் பொருள்.

**பிறநாட்டினர் அஞ்சுகிறார்களே!**

புள்ளியைப் பற்றி ஆசிரியர் கூறியுள்ளாரேனும் அப்புள்ளி எழுத்துக்களின் **மேலே எழுதப் பெற்றதா அன்றிப் பக்கத்தில எழுதப் பெற்றதா** என்று குறிப்பிடவில்லை. அதே போல, ஏனைய உயிர் மெய் எழுத்துக்கள் உருவம் திரியும் என்று கூறியுள்ளாரே தவிர, எவ்வாறு திரியும் என்று காட்டவில்லை.

எனவே, இன்றுள்ள நிலையை எடுத்து உதாரணமாகக் காட்டல் அத்துணைச் சிறப்புடையதாகவும் படவில்லை. கல்லெழுத்துக்கள் பல்வேறு மாற்றம் பெற்றது போல இவையும் மாற்றம் பெற்றிருக்கலாமன்றோ?

இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்தால் எழுத்துக்கள் நாளா வட்டத்தில் வரி வடிவில் மாற்றம் பெற்றுள்ளன என்று நினைக்கத் தோன்றுகிறது. எழுத்துக்களின் வரி வடிவத்தில் மாறுதல் செய்வதால் மொழிக்கு ஒன்றும் ஊறுநேர்ந்துவிடாது என்பது உறுதி. ஆனால், மாற்றத்தை எந்த அளவுக்குக் கைக்கொள்ள லாம் என்பதில் கருத்து வேறுபாடு தோன்ற இடமுண்டு.

மொழி நன்கு வளர வேண்டுமாயின் பலரும் எளிதாக அதனைப் படிக்கவும், எழுதவும் வாய்ப்பு இருத்தல்

வேண்டும். தமிழ்ப் பயில வருகின்ற பிற நாட்டார் அதன் நெடுங்கணக்கின் வரி வடிவைக் கண்டு அஞ்சுவது கண்கூடு.

ஒருவகை ஒலியைக் குறிக்க ஒரே வகையான அடையாளமிடுதல்தானே முறை. ஐ என்ற உயிருடன் கை, சை, ஞை என்ற முறையில் ஒலிப்பதும், அந்த ஒலியைக் குறிக்கும் ஓர் அடையாளமே இடப்படுதலுந்தானே முறை! அதைவிட்டு னை, ணை என்று மட்டும் எழுதப் பெற வேண்டிய தேவை யாது?

**அஞ்சுவதற்குள்ள காரணம் என்ன?**

ஏடு எழுதப் பெற்ற காலத்தில் இரு சுழி 'ன', முச்சுழி 'ண' என்ற இரண்டின் முன்னர் ஏறத்தாழ அதே போன்ற வடிவுடைய ஓர் எழுத்தை எழுதுதல் கடினமாக இருந்திருக்கலாம். அதற்காக அச்சுப் பொறி வந்து எழுத்துக்களின் வடிவில் வேறுபாடுகள் நன்கு அறியப்படுகின்ற இன்றைய நாளில் கூட ஏன் னை, ணை என்று எழுத வேண்டும்?

ஏடு எழுதுவதில் வசதிக்காகவே இவ்வாறு எழுதப் பெற்றது என்ற கருத்தை வலியுறுத்தும் முறையில் மற்றோர் எழுத்து அமைந்திருத்தல் காணலாம். 'ந' என்ற எழுத்தும் 'ன' என்ற எழுத்தும் வடிவில் வேறுபட்டிருப்பினும் ஒலியில் ஒன்றேயாகும். 'ந' என்ற எழுத்து ஏட்டில் எழுதும் பொழுது அதன் முன்னர் இரட்டைக் கொம்பாகிய 'ன' எழுதப் பெற்றால் அடையாளம் தெரிவது எளிது. அதனாலேயே அடையாளம் காணக் கடினமாக உள்ள இருசுழி 'ன' வுக்கு மட்டும் னை என்ற வடிவமும் 'ந' வுக்குப் பழைய இரட்டைக் கொம்புடன் சேர்த்து 'நை' என்ற வடிவமும் தந்தனர் நம் முன்னோர்.

எனவே, காலத்திற்கேற்ப தமிழ் எழுத்துக்கள் வரி வடிவில் மாற்றம் பெற்றே வந்துள்ளன. தமிழ்த் தட்டெழுத்துப் பொறியும் அச்சுப் பொறியும் வளர்ந்துள்ள இந்த நாளில் இச்சீர்திருத்தும் மிகமிகத் தேவையாகும்,

சீர்திருத்தங்கள் அனைத்திலும் காணப்படுகிற ஓர் ஆபத்து இதிலும் தலை காட்டக்கூடும். சீர்திருத்தம் என்று தொடங்கப் பெற்றுவிட்டால் அதனை எங்கே நிறுத்துவது என்பது பெருந் தொல்லையாக முடியும். சீர்திருத்தம் என்பதனைக் கண்டு பலர் அஞ்சுவதற்குரிய காரணம் இதுவேயாகும்.

சீர்திருத்தம் வேண்டுமென விழைவோரும், தொடங்கினால் பழமை முழுவதும் அழிக்கப் பெற்றுவிடுமோ என்று அஞ்சுகின்றனர். உலக வரலாற்றையும், புரட்சிகள், சீர்திருத்தங்கள் என்பவை அவ்வரலாற்றில் இடம் பெற்றுள்ள பகுதியையும் பார்த்தால் இந்த அச்சம் நியாயமானதே என்பது விளங்கும்.

### தந்தை பெரியாரின்
### எதிர்த்து நோக்கும் ஆற்றல்

இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வளர்ந்து வரும் ஒரு மொழியில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமாயின் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். சீர்திருத்தம் மிகமிக இன்றியமையாததாகும். விஞ்ஞானத்தைத் தமிழ் மூலம் கற்பிக்கவும் கற்கவும் வேண்டும் என்ற அவா உண்மையாக இருப்பின், தமிழில் இல்லாத H, Z, F போன்ற ஒலிகளைக் குறிக்கும் எழுத்துக்களை உண்டாக்கிச் சேர்த்துக் கொள்வதால் தவறு இல்லை. இவ்வாறு செய்வதால் இம்மொழி வளம் பெறுமே தவிர வளங்குன்றி விடாது.

உலகம் போகின்ற வேகத்தை அறியாமல் கிணற்றுத் தவளைகளாக இருந்து கொண்டு அதில் பெருமையும் அடைகிறோம். இந்நிலை மாறியே ஆகவேண்டும். முன்னர்க் கூறியபடி மாற்றஞ் செய்யப் புறப்படுகின்றவர்கள் அது மிகமிக ஆபத்தான அறுவை மருத்துவம் என்பதை மனத்துட் கொண்டு கொஞ்சங் கொஞ்சமாகச் செய்தல் வேண்டும்

பொறியிலும், அச்சுப் பொறியிலும் புதிய மாற்றத்தால் கணிசமான அளவு பயன் ஏற்படும். தமிழ்

நூல்கள் பிழை இல்லாமல் வெளி வருவது குதிரைக் கொம் பாக இருப்பதன் காரணம் பழைய முறையேயாகும்.

மிகமிகத் தேவையான மாற்றங்களைச் செய்ய முற்படுவோமேயானால் அது பெரிதும் பயன் விளைக்கும். இதில் விருப்பு, வெறுப்பு, அரசியல் என்பவை தலைக் காட்டவே தேவை இல்லை.

இத்துறையில் மிக்கத் துணிவோடு பல்லாண்டுகளின் முன்னரே ஒரு சில சீர்திருத்தங்களைக் கொணர முன் வந்த பெரியார் அவர்களின் எதிர்த்து நோக்கும் ஆற்றல் பாராட்டுக்குரியதாகும்.

பேராசிரியர்

# கொண்டல் சு. மகாதேவன்

---

## அறிவியல் நோக்கில்

நம் தமிழை, இன்று 'அறிவியல் தமிழ்' என்று அழைப்ப தில் ஆர்வம் காட்டுகின்றோம். 'அறிவியல் உள்ளிட்ட அனைத்துப் பாடங்களும் தமிழிலேயே நடத்தவில்லை ப" என்று பல்கலைக் கழகங்களையும் குறை கூறுகிறோம். இருந்தாலும் நம் எழுத்தினையும் மொழியினையும் அறி வியல் கண் கொண்டு காண்பதில் மட்டும் ஏனோ தயக்கம் காட்டுகின்றோம். நீர்ப்பொருளை அழுத்துவதால் சுருக்கி விட முடியாது என்ற அறிவியல் கருத்தினை,

> **'ஆழ அமுக்கி முக்கினும் ஆழ்கடல் நீர்**
> **நாழி முகவாது நால்நாழி'**

என்று அவ்வையாரின் நிறை மொழியில் கூறுவதானாலும், இரண்டு நீரக அணுவும், ஓர் உயிரக அணுவும் சேர்ந்து ஒரு நீர் மூலக்கூறு உண்டாகின்றது என்ற உண்மையை $2H_2 + O_2 \ldots\ldots 2H_2O$ என்று சமன்பாட்டு மொழியில் காட்டுவ தானாலும் சிறிய அணுவிலிருந்து விடுபட்டு வெளியேறும் ஆற்றலின் அளவு அதன் பொருண்மையை (m) ஒளியின் வேகத்தால் இருமுறை பெருக்கி வருவதற்கு நேராகும் என் பதனை $e = mc^2$ என்று மறை மொழியில் காட்டுவதானாலும் முதற்கண் மொழியில் திருத்தமான எழுத்து வடிவங்கள் தேவைப்படுவதைத் தெளிவாக உணர்கின்றோம்.

இன்று நாம் மெய் உயிர் வடிவங்களைத் தனியாகக் கையாள்வதுடன், அவற்றை இணைத்து உருவு திரித்து

'உயிர் மெய்' வடிவங்கள் என்ற பெயரிலும் கையாண்டு வருகிறோம். அவற்றை மேலும் உருவு திரித்துக் கூட்டெழுத்துக் கொத்துகளாகப் பயன்படுத்தும் வழக்கமும் மூத்த தலைமுறையினரிடம் இன்றும் இருந்து வருவதைக் காண்கின்றோம்.

தல புராணங்கள் பாடும் பொழுது நினைக்காவிட்டாலும் நம் பழந்தமிழை அறிவியல் தமிழாகக் காண்கின்ற நிலையிலேனும், நாம் கையாண்டு வரும் இத்தகைய உருவு திரித்த எழுத்து வடிவங்கள் எந்த அளவிற்கு நம் கருத்து வளர்ச்சிக்கு உதவுகின்றன என்பதை எண்ணிப் பார்ப்பது நம் கடமையாகும் அன்றோ?

## எழுத்தொலியும் வெற்றொலியும்

இன்றைய நம் தமிழ் எழுத்து வடிவங்களில் மொழிப் பொருள்களுக்குத் துணை செய்யாத சாரியையும், மொழிப் பொருளுக்கு முதற்காரணமாக இருக்கின்ற எழுத்தொலியையும் வேறுபடுத்திக் காட்டவும்கூட வழி இல்லாத ஒரு நிலை இருந்து வருகின்றது!

'வல்லெழுத்தென்ப கசடதபற' என்றும், 'மெல்லெழுத்தென்ப 'ஙஞணநமன' என்றும், 'இடை எழுத்தென்ப யரல வழள' என்றும் மெய்யெழுத்துக்களை அகரச்சாரியைக் கொடுத்து ஒலிப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆனால் ககர, அகர, லகர எழுத்தொலிகள் இணைந்து வரும் சொல்லின் வடிவத்தைக் 'கல்' என்று எழுதி முதலிலுள்ள ககரத்திலேயே அகரமும் அடங்கிவிட்டது என்று பேசும்போது அடங்கியுள்ள அந்த அகரம் சாரியையா, அல்லது எழுத்தொலியா என்ற கேள்வி எழத்தானே செய்யும்? சாரியையும் எழுத்தொலியையும் ஒன்றுகக் குழப்பிக் கொள்ளுதல் ஓர் அடிப்படைத் தவறாகும். மொழியியலுக்கும் முரணானதாகும்.

நேற்று முளைத்த ஆங்கிலம்கூட P என்ற மெய்யினை இகரச் சாரியை சேர்த்து 'பி' என ஒலித்தாலும் இகர எழுத்தொலியோடு வரும் இடங்களில் Pi என்று எழுதாமல் P

என்றே எழுதுகின்றது. அவ்வாறே 'க' கர ஒலியைக் குறிக்கும் K என்ற எழுத்தை எகரச்சாரியை சேர்த்து 'கெ' என ஒலித்தாலும், எகர எழுத்தொலிவரும் இடங்களில் Kettle என்று எழுதாமல் Kettle என்றே எழுதுகின்றது.

நாமும் ககர ஆகாரத்தைக் 'கா' என்று எழுதுவது போல் ககர அகரத்தை 'கT' என்று எழுத முற்பட்டிருந்தால் ஓலை ஊழியிலிருந்து தட்டச்சு ஊழி வரைத் தொடர்ந்து தொல்லை கொடுத்து வரும் தலைப்புள்ளி இல்லாமலேயே ககர மெய்யை 'க' என எழுதும் நல்ல நிலை ஏற்பட்டிருக்கும்.

காந்தன் என்ற சொல்லை, 'காநத<sup>T</sup>ன' என்றும், வந்தான் என்ற சொல்லை 'வ<sup>T</sup>தநான' என்றும் புள்ளியில்லாமல் எளிமையாக எழுதலாம்! தமிழர்கள் அதனைச் செய்யத் தவறியதால், இன்றும் பழங்காலத்து ஓலையில் இருந்தது போன்றே புள்ளி வைத்த மெய் வடிவமா, **புள்ளி இலா மெய் வடிவமா** என்ற குழப்பம் அச்சுப்படியிலும் தட்டச்சுப் படியிலும் நீடித்தபடி இருக்கின்றது.

## அகரத்தைக் காணாமல்
## அகரத்தை ஒலிப்பதுதான் அறிவியலா?

இன்று தமிழர்களின் பேச்சும் மூச்சும் தமிழாக இருப்பது என்னவோ உண்மை. ஆனால் தமிழை எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகைதான் 100க்கு 30 பேராக அருகிக் கிடக்கினறது! ஏனைய 70 விழுக்காட்டினர் கை விரலை மையில் ஒற்றிக் காகிதத்திலே புரட்டிக்கொண்டிருக்கின்றனர். அந்த அளவிற்கு இன்று நாம் கையாளும் உருவு திரிந்த எழுத்துருவங்கள் சிக்கலாகவும் மொழியியலுக்கு முற்றிலும் புறம்பானவையாகவும் வளர்ச்சியற்றுக் கிடக்கின்றன. அவ்வளவு ஏன்?

எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கும் மொழியியல் உணர்வூட்ட நம் திரிபெழுத்துகள் தவறிவிட்டன என்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம்: மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே' என்றும், 'இருவயின்

பெயரொடு ஒற்று முன்னாய் வரும்' என்றும் இலக்கண ஆசிரியர்கள் தெளிவாகச் சுட்டிச் சென்றிருந்தும், 'உயிர் மெய்கள்' உண்மையில் 'மெய்யுயிர்களே' என்ற மொழியியல் உணர்வு நமக்கு ஏனோ மங்கிவிட்டது.

அதனாலேயே தமிழ் நெறி விடுத்து இன்று மெய் வடிவத்திற்கு முன்னால் உயிர் ஒலியை உணர்த்தும் கொம்புகளையும் (கெ, கே) இணைக்கொம்புகளையும் (கை) எழுதும் வடமொழியாளரின் பிராமி எழுத்துப் பிழை நெறியை மேற்கொள்வதில் பிடிவாதம் பிடித்து வருகின்றோம்.

பட்டம் (பஅடடஅம) என்ற சொல்லில் இரண்டு அகர உயிர்கள் இருந்தும் அவற்றைப் பகர, டகர மெய்களிலேயே புதைத்து மறையச் செய்துவிடுகின்றோம். எஞ்சியுள்ள டகரத்திலும் ஈற்றிலுள்ள மகரத்திலும் அகரம் இல்லை என்று காட்ட அவற்றின்மீது புள்ளி வைத்துக் காட்டுகிறோம். ஆம், தமிழையும் மறைமொழி ஆக்கிவிட்டோம்.

## எழுத்தில் எளிமையும் கருத்தில் அருமையும்

ஒரு மொழி பேசுவோரின் எழுத்தறிவு அந்த மொழியில் ஆளப்படும் எழுத்து வடிவத்தினைப் பெரிதும் சார்ந்திருக்கின்றது என்ற உண்மையை எவரும் மறந்துவிட முடியாது.

நம் இந்திய மொழிகளின் எழுத்து வடிவங்களைச் சீர்மைப்படுத்துவது நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்குப் பெரிதும் துணைபோகும் என்பது உறுதி

மேலும், எவ்வளவுதான் பழைமையும் பெருமையும் கொண்ட மொழியானாலும் அது எளிய எழுத்து முறையைக் கொண்டிருந்தால்தான் நம் இந்திய நாட்டின் தொடர்பு மொழியாகவோ, உலக மொழியாகவோ இருக்க முடியும்.

நாம் விரும்பினால் எளியதும், இனியதும், இலக்கணத்திற்கு ஏற்றதுமான ஓர் எழுத்து முறையை நம் மொழிக்கு

அமைத்துக் கொள்ள முடியும். இந்த உண்மையைத் தந்தை பெரியார் அவர்கள் 40 ஆண்டுகளுக்கு முன்னரே நமக்கு உணர்த்தத் தொடங்கினார்.

## தன்னேரிலாத தமிழ்

ஆங்கில மொழி 26 எழுத்து வடிவங்களைக் கொண்டு எளிமையாக இருப்பது போன்று நம் தமிழும் உயிரும் மெய்யும் ஆன 30 எழுத்து வடிவங்களைக் கொண்ட ஓர் எளிய இனிய மொழியாகவே உள்ளது. இந்த ஒரு தகுதி வேறு இந்திய மொழி எதற்கும் இல்லை என்றே சொல்லி விடலாம்!

நமது முன்னோர்கள் உயிர் மெய் ஒலிகளைக் குறிக்க மெய் வடிவத்தையும் உயிர் வடிவத்தையும் உருவு திரிக்காமல் — மகர, உகர, ரகர, உகர, ககர, அகர, ணகரத்தோடு அமைந்த சொல்லை 'முருகன்' என்று சுருக்கி, மறை மொழியாக எழுதாமல், 'மஉரஉகஅன' என்றே நிறை மொழியாக எழுதியிருப்பார்களானால் (மெய்களுக்குப் புள்ளிகள் வேண்டுவதில்லை) இன்று தமிழகத்தில் 100-க்கு 70 பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்திருக்க மாட்டார்கள்.

இன்று தமிழாசிரியர்கள் 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்' என்ற இலக்கண நூற்பாவிற்கு விளக்கமாக, சுக்கு + அரிது → சுக்கரிது என்று எழுதி, ஓடுகிற உகரத்தையும் மாணவனைக் காணச் செய்யாமல், அதன் இடத்தில் வந்தேறும் உகரத்தையும் காணச் செய்யாமல் அல்லற்படும் நிலை ஏற்பட்டிராது.

SUKKU + ARITHU → SUKKARITHU

என்று எழுதி, ஓடுகின்ற உகரத்தையும அதனிடத்தில் வந்தேறும் அகரத்தையும் காணச் செய்யும் ஆங்கில எழுத்துக்களுக்கு நிகராகத் தமிழிலும், சஉககஉ + அரஇதஉ → சஉககஅரஇதஉ என எழுதி மகிழும் நிலை ஏற்பட்டிருக்கும்.

தமிழ் 'அவர்' என்பதிலிருந்து தெலுங்கு 'வாரு' வந்த வகையினை,

AVAR ... AVARU ... VAARU ... VARU

என ஆங்கிலத்தில் விளக்கிக் கொண்டிராமல்,

அவஅர...அவஅரஉ...வஅஅரஉ...வஆரஉ

என விளக்கி மகிழும் உயர் நிலையும் வந்திருக்கும்!

உண்டு, உந்து, உப்பு என்ற சொற்களில் முதலும் முடிவும் உகரம் என்று ஆசிரியர் இலக்கணம் பேசும் அதே நேரத்தில் அச்சொற்களின் அடி உகரத்தைக் காணும் மாணவனால் முடி உகரத்தைக் காணமுடியாத அவல நிலை ஏற்பட்டிராது. UNDU, UNTHU, UPPU என்று எழுதி முதலும் முடிவும் கண்டு தெளியும் ஆங்கிலக் குழந்தை போலத் தமிழ்க் குழந்தையும்,

**உணடஉ, உநதஉ, உபபஉ** என்று எழுதி அடியொடு முடி கண்டு தெளிந்து அண்ட வெளியையே ஆராயத் தொடங்கியிருக்கும்.

தழல் என்பதில் அழல் இருப்பதையும், தாய் என்பதில் ஆய் இருப்பதையும், தோடு என்பதில் ஓடு இருப்பதையும் இன்று தமிழ்க் குழந்தைகளால் கண்ணால் காண முடிவதில்லை. அச்சொற்களையே **தஅழஅல, தஆய, தஓடஉ,** என எழுதி முதலில் உள்ள தகரத்தைக் கொடுத்து **அழஅல, ஆய, ஓடஉ,** என்ற சொற்களைக் கண் திறந்து காண வழிபிறந்திருக்கும்.

ஓடையைக் குறிக்கும் தோடு என்ற கேரளத் தமிழ்ச் சொல்லைக் கொண்டு ஈரோடு என்னும் தந்தை பெரியார் பிறந்த தமிழ்ப் பேரூர்க்கு 'இரண்டு ஓடைகளால் நீரூட்டப்படும் இடம்'—ஈரோடை—என்ற பொருள் விளக்கமும் நமக்கு மறவாமல் இருந்திருக்கும். வடமொழியாளரும் ஈரோடு என்பதற்கு, **ஈர்ந்த மண்டை ஓடு —அர்த கபாலம்** என்று பொருள் திரித்து, அங்குள்ள ஈரோட்டாரையும் அர்த கபாலீஸ்வரராக மாற்றியிருக்க மாட்டார்கள்,

உயிரளபெடைக்கு உதாரணங் காட்டப் போய்,

**'இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலமென்னும் நல்லாள் நகும்'**

என்ற குறளில், 'அசை இ' என்று மொழியியலுக்கு முரணாக எழுதி உயிர்மெய் அளபெடுப்பதாகக் காட்டுவதை விடுத்து, 'அசஐஇ' என்று எழுதி ஐகாரம் அளபெடுப்பதைக் குறிக்கும் அதன் இனக் குறில் 'இ' ஐகாரத்தினை அடுத்து இடம் பெறும் நல் வாய்ப்பும் தமிழ்ப் புலவரிடையே ஏற்பட்டிருக்கும்.

கையெழுத்துத் தெளிவின்மை காரணமாக, 'முருகன் 'புதுக்கோட்டை' என்ற முகவரிக்கு எழுதிய கடிதம் 'மூக்கன் பட்டுக்கோட்டை' என்ற முகவரிக்குச் சென்று சேரும் வாய்ப்பு நேருவதற்கும் வழியில்லாமல், உயிரும் உடம்பும் ஆன 30 முதல் எழுத்துக்களை மட்டும் கொண்டு **(IN BLOCK LETTERS)**

'மஉரஉகஅன பஉதஉகஓடடஐ' என்றோ,

'மஊககஅன பஅடடஉககஓடடஐ' என்றோ

தெளிவாக எழுதும் நல்வாய்ப்பும் இருந்திருக்கும்.

இருந்தாலும் கையகலம் கூட இல்லாத ஓலையில் விரல்களுக்கும் வேலையில்லாமல், இரும்பு ஆணி கொண்டு, மணிக்கட்டினை அசைத்து எழுத்துக்களை உருவுதிரித்து எழுதியதால் இத்தகைய நல்வாய்ப்புகளை நாம் இழந்து விட்டோம்.

இன்று ஓலை எழுத்தாணி இல்லை. நல்ல காகிதமும் நல்ல எழுது கருவிகளும் நாட்டில் மலிந்துள்ளன. இனியும் எழுத்துக்களை உருவு திரித்து இடர்ப் படவேண்டிய கட்டாயம் எதுவும் இல்லை!

## தந்தை பெரியார் வழிகாட்டுகிறார்

நடைமுறையில் ஆளப்படும் உருவு திரித்தெழுதும் தமிழ் எழுத்துக்களில் இவ்வளவு குறைபாட்டினைக் கண்டும் செய்வதறியாது செயலற்ற நிலையிலே தமிழ் அன்பர்களும் தமிழ்க் காவலர்களும் ஆகிய நாம் இருந்த நேரத்தில், தந்தை பெரியார் அவர்கள் முன்னோடியாகத் திகழ்ந்து, தமிழ் எழுத்துக்களை மொழியியல் வழிநின்று சீர்திருத்தம் காணத் தொடங்கினார்.

உயிர்மெய் வடிவங்களில் மெய்யைக் குறிக்கும் வடிவமும், உயிரைக் குறிக்கும் வடிவமும் தனித் தனியாக இருந்தால்தான் அச்சிற்கும், தட்டச்சிற்கும் ஏன், குழந்தைகளும் அயல் மொழியினரும் படிப்பதற்கும் ஏற்ற வகையில் அமையும் என்பதை மிகுந்த தொலைநோக்குடன் கண்டார் பெரியார்.

அவ்வளவு ஏன்? பெண்ணும் ஆணும் அருகருகில் அம்மை அப்பராக அமர்ந்திருந்தால்தான் குழந்தைகளால் அவர்களைப் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் உருவு திரிந்து அர்தநாரீஸ்வரர்களாக மாறிவிட்டால் குழந்தைகளால் செரிமானம் செய்து கொள்ள முடியாது.

ஆங்கிலம், பிரஞ்சு, இலத்தீன், ஜர்மனி போன்ற மொழிகளில் எழுத்து வடிவங்கள் அம்மை அப்பராகத் திகழ்கின்றன. அறிவுக் கலைகள் எல்லாம் அம்மொழியினர்க்குக் கைவந்த கலைகளாகிவிட்டன. ஆனால், நம் இந்திய மொழிகளிலோ எழுத்து வடிவங்கள் அர்தநாரீஸ்வரராகி 100க்கு 70 பேரை இன்றும் கைவிரலை மையில் ஒற்றிக் காகிதத்திலே புரட்டிக் கொண்டிருக்கச் செய்துள்ளன!

தந்தை பெரியார் அவர்கள் 40 ஆண்டுகளுக்கு முன்னரே கூட்டொலிகளான ஐ, ஔ வடிவங்களை அய், அவ் என எளிமையாக்கினார். அதனால் அ, இ, உ, எ, ஒ ஆகிய அய்ந்து குறில்களும் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ ஆகிய அய்ந்து நெடில்களும் ஆக 10 உயிர் எழுத்துக்களே தமிழில் ஒன்றாகிவிட்டன. ஒட்டிக் கொண்டிருந்த ணை, னை, லை, ளை உருவங்களைப் பிரித்து ணை, னை, லை, ளை என அமைத்தார். கீழ் விலங்கு மாட்டிக் கொண்டிருந்த ணா, னா, றா ஆகிய உருவங்களை விடுவித்துக் கால் கொடுத்து ணா, னா, றா என நடமாடச் செய்தார்.

தந்தை பெரியார் அறிவியல் பாதையில் அடி பிறழாமல் நடந்து செல்பவர். தாம் தொடங்கிய பணிகளைத் தமக்குப் பின் வருவோர் தொடர்ந்து வளரச் செய்ய வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வந்தவர். அந்த

அடிப்படையில்தான் அவர் தொடங்கிய எழுத்துச் சீர்திருத்த முறையை அரசு உடனடியாக ஏற்று ஆணை பிறப்பித்துள்ளது.

அம்முறையை உகர ஊகாரங்களுடன் கூடி வரும் உயிர்மெய் வடிவங்களுக்கும் மேற்கொண்டு ஜ⁻ரம், ஜ⁼லை என எழுதுவது போன்று க⁻டம், க⁼டம் என எழுதும் எளிமையையும் தமிழகத்தைக் காணச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் எழுத்துச் சீர்திருத்தக் குழு ஒன்றும் எதிர்காலத்தில் அமையலாம் என நாம் எதிர்பார்க்கலாம்.

⁻ ⁼ என்னும் இரண்டு குறியீடுகளைக் கொண்டு அமைத்து எழுதும் அந்த ஒரு எளிமையையும் ஏற்படுத்திக் கொண்டால், இன்று குழந்தைகளை மருட்டிக் கொண்டிருக்கும் கு டு மு ரு ழு ளு—து, ணு, நு, று, லு, னு, ஙு, சு, பு, யு, வு—ஆகிய விந்தை உருவங்களும், மேலும் சிக்கல் மிகுந்த அவற்றின் நெடில் உருவங்களும் (18+18=36) குழநதைகளின் நினைவிலிருந்து விடை பெறறுக் கொள்ளும்.

இன்று தமிழ் அச்சில் 131 பெட்டிகளும், தட்டச்சில் 46 விசைப் பலகைகளும் வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுமானால் அச்சுக் கூடத்தில் 40 பெட்டிகள் குறைந்துவிடும். தட்டச்சில் 10 விசைப் பலகைகள் குறைவதோடு, தூக்கிச் செல்கின்ற தட்டச்சும் (Portable Typewriter) தமிழ் மொழியில் ஏற்பட வாய்ப்பு உண்டாகும். எடுத்துக்காட்டாக அத்தகைய திருத்தம் பெற்ற எழுத்துக்களைக் கொண்டு ஒரு குறள்,

**சிறப்பொட⁻ ப⁼சனை செல்லாத⁻ வானம்**
**வறக்க⁻மேல் வானோர்க்க⁻ம் ஈண்ட⁻**

என அமையும். அச்சு, தட்டச்சு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் நல்ல முன்னேற்றம் ஏற்படுவதோடு வேகமும் மிகும். எத்தகைய இடர்ப்பாடும் இல்லாமல் இந்த அளவுக்கு எழுத்துச் சீர்திருத்தத்தை உடனே தமிழ் மொழியில் மேற்கொள்ளலாம்.

உயிர்மெய் எழுத்துக்களைப் பிரித்து எழுத வேண்டும் என்று தந்தை பெரியார் தொடங்கிய பணியும் முழுமை யாக நிறைவேறும். உகர ஊகாரத்தோடு கூடிவரும் மெய் எழுத்துக்களைப் பிரித்து எழுதுவதனை மலையாள மொழி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொண்டுவிட்டது என்பதையும் இங்குத் தமிழன்பர்களாகிய நாம் நினைவில் கொள்வது பொருத்தமாகும். அத்தகைய முன்னேற்றம் இன்று தமிழிலும் விரைவில் வருவது காண நாம் மகிழ் கின்றோம். இருந்தாலும் ஏனோ புதுமை மலர்வதைக் கண்டு வரவேற்கும் மனப்பக்குவம் நமக்கு இன்னும் முழுமையாக வரவில்லை!

**பாரதியார் எச்சரிக்கின்றார்!**

'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!' என்ற பாரதியும், தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் வேண்டுமென்று கட்டுரைகள் எழுதியதோடு,

**"புத்தம் புதிய கலைகள்—பஞ்ச**
**பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;**
**மெத்த வளருது மேற்கே—அந்த**
**மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை;**
**சொல்லவும் கூடுவதில்லை—அவை**
**சொல்லும் திறமை தமிழ்மொழிக்கில்லை**
**மெல்லத் தமிழ் இனிச்சாகும்—அந்த**
**மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்"**

என்று சிலர் பேசிடும் பேச்சுகள் பற்றியும் நமக்கு நினை வூட்டி எச்சரித்துச் செல்கின்றார்.

ஆம்; இன்று ஒவ்வொரு மொழியும் தம் எழுத்து வடிவங்களை விடுத்து மேற்கு மொழிகளின் உரோமன் எழுத்து வடிவங்களை ஏற்றுக்கொண்டு வருவதைக் காண கின்றோம். இந்நிலையில் நம் தமிழ் எழுத்து வடிவங்களும் நீடித்து வாழவேண்டுமானால் ஏற்ற வகையில் தம்மைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும்!

இன்று தமிழகத்தில் மூன்றாம் வகுப்பில் படிக்கின்ற மாணவரும் நம் ஊர்ப் பெயர்களையும் (KUMBAKONAM)

ஆள் பெயர்களையும் (RAMASAMY, உரோமன் எழுத்தில் எழுதப் பயிற்சி பெற்று விட்டார்கள்.

அடுத்து, 'வருவார்' என்பது போன்ற வினைச் சொல் பகுதிகளையும் அந்த எழுத்தில் (VARUVAR) எழுதுவதற்கு அதிகநாள் ஆகாது. அவற்றையும் எழுதக் கற்றுக் கொண்டு விட்டால் 'RAMASAMY KUMBAKONAM VARUVAR' என்று தமிழ் எழுத்துகளுக்கு இடமே இல்லாது எழுதும் நிலையும் வந்துவிடும்!

இன்று, 'தமிழ் எழுத்துக்களில் சீர்த்திருத்தமே கூடாது' என்று பேசுகிறவர்கள், தம்மையும் அறியாமல் அந்த ஒரு நிலைக்குத் தமிழகத்தை அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் கூறுவது நம் கடமையாகிறது.

வஆழகஅ தஅமஇழ!

வஅளஅரகஅ எழஉததஉ மஉறஅய!

# கொடுமுடி ச. சண்முகன்

## தமிழ் நெடுங்கணக்கு

தமிழ் வரிவடிவம், நெடுங்கணக்கு என்றழைக்கப்படுகிறது. கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து கொண்டே வந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது. இன்றுள்ள நிலை செவ்வையானதா? சீர்திருத்தம் தேவையா? எந்த அளவுக்கு? இக்கேள்விகளை அணுகிப் பார்க்க விழைவதே இவ்வெழுத்துரை.




## ஏறு நோக்கு

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கு முன் பின்னால் திரும்பிக் கடந்து வந்த வழி நோக்குதல்

இன்றியமையாதது. என்றுமுள தென்தமிழ் வளர்ந்த வகையைக் முன்பக்கமுள்ள எழுத்துகளால் அறியலாம்.

உயிர்மெய் எழுத்துடன் ஒன்று அல்லது இரண்டு சிறு கோடுகளை இணைத்து உருமாற்றம் தோற்றி எல்லா உயிர் மெய்களையும் அமைத்துக் கொண்டிருந்தனர். இப்போது போல கா, கொ போன்று இரண்டு அல்லது மூன்று உருவங்கள் இல்லை. எகர ஒகரங்களின் குறிலில் புள்ளி இருக்கும். நெடிலில் புள்ளி இருக்காது. தமிழின் மிக எளிமையான அழகான தெளிவான வடிவம் அவை. அப் போது நேர்க்கோடுகள் அதிகமிருந்தன. வளைவுகள் குறை வாக இருந்தன. மாதவி கோவலனுக்கு கடிதம் எழுதியது தாழை மடலில், செம்பருத்திச்சாறு தோய்த்த தூரிகை யினால். காலப்போக்கில் பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதும் வழக்கம் மிக்கதால், வேகமும் தொடர்ச்சியும் கருதி வளைவுகள் தோன்றின. இணைந் திருந்த சிறுகோடுகள் படிப்படியாக விலகி, காலாகவும் (ா) கொம்பாகவும் (ெ) மாறின. அச்சுப்பொறி வந்ததும் வீரமாமுனிவர் ஒரு சில திருத்தங்களை 'அமைத்தார்; இன்றுள்ள நிலைமைக்கு வந்து விட்டோம்.

## சீர்திருத்தம் தேவையா?

இன்றைய தமிழ் எழுத்துகளைத் திருத்தியே ஆக வேண்டும் என்று சொல்லுமளவுக்கு இடர் ஏதுமில்லை. க்கு, மாதம், வருடம் போன்றவற்றிற்கு இருந்த கூட்டெழுத் துக்கள் தாமாகவே மறைந்து விட்டன.

இருந்த போதிலும் ஒரு சில மாற்றங்கள் செய்து கொண்டால் எழுத்துகள் சீர்மை (uniformity) பெறும். தொடக்க நிலையில்பயிலும் சிறார்களுக்கு எளிதாகஇருக்கும். சான்றாக ஆகார உயிர்மெய் எழுத்துகளில் ஞ, ண, ற தனி உருவம் பெற்றுள்ளன. அவைகளை னா, ணா, றா என எழுதுவதால் எழுத்துகள் சீர்மை பெறுகின்றன. குழப்பம் எள்ளளவும் இல்லை. அதே போன்று லை, ளை போன்றவற்றை லை, ளை என எழுதலாம்.

செய்திப் போக்கு வரத்துக்கள் எளிதாகிவிட்ட இந் நாளில் தட்டச்சுப் பொறியும், அச்சுப் பொறியும் மாந்தனின் அடிமைகளாகி விட்டன. எல்லாமே கையால் எழுதிய காலம் மாறி, ஆணைகளை நாடாப் பதிவு செய்து அனுப்ப, அதைக் காதால் கேட்டுத் தட்டச்சுப் பொறியில் வடிக்கும் காலம் இது. எனவே தமிழ் எழுத்துகளின் உருவங்களின் எண்ணிக்கை குறையாதா, சில அறிவியல் குறியீடுகளைச் சேர்க்கலாமே என்று ஏங்குவது அறிவியலர்களின் மனப்பாங்கு. அச்சுப் பொறியில் மானோ டைப், லைனோ டைப் போன்றவற்றில் உருவங்களின் எண்ணிக்கை குறையக் குறைய பொறியின் விலை குறையும்; வேகம் மிகும். அச்சியல் பொறிஞரின் நாட்டம் அங்குள்ளது.

கணநேரத்தில் கணக்குகளை முடிக்கும் கணிதி (Computer) தன் முடிவுகளைத் தமிழில் தருவது எக்காலம்? எழுத்துகளின் எண்ணிக்கை குறைந்தால் மட்டுமே இது இயலும்.

எனவே தமிழர்கள் அறிவுத்துறையில் முன்னேறி உலகத்து மக்களோடு ஒப்ப வாழும் ஆசை இருந்தால், சிற்சில சீர்திருத்தங்களை ஏற்றுக் கொள்ளல் வழுவல. சங்க காலத்தில் மட்டுமே தமிழகம், எந்த நாட்டிற்கும் பின் தங்காது இணையாக, ஏன், முன்னேறிய நாடாக இருந்தது அந்தப் பொற்காலம் இனி எப்போது உருவாகுமோ!

## மக்கள் குரல்

கடந்த எழுபதாண்டு காலத்தில், எழுத்துச் சீர் திருத்தம் வேண்டி நின்ற பெரியோர் பலராவர். தந்தை பெரியார் அவர்களுள் முதன்மையானவர். புலவர் குழந்தை, மு.வ, தெ.பொ. மீ., அ. ச. ஞானசம்பந்தம் போன்ற பெரியோர்கள் அவ்வப்போது குரலெழுப்பி வந்துள்ளனர். மக்களின் மனப் போக்கை அறியும் பொருட்டு இவ்வாண்டு 'கொங்கு' பொங்கல் மலரில் பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன் அவர்களின் 'கி பி. இரண்டாயிரத்தில் தமிழ்' என்ற கட்டுரையை வெளியிட்டு வாசகர்களின் கருத்துக்களை கேட்டிருந்தோம்.

கூர்த்த மதிபடைத்த கொங்கு வாசகர் பலர் தத்தம் கருத்துகளைத் தெளிவாக எழுதியிருந்தனர். மாற்றம் வேண்டும் எனவும், எவ்வாறு இருக்கலாம் எனவும் சிலர் எழுதியிருந்தனர். குறிப்பாக பொன் விநாயகம்அவர்களும், திரு. சரவணத்தமிழன் அவர்களும் தங்கள் சிந்தனைப்படி புதிய வரிவடிவம் அமைத்து எழுதியிருந்தனர். பேராசிரியர் மகாதேவன் அவர்களின், உயிர்மெய் எழுத்துகளுக்குத் தனி வடிவம் வேண்டுவதில்லை; 'கி' என்பதற்கு 'கஇ' போன்று எழுதலாம் என்ற கருத்தைச் சிலர் வரவேற்கவில்லை. ஒரு பக்கம் எழுத வேண்டியதற்கு இரண்டு பக்கம் தேவைப்படும் என்று மயங்கினர் சிலர். ஆனால் கணக்கிட்டுப் பார்த்ததில் கூடுதல் இடம் 25 நூற்று வீதமே இருந்தது. மெய்யோடு உயிர் வந்து சேர்ந்து உயிர் எழுத்து தோன்றுவதால் மெய் உயிர் (கஇ) சேர்த்து எழுதலாம் என்பது அவர்கள் கருத்து. 'மஉ ரஉ கஅ ன, என்பதை முதலில் படிக்கும் போது குழப்பமாகத் தோன்றினாலும், பழகப் பழக எளிதாகும் என்பது அனுபவம். செய்யுள் இலக்கணத்தில் சீர், தளை, தொடை பிரித்தலுக்கு இம்முறை ஒவ்வாதெனப் பலர் கருதுகின்றனர். எனினும், பேராசிரியர் மகாதேவன் அவர்களின் ஆய்வுப் போக்கையும் எழுத்து அமைப்பு முறையையும் பாராட்டிப் புதிய சிந்தனையை வரவேற்றுள்ளனர் பலர்.

இந்திய மொழிகள் அனைத்திற்கும் ஒரேவடிவம் வேண்டும் என்கின்றனர் சிலர். உலகம் முழுமைக்கும் ஒரே வரி வடிவம் வேண்டுகின்றனர் சிலர். எல்லா மொழிகளுக்கும் பொதுவாக ஒருவடிவம் இருந்தபோதிலும், அவரவர் மொழியின் நயங்களை உணர்த்தும் பழைய வரிவடிவம் இருக்கலாம் என்பர் சிலர். பொது வரிவடிவில் தற்போது புகாமல் தமிழ் வரிவடிவை மட்டும் இப்போது எண்ணலாம்.

## சீர்மையும் திருத்தமும்

ஏன் வேண்டும் சீர்மை? என்பதைச் சுருக்கமாகக் கூறினால், திருத்தம் எவ்வாறு அமைதல் வேண்டும் எனக் காண்பது எளிது. அவை:

[அ] மெய்யுடன் உயிர் ஏறி வரும் உயிர்மெய்யெழுத்துகளில் சீர்மை (Uniformity) இல்லை.

[ஆ] தட்டச்சுப் பொறியில் தற்போது 62 உருவங்கள் உள்ளன. இகர உகர இணைப்புகளுக்கான நிறுத்தச் சாவிகள் (D:‹‹ l Key) உள்ளதால் வேகம் தடைபடுகின்றது. மேற்புள்ளி அடித்ததும் பொறி நகராதாகையால், தாளில் ஓட்டை விழுந்து விடுகிறது. தாளின் மறுபக்கம் எதையும் தட்டச்சு செய்ய முடிவதில்லை. ஒட்டு உருவங்கள் சரியாகப் பொருந்தாமல் அழகைக் குறைக்கின்றன.

[இ] அச்சுப் பொறிக்கான உருவங்கள் 131 உள்ளன. அவற்றின் எண்ணிக்கை குறைந்தால் மானோ டைப், லைனோ டைப் போன்றவை இன்னும் எளிமையாகும்.

[ஈ] கணிதி (Computer) யில் தமிழ் புழங்க, வரிவடிவம் குறைவாதல் வேண்டும்.

இந்த மாற்றங்களால் பின் கண்ட எதிரிடை விளைவுகள் குறைவாகி இருத்தல் வேண்டும்.

[க] மாறுதல் காலத்தில் குழப்பம் குறைவாகவும் ஏற்றுக் கொள்ளுதல் எளிதாகவும் இருக்க வேண்டும்.

[க] எழுதிடம் வரம்பின்றி (Space) மிகக் கூடாது.

**பரிந்துரை**

சீர்திருத்தங்களைப் படிப்படியாக ஆராய்ந்து பார்க்கலாம். சீர்திருத்தங்களும், அவற்றால் ஏற்படும் நன்மை தீமைகளும் அடுத்த பக்கத்தில் பட்டியலில் காணலாம்.

தற்போதைய நிலவரப்படி, தட்டச்சில் 62 சாகளும் அச்சில் 131 உருவங்களும் உள்ளன. மெல்ல மெல்ல இவற்றின் எண்ணிக்கையைக் குறைக்க இயலுமா?

தந்தை பெரியார் அவர்கள் லை, ளை, னை, ணை, றா, ணா, னா, என்பவற்றிற்குப் பதிவாக லை, ளை, னா, ணா, றா

| எண் | பரிந்துரை | அச்சில் உருவங்கள் | தட்டச்சில் உருவங்கள் | நகராச் சாவி | தட்டச்சில் கூடுதல் இடம் | புதிய உருவம் | மாறுதல் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தற்போதைய நிலை | 131 | 62 | உண்டு 3×2 | இல்லை | இல்லை | ... |
| 2. | லை, ளை, ணை, னை, றா, ணா, னா | 118 | 57 | உண்டு 3×2 | 1% | இல்லை | மிக மிக எளிது |
| 3. | உகர, ஊகார, மெய்களுக்குத் தனிக்குறி சேர்த்தல் | 90 | 38 | உண்டு 2×2 | 10% | 2 | சிறிது குழப்பம் |
| 4. | அா, இா, உா, எா, ஒா | 85 | 33 | உண்டு 2×2 | 2% | 2 | எளிது |
| 5. | மெய்ப்புள்ளியைத் தலைக்குமேல் வைக்காமல் தள்ளி வைத்தல் (கஙⁿ⁰தன⁰) | 67 | 33 | உண்டு 1×2 | 5% | 2 | எளிது |
| 6. | இகர, ஈகார உயிர்மெய்களுக்குத் தனிக்குறி சேர்த்தல் | 33 | 33 | இல்லை | 10% | 4 | சிறிது குழப்பம் |
| 7. | மெய்+உயிர் எனக்கூட்டி எழுதல் மஉரஉ கஅன | 30 | 30 | இல்லை | 25% | இல்லை | மிகுந்த குழப்பம் |

என்ற எழுத்துகளைப் புழங்கி வருகின்றார். இதனால் எழுத்து வடிவங்களில் சீர்மை கிடைக்கின்றன. கூடுதல் எழுதிடம் மிகமிகக் குறைவு. கண்ணை மூடிக்கொண்டு இதை ஏற்றுக்கொள்ளலாம்.

பெரியார் அவர்கள் ஐ, ஔ என்ற எழுத்துகளை அய், என்றும் அவ் என்றும் எழுதி வருகிறார்கள். இந்த மாற்றத்தால் கூடுதல் நன்மையோ, சீர்மையோ இல்லையாதலாலும், உச்சரிப்பில் நுண்ணிய வேறுபாடு உள்ளதாலும், பழைய உருவங்களே இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

சீர்மையில் அதிகம் இடறுவது உகர வரிசைதான்.

கு-டு-மு-ரு-ழு... ஒருவிதம்

ஙு-சு-பு-யு-வு... ஒருவிதம்

ஞு-ணு-து-நு-லு- று-னு... ஒருவிதம்

அத்தனையும் தனித்தனி எழுத்துகள். 'ா' சேர்ந்தவுடன் அகர மெய்கள் நெடிலாவது போல உகரத்திற்கு ஒரு குறியீடு கண்டு பிடித்துவிட்டால், எழுத்துருவ எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிடும். புத்தக அச்சில் 36 எழுத்துருவங்கள் குறைந்து விடுகின்றன. தட்டச்சில் 19 உருவங்கள் குறைந்துவிடுகின்றன.

இந்த ஒரு சீர்திருத்தத்திலேயே நமக்கு வேண்டிய பலனில் பெரும் பகுதி கிடைத்துவிடுகிறது. இந்த மாற்றத்திற்கு நாம் அணியமாதல் மிகவும் இன்றியமையாதது. தனிக்குறி பக்கத்தில் சேர்த்து விடுவதால், ஒரு எழுத்தாக எழுதப்படுவது, இரண்டெழுத்து இடத்தை அடைத்துக்கொள்ளும். இதனுல் ஏற்படும் இடமிகுதி 10 நூற்று விகிதம் ஆகும். எழுத்தெண்ணிக்கை குறைவதால் ஏற்படும் நன்மை கருதி இந்த இடமிகையைப் பொறுத்துக் கொள்ளலாம்.

தமிழ் உயிர்க் குறில்கள் ஐந்து, அ, இ, உ, எ, என்பவை. இவற்றுடன் கால் சேர்த்து அா, இா, உா, எா, ஒா

என எழுதலாம். இதனுல் ஐந்து உருவங்கள் குறைகின்றன பாடல்களில்தான் நெட்டுயிர்கள் அதிகம். உரை நடையில் குறைவே. அதனால், கூடுதல் 2% மட்டுமேயாகும்.

மெய்யெழுத்துகளுக்கு, தலைக்கு மேல் புள்ளி வைக்காமல் வெப்ப அளவுளைக் குறிப்பது போலப் பக்கத்தில் வைக்கலாம் (கந$^0$ தன$^0$ வங$^0$ தான$^0$) இதனால் தட்டச்சில் சாவி குறைவதில்லை. மாறாக, நிறுத்தச்சாவி குறைகிறது தலைப்புள்ளி நிறுத்தச்சாவியில் உள்ளதால், தமிழ்த் தட்டச்சிட்ட தாளில் துளைகள் மலிந்து விடுகின்றன. இரண்டாவது பக்கம் பார்க்கவொண்ணாமல் இருக்கும். தட்டச்சில் பொறி உரை டிகிரி மட்டும் நகருமாறு அமைக்க இயலும். மராட்டியம் போன்ற பிற இந்திய மொழித் தட்டச்சுப் பொறிகளில் இந்த வசதி உள்ளது.

புத்தக அச்சில் 18 உருவங்கள் குறைகின்றன. இதனால் எழுதிடம் 3% முதல் 5% வரை கூடும்.

மேலே உகர வரிசையை எழுதுவது போல இகர வரிசையையும் தனி உருவம் இணைத்து எழுதலாம். அதனால் எழுத்துருவங்களில் எண்ணிக்கையில் மாற்றமில்லை. அச்சுருவத்தில் மட்டும் மேலும் 36 குறையும். அதனால் எழுதிடம் இன்னும் 10% கூடும்.

மேலே கூறிய பரிந்துரையை இறுதிப்படியாக ஏற்றுக் கொள்ளலாம். அச்சுருவங்களின் எண்ணிக்கை 35 ஆகக் குறைந்து விடுகின்றது தட்டச்சுப் பொறியில் நிறுத்தச் சாவிகள் இல்லை. ஒட்டுக் குறிகள் இல்லை. தட்டச்சிடும் தாளில் ஓட்டை விழாது அழகு கூடும். அத்தனையும் பழக்கமான எழுத்துகள். புதிய குறிகள் நான்குதான். மாறும் காலத்தில் குழப்பமே இல்லை. பழைய நூல்களையும் படித்துப் புரிந்து கொள்ள இயலும்.

கொண்டல் சு. மகாதேவன் அவர்களின் பரிந்துரைப்படி எழுத்துருவம் 30. கணிதி (Computer) போன்ற கருவிகளில் பயன்படுத்தல் எளிது. அங்கு புழங்கும் அறிவாளர் எண்ணிக்கை குறைவு; புரிந்து கொள்ளும்

ஆற்றல் மிக்கோரும் அதிகம். அதனால், மாறுதல் காலம் என்ற நிலைமை இல்லை.

உகர வரிசைக்கு வேண்டிய எழுத்துருவம் இரண்டு. நாம் பரிந்துரைப்பவை.

⊐ ∃

இகர வரிசைக்கு வேண்டிய எழுத்துவரும் இரண்டு. அவை:

q p

மெய்ப்புள்ளியை எழுத்தின் தலைக்கு மேல் வைக்காமல் பக்கத்தில் வைக்கலாம். (க$^0$)

**அமலாக்கம்**

மேலே கண்ட ஏழு நிலைகளில் முதல் ஐந்து முன்னேற்றங்களே போதும். அதாவது உகர வரிசை மட்டும் மாறினால் போதும். இதனால் எந்தவிதமான குழப்பமும் இல்லை. கூடுதலிடமும் மிகவும் குறைவு. உடனே அமலாக்கலாம்.

• • இகரத்திற்குத் தனிக்குறி சேர்ப்பதை தற்போதைக்கு விட்டு விடலாம். சீர்மையால் அச்சுத் தொழில் மட்டுமே நன்மை பெறும். ஆனாலும், அது கணிசமான தல்ல. எனவே இவற்றை இப்போது எடுத்துக்கொள்ளவேண்டாம்.

**நன்மைகள்**

எழ⊐ த$^0$த⊐ வடிவங$^0$கள$^0$ சீர$^0$மை பெற⊐கின$^0$றன. உர⊐வங$^0$களின் எண$^0$ணிக$^0$கை வெக⊐வாகக$^0$ க⊐ றைந் த⊐ விட⊐கின$^0$றன. ஆங$^0$கிலம் தமிழ$^0$ இரண$^0$டைய⊐ம் ஒரே தட$^0$டச$^0$ச⊐ப$^0$ பொறியில் வைத$^0$த⊐க$^0$ கொள$^0$ள லாம$^0$. மாற⊐தல் காலத$^0$தில் க⊐ழப$^0$பமில$^0$லை. மக$^0$கள் ம⊐ன் வர⊐வார்களா?

குறிப்பு : கட்டுரை 1973-ஆம் ஆண்டு செப்டம்பரில் வெளியாயிற்று. இதன் திருந்திய கருத்துகளைச் சேகர் பதிப்பக வெளியீடான 'புதிய தமிழ்வடிவம்' என்ற நூலில் காண்க.

ஓமலூர், கேத்தநாய்க்கன்புதூர்

பெரிய சக்கிலிச்சி ஏரிக் கல்வெட்டு

எட்டாம் நூற்றாண்டு - வட்டெழுத்து

கொடுமுடியார் கண்டுபிடிப்பு



ஸ்ரீ கி ட ங் க ல் பு லி யா ர் ம

க ன ல் லி ஓ ட் டை ட க ண் ட து

ஸ்ரீ கிடங்கல் — ஏரியின் பெயர்

மதகு வைத்தவன் — நல்லி

அவன் தந்தை — புலியார்

சிரம்பான்

# பரமானந்தம்

எழுத்துகளிடையே மாற்றம் ஏற்படின் அம் மாற்றம் சிக்கலற்றவைகளாகவும் எளிய முறையிலான வைகளாகவும் இருத்தல் வேண்டும். அவைகளின் அமைப்பு முறைகள் நெடுங்காலம் நிலைக்கக் கூடியவைகளாகவும் இருத்தல் வேண்டும்.

அகர உயிர் சேர்ந்த உயிர்மெய் எழுத்துகளைத் தவிர மற்ற உயிர்மெய் எழுத்துகளின் குறியீடுகள் அனைத்தும் அந்தந்த உயிரெழுத்துகளின் குறியீடுகளை ஏறத்தாழ ஒட்டி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவைகள் ஒரே அளவில் ஒரே பக்க அமைப்பில் எழுதப்படல் வேண்டும். தற்போதுள்ள எழுத்து முறைகளைக் கவனிப்போம்.

கா — குறியீடு வலது பக்கம் அமைந்திருக்கின்றது.

கி — குறியீடு மேல்பக்கம் அமைந்துள்ளது.

கு—குறியீடு கீழ்ப் பக்கம் வளைந்து மேல் நோக்குகிறது.

கெ— குறியீடு இடது பக்கம் அமைந்துள்ளது.

கொ—குறியீடுகள் இருபுறங்களிலும் அமைந்துள்ளன,

தற்போதுள்ள எழுத்து முறைப்படி நான்கு புறங்களிலும் எழுதப்படுகின்றன. இந்நிலை மாறி, இக்குறியீடுகள் ஒரே அளவில் ஒரே பக்க அமைப்பில் எழுதப்படல் வேண்டும். அகரம் சேர்ந்தவை ஒரு மாதிரி குறியீடுகளாகவும் மற்ற உயிர்மெய் குறியீடுகள் இரண்டு குறியீடுகளாகவும் எழுதப்படல் வேண்டும். உயிரெழுத்துகளும் ஒரே குறியீடுகளில் எழுதப்படல் வேண்டும்.

க
கி } ஒரு குறியீடு
கு

கா } இரண்டு குறியீடுகள்
க

கொ — மூன்று குறியீடுகள்.

ஐ, ஔ- இவையிரண்டும் மற்றும் இவை சர்ந்த உயிர்மெய்களும் இல்லாமலேயே மொழி ஒலி பிழையின்றி இயங்கும். ஐ ஔ இரண்டும் கூட்டொலிகள் என்று அறிஞர் பலரும் முன்னமேயே வலியுறுத்தி விவரித்துள்ளனர். ஆகவே இதுபற்றி இங்கு விவரிக்காது விடுகின்றேன்.



அ, ஆ, சென்னை அரசாங்கத்தின் (20- 2- 1950 எம்.எஸ் 527 கல்வித்துறை) தமிழ்ச் சீர்திருத்தக் கமிட்டியாரால் அமலாக்கப்பட்டது.

எம். எஸ் 527 கல்வித்துறை இ, ஈ —தற்போதைய குறிலுக்குள்ள இத்தனை வளைவுகளும் 19-ஆம் நூற்றாண்டில்தான் ஏற்பட்டன. இதற்கு முன் இகரத்திற்கு இத்தனை வளைவுகளில்லை.

ஊ—'ள' என்பது தனிப்பட்ட ஒரு ஒலியை எழுப்பக் கூடிய ஓர் எழுத்து. அதை 'உ' மேலிட்டு நெடிலெனக் கூறல் தகாத ஒன்றே.

ஏ— சுழி, நெடிலின் பூர்த்தியாகக் காணப்படுவது மாத்திரமல்லாமல், அதன் உயிர்மெய் குறியீடும் அவ்வாறே எழுதப்படுவதால் இதை இவ்வாறு எழுதலாம்.

ஆரமபக் கல்விக்கு இவை ஏ என்பதில் உள்ள கீழ்க் கோட்டினைச் சுழித்து எழுதலாம்

உயிர் மெய் வடிவங்களுக்கு, தலைப்புள்ளி யில்லாத மெய்யெழுத்துடன் படத்தில் (பக்-76ல்) உள்ள ஒன்பது குறிகளை எழுத்தின் வலது பக்கத்தில் இட்டு எழுதலாம்.•

| | | |
|---|---|---|
| உயிர் | 10 | |
| (அகர) உயிர் மெய் | 18 | |
| சார்பின் குறியீடு | 9 | (76—ஆம் பக்கம்) |
| மெய் புள்ளி | 1 | |
| மொத்தம் | 38 | வடிவங்கள் |

• குறிப்பு : இக்கருத்துபற்றிய இவரது விரிவான கட்டுரைகள் மலேசிய அரசாங்கச் செய்தி இதழான 'உதயம்' (ஜூன், ஜூலை, ஆகஸ்ட்,1975) இதழ்களில் வெளியாயின.

இலங்கை

# கோவிந்தப் பிள்ளை

## உயிர்மெய் உ, ஊ வரிகள்

கி, கீ என்ற உயிர்மெய் எழுத்துகளின் வடிவினைக் காட்ட மெய்யெழுத்தின் சார்பாக 'க' வும் உயிரெழுத்தின் சார்பாக (ி ீ விசிறியும், சுழி சேர்ந்த விசிறியும்) இடம் பெற்றிருக்கின்றன, இந்த முறைப்படி 'உ' வரியைப் பார்த்தால் உயிர் ஏறிய தொடர்பு எழுத்தமைப்பில் தெரிவது குறைவு. ஆனால் 'கூ' என்ற எழுத்தினை நோக்கினால் 'க' வும் இணைந்திருப்பதைக் காணலாம். அவ்வாறிணைக்கப்பட்ட பொழுதிலும் அதனைக் 'கு' எனக் கூறாது, 'கூ' என நெடிலாகவே கருதுகின்றோம். 'கூ' வரியிலுள்ள ஏனைய எழுத்துகளுக்கு இத்தொடர்பும் கிடையாது, அவற்றுள் 'கூ' ஒருவிதமாகவும் நூ, தூ, பூ, வூ, யூ என்பன 'ஆ' போன்றும், ஞூ, தூ, நூ, றூ, னூ என்பன ஒருவகையாகவும், டூ, மூ, ழூ என்பன வேறொரு வகையாகவும் தற்பொழுது எழுதப்படுவதுண்டு.

எனவே, இந்த முறையில் வேறுபடும் பல்வேறு வகை யான எழுத்துகளைப் பயிலும் பள்ளிச் சிறுவர்களும், பிறமொழியாளர்களும் எழுத்துகளைப் பயில்வதிலேயே பல மாதங்களைச் செலவிட வேண்டியவர்களாகின்றனர். எனவே, கா, கி, கீ என்ற வரிகளை ஒப்ப ஒரே சீரளவினை உடைய அமைப்புமுறை யொன்றினை அமைத்தல்

சாலவும் உவப்பானதாகும்; சுலபமானதுமாகும். அதற்கு 'க' எனும் உயிர்மெய் எழுத்துடன் 'உ' எனும் உயிரினைப் பக்கம் மாற்றி முறையே சுழியின்றியும் (ζ) சுழி சேர்த்தும் (¬ஃ) எழுதுதல் மிகப் பொறுத்தமானதாகும். இம்முறை எழுத்தோட்டத்திற்கும் காலச் சுருக்கத்திற்கும் உகந்த தாகும். அதேபோன்று அச்சு முறைக்கும் தட்டெழுத்து முறைக்கும் இலகுவானதாகும்.

இம்முறையைப் பின்பற்றி எழுதுவோமானால். தற் பொழுது தட்டெழுத்து இயந்திரங்களில் உபயோகிக்கப் படும் பெரும்பாலான எழுத்துகளைக் குறைக்கவும் வழியமையும். தற்பொழுது நாம் உபயோகிக்கும் கிரந்த எழுத்துகளாலான ஸ, ஜ, ஷ என்பனவற்றுக்கும் இவ் வடையாளங்களை உ ப யோ கி க் க லா ம். அவ்வாறு உபயோகிப்போமாயின் கிரந்த அடையாளங்களான ¬, ூ, இரண்டையும் நீக்கிவிடலாம். மேற்கூறிய முறைப்படி நாம் கு, கூ வரிகளை அமைப்போமாயின் அவை பின்வரு மாறு அமையும்:

கζ ஙζ சζ ஞζ டζ ணζ தζ நζ பζ மζ யζ ரζ லζ
வζ ழζ ளζ றζ னζ ஸζ ஜζ ஷζ

க¬ஃ ங¬ஃ ச¬ஃ ஞ¬ஃ ட¬ஃ ண¬ஃ த¬ஃ ந¬ஃ ப¬ஃ ம¬ஃ ய¬ஃ
ர¬ஃ ல¬ஃ வ¬ஃ ழ¬ஃ ள¬ஃ ற¬ஃ ன¬ஃ ஸ¬ஃ ஜ¬ஃ ஷ¬ஃ

மேற்சொல்லிய முறையைவிட வேறுமுறைகளைக் கையாள்வோமாயின் அவை தட்டெழுத்து முறைக்குக் கால அளவு கூடுதலாகவே தேவைப்படும். அம்முறை அவ்வளவு பொருத்தமானதாகக் கருதப்படமாட்டது.

மேற்கூறப்பட்டுள்ளபடி நமது மொழியின் வடிவமுறை அமையுமெனில் தமிழ் மொழியைக் கற்கும் வெளிநாட்ட றிஞர்களுக்கும் குழந்தைகளுக்கும் சில பொது விதிகள் மூலமாகவே தமிழ் எழுத்து வரிவடிவங்களை இலகுவாகப் புகுத்திவிடலாம்.

இலண்டன்

# வி. கே. தில்லைநாயகம்

## அறிமுகம்

*பொறியாளர் திரு. வி.கே. தில்லைநாயகம் ஓர் இலங்கைத் தமிழர். இலண்டனில் மின்னியல் மற்றும் வானொலிப் பொறியாளராகப் பணியாற்று கின்றார்; 1974-சனவரியில் இலங்கை யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்குத் தம் ஆய்வுக் கட்டுரையை அனுப்பியிருந்தார். அவரது கட்டுரை படித்து ஆராயப்பட்டது. அக்கட்டுரையின் முதல்பகுதி சுருக்கம் தருபவர்: 'கொடுமுடி'.*

## எழுத்தாளர் நிலை

தற்போது, தமிழில் செய்திப் பரவல், கூடுதல் செலவில் தாமதமாக நடைபெற்று வருகின்றது. இது தமிழ் வளர்ச்சியைப் பாதிக்கின்றது. அறிவு பரவுதலுக்கு அச்சிட்டு வழங்குதலே எளிய முறையாக உள்ளது. முன் னேறுகின்ற சமுதாயத்திற்குப் புத்தகங்களை மலிவான விலையில் தயார் செய்தல் இன்றியமையாதது.

திறமையான எழுத்தாளர்கள் நிறைந்துள்ளனர். போதிய பொருள் வசதி இல்லாததால் அவர்களால் நூல்

களை அச்சிட முடியவில்லை. பதிப்பாளர்கள் இடைத் தரகர்கள் போல இருக்கின்றனர். இதில் இலாபம் வருவதாக இருந்தால் மட்டுமே பதிப்புப் பணியை அவர்கள் மேற்கொள்வர்.

### மின்னியல் தட்டச்சுப் பொறி

இக்கட்டுரையில் ஆசிரியர் தாம் வடிவமைத்த மின்னியல் தட்டச்சுப் பொறியைப் பற்றி விளக்குகின்றார். இதில்: 12 உயிர், 23 மெய், ஒரு ஆய்தம் ஆகியவை கொண்டு தமிழில் உள்ள 312 எழுத்துகளையும் அடிக்கலாம். 247 தமிழ் வடிவங்களும், 65 கிரந்த வடிவங்களும் சேர்ந்து 312 ஆகின்றன. சிறப்பு வடிவங்கள், எண்கள், நிறுத்தக் குறிகள், கணக்கியல் குறிகள் ஆகியவைகளும் இச்சாவிப் பலகையில் அமைந்துள்ளன.



எனினும் இதில் உயிர்மெய் வடிவங்கள் இல்லை. சரியான சாவியை அழுத்தினால், பொறி அந்த உத்தரவைக் கிரகித்துக் கொண்டு, அச்சுப்பொறியில் உள்ள சரியான குறியீட்டைத் தேர்ந்தெடுத்து, உயிர்மெய் வடிவத்தை அடித்து விடும். உத்தரவுகளைக் காகித நாடா

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |
| ஸ் | ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ | ஸெ | ஸே | ஸை | ஸொ | ஸோ | ஸௌ |
| ஷ் | ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ | ஷெ | ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷௌ |
| ஜ் | ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ | ஜெ | ஜே | ஜை | ஜொ | ஜோ | ஜௌ |
| ஹ் | ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ | ஹெ | ஹே | ஹை | ஹொ | ஹோ | ஹௌ |
| க்ஷ் | க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ | க்ஷெ | க்ஷே | க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ |

TOTAL NUMBER OF CHARACTERS = 312
NUMBER OF TYPES NECESSARY = 44

அல்லது காந்த நாடாவில் பெற்றுப் பாதுகாத்து, பொறியின் சாவிகளுக்கு அனுப்புகிறது.

(எடுத்துக் காட்டாக, க அடித்து, பின்னர் இ அடித்தால் போதும் அச்சில் கி என்ற வடிவம் விழும். கஇ விழாது.)

தட்டச்சுப் பொறி காகித நாடா அல்லது காந்த நாடாவில் உள்ள உத்தரவுகளைப் படிக்கும் வல்லமைஉள்ளதால், ஏற்கனவே வேறு பொறியில் பதிவு செய்தவற்றை, இப்பொறியால் படிக்க இயலும். எனவே, மின்னியல் தட்டச்சுப் பொறியால் படிக்கவும் எழுதவும் இயலும்.

தற்போதைய தட்டச்சுப் பொறிகளில், சாவியின் தலையில் எழுத்து வார்க்கப்பட்டிருக்கும். அதனால் எல்லா எழுத்துகளையும் ஒரே அகலத்திற்குள் குறுக்கி அல்லது விரித்து உருவமைப்பு ஏற்றிருக்கும். மின்னியல் தட்டச்சுப் பொறியில் அவ்வாறு இல்லை ஒவ்வொரு எழுத்தும் அதனதன் அழகு வடிவத்திற்கேற்ற நீள அகலங்களுடன் இருக்கும். அதனால் மின்னியல் தட்டச்சுப் பொறியில் அடித்த வாசகம், அச்சிட்டாற்போல அழகாக இருக்கும். வேறு பல உபயோகங்களும் உண்டு.

1. தற்போதுள்ளமை போன்று ஈய எழுத்துகளைக் கோத்து அச்சடிக்கும் முறையை அறவே ஒழித்துவிடலாம். லித்தோ தட்டில் நேரடியாகத் தட்டச்சு செய்து, லித்தோ அச்சுப் பொறியில் நேரடியாக அச்சிட முடியும்.

2. தட்டச்சு செய்தவற்றை ஒரு தடவை பயன்படுத்திய பின்னரும் பாதுகாத்து, அடுத்த பதிப்பிற்குப் பயன்படுத்தலாம். மீண்டும் ஒரு முறை அச்சுக் கோக்க வேண்டியதில்லை. எத்தனை தடவை வேண்டுமானாலும். டைப் நகலோ அச்சுக்கோத்தலோ செய்ய முடியும்.

3. இந்தக் காகித நாடா அல்லது காந்த நாடாவை உலகின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் அனுப்பி அங்கேயே அச்சிட்டுக் கொள்ளலாம். அங்கே தமிழ்ப் படித்த ஒருவன் இருக்க வேண்டிய அவசியமே இல்லை.

4. அச்சுக் கோக்கும் பொறியுடன் சேர்த்து, புத்தகங்களை மலிவாகவும், விரைவாகவும் உற்பத்திச் செய்ய இயலும்.


C.R
L.F
SHIFT
1 2 3 4 5 6 7 8 9 0 ( )
SPACE
SHIFT
L.F
C.R

5. மின்னியல் தட்டச்சுப் பொறியைத் தொலை அச்சு (Teleprinter) போன்று உபயோகிக்க முடியும். எழுதப்பட்ட செய்திகளைத் தந்திக் கம்பிகள் மூலம் அனுப்ப இயலும். (கம்பிகள் இல்லாமல் நுண்ணலை மூலமாகவும் அனுப்ப இயலும்.)

6. கணிதி (Computer) க் கருவிகளின் உள்வாய்ப் பகுதியாகப் பயன்படுத்த இயலும்.

7. தமிழ் போன்ற ஒலி வடிவம் கொண்ட சிங்களம், சமக்கிருதம், இந்தி ஆகிய மொழிகளுக்குக்கூட மின்னியல் தமிழ்த் தட்டச்சுப் பொறியையே சிறிது மாறுதல்களுடன் பயன்படுத்த முடியும்.

இம்மின் தட்டச்சுப் பொறி தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை, கலாச்சாரம், நோக்கு ஆகியவற்றில் புரட்சிகரமான முன்னேற்றங்களைத் தோற்றுவிக்கும்.

(**புதிய தமிழ் வடிவம்** என்ற நூலில் **கொடுமுடியார்** பரிந்துரை செய்துள்ள அனைத்தும் இதில் உள்ளன. இருவரும் மாநாட்டிற்கு முன் சந்தித்துக் கொண்டதில்லை. கடிதப் போக்கு வரத்தும் இல்லை. எனினும் இருவரும் ஒரே முடிவுக்கு வந்திருந்தனர்!)

1. மெய்ப்புள்ளியைத் தலைக்குமேல் வைக்காமல் பாகைக் குறிபோல அமைத்தல்.

2. இகர, ஈகார உயிர்மெய் மேல் விலங்குகளை எழுத்துடன் ஒட்டாமல், பக்கத்தில் போடுதல்.

3. உகர ஊகார உயிர்மெய் வரிசைக்கு இறக்கத்தில் உள்ள ு ூ குறிகளைப் போடுதல்.

4. பெரியார் வழங்கியபடி னா, ணா, றா, லை, ளை, னை, ணை.

இவையே தில்லைநாயகம் பரிந்துரைப்பவை.

**சாவிப் பலகை**

இரண்டு வகைச் சாவிப்பலகையை இவர் வடிவமைத்துக் கொடுத்துள்ளார். எனினும் இதில் செப்பம் செய்தாலும் ஏற்றுக் கொள்வார்.


C.R
L.F
SHIFT
SPACE
C.R.
L.F.
SHIFT

**சிறப்புகள்**

அவரது கடுமையான உழைப்பின் பயனாக மின்னியல் சுற்றுகளை வடிவமைத்துள்ளார். தன் சொந்தப் பணத்தை ஏராளமாகச் செலவு செய்து இந்தப் பணியினை மேற்கொண்டுள்ளார். "என்னுடைய மொழிமேலும், எமது மக்கள் மேலும் உள்ள காதலால், இப்பணியை மேற்கொண்டேன்" என இங்கிலாந்தில் இருந்துகொண்டு கூறுவது நம் நெஞ்சை உருக்குவதாக உள்ளது.

அவரது தட்டச்சுப் பொறியில், இரண்டுவிதமான வடிவங்களைப் பெறலாம். காகிதம் செருகி நேரடியாகப் பெறும்போது க+இ என அடித்தால் கி வடிவம் கிடைக்கும்.

த்இ | ல் | ல்ஐ | ங்ஆ | ய்அ | கஅ | ம்

என்ற சாவிகளைத் தட்டி, **தில்லைநாயகம்** என்ற வடிவைப் பெறலாம். ஆனால் தற்போதுள்ள தட்டச்சுப் பொறியில்.

ி | த | ் | ல | ை | ல | ந | ா | ய | க | ் | ம |

என்று தட்ட வேண்டியுள்ளது. இது பொருத்தமானதாக அவருக்குப் படவில்லை.

முடிவுரையில் பின்கண்ட கோரிக்கைகளை அவர் வைக்கின்றார்.

1. தற்போதுள்ள வடிவங்களை ஒழுங்குபடுத்தல்.
2. தேவையான புதிய வடிவங்களைத் தோற்றுவித்தல்.

3. மின்னியல் அச்சுப்பொறி வடிவமைப்பில் அவரது திட்டத்தைத் தொடருவதற்குப் பொருளுதவி ஏற்பாடு செய்தல் அல்லது ஏதாவது ஒரு அரசாங்கத்தையோ, தனிப்பட்ட தொழில் முயற்சியாளரையோ இத்திட்டத்தை ஏற்று நடத்துமாறு தூண்டுதல்.

---

அவரது முகவரி:

V.K. Thillainayagam, C. Eng. Electronic & Radio Engineer, 74, Forlease Road, Maidenhead, Berks. SL6 ISD ENGLAND

டாக்டர்

# சாலினி இளந்திரையன்

## எழுத்துச் சீர்திருத்தம் ஏன்?

நமது தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் எப்போதோ ஒரு பழைய காலத்தில் அமைக்கப்பட்டவை. அந்தக் காலத்தில் வழக்கத்தில் இருந்துவந்த எழுது பொருள்களான பனை ஓலைக்கும், இரும்பு எழுத்தாணிக்கும் ஏற்ற முறையில் அமைக்கப்பட்டவை. அந்த நாளில் ஒரே புத்தகத்தில் ஆயிரமாயிரம் பிரதிகள் அச்சிடும் வழக்கம் (தேவை) இருந்ததில்லை; ஒரே ஆள், ஒரு நாளில் பல பேருக்குப் பல கடிதங்களை, அசலும் நகலுமாகத் தயாரித்து அனுப்பும் (இக்கால அலுவலக) முறையும் இருந்ததில்லை. இவை இல்லையாகவே, நமது எழுத்து முறையில் விரைவு, முயற்சிச் சிக்கனம் என்பவைகளும் அப்போது இன்றியமையாத தேவைகளாக இருக்கவில்லை.

இப்போதைய நிலைமை முற்றிலும் வேறு; மேலே குறித்த புத்தகத் தயாரிப்புக்கும் கடிதப் போக்குவரத்துக்கும் நாம் புதிய சாதனங்களைக் கண்டு பிடிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஏற்படவே, இந்தச் சாதனங்கள் எளிதாகவும் சிக்கனமாகவும் செயற்படத்தக்க முறையில், நமது மொழியின் எழுத்தமைப்புகளிலே தேவையான சில மாறுதல்களைச் செய்து கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது.

**நமது எழுத்துக்கள்**

நமது தமிழ் மொழியின் எழுத்துக்கள் 247 என்று நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. உயிர்கள், மெய்கள் என்றும், முதல் ஒலிகளும் உயிர்மெய், ஆய்தம் முதலான ஒலிகளும் சேர்ந்த நமிழ் ஒலிகளின் எண்ணிக்கைதான் 247. இவைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரிவடிவம் மிகவும் குறைவே.

உயிர் எழுத்துப் பன்னிரண்டு என்கிறோம். அவைகளை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்று எழுதுகிறோம். இவைகளில் ஒ என்னும் வடிவம் ஒன்றே ஒகரம், அவ் (ஔ) காரம் என்னும் இரண்டு இடங்களில் பயன்படுகிறது. அதே போல், அவ் (ஔ) கார எழுத்தில் இணைந்துள்ள ள என்னும் எழுத்து மெய் எழுத்து வரிசையிலும் உள்ளது. ஆகவே, பதினொரு வரிவடிவங்களைக் கொண்டே பன்னிரண்டு உயிர் ஒலிகளை எழுதி வருகிறோம்.

உயிர்மெய் எழுத்துக்கள், 216 (12×18) என்பது நமது கணக்கு. ஆனாலும், இந்த 216 ஒலிகளுக்கும் நாம் 216 எழுத்து வடிவங்களைப் பயன்படுத்தவில்லை. ஆகார உயிர்மெய் வரிசையில் ா என்னும் துணை எழுத்து ஒன்றே (கா, ஙா, சா, ஞா, டா, தா, நா, பா, மா, யா, ரா, லா, வா, ளா, ழா) பதினைந்து எழுத்துக்களுக்குப் பொதுவாக இருக்கிறது.

இதே போல், எகர உயிர்மெய் வரிசையில் ெ, ஏகார வரிசையில் ே, அய்கார வரிசையில் ை என்னும் எழுத்துக்கள் பொதுவாக உள்ளன.

இந்த வரிசைகளில் ணா, றா, னா, ணை, லை, ளை, னை என்னும் ஏழு எழுத்துக்களுக்கு மட்டும் தனித்தனி (ணு, ரு, று,—ணை, லை, ளை, னை) வடிவங்கள் உள்ளன. ஆகார உயிர்மெய் எழுத்தில் இந்த வேறுபட்ட வடிவங்கள் வருவதால், ஒகர ஓகார (உயிர்மெய்) வடிவங்களிலும், பதினைந்து எழுத்துக்களுக்கு ஏற்கனவே உள்ள ெ, ா,

மற்றும் ே, ா என்னும் துணை எழுத்துக்களையே பயன் படுத்துகிறோம். ஞெ, ஞே,—ஶெ, ஶே,—ஹெ, ஹே என்னும் ஆறு எழுத்துக்களில் மட்டும் வேறு அமைப்பு உள்ளது. அவ்வாறு உயிர்மெய் (கௌ, சௌ முதலாக) ஏற்கனவே உள்ள ஒற்றைக்கொம்பும் ளகரமுமே பயன்படுவதால், அதற்குத் தனி வரிவடிவ எழுத்து இல்லை.

இவ்வாறாகத் தமிழ் வரிவடிவ எழுத்துக்களின் தொகை ஒரு நூற்று முப்பத்து ஒன்று மட்டுமே.

நம்முடைய குழந்தை நமது மொழியை எழுதப் படிக்கக் கற்கும்போது, இந்த 131 எழுத்து வடிவங்களையும் நினை வில் வைக்க வேண்டியுள்ளது; அவை ஒவ்வொன்றும் எவ் வெவ்வாறு இணைந்து நமது மொழியின் 247 எழுத்துக்கள் உண்டாகின்றன என்பதையும் நினைவில் வைத்திருக்க வேண்டியுள்ளது.

இந்த 131 எழுத்துக்களோடு காற்புள்ளி, அரைப்புள்ளி, விவர (:) ப்புள்ளி, முற்றுப்புள்ளி, கேள்விக்குறி, வியப்புக் குறி முதலான வேறு சில எழுத்துக்களும் இன்றைய மொழியாட்சிக்குத் தேவையாக உள்ளன. பனை ஓலையில் அடிக்கடி இந்தப் புள்ளிகளை இட்டால் ஓலை பழுதுபட்டுப் போகும் என்பதால், நமது முன்னோர்கள், இவைகள் இல்லாமலேதான் எழுதி வந்தார்கள். நமக்கு இன்று வியப் பாகத் தோன்றினாலும், நமது முன்னோர்கள் நமது மூத்த இலக்கணப் புத்தமாகிய தொல்காப்பியத்தின் பெயரையே "தோலகாபபியம" என்று எழுதியதுண்டு என்பதை நாம் மறந்துவிட முடியாது!

'மெய் எழுத்துக்களும் எ, ஒ என்னும் (உயிர்க்) குறில் எழுத்துக்களும் மேலே புள்ளியிட்டு எழுதப்பட வேண்டும்' என்ற இலக்கணம் இருந்த போதே,—நமது முன்னோர்கள், எழுதுபொருளாகிய பனை ஓலை, எழுத்தாணி ஆகிய வற்றின் நிலையைக் கருதிப் புள்ளி இல்லாமலேதான் அந்த எழுத்துக்களை எழுதி வந்தார்கள்... (ஒவ்வொரு காலத் தாரும், எழுது பொருள்களின் அமைப்புக்கு ஏற்ப இலக் கணத்தைக் கூட மீறியுள்ளார்கள் என்பது இதிலிருந்து நமக்குத் தெளிவாகத் தெரிகிறது)

எதையும் விரைந்து செய்திட வேண்டிய காலத்தில் ஓர் எழுத்தைத் 'த' என்று எழுதி, அது இத்தன்னாவா தானாவா என்று ஆராய்ச்சி செய்து கொண்டு (அங்கேயே) நிற்கு மாறு நமது குழந்தைகளை நாம் வற்புறுத்துவது சரி யில்லை. எனவே மெய் எழுத்துக்களுக்குப் புள்ளி எழுத்துக் களை வார்த்துக் கொண்டோம்; மெய் எழுத்துக்கு உள்ள தலைப்புள்ளி எ, ஒ என்னும் உயிர் எழுத்துக்களுக்கும் இருப்பது குழப்பத்தை விளைவிக்கும் என்று கருதி அவை களை நீக்கிவிட்டோம்.

## அமைப்பு மாற்றம்

மேலைநாட்டார் கண்டு பிடித்த அச்சகமும் தட்டெழுதி யும் அவர்களின் எழுத்து அமைப்பை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டவை. குறிப்பாக, ஆங்கிலத் தட்டெழுதி 26 எழுத்துக்களையும் சில குறியீடுகளையும் ஒன்று முதல் 10 (0) வரை உள்ள எண்களையும் கொண்ட தாக உள்ளது. அதிலேயே, காலத்துக்குக் காலம், அவர்கள் மாறுதல்களைச் செய்து கொண்டுதான் வருகிறார்கள்.

இந்தக் கருவிகளை ஏற்றுக் கொள்ளுகிற நாம், நமது தமிழின் ஒலிமுறைக்கு ஊறு இல்லாமல், நமது எழுத்து அமைப்புகளை மாற்றிக்கொள்ள நேர்ந்தால் அதிலே வாட்டமோ தயக்கமோ அடையத் தேவை இல்லை. அறிஞர் பேனாவோட்டி அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது போல, "உயிர் 12ம் மெய் 18ம் ஆய்தம் 1ம் சேர்ந்து மொத்தம் 31 எழுத்துக்கள் கொண்டதுதான் தமிழ்..." எனவே, 26 எழுத்துக்காரர்கள் கண்டுபிடித்த தட்டெழுதி யும் அச்சகமும் நமக்கு மிக எளிதாகவே இருக்க வேண்டும். ஆயினும், (தமிழில்) உயிர்மெய் எழுத்துக்களை உண்டாக்க ஒரு சீரான முறையைக் கையாளாததால் எழுத்துக்கள் அதிகமாகி விடுகின்றன.

நமது மொழியின் ஒலிகளை அப்படியே வைத்துக் கொண்டு, அதன் வரிவடிவு எழுத்துக்களை மட்டும் சிறிது குறைத்தால் நல்லது என்ற கருத்தின் அடிப்படையிலேயே எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது. அப்படிக் குறைக்க முயலும்போது, இப்போது உள்ள வரிவடிவ

(எழுத்து) அமைப்புகளிலும் சிறிய மாறுதல்களை ஏற்க வேண்டியுள்ளது.

எழுத்துக்களுக்காக மட்டுமே நமது அச்சகத்தில் 131 எழுத்து அறைகள் இருப்பதற்குப் பதிலாக, 60 அல்லது 40 அல்லது 30 மட்டும் இருக்கக் கூடுமானால், அச்சகத் தொழிலாளி விரைவாகவும் எளிதாகவும் வேலை செய்ய முடியும் அல்லவா? உயிர் எழுத்துக்களுக்கும் மெய் எழுத்துக்களுக்கும் மட்டும் (அ, க் போல) வேறுவேறு வடிவங்களை வைத்துக் கொண்டு,—உயிர்மெய் எழுத்து வரிசை ஒவ்வொன்றையும் ஒரே சீராக அமைத்துக் கொண்டால், வேலை எளிதாகவும் சுறுசுறுப்பாகவும் நடக்கும் அல்லவா?

காவன்னாவுக்கு ஓர் எழுத்தும் ஒரு துணை எழுத்தும் போடுவது போல,— எல்லா உயிர்மெய்களின் ஆகார வரிசையும் (கா, ஙா, சா, ஞா, டா, ணா, தா, நா, பா, மா, யா, ரா, லா, வா, ளா, ழா, றா, னா) என ஒரே விதமாக இருந்தால், நமது அச்சகத் தொழிலாளி ''கண்ணை மூடிக் கொண்டு'' கடகட என்று வேலை செய்வார் அல்லவா? இதேபோல, உகர வரிசை, ஊகார வரிசை, அய்கார வரிசைகளையும் ஒழுங்குபடுத்திவிட்டால் எவ்வளவு வசதி!

இதிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்ன என்றால்,—நெடுங்காலமாக இருந்து வரும் தமிழ் எழுத்து மரபுக்கு மாறாக நாம் எதையும் செய்யவில்லை. ம், ஆ என்னும் இரண்டும் சேர்ந்து மா என்ற வடிவம் கிடைக்கிறது. அதே போல, ன், ஆ என்னும் எழுத்துக்கள் சேர்ந்தால் னா என்ற வடிவம் கிடைப்பதுதானே முறை? இந்த ஆகார உயிர் மெய் வரிசையில் 15 எழுத்துக்கள் ஒரே சீராக இருக்க, சுழி எழுத்துக்களான மூன்றே மூன்று எழுத்துக்களை மட்டும் ணா, றா, னா, என்று எழுதி வந்தோம். பனை ஓலையில் எழுதும்போது இவை வேறு எழுத்துக்கள் போல் தோற்றமளிக்கக்கூடும் என்று கருதி அப்படிச் செய்தார்கள். இப்போது, அச்சகத்திலும் தட்டெழுதியிலும் எழுத்துக்களைத் தனித்தனியே வார்த்து வைத்துவிடுவதால் அத்தகைய குழப்பங்களுக்கு இடமில்லை.

**சிக்கனம்**

தமிழில் பெரும்பான்மையாக இருந்து வருகிற எழுத்து முறையில் ஊடாடும் இந்தச் சில (ணு, ரு, று, ணை, லை, ளை, னை) வேற்றமைப்புகளை மாற்றி ஒழுங்குபடுத்தும்போது, அச்சகத்திலும் தட்டெழுதியிலும் இந்த ஏழு தனி எழுத்துக்கள் தேவையற்றவையாகிவிடுகின்றன. எந்தச் செயலை யானாலும் ஓர் ஒழுங்கு முறையில் செய்தால் உழைப்பும் நேரமும் செலவும் மிச்சமாவது இயல்பே அல்லவா?

உயிர் ஒலிகளில் அய், அவ் என்பவைகளைக் குறிக்க ஐ, ஔ என்னும் இரண்டு கூட்டு எழுத்துக்களைப் பயன் படுத்தி வருகிறோம். இந்த எழுத்துக்களை வைத்திருப்ப தால், உயிர் ஒலிகளுக்கு உரிய வடிவங்கள் 11 ஆகின்றன. இவைகளை அய், அவ் என்று எழுதினால் ஐ என்ற எழுத்து தேவை இல்லாமல் போகிறது. இதனால் உயிர் ஒலிகள் பன்னிரண்டையும் 10 வடிவங்களாலேயே குறிக்க முடிகிறது. அவ்கார ஒலிக் குறியீட்டிலே இருந்து வரும் குழப்பமும் நீங்கிப் போகிறது. ஔவையார் என்று எழுதி னால் 'வொளவையார்' என்று படிப்பவர்கள், அவ்வையார் என்று எழுதினால் அப்படிக் குழப்ப முடியாது அல்லவா? தவிர, அவ்காரத்தைத் தொடக்கமாக உடைய தமிழ்ச் சொற்கள் மிக மிகக் குறைவே என்பதையும் நாம் நினை விலே கொள்ள வேண்டும்.

அச்சகமும் தட்டெழுதியும் விரைவுக்காகவும் சிக்கனத் துக்காகவுமே கண்டுபிடிக்கப்பட்ட கருவிகள். முன்பெல் லாம் ஒரு புத்தகம் (ஏடு) தேவை என்றால் பல பேரைச் சம்பளத்துக்கு அமர்த்தி, மூல ஏட்டிலிருந்து பிரதிகள் எடுக்கச் செய்வார்கள்; அந்த, ஒன்று அல்லது ஒரு சில பிரதிகளுக்காக நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காக வும் பணம் செலவிடுவார்கள். அச்சகம் வந்த பிறகு, அதே செலவில், ஒரே புத்தகத்தைப் பல 100 பேர்களுக்கு அல்லது பல 1000 பேர்களுக்கு வழங்கிவிட முடிகிறது. இந்தப் பெரிய (மக்கள் நாயக) நலனைக் கருதி நமது மொழியின் வரிவடிவ எழுத்தமைப்பை ஒழுங்குபடுத்தி, அவைகளில் தேவை இல்லாத சிலவற்றை நீக்கி விடுவதிலே என்ன

தவறு? 200க்கு மேற்பட்ட எழுத்து வடிவங்களைக் கையாண்டு செய்யக்கூடிய அதே பணியை 28—30 எழுத்து வடிவங்களைக் கொண்டு, குறையின்றிச் செய்து முடிக்கலாம் என்றால், அந்த மாற்றத்தை வலியுறுத்துவதிலே என்ன தவறு?

## துணைப் பயன்கள்

எந்த ஒரு பெரிய முயற்சியும் சில நல்ல துணை விளைவுகளையும் ஏற்படுத்துவது இயல்பு. மேலே குறித்தவாறு எழுத்தமைப்பில் சீர்மையையும் அதன் விளைவாக ஏற்படும் எழுத்துக் குறைப்பையும் ஏற்பதால் நமக்கு வேறொரு பெரிய நன்மை கிடைக்கிறது.

நமது குழந்தைகள், நமது மொழியை எழுதப் படிக்கக் கற்கவேண்டுமானால், இப்போது 100க்கு மேற்பட்ட எழுத்து வடிவங்களைப் படித்து நினைவு வைக்க வேண்டியுள்ளது. காவன்னாவுக்கு உள்ள எழுத்தமைப்பு ணாவன்னாவுக்கு இல்லை;—அது, ணு என்று வேறுவிதமாக உள்ளது. கையன்னாவுக்கு உள்ள ஈரெழுத்து அமைப்பு லையன்னாவுக்கு இல்லை; — அது, லை என்று வேறுவிதமாக உள்ளது. இவைகளின் காரணமாக, ஒவ்வொரு எழுத்து வரிசைக்கும் இரண்டு மூன்று எழுத்தமைப்புகளை நமது குழந்தை **நினைவிலே சுமந்து திரிய** வேண்டியுள்ளது.

உகர, ஊகார (உயிர் மெய்) எழுத்து வரிசையோ, கேட்க வேண்டியதில்லை! அதிலே கு ஒரு அமைப்பு; து வேறு அமைப்பு; பு இன்னொரு அமைப்பு; நு பிறிதொரு அமைப்பு. இத்தனையையும் நமது குழந்தை தனித் தனியே தலையில் (நினைவில்) சுமந்து திரியவேண்டும். இல்லாவிட்டால், தனது தாய் மொழியையே அது எழுதவும் படிக்கவும் முடியாது!

எழுத்துச் சீர்திருத்தத்தால் இந்தச் சுமை குறைகிறது; பல்வேறு விதமாக உள்ள வடிவக் குழப்பம் நீங்குகிறது. குறைந்த நினைவு உழைப்பிலேயே, குறுகிய காலத்திலேயே நமது குழந்தை நம்முடைய மொழியை எழுதவும் படிக்கவும் கற்றுவிடுகிறது.

நமது மொழியை உலகமொழி என்று சொல்லி மகிழ்றோம். நமது தமிழர்கள், பிழைப்புத் தேடி உலகின் பல நாடுகளில் சென்றேறி வாழ்வதால்தான் நாம் இப்போது அப்படிச் சொல்ல முடிகிறது. இதைவிட, நமது மொழி உலகின் பல பகுதி (வேறு மொழி) மக்களால் படிக்கப்படு மானால், நமக்கும் நமது மொழிக்கும் அது பெரிய சிறப்பு அல்லவா? மொழி பெயர்ப்புகளை எதிர்பாராமலே பல பேர் நமது தமிழரின் பழைய புதிய சிந்தனைச செல்வங்களை அறிந்து மகிழ்வார்கள் அல்லவா?

நாம் மேற்கொள்ளும் எழுத்துச் சீர்திருத்தம், பல நாட்டாரும் நமது மொழியை எளிதாகக் கற்பதற்குப் பெரு மளவு உதவியாக இருக்கிறது.

**தயக்கம் ஏன்?**

இத்தனை முதல் நலன்களையும் துணை நலன்களை யும் கருதியே எழுத்துச் சீர்திருத்தம் வலியுறுத்தப்படு கிறது. 45 ஆண்டுகளுக்கு முன்னரே பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் அவருடைய சரியான தொண்டர்களும் எழுத்துச் சீர்மையின் ஒரு பகுதியைக் கடைப்பிடித்து வந்திருககிறார்கள்; பத்திரிகைகளையும் புத்தகங்களையும் திருந்திய எழுத்திலேயே அச்சிட்டு வந்துள்ளார்கள். கடந்த சில ஆண்டுகளில் இயற்றமிழ்ப் பயிற்றகத்தாரும், 'கொங்கு', 'தேனோலை' இதழ்க்காரர்களும், அறிவியக்கப் பேரவையாரும் வேறு சிலரும் அவ்விதமே (பத்திரிகை களையும் புத்தகங்களையும்) வெளியிட்டு வந்துள்ளார்கள். இதனால், படிப்பவர்களுக்கு எந்தச் சிரமமும் ஏற்பட்ட தில்லை

புதிய எழுத்து முறையில் எழுதினோரும் தட்டெழு தியோரும் அச்சுக்கோத்தோரும் எளிதாக இருப்பதாக உணர்ந்தது தவிர, சிரமம் எதுவும் இருப்பதாகச் சொன்ன தில்லை. ஆகவே, கொள்கை வகையிலும் நடை முறை வகையிலும் சீரானது என்று மெய்ப்பிக்கப்பட்டுள்ள தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கடைப்பிடிப்பதில், யாரும் எந்தவிதத் தயக்கமும் காட்ட வேண்டியதில்லை.

# வே. தில்லைநாயகம்

**சுருக்கம்**

இந்த எழுத்துரை 1 மொழி வளர்ச்சியை வரைந்து,
2 தமிழைத் தரிசித்து,
3 தமிழ் எழுத்து வளர்ச்சியை விவரித்து,
4 குறைபாடுகளைக் கூறி,
5 தற்போதைய தேவை என்னவென்று வகைப்படுத்தி,
6 சீர்மை அடிப்படைகளைச் செப்பி,
7 சீர்மைகளைச் சிறப்பாகச் சொல்லி,
8 புதியவழிகளைப் பொறுப்புடன் கூறி
9 நூல் தொகையுடன் முடிகிறது.

**கருத்து மொழிவு**

எழுத்துரை கூறும் சாரத்தைக் கூறுவது கருத்து மொழிவு (Proposition) எனப்படும்.

இம்முறையில் இந்த எழுத்துரை

1 தற்போதைய உயிருக்குப் பதிலாக, உயிருக்கும் உயிரொட்டுக்கும் பொருந்தும் புதிய உயிரை உருவாக்கிக் காட்டுகிறது.

2 இந்தப் புதிய முறை உயிரை, ஒரே சீராக மெய் எழுத்துகளுடன் இணைத்துக் காட்டுகிறது.

3 இதில் முழுமையாகப் புள்ளியை உபயோகிக்க வேண்டாத சிக்கனத்தைச் செப்புகிறது.

4 திராவிட மொழிகளுடனும் பிற இந்திய மொழி களுடனும் கூட்டுறவு முறையில் சீர்மை காண வேண்டு கிறது.

5 ஒருமைப்பாடு முறையில் ரோமன் லிபியை ஏற்றால் உலகமொழிகளுக்கிடையே ஏற்படும் சீர்மைப் பெருக்கைப் பேசுகிறது.

6 இந்த முயற்சியில் உணர்வு வயப்படாமல் அறிவியல் முறையில செயல்பட வேண்டுகிறது. இதனால் ஏற்படும் வாய்ப்புகளை விவரிக்கிறது.

## 1 மொழி

### 11 கருவி

மொழி ஒரு கருவி. இது இருவகையில் செயல்படு கிறது. முதல் வகையில் அகக் கருவியாக இயங்குகிறது; எண்ண, சிந்திக்கத் தூண்டுகிறது. இதன் மூலம் மனிதன் அறிகிறான்; அறிவு பெறுகிறான. இரண்டாவது வகையில் புறக் கருவியாகப் புலப்படுகிறது. கருத்துப் பரிமாற்றத் திற்கு கைகொடுக்கிறது. இதன் மூலம் மனிதன் தன் கருத்துகளை அடுத்தவரோடு பகிர்ந்து கொள்ள—பெருக்க—வளர்க்க—முயலகிறான்.

### 12 தோற்றம்

மொழி எப்படித் தோன்றியது? இன்னும் வரை யறுத்துச் சொல்லப்படவில்லை. ஏனெனில், இதுவரை எடுத்துரைக்கப்படும் காரணங்களான,

1 கடவுள் படைப்பு
2 ஆன்றோர் படைப்பு
3 பிறவிப் பேறு
4 குறிப்பு மொழி

5 சைகை மொழி

6 போலி மொழி

முதலிய எதுவும் முழுமையாக மொழித் தோற்றத்தை நிரூபிக்கவில்லை. எனவே காரணம் அறியும் முயற்சி தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கிறது.

## 13 தன்மை

மொழி ஒலி மயமானது. இதைப் படுக்கை அடுக்கு (Linear) முறையில் அமைத்து, இதற்குக் குறியீடு பொருத்தி வழங்கப்படுகிறது. இது கருத்தைப் பொருளாக, மையப்பொருளாகக் கொண்டு இயங்குகிறது.

## 14 கூறு

ஒரு மொழியின் மொழிக் கூறு அதன் ஒலி அமைதி, சொல் அமைதி, சொல்தொடர் அமைதி கொண்டு நிருணயிக்கப்பட்டு வருகிறது.

## 15 வகை

கருத்தைப் பரிமாற்றக் கருவியாகக் கொண்ட மொழி இருவகையாக உள்ளன. அவையாவன:

### 151 பேச்சு மொழி

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து பேசத் தொடங்கினான்; பேசுகிறான்; பேசுவான். சரியாகச் சொன்னால், மனிதன் வாழ்வில் பேசும் காலம் பெரும் பகுதியாக உள்ளது. படித்தார், படியாதார் ஆகிய இரு பிரிவினராலும் பயன்படுத்தப்படுகிறது. இதன் காரணமாகக் காலம்தோறும் மாறிக்கொண்டே, வளர்ந்துகொண்டே, சிறந்து கொண்டே வருகிறது.

### 152 எழுத்து மொழி

மனிதன் பேச்சு மொழியை எழுத்து மொழியாக்க முயன்றான். இது நீண்ட காலத்திறகுப் பின்புதான்; அதுவும் அண்மைக் காலத்தில்தான்.

எனினும் எழுத்துமொழி காலம் கடந்து நிற்கிறது. இடம் கடந்து செயல்படுகிறது. சுருங்கச் சொன்னால்

மனிதன் வரலாற்றைச் சுருக்கிப் படம் பிடித்துக் காட்டுகிறது.

## 16 எழுத்து

இந்த எழுத்து மொழி இன்று நாம் காண்பது போல என்றும் இருக்கவில்லை. ஆதிகாலத்தில் இருந்து பல கால கட்டங்களை மெல்ல மெல்லக் கடந்து, தவழ்ந்து, நடந்து வந்து இருக்கிறது. அவையாவன:

### 161 ஓவிய எழுத்து

கருத்தை அடிப்படையாகக் கொண்டு பேசிய மனிதன், அதை எழுத்து ஆக்கும்போது முழுக் காட்சி அடங்கிய ஓவியம் எழுத வேண்டியதாய் இருந்தது. இது ஓவிய (Ideograph) எழுத்து எனப் பெயர் பெற்றது.

### 162 அடையாள எழுத்து

காட்சிப் பொருளை ஓவியம் ஆக்கலாம். மனக் கருத்து நுட்பங்களை அவ்வாறு எழுத முடியாது. அந்த நிலையில் அடையாளம் மூலம் கருத்து எழுதப்பட்டது. இது அடையாள (Symbolic) எழுத்து எனப் பெயர் பெற்றது.

### 163 ஒலி எழுத்து

அடையாள எழுத்து, கால வேகத்தில் பொருளின் ஒலியான சிறப்பு ஒலியால், குறிக்கப்படும் நிலை பிறந்தது. இது ஒலி (Phonetic) எழுத்து எனப் பெயர் பெற்றது.

### 164 அசை எழுத்து

அடையாள எழுத்து, காலப் போக்கில் சொல் முழுமையையும் ஒலியால் குறிக்காமல் சொல் அசை ஒன்றைக் குறித்து வளரும் நிலை பிறந்தது. இது அசை (Syllabic) எழுத்து எனப் பெயர் பெற்றது.

## 17 வரி வடிவம்

இந்த வளரும் எழுத்தின் வரி வடிவம் தோன்றிய போது ஒரு நிலையில் இருந்தது; காலம்தோறும் மாறிக் கொண்டே வந்திருக்கிறது. பக்கம் 102-103 காண்க.

இது எழுதப்பயன்படும் பொருள்—களிமண் கட்டி, செங்கல், மரப்பட்டை, ஓலை, காகிதம் முதலியன; எழுதும் கருவி-கூரானகுச்சி அல்லது எழுத்தாணி, பென்சில், பேனா முதலியன; எழுதும் எழுத்து—ஆங்கிலம், தமிழ், இந்தி முதலியன; எழுதுவார் நிலை — மாணவர், ஆசிரியர் எழுத்தர், சுருக்கெழுத்தர் முதலியோர்—காரணமாக மாறிக் கொண்டே வருகிறது. இனியும் மாறிக்கொண்டே போகும்.

## 2 தமிழ்

### 21 *தோற்றம்*

தமிழ் எப்போது தோன்றியது என்று இதுவரை அறிவியல் முறையில் அறுதியிட்டு வரையறுக்கப் பட வில்லை. காரணம்? ஆதிகாலம் தொட்டு இருந்து வருவது தான்.

### 22 *வழங்கும் இடம்*

நமக்குக் கிடைத்து உள்ள நூல்களில் மூத்த நூலான தொல்காப்பியப் பாயிரத்தில் வரும்,

> 'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்
> தமிழ் கூறு நல்லுலகம்'

என்ற வரிகள் வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட பகுதியில் வழங்கும் மொழி — வாழும் மொழி தமிழ்மொழி என அறிகிறோம்.

### 23 *சிறப்பு*

ஒலி நுட்பம், சொல் நுட்பம், தொடர் நுட்பம், பொருள் நுட்பம், நூல் மரபுகள் கொண்டு, 'உலகச் செம் மொழிகளில் ஒன்று' என்று மொழி இயல் அறிஞர்களால் அறுதியிட்டுக் கூறப்படும் சிறப்பு கொண்டு தமிழ் இலங்கு கிறது.

உருமாற்றம் கொண்டு வளர்ந்து வரும் உயிரெழுத்துகள்



கி. பி. 10
கி. பி. 11
கி. பி. 12
கி. பி. 13
கி. பி. 14
கி. பி. 15
கி. பி. 16
கி. பி. 17
கி. பி. 18
கி. பி. 19



# 3 தமிழ் எழுத்து

## 31 ஒலி வடிவம்

மனிதன் தன் ஒலி உறுப்புகளால் பல ஒலிகளைப் படைக்கிறான். எனினும் பொருள்பட ஒலிப்பது—ஒலிக்கப் படுவது — சில ஒலிகள்தான்.

அவையும் முப்பதுதான். அவையாவன:

'எழுத்து எனப்படுவ
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப'

(தொல்காப்பியச் சூத்திரம் 1)

## 32 வரி வடிவம்

அந்த முப்பது ஒலிகளும் முப்பது எழுத்துகளாக அமைந்து உள்ளன. அவையாவன:

### 321 உயிர் வரிசை

அகரம் தொடங்கி ஔகாரம் வரை அமைந்த பன்னிரண்டு—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ— எழுத்துகளும் உயிர் எழுத்துகள்.

(தொல்காப்பியம் 8)

### 322 மெய் வரிசை

க கரத்தில் தொடங்கி, ன கரத்தில் முடியும் பதினெட்டு — க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டு—எழுத்துகளும் மெய்யெழுத்துகள்.

## 33 எழுது முறை

இந்த எழுத்துகள் எழுதும் முறை காலம்தோறும் மாறிக்கொண்டே வந்து உள்ளது. அதன் விவரமாவது:

### 331 திருமூலர் காலம்

திருமூலர் காலத்தில் உயிர் 16, மெய் 35, ஆகமொத்தம் 51 எழுத்துகள் இருந்து உள்ளன. (திருமந்திரம் 2650—2652).

### 332 தொல்காப்பியருக்கு முன்

உயிர், மெய் முப்பது எழுத்துகளையும் எப்படி எழுத வேண்டும் என்று தொல்காப்பியர் தனித்தனியாகக் குறிப்பிடவில்லை.

ஏனெனில், தமிழ் எழுத்து முறை அவர் காலத்திற்கு முன்னரேயே, அக்கால முறையில் செப்பம் அடைந்து விட்டு இருக்க வேண்டும்.

### 333 தொல்காப்பியர் காலம்

எனினும், தொல்காப்பியர் காலத்தில் எழுதும் முறையில் ஒரு குழப்ப நிலை உண்டாகி இருக்கிறது. இதைச் சரிப்படுத்தும் நிலையில் சில செய்திகளைக் கூறி உள்ளார். அவைகளில் சில:

1 ம என்ற எழுத்து ப கரத்தில் உள்ளே புள்ளி பெற்று ப் என நிற்கும் (தொல் 14).

2 மெய் எழுத்துகள் — க், ங், ற், ன் — புள்ளி பெற்று நிற்கும் (தொல்.15).

3 எ கரமும் ஒ கரமும் எ் ஒ் எனப் புள்ளி பெற்று நிற்கும் (தொல். 16).

4 மெய் எழுத்துகள் உயிர் எழுத்தான அகரத் தோடு சேரும்போது புள்ளி நீங்கும். பிற உயிர்களோடு சேரும்போது வடிவு திருந்தும்.

### 334 சங்க காலம்

சகரம் அகரத்தோடுகூடி மொழி முதல் ஆவது இல்லை என்கிறார் தொல்காப்பியர் (தொல். 62).

ஆனால், சங்க காலத்தில் சகரம் செல்வாக்குப் பெற்றது. அதன் இனமான ஞகரமும் முன்னேறியது. நண்டு ஞண்டு ஆயிற்று. அன்னை அஞ்ஞை ஆனாள்.

### 335 பல்லவர் காலம்

ட கரம் ண கரம் நுனி நா அண்ணத்தோடு பொருந்திப் பிறக்கும் என்றார் தொல்காப்பியர் (தொல். 91).

ஆனால், பல்லவர் காலத்தில் ட கரம் நாமடி ஒலிப்பைப் பெற்றது. ற கரம் உரப் பொலியைப் பெற்றது.

**336 சோழர் காலம்**

வடமொழி புகுந்தது. இதன் விளைவாக மொழிக்கு முதலில் வராத ர.கரம் ராஜா போன்று புகுந்தது.

**337 அன்னியர் காலம்**

தமிழ் ஆட்சி தடுமாறியது. அன்னியர் புகுந்தனர், அவலம் ஆட்சி புரியத் தொடங்கியது. அருந்தமிழிலும் அவலம் புகுந்தது. பேச்சு வழக்கை ஒட்டி எழுத்து முறை அமையத் தொடங்கியது.

**338 வீரமாமுனிவர் காலம்**

இத்தாலியில் இருந்து வந்த ஜோசப் பெஸ்கி (கி. பி. (1680—1747, வீரமாமுனிவர் ஆனார்.

எ, ஏ, ஒ, ஓ என்ற ஒலிகளுக்கு இன்று நாம் காணும் தெளிவான உருவங்களைத் தந்தார்.

உயிர் குறிலுக்கும் மெய் எழுத்திற்கும் தலையில் புள்ளி இட்டுக்கொண்டு இருந்ததை—குழப்ப நிலையை- நீக்கினார்.

மேலும் அவர் மெய்க்குப் புள்ளி வைத்தார். நெடிலுக்கு கால் ா சேர்த்தார். உகரத்திற்கு விலங்கு—‿—பூட்டினர்.

**339 பெரியார் காலம்**

சீர்திருத்த முயற்சியில் சிறப்புப் பெற்றவர் பெரியார் அவர்கள்.

இவர் சிந்தனை மொழியில் — எழுத்தில—சென்றது. எழுத்து அமைப்பில் சீர்மை செய்யத் திட்டம் இட்டார்,

திருத்தத் திட்டத்தை, பகுத்தறிவு 1934 டிசம்பர் 12 இதழில் வெளியிட்டார்.

குடிஅரசு 1935 சனவரி 13-ஆம் நாளிட்ட இதழில் சீர்திருத்தம் செயல்படத் தொடங்கியது.

'ஊ, ஒ, ஓ, ஊ'யில் தூக்கிக் கொண்டு இருக்கும் துதிக்கையைத் துண்டித்து, எல்லாவற்றையும் ஒன்று போல, 'ணை, லை, ளை, னை' என்று எழுதிப் படுக்க வைத்தார்.

'ஞு, ரு, ஞு' என்ற எழுத்துகளில் இருந்த கீழ் விலங்கு களை அகற்றி ஒரே சீராக—ா—சேர்த்து 'ணா, றா, னா' என்று எழுதச் செய்தார்.

அகரமும் இகரமும் சேர்ந்த அய்காரத்திற்குத் தனி உருவம் — ஐ — ஏன்? என்று கேள்வி எழுப்பினார்.

### 34 *சீர்மை*

இந்தச் சீர்திருத்தம் தமிழ் எழுத்துகளில் ஒரு சீர்மை காணத் தூண்டியது.

இது தமிழ் எழுத்துத் தோற்றம், அமைப்பு, மாற்றம், வளர்ச்சி பற்றிய ஆய்வுகளுக்கு அடிகோலியது.

இதன் விளைவாக, தமிழ் எழுத்து முறையிலே உள்ள அமைவு முறைகள் — குறைகள் —கூர்ந்து அலசப்பட்டன.

ஓலையிலே, கல்லிலே, செப்பேட்டிலே சிலரால் எழுதி வந்ததனால் ஏற்பட்ட, ஏற்படுத்தப்பட்ட குறைகள் கூறுபடுத்திப் பார்க்கப்பட்டன.

காகிதம், பேனா, தட்டுஎழுத்துப் பொறி, அச்சு எழுத்துப் பொறி, மின்னணுப் பொறி முதலியவைகளுக்கு ஏற்ப, குறைந்த முயற்சியில் நிறைந்த பயனைச் சிறந்த முறையில் அமைக்கும் முயற்சி — சீர்மை — தேவை பான உணரப்பட்டது.

## 4 குன்றாகளோ குறைகள்

### 41 *அமைப்பு*

#### 411 அடிப்படை

மெய்யுடன் உயிர் சேரும்போது மெய்க்குப் பின்தான் உயிர்க்குறியீடு இருக்க வேண்டும்.

**412 மாறுவது ஏன்?**

இந்த அடிப்படை சில இடங்களிலே மட்டும் காணப படுகிறது. சில இடங்களிலே மாறி உள்ளது. இது ஏன்?

**413 ஆ எப்படி?**

க் + ஆ = கா என்கிறோம். இதில் க் என்கிற மெய்யுடன் சேர்ந்த ஆ என்ற ஒலி—ா—என்று வந்து முறையாக இருக் கிறது. ஆனால்?

**414 எகரம் எப்படி?**

க் + எ = கெ என்று இருக்க வேண்டியது—கெ—என்று காட்சி தருகிறது. இது ஏன்?

**415 முன்னும் பின்னும்**

மேல் குறிப்பிட்டதில் மேலும் குழப்பம் உண்டாக்கு மாறு ஒ, ஓ, ஔ முதலிய குறியீடுகள் மெய்யுடன் சேரும் போது உண்டாகின்றன. சான்றுக்குச் சில:

க் + ஒ = கொ என்று இருக்க வேண்டியது—கொ—என வருவது ஏன்?

க் + ஓ = கோ என்று இருக்க வேண்டியது—கோ—என வருவது ஏன்?

க் + ஔ = கௌ என்று இருக்கவேண்டியது—கௌ—என வருவது ஏன்?

## 42 எழுது முறை

தமிழ் எழுத்துகளின் அமைப்பு முறையில் மட்டும் அல்ல; எழுதும் முறையிலேயும் குறைகள் காணப்படு கின்றன. சான்றுக்குச் சில:

**421 அடிப்படை**

1 மெய் எழுத்துடன் உயிர் எழுத்துச் சேர்ந்தால் அச் சேர்ப்பு—சேர்வு— புதிய எழுத்திலே தெரியவேண்டும்.

2 மெய் எழுத்துடன் சேரும் உயிர்க்குறியீடு விளக்கமாகத் தெரியவேண்டும்.

3 இது மட்டும் அன்று; இது எல்லா மெய்களுடனும் ஒரே சீராகச் சேர்ந்து காட்சியளிக்க வேண்டும்.

**422 ஆங்கிலம்**

| | |
|---|---|
| K+a=Ka | M+a=Ma |
| K+i=Ki | M+i=Mi |
| K+u=Ku | M+u=Mu |

ஆனால் தமிழில் இப்படி இல்லை, இது ஏன்?

**423 புள்ளி மறைகிறது**

க் உடன் அ சேர்ந்தால், க ஆகிறது. இப்படிச் சேர்ந்த எழுத்தின் குறிப்பு இல்லை. மாறாக மெய்யின் தலையில் இருந்த புள்ளி மறைகிறது

**424 கால் சறுக்குகிறது**

க்+ஆ=கா ஆகிறது. ஆனால்,
ண+ஆ=ணா ஆவதில்லை; ணா ஆகிறது. ஏன்?
ன+ஆ=னா ஆவதில்லை; னா ஆகிறது. ஏன்?
இப்படிக் கால் சறுக்கி, விலங்கு பூட்டிக் கொள்வது ஏன்?

**425 வலிப்பு வருகிறது**

க்+உ=கு ஆகிறது. ஆனால்,
ண+உ=ணு ஆவதில்லை, ணு ஆகிறது. அதாவது வலப்புறம் வலித்துக் கொள்கிறது. ஏன்?

**426 படுத்து இருப்பது நிமிர்கிறது**

க்+ஐ=கை ஆகிறது.
ச்+ஐ=சை ஆகிறது.
ஆனால்,
ண்+ஐ=ணை ஆவதில்லை; ணை ஆகிறது.
ள்+ஐ=ளை ஆவதில்லை; ளை ஆகிறது. ஏன்?

**427 தடுமாற்றம் ஏன்?**

இந்தத் தடுமாற்றங்கள் ஏன்? புதிதாகத் தமிழ் கற்கும் குழந்தைகளும் அன்னைத் தமிழ் மொழியைக் கற்கும் அயலார்களும் தடுமாறவா?

## 5 தேவை என்ன?

எனவே இன்றையத் தமிழ் எழுத்துச் சீர்மைக்குத் தேவை என்ன?

1 முன்னால் எடுத்துக் காட்டி உள்ள குறைகள் மாற வேண்டும்; மாற்ற வேண்டும்.

2 ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து உருவம்தான் இருக்கவேண்டும்.

3 எழுத்து உருவங்களின் எண்ணிக்கை குறைய வேண்டும்.

4 இவை கை எழுத்துக்கும், தட்டு எழுத்துக்கும், அச்சு எழுத்துக்கும், பிற முன்னேற்றத்துக்கும் ஏற்றதாய் இருக்கவேண்டும்.

5 இந்தத் தேவைகளை நிறைவேற்றுவதால் மாற்றம்— சீர்மை — இருக்கவேண்டும்.

6 இம்முறையில் மெய் எழுத்துடன் சேரும் உயிர்க் குறியீடுகள் எல்லா நிலையிலும் ஒன்றுபோல் இருக்க வேண்டும்.

7 ஒன்றுபோல் இருக்கும் குறியீடுகளும் ஒலி அமைப்பை ஒத்து, மெய்க்குப் பின்னால் இருக்க வேண்டும்.

8 மெய்யும் உயிரும் தனித் தனியாகத் தெரியும்படி எழுத வேண்டும்.

9 உயிர்குறி மெய்க்கு வலப்பக்கத்தில் வரவேண்டும்.

## 6 சீர்மை அடிப்படைகள்

இந்தச் சீர்மை — திருத்தமும் சில அடிப்படைகளைக் கொண்டு இருக்கவேண்டும். அவையாவன:

1 தமிழுக்கு அடிப்படையான உயிர் ஒலிகள் பன்னி ரண்டும், மெய் ஒலிகள் பதினெட்டும் அப்படியே இருக்க வேண்டும்.

2 எழுத்தைப் பயன்படுத்துவார் பார்க்க, படிக்க, நினைவில் வைத்துக் கொள்ள, எழுத, எழுதுவிக்க, எளிதாக இருக்க வேண்டும்.

3 இணைத்துக் கொள்ள, இழைத்துக் கொள்ள ஏதுவாக இருக்கவேண்டும்.

4 எழுத்துகள் வட்டம், சதுரம், கோல் என்னும் மூன்று உறுப்புகளுக்குள் அமைய வேண்டும்.

5 அடிக்கடி பயன்படும் எழுத்துகள் குறைந்த முயற்சி யில் சிறந்த முறையில் எழுதும் வகையில் இருக்க வேண்டும்.

6 எழுத்துகள் எவ்வளவு சிக்கனமாக — சுருக்கமாக — இருக்க முடியுமோ, அவ்வளவு சிக்கனமாக இருக்க வேண்டும்.

7 இது முடியாதபோது, உலக மட்டத்தில் செல்வாக்குப் பெற்று, உள்ள எழுத்து முறையை ஏற்றுக் கொள்ள முன் வரவேண்டும்.

8 இதில் உணர்வு வயப்படாமல்—பற்றுவிட்டு—பாசம் விட்டு — அறிவியல் முறையில் செயல்பட வேண்டும்.

## 7 சீர்மை வழிகள்

### 71 *திருத்தம்*

மேல் கண்ட கருத்துகளைக் காணும்போது எப்படியும் தற்போதைய தமிழ் எழுத்து முறை சீர்மை—திருத்தம்—பெற வேண்டும் என்று அறிவியல் எண்ணம் கொண்ட ஒவ்வொருவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது.

### 72 *நூலகச் சங்க வழி*

சென்னை நூலகச் சங்க முயற்சியில் 1933 டிசம்பர் 23—24 தேதிகளில் சென்னையில் தமிழ் அன்பர்கள் மாநாடு

(Tamil Lovers Conference) நடந்தது. உ. வே. சாமி நாதய்யர் இதன் வரவேற்புக் குழுத் தலைவராயிருந்தார். கல்வி அமைச்சர் திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார் தலைமை தாங்கினார்.

இம்மாநாட்டில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றியும், நூல் வெளியீடு, விற்பனை, படிப்பு முதலியன பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 73 பெரியார் வழி

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில் முதலிடம் பெறுபவர் பெரியாரவர்கள்.

எழுத்துச் சீர்திருத்தம் பற்றி 1934 டிசம்பர் 12ஆம் நாளிட்ட **பகுத்தறிவில்** அறிக்கை ஒன்று வெளி வந்தது.

1935 சனவரி 13ஆம் நாளிட்ட **குடி அரசில்** தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் நிறைவேறியது. இதன் 11ஆம் பக்கத்தில் கட்டம் கட்டி எப்படி, 'ணா, ரா, னா, ணை, லை, ளை, னை' முதலிய எழுத்துகளாக வெளியிடப்படும் என்று போடப் பட்டிருந்தது.

இதற்குப் பின்னால்தான் விடுதலை இதழில் தொடரப் பட்டது. எனவே விடுதலை எழுத்து என்றும் பெயர் பெற்றுவிட்டது.

## 74 சுதேசமித்திரன் வழி

1941இல் மதுரையில் தமிழ் இலக்கிய மாநாட்டிலும், 1948இல் சென்னையில் அகிலத் தமிழர் மாநாட்டிலும் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதன் அடிப்படையில் சுதேசமித்திரன் செயல்பட்டது. ஒரே உருவான உயிர்க்குறியீடுகளைப் பெய்து அச்சிட்டது. துணிவோடு செயல்பட்டது. கடை விரித்தது; கொள்வார் இல்லை; சுருட்டிக் கொண்டது.

## 75 அரசு வழி

நாடு விடுதலைப் பெற்ற பின்பு தமிழ் ஆர்வம் மிக்க திருமிகு அவினாசிலிங்கம் செட்டியார், திருமிகு ஓமந்தூர்

இராமசாமி ரெட்டியார் முதலியோர் காலங்களில் எழுத்துச் சீர்திருத்த முயற்சி ஆராயப்பட்டது. ஆனால் அமுலுக்கு வரவில்லை.

நல்லது செய்வதில் நாளும் முன்னிற்கும் தமிழ்நாடு அரசு மனமுவந்து 19—10—78 நாளிட்ட நிலை 1875 எண்ணிட்ட கல்வி அரசாணையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

### 76 ஆர்வ வழி

அறிவியல் வயப்பட்ட தமிழரும் பிறரும் எழுத்துச் சீர்மையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

புதுச்சேரி தாகூர் கல்லூரியில் கலந்துரையாடிய இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் எழுத்துச் சீர்மையைப் பரிந்துரைத்துள்ளது.

தமிழகப்புலவர் குழுவின் முன்னோடிப் பரிந்துரைக் குழு சில திருத்தங்களைப் பரிந்துரைத்துள்ளது.

பகுத்தறிவு, குடிஅரசு, விடுதலை, சுதேசமித்திரன், உண்மை, கொங்கு, தேனேலை, கலைக்கதிர், தினமலர் முதலிய இதழ்கள் எழுத்துச் சீர்மையை விளக்கி வருகின்றன.

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் இடம் பெற்று வருகிறது.

இந்த ஆர்வம் வாழ வேண்டும்; வளர வேண்டும்; வளர்க்கப்பட வேண்டும்.

## 8 புதிய வழி

### 81 புதிய உயிர்

முன் கண்ட கருத்துகளின் அடிப்படையில் சீர்மை புதிய வழியில் கீழ்க்கண்டபடி புதிய உருவில் உருவாக வேண்டும்; இது எப்படி?

தற்போது நடை முறையில் இருக்கும் பன்னிரு உயிர்களுக்குப் பதிலாகக் கீழ்க்கண்டபடி புதிய உருவம் கொடுக்கப்படும்.

பழையஉயிர்: அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

| புதியஉயிர் | ┤ | ா | ٦ | ∂ | ഠ | ൭ | ெ | ര | ை | ே | ஒ | ய |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புதிய இணைப்பு | க┤ | கா | க٦ | க∂ | கഠ | க൭ | கெ | கര | கை | கே | கஒ | கய |

இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் உருவம்—புதிய உருவம் என்று சொன்னாலும்— புதியதாக உருவாக்கப்படவில்லை. தற்போதைய வரிவடிவத்தில் புழங்கி வருகின்ற உருவங்களைத்தான் சற்று சீர்மைப் படுத்தித் தரப்படுகிறது.

## 82 *புதிய மெய்*

புதிய மெய் என்று சொன்னதும் புதிய வரிவடிவங்கள் வருமோ எனப் பயப்படத் தேவையில்லை.

தற்போது மெய் எழுத்துகளின் மேல் உள்ள புள்ளி மட்டும் நீக்கப்படும். ஆனால் பழைய புள்ளி எழுத்துக்களாக புதிய மெய் எழுத்துகள் உச்சரிக்க, வாசிக்கப்பட வேண்டும்.

## 83 *புதிய உயிர் மெய்*

முன் கூறிய அடிப்படையில் உயிர் மெய் வடிவம் அமையும் முறையாவது :

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயிர் | ┤ | ா | ∩ | ϑ | ¬ | ௵ | ௐ | ᑦ | ை | ே | ஹ | ய |
| மெய் | க | | | | | | | | | | | |

உயிர்மெய் க┤ கா க∩ கϑ க¬ க௵ கௐ கᑦ கை கே கஹ கய

## 84 *செய்முறை*

1 புதிய அகரமும் புதியதாக ஆக்கப்படவில்லை. ஏற்கனவே இருந்து வந்த அகரத்தைச் சுருக்கி—என்ற புதிய உருவாகத் தரப்படுகிறது. (அ = ┤ )

2 ஆகாரத்தைக் குறிக்கும் உயிர் ஒட்டு —ா— உயிரைக் குறிக்கவும் உயிரொட்டைக் குறிக்கவும் ஒரே சீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (கா = கா)

3 இகரம் தற்போதைய உயிர் ஒட்டான—ි—குறியை ஒரே சீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (சி = சி)

4 ஈகாரம் தற்போதைய உயிரொட்டான —ீ— குறியை ஒரே சீராக்கிப் பயன்படுத்தப்பட்டுள்ளது தீ = தீ

5 உகரம் தற்போது கீழ் விலங்காகவும் பக்க வலிப் பாகவும் வரும் குறியீடுகளைக் குறிக்க பழக்கத்தில் இருக்கும் ு என்ற குறியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. நு = நு

6 ஊகாரம் புழக்கத்தில் இருக்கும் ூ என்ற குறியாக ஒரே சீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பூ = பூ

7 எகரத்திற்கு வலப் பக்கம் பார்க்கும் ஒற்றைக் கொம்பு —ெ— குறியை மெய்க்குப் பின்னால் ஒரே சீராகப் பயன்படுத்தலாம் மெ = மெ

8 ஏகாரத்திற்கு இடப்பக்கம் பார்க்கும் ஒற்றைக் கொம்பு — ே — குறியை ஒரே சீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மே = மே

9 ஐகாரத்திற்கு கீழ் நோக்கிய இரட்டைச் சுழி —ை— குறியை ஒரே சீராய்ப் பயன்படுத்தப்பட்டுள்ளது. லை = லை

10 ஒகரத்திற்கு வலப்பக்கம் பார்க்கும் இரட்டைக் கொம்பு— ே — குறியை ஒரே சீராகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. வொ = வொ

11 ஓகாரத்திற்கு இடப் பக்கம் பார்க்கும் இரட்டைச் கொம்பு குறியை — ோ — ஒரே சீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வோ = வோ

12 ஔகாரத்திற்கு மேல் நோக்கும் இரட்டைச் சுழி—ௌ—குறியை ஒரே சீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வௌ = வௌ.

13 புள்ளி முற்றிலும் நீக்கப்பட்டு விட்டது. இதன் காரணமாக தட்டச்சுச் செய்யும்போது நகராத சாவியைப் பயன்படுத்துவதும், காகிதத்தில்—துளை — பொத்தல் விழுவதும் முற்றிலும் நீக்கப்படுகிறது.

## 85 பயன்

இதனால் அச்சில் தற்போதுள்ள அறைகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறையும்.

தட்டச்சில் உள்ள சாவிகளின் எண்ணிக்கை குறையும்.

## 86 தடைகள்

எழுத்துச் சீர்மை என்ற பெயரில் இத்தனை மாற்றமா? புரியுமா? அவசியம்தானா?—என்ற கேள்விகள்—தடைகள் எழும். எழுகின்றன.

இது அவசியமானதும் நியாயமானதும் கூட. இது சீர்மை வழி காட்டும் சின்னங்களாகும். எனவே இதற்கான விடைகள் காணலாம்.

## 87 விடைகள்

1 எழுத்து வடிவம் — வரிவடிவம் — ஆதி நாளில் இருந்து இன்று போல இருக்க வில்லை. இதைத் திரு. சா. கணேசன் தன் கட்டுரையில் படமாக விளக்கி இருக்கிறார். பக்கங்கள் 102, 103 பார்க்க.

2 காலப் போக்கில் திருந்தித்தான் இன்றைய உருவம் பெற்றுள்ளது.

3 இன்றைய உருவம் வீரமாமுனிவர் தந்த தருமமாகும். இவர் காலம் கி. பி. 1680—1747.

4 முன்னேற விரும்பினால் மாற்றத்தை ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும். மாற்றம் இல்லையேல் வளர்ச்சி இல்லை. வளர்ச்சி இல்லையேல் முன்னேற்றம் இல்லை.

5 இந்திய மொழிகள் அனைத்தும் தமிழைப் போல திருந்தித்தான் வளர்ந்து இருக்கின்றன. அவை பெற்றுள்ள மாற்றத்தைப் பார்த்தால் தற்போதைய திருத்தம்—சீர்மை— அதிகம் இல்லை.

6 உலக மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்தால்—

18 எழுத்துகளைக் கொண்ட ஐரிய மொழியைப் பார்த்தால்,

21 எழுத்துகளைக் கொண்ட இத்தாலிய மொழியைப் பார்த்தால்,

24 எழுத்துகளைக் கொண்ட பிரெஞ்சு / கிரேக்க மொழியைப்பார்த்தால்,

26 எழுத்துகளைக் கொண்ட போர்ச்சுக்கீசியத் தைப் பார்த்தால்,

28 எழுத்துகளைக் கொண்ட ஸ்பானியத்தைப் பார்த்தால்,

33 எழுக்துகளைக் கொண்ட உருசியத்தைப் பார்த்தால்,

33 எழுத்துகளைக் கொண்ட செர்மானியத் தைப் பார்த்தால்,

இவைகள் முன்னேறியுள்ள நிலையைப் பார்த்தால்—247 எழுத்துகளை வைத்துக் கொண்டு திண்டாடும் நாம் திருந்த வேண்டும் என்பது அவசியமாகிறது.

7 எனவே முன்னேற முயல்வோம். இதை இரு ரி யில்—(1) கூட்டுறவு வழி (2) ஒருமை வழி முதலிய இரு வழியில் செய்யலாம். எப்படி?

## 88 கூட்டுறவு வழி

*1971* மார்ச் 23 ஆம் நாளிட்ட அரசாணைப்படி மலை யாள மொழி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

தெலுங்கு, கன்னடம் முதலிய இரு மொழிகளுக்கும் பொது வரிவடிவம் காணும் முயற்சி முனைப்பாய் இருந்து வருகிறது.

இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு திராவிட மொழிகளிடையே கூட்டுறவு வழியில் வரிவடிவம் காண லாம். இது முடியாது போனாலும், குறைந்தது உயிர் ஒட்டுக் குறியீடுகளைப் பயன்படுத்துவதிலாவது சீர்மை காணலாம்.

வட இந்திய மொழிகளில் தற்போது பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவைகளைச் சீர்மைப்படுத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சில வடிவங்கள் கிடைக்கலாம்.

இவையெல்லாம் அமைதியான முன்னோடிச் சிந்தனை யாக இருக்க வேண்டும்.

இப்படிச் சொல்லும் போது, இந்திய மொழி கூட்டுறவு மட்டும் போதுமா, மேனாட்டு மொழிகள் இருக்கின்றனவே, இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்பன போன்ற கேள்விகள் எழலாம்.

இது முட்டுக்கட்டை போல் தோன்றினாலும், ஒருமைப் பாட்டுக்கு வழிகோலச் செய்யலாம். எப்படி என்கிறீர்களா? அதுதான்...

## 89 ஒருமை வழி

இன்று உலகத்தின் பலமொழிகள்—பிரஞ்சு, செர்மானியம், ஸ்பானியம், இத்தாலியம், லிதுவேனியம், துருக்கியம் செக், போர்ச்சுக்கீசியம், பல்கேரியம் போன்ற பல முன்னேறிய நாட்டு மொழிகள் உரோமன் லிபி (Roman Script A, B, C—X, Y, Z) யை ஏற்றுக் கொண்டு விட்டன.

இதனால் தட்டு எழுத்து, அச்சு எழுத்து முதலிய முயற்சிகளில் நல்ல இலாபம் கண்டுள்ளன. மின்னணுப் பொறி இயந்திரம் மூலம் லைனோ டைப் (Lino type) மானோ டைப் (Mono type) முதலிய பொறிகளைப் பயன்படுத்தவும், டெலிபிரிண்டர் (Teleprinter) முதலிய பொறிகளைப் பயன் படுத்தவும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், மேனாட்டு லிபியா என்று கேள்வி எழுப்பிப் பயன் இல்லை. மேனாட்டார் கண்டுபிடித்த பிற எல்லா வசதிகளையும் நாம் உபயோகித்துக் கொண்டு, 'எழுத்தை மட்டும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்' என்று சொல்வது பொருளற்றது. அறிவியல் முறை ஆகாது.

ஏனெனில், இதை ஏற்றுக் கொள்வதனால் ஏற்படும் நன்மைகள் ஏராளம், ஏராளம். சான்றுக்கு ஒன்று மட்டும்!

தற்போதைய தட்டு அச்சுப் பொறி ஆங்கில எழுத்து அல்லது ரோமன் லிபி முறைப் பொறி ஒன்றை வைத்துக் கொண்டே உலக மொழிகள் அனைத்தையும் தட்டு அச்சு

(type) செய்து விடலாம். எளிதான வேலை. எப்படி என்கிறீர்களா?

முதலில் வெள்ளைத்தாளைத் தட்டு அச்சுப் பொறியில் செலுத்த வேண்டும். என்ன மொழியின் பெயரை தட்டச்சுச் செய்யவேண்டுமோ அந்த மொழியை வலதுபக்க மூலையில் தட்டு அச்சுச் செய்ய வேண்டும். அடுத்து அந்த மொழியை ரோமன் லிபியில் தட்டிவிட வேண்டியதுதான். வலது மூலையில் உள்ள மொழியின் பெயரைப் படித்து விட்டதும் அந்த மொழிக்காரர் அந்த மொழி உச்சரிப்பில் எளிதில் படிக்க முடியும்; புரிந்து கொள்ள முடியும். அவசியமானால் சில சிறப்புக் குறியீடு (Diacritical marks) களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

இந்த அடிப்படையில் ஒரு பொறி கொண்டு உலக மொழிகள் அனைத்தையும் தட்டச்சுச் செய்து விடலாம்.

இதனை அடிப்படையாகக் கொண்டால் நிறைந்த மக்களுக்குப் பயன்படும் வகையில் குறைந்த செலவில். சிறந்த பொறியை உற்பத்தி செய்து ஒவ்வொருவருக்கும் ஒரு பொறி—உலக மொழிகளை எழுதும் பொறி—கிடைக்கச் செய்யலாம்.

இதைத் தொடர்ந்து அச்சுப்பொறி, மின்னணு முறையில் இயங்கும் தொலை அச்சுப் பொறி போன்ற பல பொறிகளை இயக்கலாம்.

எனவே, இதைச் சொல்பவர்மேல் வெறுப்புக் கொள்ளாமல், 'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற வள்ளுவர் வாக்குப்படி எண்ணிப் பார்க்க வேண்டும்.

புதிய வழியை, ஒருமை வழியைச் செரிக்க முடியுமா? முடியுமானால் வாசித்துப் பாருங்கள்:

**TAMIL ELUTTUKALUKUP PATILAKA, ROMAN ELUTTUKKALAI ERRUK KOLVOM; MUNNERUVOM**

| | English | Brahmi | Tamil Grantha | | Tamil | Telugu | Canarese | Malayalam | Hindi |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | a (a in arrest) | 𑀅 | 𑌅 | [illegible] | அ | అ | ಅ | അ | अ |
| 2 | á (a in army) | 𑀆 | 𑌆 | [illegible] | ஆ | ఆ | ಆ | ആ | आ |
| 3 | i (i in india) | 𑀇 | 𑌇 | [illegible] | இ | ఇ | ಇ | ഇ | इ |
| 4 | í (i in chief) | | 𑌈 | [illegible] | ஈ | ఈ | ಈ | ഈ | ई |
| 5 | u (u in full) | 𑀉 | 𑌉 | [illegible] | உ | ఉ | ಉ | ഉ | उ |
| 6 | ú (u in suit) | | 𑌊 | [illegible] | ஊ | ఊ | ಊ | ഊ | ऊ |
| 7 | ru (ru in rupee) | | 𑌋 | | | ఋ | ಋ | ഋ | ऋ |
| 8 | ŕu (ru in rule) | | 𑍠 | | | ౠ | ೠ | ൠ | ॠ |
| 9 | lu (lu in taluk) | | 𑌌 | | | ఌ | ಌ | ഌ | ऌ |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | ḷu (lu in lunatic) | | 𑌌 | | | ౡ | ೡ | ൡ | ॡ |
| 11 | e (e in echo) | | | [illegible] | எ | ఎ | ಎ | എ | |
| 12 | ē (e in elagiri) | | 𑌏 | | ஏ | ఏ | ಏ | ഏ | ए |
| 13 | ai (ai in mail) | | 𑌐 | [illegible] | ஐ | ఐ | ಐ | ഐ | ऐ |
| 14 | o (o in obey) | | | [illegible] | ஒ | ఒ | ಒ | ഒ | |
| 15 | ō (o in old) | | 𑌓 | | ஓ | ఓ | ಓ | ഓ | ओ |
| 16 | au (au in aurangabad) | | 𑌔 | Raja Raja's Inscriptional Script | ஔ | ఔ | ಔ | ഔ | औ |
| 17 | am (am in ambassador) | | 𑌅𑌂 | | | అం | ಅಂ | അം | अं |
| 18 | aha (aha in allahabad) | | 𑌅𑌃 | | ஃ | అః | ಅಃ | അഃ | अः |

| Kashmiri | Punjabi | Gujarathi | Assamese | Bengali | Oriya | Urdu | Sinhalese | Burmese | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 𑆃 | ਅ | અ | অ | অ | ଅ | ا | අ | အ | 1 |
| 𑆄 | | આ | আ | আ | ଆ | آ | ආ | အာ | 2 |
| 𑆅 | ਇ | ઇ | ই | ই | ଇ | | ඉ | အိ | 3 |
| 𑆆 | | ઈ | ঈ | ঈ | ଈ | ی | ඊ | အီ | 4 |
| 𑆇 | ਉ | ઉ | উ | উ | ଉ | | උ | အု | 5 |
| 𑆈 | | ઊ | ঊ | ঊ | ଊ | | ඌ | အူး | 6 |
| 𑆉 | | ઋ | ঋ | ঋ | ଋ | | | ၒ | 7 |
| 𑆊 | | ૠ | ৠ | ৠ | ୠ | | | ၓ | 8 |
| 𑆋 | | | ঌ | ঌ | ଌ | | | ၔ | 9 |




பகுதி 4

| | English | Brahmi | Tamil Grantha | | Tamil | Telugu | Canarese | Malayalam | Hindi |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ka | 𑀓 | 𑌕 | [illegible] | க | క | ಕ | ക | क |
| 2 | ká | 𑀓𑀸 | 𑌕𑌾 | [illegible] | கா | కా | ಕಾ | കാ | का |
| 3 | ki | 𑀓𑀺 | 𑌕𑌿 | [illegible] | கி | కి | ಕಿ | കി | कि |
| 4 | kí | 𑀓𑀻 | 𑌕𑍀 | | கீ | కీ | ಕೀ | കീ | की |
| 5 | ku | 𑀓𑀼 | 𑌕𑍁 | [illegible] | கு | కు | ಕು | കു | कु |
| 6 | kú | 𑀓𑀽 | 𑌕𑍂 | [illegible] | கூ | కూ | ಕೂ | കൂ | कू |
| 7 | kri | | 𑌕𑍃 | | | కృ | ಕೃ | കൃ | कृ |
| 8 | kṛi | 𑀓𑀾 | 𑌕𑍄 | | | కౄ | | കൄ | कॄ |

| | | | | Raja Raja's Inscriptional Script | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | ke | | | கெ | கெ | కె | ಕೆ | കെ | |
| 10 | ké | 𑀓𑁂 | கே | | கே | కే | ಕೇ | കേ | के |
| 11 | kai | 𑀓𑁃 | கை | கை | கை | కై | ಕೈ | കൈ | कै |
| 12 | ko | | | கொ | கொ | కొ | ಕೊ | കൊ | |
| 13 | kó | 𑀓𑁄 | கோ | | கோ | కో | ಕೋ | കോ | को |
| 14 | kau | 𑀓𑁅 | கௌ | | கௌ | కౌ | ಕೌ | കൌ | कौ |
| 15 | kaṃ | 𑀓𑀁 | கம் | | | కం | ಕಂ | കം | कं |
| 16 | kaḥ | 𑀓𑀂 | கஃ | | | కః | ಕಃ | കഃ | कः |

எழுத்து ஒரு குறியீடு. இந்தக் குறியீடு ஒரே முறையில் எளிதாக எழுதப்படவேண்டும். இது சீராக இருக்கவேண்டும், சிக்கனமாகவும் இருக்க வேண்டும்.

120 - 125 பக்கங்களில் தமிழ் எழுத்துகள் சில இந்திய மொழிகளோடு ஒப்பிட்டுக்காட்டப் பட்டிருப்பதைக் காணலாம்.

பகுதி 1 உடன் பகுதி 2 ஐயும், பகுதி 3 உடன் பகுதி 4 ஐயும் இணைத்துக் கண்டுகொள்க.

நமது மரபுக்கு முரணாகாமல் உள்ள குறியீடுகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த முயலலாம்.

## 92 நூல்தொகை

1 இலக்குவனார் சி. தமிழ் வரிவடிவங்கள் (உலகத் தமிழ் மாநாட்டு மலர், 1968 — மொழி — பக்கங்கள் 5-6).

2 குழந்தைசாமி, வா.செ. தமிழ் எழுத்துச் சீரமைப்பு (கலைக்கதிர் 30 சனவரி 1978; 57-71).

3 கணேசன்,சா. தமிழ் எழுத்துகள் அன்றுமுதல் இன்று வரை:(சென்னை இரண்டாவது உலகத் தமிழ் கருத்தரங்கு மாநாடு கையேடு, 1968; 13-17).

4 சண்முகப் பிரகதம், கொடுமுடி. தமிழ் எழுத்துகள்: ஒரு புதிய பார்வை, 1977.

5 சுந்தரம், வெள்ளையாம்பட்டு. கல்சொல்லும் கதைகள், பதி. 2, 1977.

6 சுப்பு ரெட்டியார், ந. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் (பெரியார் ஈ.வெ.ரா. எழுத்துச் சீர்திருத்தம், பதி. 3, 1978; 58-64).

7 ஞானசம்பந்தன், அ. ச. தமிழ் எழுத்துச் சீர் திருத்தம் (பெரியார் ஈ.வெ ரா. எழுத்துச் சீர் திருத்தம், பதி. 3. 1978; 51-57

8 தமிழ் வரிவடிவங்கள் (கொங்கு 3(12) டிசம்பர் 1973; 282)

9 திருமூலர், திருமந்திரம் 2650-2652.

10 தில்லைநாயகம், வே. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் (விடுதலை–தந்தை பெரியார் 96-வது பிறந்த நாள் மலர் 17 செப்டம்பர் 1974; 113 - 119+புலவர் அக்டோபர் 1978; 17-24.)

11 தொல்காப்பியர். தொல்காப்பியம்.

12 பெரியார் ஈ.வெ.ரா. எழுத்துச் சீர்திருத்தம், பதி. 3 1978.

13 மகாதேவன், கே.எஸ். தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் (பெரியார் ஈ.வெ.ரா. எழுத்துச் சீர்திருத்தம், பதி. 3, 1978; 45-50)

14 மீனாட்சி சுந்தரனார், தெ.பொ. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், (பெரியார் ஈ. வெ.ரா. எழுத்துச் சீர்திருத்தம், பதி. 3, 1978; 39—44).

15 மெய்யெழுத்துக்களின் வளர்ச்சி (உலகத்தமிழ் மாநாட்டு மலர், 1968-மொழி-பக்கம் 28).

16 மோசசு பொன்னையா, தமிழ் மொழி வரலாறு 1972; 198-231.

17 வரதராசன், மு. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம். (பெரியார் ஈ. வெ. ரா. எழுத்துச் சீர்திருத்தம், பதி. 3, 1978; 32-38).

18 Kannaiyan, V. *Comp.* Scripts in and around India 1960

19 Madras Library Assoication. Annual Report, 6, 1934; 28+.

20 Pei, Mario A. Worlds Chief Languages, 1949.

# பகுதி 2

## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

**கல்வி — தமிழ் வளர்ச்சி — தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பெரியார் ஈ. வெ. ரா. நூற்றாண்டு விழா — பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளல் — ஆணை வெளியிடப்படுகிறது.**

### கல்வித் துறை

அரசாணை நிலை எண். 1875 நாள்: 19. 10. 1978

1. செய்தி—மக்கள் தொடர்புத்துறை நேர்முகக் கடித எண். 40880/78, நாள். 17. 8. 78.
2. தமிழ்வளர்ச்சி இயக்குநர் கடித எண். 9843/78 ஆ2/ நாள்: 28. 9. 78.

ஆணை:

1. தமிழ் மொழி எழுத்துத் தொகுதி எளிதில் கையாள முடியாதபடி அதிகமாகவுள்ளதால், அச்சிடுதல், தட்டச்சுச் செய்தல் போன்றவற்றில் அதிக நேரம் விரையம் செய்யப் படுவதைத் தவிர்க்கும் வகையில் தமிழ் எழுத்துத் தொகுதி களில் சீர் திருத்தம் தேவை எனப் பெரியார் ஈ. வெ. ராமசாமி தமது வாழ்நாளில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கையாண்டு வந்ததுடன் அதனை அனைத்துத் துறை களிலும் நடைமுறைப்படுத்த வேண்டு மென்று மிகவும் வலியுறுத்தி வந்தார். பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு ஏற்று அதனை நடைமுறைப் படுத்தத் தக்க ஆணை வெளியிட வேண்டி, பெரியார் நூற்றாண்டு விழாக்குழுவினர் அரசைக் கேட்டுக் கொண்டனர். 18—9—1978 அன்று ஈரோட்டில் பெரியார் நூற்றாண்டு விழாவினைத் தொடங்கிவைத்துத் தமிழக முதல்வர் அவர்கள் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு செயற்படுத்துமென அறிவித்தார். தமிழ் வளர்ச்சித்

துறை இயக்குநரும் பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வர, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிப் பரிந்துரை செய்துள்ளார்.

2. மேலே கூறிய தமிழ்நாடு முதல்வர் அறிவிப்பிற்கிணங்கவும், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநரின் பரிந்துரையை ஏற்றும் அரசு இவ்வாணையில் இணைப்பில் கண்டுள்ளவாறு சீர்திருந்திய தமிழ் எழுத்துக்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென ஆணை பிறப்பிக்கின்றது. அச்சீர்திருந்திய தமிழ் எழுத்து வடிவங்கள், அனைத்து அரசு அலுவலகங்களிலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும், உள்ளாட்சித் துறை வரம்பிற்குட்பட்ட நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலும், தமிழக அரசின் வரம்பிற்குட்பட்ட வாரியங்கள், கழகங்கள் நிறுவனங்களிலும் பின்பற்றப்படவேண்டும்.

3. தமிழ் மொழியில் வெளிவரும் நாளிதழ்களும், பருவ ஏடுகளும், தமிழ்ப்புத்தகம் வெளியிடுபவர்களும், அச்சிடுபவர்களும் இவ்வாணையில் சொல்லப்பட்டுள்ள சீர்திருந்திய தமிழ் எழுத்து வடிவங்களைக் கையாள வேண்டுமென அரசு பரிந்துரை செய்கின்றது.

4. எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர், தமிழக அரசு வெளியீடுகளிலும், அரசிதழ்களிலும் மற்றும் தமிழில் அச்சிடப்படும் எல்லா இனங்களிலும் சீர்திருந்திய எழுத்து வடிவங்களை உடனடியாகக் கையாள வேண்டுமெனப் பணிக்கப்படுகின்றார்.

5. இச்சீர்திருந்திய எழுத்து வடிவங்களுக்குத் தக்க முறையில் விரிவான விளம்பரங்கள் செய்து, இதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கத் தமிழக அரசு செய்தி—மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் ·கோரப்படுகின்றார். மேலும், இத்திட்டத்தைப் பற்றிய விளம்பரங்களை அனைத்து நாளிதழ்களிலும் வெளியிட ஏற்பாடு செய்யும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். தமிழில் அரசின் சார்பில் வெளியிடப்படும் அனைத்து

விளம்பரங்களையும் உடனடியாகச் சீர்திருந்திய தமிழ் எழுத்து வடிவங்களைக் கையாள வேண்டுமெனவும் அவர் பணிக்கப்படுகின்றார்.

ஆளுநரின் ஆணையின்படி

**சி. ஜி. ரெங்கபாஷ்யம்**
ஆணையர் மற்றும் அரசுச்செயலர்

| உண்மை நகல் |

## இணைப்பு

| நடைமுறையிலுள்ள எழுத்துக்கள் | | சீர்திருந்திய எழுத்துக்கள் |
|---|---|---|
| ஐ | — | அய் |
| ஔ | — | அவ் |
| னா | — | னா |
| றா | — | றா |
| ணா | — | ணா |
| ணை | — | ணை |
| ளை | — | ளை |
| லை | — | லை |
| னை | — | னை |
| ணொ | — | ணொ |
| றொ | — | றொ |
| னொ | — | னொ |
| ணோ | — | ணோ |
| றோ | — | றோ |
| னோ | — | னோ |

பன்மொழிப் புலவர்

## கா. அப்பாத்துரையார்

---

படிப்பறிவு குறைவாக இருந்தாலும் பழுத்துச் செழித்த பகுத்தறிவால் பல புரட்சிகளைச் செய்தவர் தந்தை பெரியார்.

தன் அறிவுக்குச் சரி என்று படுகின்ற எதையும் துணிச்சலோடு செய்யக்கூடிய அவர், தன் அறிவுக்குச் 'சரி' என்று படாத எதையும் ஏற்றுக்கொண்டது கிடையாது.

சமுதாய அமைப்பில் பல புரட்சிகளுக்கு வித்திட்ட அவர் தமிழ் மொழியிலும் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டிருந்தார்.

அதாவது விடுதலெ என்ற வார்த்தையில் உள்ள லெ என்ற எழுத்தை லை என்று எழுதுவார்.

துணெ என்ற வார்த்தையில் உள்ள ணெ என்ற எழுத்தை'ணை என்று எழுதுவார்.

இதே போல அண்ணு என்ற வார்த்தையை அண்ணா என்றும், வருகிருர் என்ற வார்த்தையை— வருகிறார் என்றும் எழுதுவார்.

இந்த மாறுதலைத் தமிழ் அறிஞர்கள் ஏற்றுக் கொண்டார்களா என்பதைப்பற்றி பெரியார் கவலெப்படவில்லை.

அவருக்கு அது சரியாகத் தோன்றியது, எளிதாகவும் இருந்தது. எனவே அவர் இந்தப் புதிய முறையிலேயே எழுதி வந்தார். அவருடைய கொள்கை ஏடுகளான விடுதலை, உண்மை ஆகிய நாளேடுகளும் இந்த முறையை இப்போதும் பின்பற்றி வருகின்றன. திராவிடர் கழகத்தைச் சேர்ந்த பெரும்பாலானவர்களும் இந்த முறையைப் பின் பற்றி எழுதி வருகிறார்கள்.

ஆனால், தமிழக அரசும் இப்போது இந்த மாற்றத்தைத் 'திடீர்' என்று ஏற்றுக் கொண்டுள்ளது.

அதாவது அரசாங்கம் பெரியார் செய்த இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டது. இனிமேல் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களிலும் இந்தப் புதிய முறையிலான வார்த்தைப் பிரயோகங்கள் இடம் பெறப் போகின்றன.

'அரசாங்கத்தின் இந்தத் 'திடீர்' முடிவு நடைமுறைக்குச் சரியானதா? தவறானதா? வருங்கால மாணவர்களுக்கு இது எந்த வகையில் சாதகமாக அமையும்?'

இது பற்றிப் பன்மொழிப் புலவரும், தமிழ் மொழி அறிஞருமான கா. அப்பாத்துரையாரிடம் மாலை முரசு நிருபர் கேட்டார். அவர் பதில் :

> பெரியார் செய்த சீர்திருத்தம் வரவேற்கத் தக்கது, அதை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதும் பாராட்டத்தக்கது.
>
> பெரியார் செய்துள்ள இந்தச் சீர்திருத்தம் அரை குறைதான். அது முழுமையானது அல்ல. பெரியார் மூன்று மாறுதல்களைச் செய்து இருந்தார்.

1. லை, ளை, ணை, னை என்ற எழுத்துக்களை லை, ளை, ணை, னை என்று எழுதுவது.

2. னா, ணா, றா போன்ற நெடில் எழுத்துக்களை னா, ணா, றா என்று எழுதுவது.

3. 'ஐ' என்பதை 'அய்' என்றும் 'ஔ' என்பதை 'அவ்' என்றும் எழுதுவது.

மேற்கண்ட மூன்று மாறுதல்களைத்தான் பெரியார் ஏற்றுக் கொண்டிருந்தார். அல்லது ஏற்கச் செய்து வந்தார்.

நிருபர்: இந்தச் சீர்திருத்தம், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் வருங்கால மாணவர்களுக்கும், எந்த அளவுக்குச் சாதகமாக அல்லது பாதகமாக அமையும்?

அப்பா: எந்த ஒரு சீர்திருத்தமும், ஒரு மொழியின் வளர்ச்சிக்குப் பயன் உடையதாக இருக்கும் என்ற நோக்கத்தில்தான் செய்யப்படுகிறது. பாதகம் என்று பார்த்தால் எதையுமே புதுப்பிக்க முடியாமல் போய்விடும்.

என்னைக் கேட்டால், தமிழ் மொழி, உலகில் உள்ள மற்ற மொழிகளைவிட சொல்வளம் மிக்க மொழி. ஆனால், அது உலக அளவில் வளர்ச்சி அடையவும், எல்லா விதமான விஞ்ஞான அறிவினையும் தமிழ்ச் சொற்கள் மூலமாகவே அறியவும், தற்போதுள்ள தமிழ் மொழியில் சீர்திருத்தம் தேவை.

ஒரு சொல் எந்த இடத்தில் வந்தாலும் அதன் ஒலி வடிவம் மாறாமல், வருகின்ற தனிச்சிறப்பு தமிழ்ச்சொற்களுக்குத்தான் உண்டு. அதாவது ஆங்கில எழுத்துக்கள் தனி வடிவத்தில் ஒரு ஒலியையும் வரிவடிவத்தில் வரும் போது வேறு ஒரு ஒலியையும் தருவதாக இருக்கின்றன.

என்றாலும் 26 எழுத்துக்கள் அதாவது குறைவான எழுத்துக்களை உடைய மொழி என்ற தனிச் சிறப்பால் ஆங்கிலம் உலகம் எல்லாம் பரவி இருக்கிறது.

தமிழுக்கு எத்தனையோ சிறப்புகள் இருந்தும் அதில் 247 எழுத்துக்கள் இருக்கின்ற காரணத்தால் கற்பதற்குக் கடினமான மொழி என்ற கருத்து நிலவி வருகிறது.

'ஆங்கிலத்தைப் போலத் தமிழிலும் எழுத்துக்களைக் குறைத்தாக வேண்டும்' என்று தமிழ் வளர்ச்சிக் கழக

இயக்குநர் கொண்டல் சு. மகாதேவன் கருத்துத் தெரிவித் திருக்கிறார்.

என்னைக் கேட்டால், ஓர் உயிர் எழுத்து தனியாகவும், ஒரு"மெய்யெழுத்து தனியாகவும் இருந்தால்தானே எளிதாக இருக்கும்.

உயிரும் மெய்யும் சேரும் உயிர்மெய் எழுத்துக்கள் என்று அதற்குத் தனி வடிவமும், தனி ஓசையும் என்றிருப்பதால்தான் எழுத்துக்கள் அதிகமாக உள்ளன. மற்ற மொழிக்காரர்கள் கற்பதற்குக் கடினமாக இருக்கிறது.

நிருபர்: உயிர் எழுத்தும், மெய் எழுத்தும் மட்டுமே இருந்தால் போதும் என்ருல் 30 எழுத்துக்கள் தானே இருக்க முடியும்?

அப்பா: தொல்காப்பியர் காலத்தில் 30 எழுத்துக்கள் தான் இருந்தன. 247 எழுத்துக்கள் என்பதெல்லாம் நன்னூல் இலக்கண ஆசிரியர் பவணந்தி முனிவர் காலத் திற்குப் பின்தான் ஏற்பட்டன.

தொல்காப்பியர் காலத்தில் 30 எழுத்துக்களைக் கொண்டுதான், தமிழ் மொழி, இலக்கண இலக்கிய வளம் மிக்க மொழியாக விளங்கியது என்பதற்குத் தொல் காப்பியத்தில் வரும் இந்த நூற்பா எடுத்துக் காட்டாகும்:

'எழுத்தெனப் படுப
அகரம் முதல னகரம் இறுவாய்
முப்ப.:. தென்ப;
சர்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே,'

'அ' என்ற எழுத்து முதல் 'ன' என்ற எழுத்து வரை 30 எழுத்துகளைத்தான் தொல்காப்பியர் ஏற்றுக் கொண்டிருக் கிறார்.

சார்ந்து வரும் மரபு எழுத்துகள் என்று மூன்று உண்டு. அவை குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்த எழுத்து ஆகியவை.

ஆனால், இந்த மூன்று எழுத்துகளையும் தொல் காப்பியர் எழுத்துகள் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் 30 எழுத்துகளைத்தான் ஏற்றுக் கொண்டார்

ஆனால் அந்த மூன்று எழுத்துகளைக் கொண்டு உலகில் உள்ள அனைத்து மொழிகளில் உள்ள ஒலிகளை யும் தமிழ் மொழியில் கொடுக்க முடியும்.

**நிருபர் :** *30 எழுத்துகளுக்குள் தமிழ் எழுத்தை மாற்றுவது என்பது மிகப்பெரிய மாறுதலான காரியம் அல்லவா? அதெல்லாம் இந்தத் தலைமுறை ஏற்றுக் கொள்ளுமா?*

**அப்பா :** இந்தத் தலைமுறைக்கு ஒத்துவருமா என்று பார்த்தால் எதையும் செய்ய முடியாது. 30 எழுத்து களை 247 எழுத்துகளாக எத்தனையோ தலைமுறை ஏற்றுக்கொண்டு விட்டது.

இந்த மாறுதலை உடனடியாகச் செய்துவிட முடியா விட்டாலும், அடிப்படைச் சீர்திருத்தம் அச்சுத்துறைக்கும், டைப்ரைட்டிங்கிற்கும் அவசியம் ஏற்பட்டாக வேண்டும்.

**நிருபர் :** *அந்தச் சீர்திருத்தம் எந்த வகையில் இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?*

**அப்பா :** திராவிடமொழி எழுத்துகளில் மிகப்பழமையானது 'பிராமிய' எழுத்து என்பது. அந்த எழுத்து இப் போது சுருக்கு எழுத்தாளர்கள் உபயோகிக்கும் எழுத் துக்கள் போல இருக்கும். அந்தப் 'பிராமிய' எழுத்து அடிப்படையிலும், தொல்காப்பியர் காலத்து இலக்கண விதிகளின் அடிப்படையிலும் எழுத்துச் சீர்திருத்தம் 30 எழுத்துகளுக்குள் இருக்க வேண்டும்.

**நிருபர் :** *தொல்காப்பியர் காலத்துத் தமிழ் எழுத்துகள் எப்படி இருக்கும்?*

**அப்பா :** மொகஞ்சோதரா புதை பொருள்களில் காணப்படும் எழுத்துகள், திராவிட மொழி எழுத்துகள் என்று 'பாதர் ஹீராஸ்' என்கிற மேல்நாட்டுப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் தெளிவாக்கியுள்ளார். மொகஞ்சோதராவில் காணப்படும் அந்த எழுத்துகள்தான், தொல்காப்பியர் காலத்து எழுத்து.

'தொல்காப்பியர் காலத்து எழுத்தை இந்தக் காலத்துக்குக் கொண்டு வந்தால் சரிப்படுமா?' என்று பலர் கேட்கலாம். இன்றைய விஞ்ஞான யுகத்தின் வளர்ச்சிக்கு, தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் தேவை என்று ஒத்துக் கொள்பவர்களுக்கு, அதன் எளிமையும் பயனும் புரியும்.

நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது இதுதான்;

பெரியார் செய்த மாறுதல் மிகக் குறைந்த அளவுதான். இந்த அரசு இன்னும் மாறுதலைச் செய்ய ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிக்க முன்வர வேண்டும்.

### சிலம்புச் செல்வர்

## ம. பொ. சிவஞானம்

பெரியார் ஈ. வெ. ரா., தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் காண விரும்பி, ணா, றா, னா, ணை, னை, லை, ளை என்னும் ஏழு எழுத்துக்களை ணா, னா, றா, ணை, னை, லை, ளை என வெளியிட்டு வந்தார். இதுதான் 1934-ல் பெரியார் நடை முறைக்குக் கொண்டு வந்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்.

அதன் பின்னர் ஐ, ஔ என்னும் உயிர் எழுத்துக்களை அய், அவ் என்று வெளியிட்டு வந்தார்.

பெரியார் கடைப் பிடித்து வந்த இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொண்டு, அதனை நடை முறையில் கொண்டு வருமாறு தன்னுடைய துறைகளுக்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

பெரியார் ஈ. வெ. ரா., 247 ஆக உள்ள தமிழ் எழுத்துக்களை 27 ஆக குறைத்துவிட வேண்டுமென்றும் கூறி வந்தார். **'மொழி—எழுத்து'** என்னும் பெயரில் அவர் வெளியிட்டு உள்ள நூலில் இதனைக் காணலாம். அதுபற்றி அரசின் கருத்து இன்னதென இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இது எப்படியாயினும் சரி, பெரியார் நடை முறையில் கடைப்பிடித்து வந்த 7 உயிர் மெய் எழுத்துக்கள் பற்றிய சீர்திருத்தத்தைத் தமிழக அரசு தன்னளவில் ஏற்றுக் கொண்டதை மன நிறைவுடன் ஆதரிக்கிறேன். அதையும் பெரியாரின் நூற்றாண்டு விழாவின்போது செய்ததற்காக மகிழ்ச்சியும் அடைகிறேன்.

உயிர் எழுத்துக்கள் 12-ல் எந்த ஒரு எழுத்தையும் தமிழ் நெடுங்கணக்கிலிருந்து அகற்றாமல் இருப்பது நல்லது என்பது என் கருத்து. ஐயும் ஔவும் 'ஒரெழுத்தொரு மொழி' என்று மிகுந்த பெருமிதத்துடன் சொல்லுகின்றார் தொல் காப்பியர். இந்தப் பெருமை தமிழுக்கு நீடிக்கட்டுமே!

'ஔ' என்பது ஒலியளவில் தனி எழுத்தாக இருப்பினும் வடிவத்தில் 'ஒ'வும் ளவும் சேர்ந்த கூட்டு எழுத்தாகத்தான் இருந்து வருகிறது. 'ஔ'வைத் தமிழ் நெடுங்கணக்கி லிருந்து அகற்றிய பின்னரும் 'ஒ'வும் 'ள'வும் இருக்கத்தான் போகின்றன. ஆகவே ஔ என்னும் எழுத்தைக் கைவிட வேண்டிய கட்டாயம் எதுவும் ஏற்பட்டுவிட வில்லை. தட்டச்சுப் பொறியில் ஔ என்ற எழுத்து தனியிடத்தைப் பெற்றிருக்கவில்லை. 'ஒ'வையும் 'ள'வையும் சேர்த்துத் தான் 'ஔ' என்று டைப் செய்யப்படுகிறது. அச்சகத் திலே அச்சுக் கோப்பதிலும் இதுதான் நிலைமை. அங்கும், எழுத்துப் பெட்டிகளிலே 'ஔ' என்ற எழுத்துக்குத் தனிப் பெட்டி இல்லை. ஆகவே, எழுத்துக் குறைப்பு என்னும் பெயரில் 'ஔ'வை அகற்ற வேண்டிய அவசியமில்லை.

இன்னொன்றையும் இங்குச் சொல்லியாக வேண்டும்' ஐ, ஔ எழுத்துக்களுக்குப் பதிலாக அய், அவ் என்னும் எழுத்துக்களைப் பயன்படுத்துவது ஏற்கனவே இருந்து வருவதுதான் செய்யுளில் எதுகை நோக்கி இந்த முறை கடைபிடிக்கப்படுகிறது.

கம்பரும், தமது மாகாப்பியத்திலே, **ஐ** என்னும் தனி எழுத்தைப் பயன்படுத்தியிருப்பதோடு, **அய்** என்னும் கூட்டெழுத்தையும் எதுகை நோக்கிப் பல்வேறிடங்களில்

பயன்படுத்தியிருக்கிறார். இந்த முறை நீடிப்பதில் இடர்ப் பாடு எதுவுமில்லை.

'ஐ'யையும் 'ஔ'வையும் அடியோடு கைவிடுவதிலே தான் இடர்ப்பாடுகள் உள்ளன. 'ஐ', 'ஔ' என வரும் தொல்காப்பியத்தினை எப்படி அச்சிடுவது? நன்னூலை எவ்வாறு பதிப்பிப்பது?

'ஐ' என்ற ஒலி வேறு, 'அய்' என்ற ஒலி வேறு. 'ஔ' என்ற ஒலி வேறு, 'அவ்' என்ற ஒலி வேறு. இந்த ஒலி வேற்றுமையைக் குறிக்க வேண்டிய இடம் மொழி நூல், இலக்கணம் முதலியவற்றில் வந்தே தீரும்.

ஆதலின், இந்த எழுத்துக்களைப்பொதுவாக **ஆளாமல் இருப்பது நல்லது** என்ற உடன் பாட்டிற்கு வரலாம். ஆய்த எழுத்து அதிகமாகப் பயன்படுத்தப்படுவதற்கில்லை யென் பதற்காக அதனைத் தமிழ் நெடுங்கணக்கிலிருந்து நீக்கி விட்டோமா, இல்லையே.

மீண்டும் சொல்கிறேன், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரில் உயிர் எழுத்துக்களில் எந்த ஒரு எழுத்தை யும் இழக்காமல் இருப்பது அவசியம்.

**அய், அவ்** என்னும் எழுத்துக்கள், **ஐ, ஔ** என்பவற்றிற்கு நிகராகமாட்டா. **ஐ**யுடன் ஒப்பிடும்போது **'அய்'** யும், **ஔ** வுடன் ஒப்பிடும்போது **'அவ்'**வும் போலி எழுத்துகள் என்று கூறி, 'கொள்ளற்க' என்றும் எச்சரிக்கிறார் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர்.

பெரியார் ஈ. வெ. ரா. கூட முதன் முதலில் 'ஐ'யையும் 'ஔ'வையும் கை விடுமாறு கூறவில்லை. இவையொழிந்த உயிர் மெய்யெழுத்துக்கள ஏழில்தான் திருத்தம் கண்டார். பின்னர்தான் 'ஐ'யையும் 'ஔ'வையும் கைவிடத் தொடங் கினார். அவருக்கும் உயிர் எழுத்தை அகற்றுவதில் முதலில் தயக்கம் இருந்திருக்கிறது என்பதனை உணர்த்தவே இங்கே இந்த எடுத்துக் காட்டு.

**கா, சா** என்பவற்றை இப்போது கால் (ா) வாங்கி எழுது கிறோம். இந்த முறைப்படித்தான் இனி, ணா, னா, றா என எழுதப் போகிறோம்.

இதுபோல, கை, சை என ஏற்கனவே எழுதி வருகி றோம். இதையே பின் பற்றி, லை, ளை, னை, ணை என்று எழுதப் போகிறோம். இதன் மூலம் **கா** முதல் ஔ வரையுள்ள எழுத்துகள் முறைப்படுத்தப்படுகின்றன. அதனால்தான் இதனை ஏற்கவேண்டியிருக்கிறது.

## டி. பி. எம். பெரியசுவாமி

### எழுத்துச் சீர்திருத்தம் தேவையா?

கடந்த சில வாரங்களாக செய்தித்தாள்களில் பரவலாக விவாதிக்கப்படும் செய்தி, எழுத்துச் சீர்திருத்தமாகும்.

பெரியார் ஈ. வெ. ரா. 'வின் நூற்றாண்டு விழாவினை யொட்டி, அவர் மேற்கொண்ட இச் சீர்திருத்தத்தை அரசினரும் ஏற்றுக்கொண்டு கல்வித்துறை மூலமாக ஓர் ஆணை பிறப்பித்துள்ளனர்.

தமிழ்மொழியில் குறிப்பிட்ட பதினைந்து எழுத்துகளின் வரிவடிவம் தற்போது மாற்றப்படுகிறது. குறிப்பிடத்தக்க மாற்றம் இரண்டு எழுத்துக்களில் காணப்படுகிறது.

ஐ — அய்
ஔ — அவ்

அரசினரும் ஏற்றுக் கொண்ட இத்திருத்தங்களைப் பற்றி நிறைவாகவும் குறைவாகவும் தொடர்ந்து பேசப்படுகிறது. மொழியினைத் திருத்துவது முற்றிலும் தவறு என்று ஒருவரும் கூறவில்லை. எப்போது திருத்த வேண்டும், எப்படித் திருத்த வேண்டும் என்பதில்தான் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

எனவே வேறுபாடுகளைப் பற்றி அதிகம் கவலையுறத் தேவையில்லை. வளருகின்ற எந்த மொழியும் கருத்துக் கண்ணோட்டத்தில் விளையும் உள்ளீட்டு மாறுபாடுகளையும், எழுத்து வடிவத்தில் வரக்கூடிய வெளிப்படையான திருத்தங்களையும் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்

மேலும் இந்தச் சீர்திருந்திய எழுத்துகளினால், எந்தவிதக் குழப்பமும் விளையப் போவதில்லை.

கடந்த நாற்பது ஆண்டுகளாக ஈ. வெ. ரா. பெரியார் அவர்கள் 'குடியரசு', 'விடுதலை' போன்ற தமது செய்தி இதழ்களில் இவற்றைப் பயன்படுத்தி வந்தார். 1935-ஆம் ஆண்டுக்குப் பிறகு வந்த 'குடியரசு' இதழ்களில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கருத்து வேறுபாடுகளையும் வெளியிட்டு வந்தார்.

அச்சடிப்பதில் இந்தச் சீர்திருத்தம் பெரிதும் துணை புரியும் என்றே அப்போது ஒத்துக் கொள்ளப்பட்டது.

தமிழ் மொழியில் வீரமாமுனிவர் சில திருத்தங்களைச் செய்துள்ளார் என்பதும், அவற்றை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதும் ஈண்டு நினைவுகூரத் தக்கதாகும்.

எ͘, ஒ͘—என்ற இரண்டு உயிரெழுத்துகளை (நெடில்) ஏ- ஓ என்று வீரமாமுனிவர் மாற்றினார். ஆங்கில மொழியிலும் எழுத்துகளைத் திருத்த வேண்டும் என்ற முயற்சி கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

புகழ் பெற்ற அய்ரிஷ் நாடகாசிரியர் பெர்னாட்ஷா ஏறத்தாழ ஓர் இலட்சம் ரூபாய்களை இதற்கென்றே ஒதுக்கியுள்ளார். தேவையற்ற எழுத்துகளை நீக்கிவிட வேண்டும் என்பதில் ஐயமில்லை. பழைமை விரும்பிகளான ஆங்கிலேயர்கள் 'Colour' என்று எழுதினாலும், அமெரிக்கர்கள் விரும்புவதும், எழுதுவதும் 'color' என்ற சொல்லைத் தான்.

திருந்திய முறையின்படி 'ஔவையார்' என்று எழுதுவதற்குப் பதிலாக 'அவ்வையார்' என்றே இனி நாம் எழுத வேண்டும். இச்சீர்திருத்தம் வேறெந்தக் குழப்பத்தையும் விளைவிக்காதெனவே, தமிழ் மக்கள் இத்திருத்தத்தினை ஏற்றுக் கொள்ளுதல் பொருத்தம் என்றே எமக்குத் தோன்றுகிறது.

பெரியாரின் நினைவாக, இச்சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த தமிழக அரசைப் பாராட்டுகிறோம்.

பாகூர்
## சு. குப்புசாமி

### இருவகை எழுத்து

எழுத்தை ஒலி எழுத்து என்றும் வரி எழுத்து என்றும் இருவயையாகக் கூறுவர். பல்வேறு வகையான ஒலிகளை" ஒலி வேறுபாடுகளை உணர்த்துவதற்கு எழுந்த அடையாளங்களே — குறியீடுகளே வரிவடிவ எழுத்துகள்.

### எழுத்து — உருவம்

படம், உருவம் என்பவையே எழுத்து என்பதற்குப் பொருள் என்று நிகண்டு கூறுகிறது.

**காணப் பட்ட உருவ மெல்லாம்**
**மானக் காட்டும் வகைமை நாடி**
**வழுவில் ஓவியன் கைவினை போல**
**எழுதப் படுவது உருவெழுத் தாகும்**

இது யாப்பருங்கல விருத்தி மேற்கோள் சூத்திரம். ஓவியனின் மன நிலைக்கேற்ப, அவன் கைவினையால் படமும் உருவமும் சிறுசிறு மாற்றங்களை அடைவது இயற்கையே!

எழுத்து மாற்றங்களுக்கு இன்னும் எத்தனையோ காரணங்கள் உண்டு. காஞ்சி கைலாச நாதர்க் கோயிலில் வரையப் பெற்றுள்ள பல்லவர் காலத்து எழுத்துகள்

ஓவியங்களாகவே அழகுற அமைந்துள்ளன. இவையெல்லாம் எழுத்தல்ல என்று ஒதுக்கப்படுவதில்லை. அதே கால கட்டத்தில் அவ்வகையான எழுத்துகள் புனையா ஓவியம் போல எழுதப் பெற்று வந்தமையை இங்கு நினைவு கூர்தல் வேண்டும்.

## எழுத்து வளர்ச்சி — மாற்றம்

எழுத்துகளின் தோற்றம் வளர்ச்சி பற்றிய நமது சிந்தனைகள் புதிதல்ல. இலக்கணம் யாத்தவர்களும் நச்சினார்கினியர் போன்ற உரைகாரர்களும் எழுத்துகள் பற்றிய பல்வேறு நிலைகளைச் சுட்டிச் சென்றுள்ளனர். இன்றைக்கு வழக்கில் இருக்கும் எழுத்து வரிவடிவங்களில், முற்காலத்து இலக்கிய இலக்கணங்கள் எழுதப் பெற வில்லை.

அக்காலத்தில் வழக்கில் இருந்த வரிவடிவங்கள் வேறு வகையானவை.

> **"வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த**
> **கண்ணெழுத்து"**

தமிழகத்தில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. கி. மு. 300 முதல் கி. பி. 200 வரை கண்ணெழுத்துகள் இருந்தனவாகக் கூறுவர். வழக்கத்தில் இருக்கும் எழுத்து வரிவடிவங்களில் சில, காலப்போக்கில் சிறு சிறு மாற்றங்களை அடையும்போது, அவற்றால் உணர்த்தப் பெறும் ஒலி வடிவங்கள் மாறுவதில்லை. வரிவடிவ மாற்றங்கள் இன்று நேற்றல்ல, காலங்காலமாக நிகழ்ந்தே வந்துள்ளன.

## பழைமையானவையே

பெரியார் அவர்கள் பயன்படுத்தி வந்த ணை, லை ளை, னை—முதலான எழுத்துகள், கி. பி. 10ஆம் நூற்றாண்டில், குறிப்பாகச் சோழர் காலத்துக் கல்வெட்டுகள் பலவற்றில் ணெ, லெ, ளெ, னெ — என வரையப் பெற்றுள்ளன.[1]

1. பல்லவனும் பராந்தகனும் [சேகர் பதிப்பகம், சென்னை] -கல்வெட்டுகள் இணைப்பு.

விசய நகரப் பேரரசு நிலவிய காலங்களில், குறிப்பாக 14 ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டங்களில்தான் இரண்டு கொம்புச் சுழிகள் இணைந்து [ை] புதிய உருவை அடைந்தன.[1]

ஆயினும், ஊண, ஊல, ஊள, ஊன முதலான வரிவடிவங்களும் அக் காலகட்டங்களில் இல்லாமல் இல்லை. ஆக, இவ்வெழுத்துகளின் வரிவடிவங்களில் இருவேறு சிந்தனைகள் நீண்ட காலமாகவே இருந்துள்ளன.

ஒரு காலத்தில் புள்ளியிட்டுக் காட்டப் பெற்ற குறியீடுகள் பிற்காலத்தில் காலாக (ா) மாறியதுண்டு. 15 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் பலவற்றில் ஆ என்பது அா என்று காட்சியளிப்பதைக் காண முடியும். ணா, ளா, லா, என்பவையும் இவ்வாறே.

சோழர் காலத்தில் எழுதப் பெற்ற ஒ என்னும் எழுத்து பின்னிப் பிணைத்து எழுதப் பெற்றதைப் பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் காணலாம்.

## விகுதிகள் — வேற்றுமைகள்

ஐ என்பதை அய் என்று எழுதும் வழக்கமுங்கூட இருந்துள்ளது. மு என்பதை ஐ வடிவம் போல எழுதுவதும் உண்டு. சொல்லோடு இணைந்து வரவேண்டிய விகுதிகளும் வேற்றுமை உருபுகளும் சொல்லுக்குப் புறத்தே தனித்து நிற்பதையும் கல்வெட்டுகளில் காணலாம்.[3] இவை

---

1. வரலாற்றில் வில்லிய நல்லூர் (சேகர் பதிப்பகம் — அச்சில்) கல்வெட்டு எண்கள்: 10—16. புலவர் ந. வேங்கடேசன்.

2. கல்வெட்டுகளில் காரைக்கால் பகுதிகள் (சேகர் பதிப்பகம் — அச்சில்) கல்வெட்டு எண்கள்: 37—38.

புலவர் சு. குப்புசாமி, புலவர், ந. வேங்கடேசன்.

3. செங்கம்நடுகற்கள், பதிப்பாசிரியர் Dr இரா. நாகசாமி. பக்கம் IX & 1971 | 47, 59 & 100.

எல்லாம் கல்வெட்டுகளைப் பதிவு செய்து படிப்பவர்கள் நன்கு அறிந்தவை. வீரமாமுனிவர் செய்ததாகக் கருதப் பெறும் எழுத்துச் சீர்மைகள்கூட, அவருக்கு முன்பே தமிழ கத்தில் இருந்ததாக அறிஞர்கள் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டியுள்ளனர்.

## அன்றே சீர்மை

சமஸ்கிருத எழுத்துகளைத் தமிழ் வரிவடிவில் கையாளு வதற்கு என்றே ஒரு காலத்தில் எழுத்துச் சீர்மை தோற்று விக்கப் பெற்றது. உகர ஊகாரங்களுக்கு ~, ூ முதலான குறியீடுகள் பயன்படுத்தப் பெற்றன.

பிற்காலக் கல்வெட்டுகளிலும் ஓலைச் சுவடிகளிலும் கூட்டெழுத்துகள் பெருவாரியாக ஆளப்பெற்றுள்ளன.

## பல மாற்றங்கள்

எழுத்துகள் பற்றிய இப்பல்வேறு நிலைகளை எண்ணிப் பார்த்தால், வரிவடிவங்கள் தேவைக்கேற்ப காலந்தோறும் மாற்றமடைந்தே வளர்ந்துள்ளன என்பதை வெள்ளையாம் பட்டு சுந்தரம் அவர்களின் 'கல்சொல்லும் கதைகள்' (சேகர் பதிப்பகம்) என்னும் நூலில் காணலாம்.

தமிழ் வரிவடிவங்களைச் சிறிதளவே மாற்றி, தத்தமது மொழிக்கு வரிவடிவங்களாக அமைத்துக் கொண்டவர்கள் கூட, தேவைக் கேற்றவாறு உலகியல் உணர்வோடு எழுத்துச் சீர்மையில் இறங்கிவிட்டார்கள். ஆனால், நாமோ கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தையே சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் மொழி வளர்ச்சியில் உண்மையான நாட்டங் கொண்டவர்கள் விரைந்து செய்தாக வேண்டிய முதற்பணி முழுமையான எழுத்துச் சீர்மையே.

உலகில் மொழியால் தொடர்புகளை வளர்த்து முன் னேற வேண்டியுள்ளது. எனவே அறிவியல் தாக்கம் நம் மொழியிலும் வந்தாக வேண்டும்!

குடந்தை

## வீரா. இராசகோபாலன்

தந்தை பெரியார் அவர்கள் ஐகார ஔகார மாற்றங்களை அவ்வளவாக வலியுறுத்தவில்லை. அப்படி வலியுறுத்தி இருந்தால் 'விடுதலை' என்று போடாது 'விடுதலய்' என்றே போட்டிருப்பார்.

### ஐ — இரு வழிகளில்

உயிரெழுத்தில் ஐகாரமிருந்தால்தான் ஐகார உயிர் மெய்யெழுத்தில் ஐகார ஒலியைக் குறிக்கும் 'ை' என்ற உயிர்க் குறி இருத்தல் நியதி. ஔகாரம் ஒகரமும், ளகரமும் சேர்ந்து ஆவதால் தொல்லை ஒன்றுமில்லை.

எனவே, ஐகார ஔகாரங்கள் தன் மாத்திரையில் (2) குறையாது ஒலிக்கும் இடங்களில் ஐகார, ஔகாரங்களும் தன் மாத்திரையில் குறைந்து (ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம்) ஒலிக்கும் இடங்களில் 'அய், அவ்' என்றும் பயன்படுத்தல் நலம்.

மெய்யெழுத்தின் மேல் உயிரெழுத்து ஏறுதலான் உயிர் மெய்யெழுத்து உண்டாயிற்று என்பது நியதி அதனால் ஆகார உயிர் மெய்யெழுத்தில் அகரவுயிர் மெய்யெழுத்துக்குப் பின்னர் ஆகாரவுயிர்க் குறியாகிய 'ா' என்ற உயிர்க்குறி அமையப் பெற்று ஆகாரவுயிர் மெய்யெழுத்துகள் அமையலாயின.

ஆனால், எகரவுயிர் மெய்யெழுத்தும் ஏகாரவுயிர் மெய் யெழுத்தும் அவ்வாறு அமையப் பெறவில்லை. எனவே இவை ஒழுங்கற்ற எழுத்துகளாயின.

ஆகாரவுயிர் மெய்யெழுத்துப் போன்று அகரவுயிர் மெய்யெழுத்துக்குப் பின்னர் எகரவுயிர்க் குறியாகிய 'ெ' என்ற உயிர்க்குறி அமைந்து ஏகாரவுயிர் மெய்யெழுத்தும், ஏகார உயிர்க்குறியாகிய 'ே' என்ற உயிர்க்குறி அமைத்து ஏகாரவுயிர் மெய்யெழுத்தும் அமைதலே ஓர் ஒழுங்குமுறை ஆகும்.

ஒகரவுயிர் மெய்யெழுத்தும், ஓகாரவுயிர் மெய்யெழுத் தும் அகரவுயிர் மெய்யெழுத்துக்கு இருபக்கத்திலும் (முன் னும், பின்னும்) இரு உயிர்க்குறிகளைப் பெற்று அமைந் துள்ளன. ஆகவே, இவைகளும் ஓர் ஒழுங்கற்ற எழுத்து களாயின. ஆகாரவுயிர் மெய்யெழுத்தும், இகரவுயிர் மெய் யெழுத்தும், ஈகாரவுயிர் மெய்யெழுத்தும், எகரவுயிர் மெய் யெழுத்தும், ஏகாரவுயிர் மெய்யெழுத்தும் ஆகிய ஒவ் வொன்றும் ஒவ்வொரு உயிர்க்குறியைப் பெற்று இருப்பது போல ஒகரவுயிர் மெய்யெழுத்தும், ஓகார உயிர்மெய் யெழுத்துமாகிய ஒவ்வொன்றும், ஒவ்வொரு உயிர்குறியைப் பெற்று ஆகாரவுயிர் மெய்யெழுத்துப் போன்று அமைதலே ஓர் ஒழுங்குமுறை ஆகும். ஒகரவுயிர் மெய்யெழுத்தைத் தலை கீழாகவும், புரட்டியும் அமைத்துக் கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| கெ | என்பது | க‌ெ | எனவும் |
| கே | என்பது | க‌ே | எனவும் |
| கொ | என்பது | க‌ொ | எனவும் |
| கோ | என்பது | க‌ோ | எனவும் |

திருத்தம் செய்யலாம்.

தந்தை பெரியார் அவர்களின் கருத்திற்கொப்ப இம் மாற்றங்களை ஏற்று, தமிழ் வரிவடிவங்களை ஓர் ஒழுங்கு முறைப்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வந்தால் காலப் போக்கில் உயிரெழுத்து வேறு, உயிர்க்குறி வேறு என்ற நிலை மாறி, உயிர்க் குறிகளே உயிரெழுத்தாக மாறும். அங்ஙனம் மாறுகையில்,

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ என்ற உயிரெழுத்து,

அ, ா, ி, ீ, ு, ூ, ெ, ே, ொ, ஓ என்ற நிலை பெறும். அவ்வாறு நிலை பெறுகையில் தமிழ் வரிவடிவங்கள் முப்பது ஆகும்.

இம் முப்பது வரிவடிவங்களைக் கொண்டு ஆங்கில எழுத்து நடைபோன்று தமிழ் எழுத்து நடையும் அமையும். உயிர்மெய்யெழுத்துக்கென்று தனி வடிவங்கள் தேவைப் படா. எல்லாம் இம் முப்பது வரிவடிவங்களுக்குள்ளேயே அடங்கிவிடும்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' புதிய வழக்க மன்று. ஆகவே தமிழ் மொழியை மேம்பாடுறச் செய்ய விரும்பும் தமிழ் மக்கள் இச்சீர்திருத்தத்தை விரும்பி யேற்பாரென்பது ஒருதலை.

தமிழ் அறிஞர் பெருமக்கள் இக்கால வளர்ச்சிக் கேற்ற வகையில் புதிய இலக்கண நூலொன்று படைத்துத் தமிழன்னைக்கு அணி செய்வார்களாக.

பேராசிரியர்

## வே. கலைமணி

---

நாட்டிலுள்ள பெரும்பாலோர் இன்று சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். அங்ஙனம் சிந்தித்ததன் பயன் அறிவு தெளிவு பெறுகிறது, அறியாமை அகலுகிறது.

இந்த நாட்டு மக்களை நோக்கி, 'நீங்கள் அறிவு பூர்வ மாகவே சிந்தியுங்கள், செயற்படுங்கள்' என்று கூறியவர் ஒருவரே. அவர்தான் ஈரோட்டு இராமசாமி பெரியார். அவரோர் அறிவியல் வாதி! சமூகச் சீர்திருத்த நெறி யாளர்! அவரின் கூர்மை மிக்க அறிவுக் கதிர்கள் சமூகத் தின் எல்லாப் பகுதிகளிலும் ஊடுருவிச் சென்றன.

மொழித்துறையையும் அவர் விட்டு வைக்கவில்லை ஒரு கட்டத்தில் அவர் தமிழ் மொழியைக் 'காட்டு மிராண்டி மொழி' யென்றார். அதைக் கேட்டு அறிஞர்கள் சீற்றம் கொள்ளவில்லை; கண்டனக் கணைகளைத் தொடுக்க வில்லை. காரணம் ஒரு தாய் தன் குழந்தையைத் திட்டுவது போன்றதே அவரின் கண்டன மொழி என்று கருதினர். பெரியார் அவர்களும் மொழியின் மீதுள்ள வெறுப்பினால் மொழிந்தது அன்று. தமிழ் மொழி காலத்துக்கேற்ப புதுமைக் கோலம் பூண்டு, புதிய, புதிய அணிகளை அணிந்து பொலிவோடு திகழ வேண்டுமென்ற காதலால் கூறியதாகும்.

ஒரு மொழியின் எளிமையும் சிறப்பும் அதன் எழுத்து களில்தான் அடங்கியுள்ளன. தமிழில் மொழி முதல்

எழுத்துகள் முப்பதேயாகும். 'உயிரும் உடம்பு முப்ப தாம் முதலே' என்ற நூற்பாபடி தமிழில் எழுத்துகள் முப்பதேயாகும். பிறவெல்லாம் சார்பெழுத்துகள் என்றே பேசப்படும்.

ஒரு காலத்தில் பனையோலையில் எழுதியபோது தனித்தனி எழுத்துகளைப் படைத்து எழுதுவது எளிமை என்று கருதப்பட்டது. அதன் காரணமாகவே உயிர் எழுத்துகள் 12, மெய் எழுத்துகள் 18 என்ற முப்பதோடு மேலும் சார்பெழுத்துகள் என்ற வகையில் 217-ஐ சேர்க்க வேண்டியிருந்தது.

ஆனால், இன்று காலம் மாறிவிட்டது. கையால் எழுதுகிற பழக்கம் குறைந்து அச்சிடுவதும், தட்டச்சு செய்வதும் மிகுதியாக வழக்கிற்கு வந்துவிட்டன.

அச்சு வடிவிற்கும், தட்டச்சு செய்வதற்கும் 247 எழுத்துகள் என்பது பெருஞ்சுமையும் கடினமுமாகும்.

மொழி முதல் முப்பது எழுத்துகளைக் கொண்டே 247 எழுத்துகளையும் வரிவடிவத்தில் படைக்க முடியும். சில குறியீடுகள் மட்டுமே தேவைப்படும்.

மேலும் உயிர் எழுத்துகள் 12 ஐயும் சுருக்கி ஐந்து எழுத்துகளாக்கி விடலாம்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பவற்றில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பவற்றை அறவே நீக்கி விடலாம். அ, அா, இ, இா, உ, உா, எ, எா, அய், ஒ, ஒா, அவ், என்ற முறையில் எழுதலாம். இதில் தவறொன்று மில்லை. க, கா என்பதில் க ஒரு 'ா' காலைச் சேர்த்துக் கொண்டு கா ஆகும்போது அ, அா என்று ஆவதில் என்ன பெரிய தடுமாற்றம் ஏற்பட்டுவிடும்? தொடக்கத்தில் வேண்டுமானால் கொஞ்சம் குழப்பம் ஏற்படலாம். அதிலும் பெரியவர்களுக்குத்தான் குழப்பம் ஏற்படுமே யொழிய மொழியைக் கற்கும் நிலையிலுள்ள குழந்தைகளுக்குக் குழப்பம் ஏற்படவே ஏற்படாது.

இந்த எழுத்துச் சீர்திருத்தம் இளைய தலைமுறையின் எதிர் காலத்துக்கே யன்றி, உதிரப் போகும் பழுப்புக் களுக்கன்று.

இது போன்றே மெய் யெழுத்துகளிலும் சீர்மை செய்ய லாம். குறிப்பாக, உகர, ஊகாரங்களுக்கு அவசியம் சீர்மை செய்தாக வேண்டும்.

உயிர் 5, மெய் 18, குறியீடுகள் ஆறு, ஆய்தம் ஒன்று ஆக முப்பது வரிவடிவங்களைக் கொண்டே மொழிச் சீர் திருத்தத்தைச் செய்ய முடியும்.

இப்போது செய்துள்ள சீர்திருத்தம் ஒரு தொடக்கமே யாகும். அறிஞர் பெருமக்கள் முயன்றால் மேலும் பல சீர் திருத்தங்களைச் செய்ய வியலும்.

ஆய்த எழுத்துக்குக் கூட மாற்று கண்டு பிடிக்க முடியும். இருக்கின்ற எழுத்துகளிலேயே ஒரு மாற்றம் செய்து ஆய்தத்தின் ஒலியைப் பெறச் செய்ய முடியும்.

கல்விப் புலமையாளர்கள் கூடி ஒரு முடிவு காண் பார்களானால் அதனை உலகம் ஏற்றுக் கொள்ளவே செய்யும்.

மகா கவி

# அ. கு. ஆதித்தர்

---

## மாற்றம் தேவையே

"இந்த எழுத்து மாற்றம் எளியது; தெளிவானது; தமிழ் அறிஞர்கள் கூறும் நெறிமுறைக்கு உட்பட்டது. தமிழ் வளர, இதை ஏற்று அரசு செயல்படுத்த முன்வர வேண்டும்"

தமிழ் மொழியில் எழுத்து மாற்றம் வேண்டும் எனச் சில காலமாகப் பலரும் எழுதி வந்தனர். 11—11—78 'மாலை முர'சில் முதுபெரும் புலவர் அப்பாத்துரையார் அவர்களும் எழுதியுள்ளார்கள். முதலமைச்சரும் திடீர் ஆணையிட்டுள்ளார்கள். எழுத்து மாற்றம் தேவையே. அவ்வெழுத்து மாற்றம் அறிவுக்குப் பொருத்தமாய்—தெளிவாய் யாவர்க்கும் எளிதாய் இருத்தல் வேண்டும்.

## தமிழ் நெறி

தமிழின் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் ஓரளவு நிறைவுடையன. 'அ' முதல் 'ஓ' வரை உள்ள 11 எழுத்தும் அவ்வாறே இருக்கலாம்.

'ஔ' சிறிது கவனிக்க வேண்டிய ஒன்று. மொழி படிக்க முயல்வாரும், படிப்பவரும் ஒ-ள என வாசிக்கும்படி 'ஔ' நிற்கிறது.

கௌவி என்பது கெ-ளவி என்றும், வெளவால் என்பது வெ-ளவால் என்றும், ஔவை என்பது ஒ-ளவை என்றும் பலரால் படிக்கப் படுவதைப் பார்த்திருக்கிறோம். இந்தக் குழப்பம் இல்லாத முறையில் ஔ- ஒரு தெளிவான தனி உருவம் பெறுதல் வேண்டும். எவ்வாறு?

ஐ - இதன் போலி உரு, அய். இந்த 'ஐ' யின் அடிப் பாகம் 'ய' கொண்டது. மேல் பாகத்தை 'அ' ஆகக் கருது வோம். அவ்வாறே ஔ-அவ் உருவம் மேல் பாகம் அதே 'அ' ஆகவும், கீழ்ப்பாகம் 'வ' ஆகவும் அமைப்போம்.

இதனை ஔ ஆகக் கொள்வோம். இது குழப்பத்தைத் தவிர்க்கும். ஓரெழுத்தாகவும் இருக்கும். இம்முறையில் உயிரெழுத்து 12.

'க' முதல் 'ன' வரை உள்ள மெய்யெழுத்து முதல் பதி னெட்டையும் அவ்வாறே கொள்வோம். இதனால் உயிர், மெய் முதல் எழுத்துகள் 30 ஆகின்றன.

இனி, உயிர்மெய் எழுத்துபற்றிக் காண்போம்.

'ஆ' உயிர் சேர்ந்த கா முதல் பதினெட்டையும் 'ா' (கால்) சேர்த்தே எழுதுவோம். இம் முறையால் ணா, றா, னா தனி எழுத்துக்கள் ஒழியும். மொத்த எழுத்து 30+1 = 31 ஆகும்.

இ உயிர் சேர்க்க க, மேல் அடைப்புக்குறி-கவிழ்ந்த அரை வட்டம்—உகிர்க் (ரகவடிவ) குறி எழுதுகிறோம். கி, ஈ உயிர் சேர்க்க ⌒ குறியின் ஈற்றில் சுழிக்கிறோம். பதினெட்டும் இந்த ஒரே முறையைக் கொள்தலின் மொத்த எழுத்து 31+2 = 33 ஆகிறது. இனி உ, ஊ பற்றி காண் போம்.

1 கு, டு, மு, ரு, ழு, ளு

2. ஙு, சு, பு, யு, வு

3. ஞு, ணு, து, நு லு, று, னு

இவ்வாறு உகரச்சேர்க்கை 3 விதமாகிறது; கூ தனித்த உருக்காட்டுகிறது. இம்முறைகள் ஒழிந்து ஒரே முறை ஆதல் வேண்டும். வகை என்ன? வகை உளதா? உளது, பார்ப்போம். கி எழுத க மேல் கொம்பு வரைகிறோம் அல்லவா? அக் கொம்பை — உகிர்க் குறியை — அரை வட்டத்தை ◡ மல்லாக்க எழுதுவோம்.

இம்முறையை 18 மெய் முதலோடும் பயில்வதால் மொத்த எழுத்து 33+2=35 ஆகிறது.

எ உயிர்ச்சேர்க்கை 'ஏ' கார உயிர்ச் சேர்க்கை இப்பொழுது இருப்பது பொன்றே பதினெட்டும் ஒரே பான்மைத்தாகும். ெ, ே — இந்த இரு குறிகளும் சேர மொத்த எழுத்து 35+2=37 ஆகிறது.

இவ்வாறே ஐ உயிர் ை குறியால் 18 எழுத்தோடும் சேர மொத்த எழுத்து 38 ஆகிறது. இம்முறையால் ணை, லை, ளை, னை மறைகின்றன. இனி ஒ பற்றி ஆய்வோம்.

ஒ-உயிர் சேர, உயிர்மெய் எழுத்து 3 குறியீடுகள் கொள்கின்றது. கொ- ஒரு எழுத்தைக் குறிக்க 3 எழுத்துகள் வரையும் முறையை ஒழித்தல் வேண்டும். இரு குறியீட்டுக்கு மேல் எந்த எழுத்தும் கொள்வது சீர்மைத் தன்று. **ஒரு மெய் ஒரு உயிர்; ஏன் மூன்றாம் எழுத்து?** ஆதலின், இரண்டு ஆக்குவோம்.

கொ—ஒரு கொம்பு முதலிலும் ஒரு கால் (ா) ஈற்றிலும் கொள்கிறது. முதல் கொம்பை ஒழித்தால் கா ஆகிறது.

அந்த பின் உற்ற காலை இரட்டையாக்குவோம்—ஈா. தமிழ் ய கவிழ்ந்த உருவமாகும்; இதனை ஒ உயிர்மெய் உருவமாக்குவோம். கொ-கஈா. இந்த இரட்டைக்காலை ஈற்றில் சுழித்தால் ஒ ஆகும் — கஈா. இந்தச் சுழியுற்ற எழுத்து ஆங்கில w தலை கீழானதைப் போன்றது.

18 உயிர் மெய்யும் இவ்வாறு எழுதப் பெற மொத்த எழுத்து 38+2=40 ஆகிறது.

இனி ஔ உயிர் மெய்யில் சேர, முந்திய (ஐ) ை இதனையே தலை கீழாகக் கொள்வோம். கௌ—கவ. மொத்த எழுத்து இப்போது நாற்பது தான்; அதனோடு மெய் எழுத்துப் புள்ளி— 1; ஆய்த எழுத்து— 1 ஆக மொத்தம் 42 எழுத்துகளில் தமிழின் 247 ஒலிப்புகளும் அடங்குகின்றன.

ஔ, உ வரிசை ஒ வரிசை மாறுபட்டுத் தோன்றினும் இலகுவான முறையாகவும், 18 மெய்க்கும் ஒரே முறை யாகவும் இருப்பதால் பயில்வதற்கு இது கடினமன்று.

'ஆங்கிலம் 26 எழுத்துக்கள் கொண்டது. தமிழும் அவ்வாறு குறைந்த எண்ணில் அமையவேண்டும் என் பார் சிலர். அது தவறு. ஆங்கில எழுத்து 26×26 = 52 ஆகும். இங்குற்ற முறையில் தமிழ் எழுத்தோ 42. குறைந்த எண்ணில், தெளிவாக இலகுவாக அமைந்த எழுத்துமுறை இது ஆகும்.

புள்ளி, இ, ஈ, உ, ஊ இவற்றின் குறியீடுகள் முந்திய முறையே மெய் முதலின் மேற்புறம் வலப் பக்கத்தில் எழுதப் பெறலாம். தட்டெழுத்தில் நகரா (முட) எழுத் தாகக் கொள்ளலாம். ஏனைய எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ இவற்றின் குறியீடுகளை மெய் முதலுக்கு இடப்புறத்தில் முந்திய முறையில் எழுதலாம்.

தலைவர் ம. பொ. சி. அவர்கள் 'எந்த ஒரு எழுத்தையும் தமிழ் நெடுங்கணக்கிலிருந்து அகற்றாமலிருப்பது நல்லது. அய், அவ் என்னும் எழுத்துகள் ஐ, ஔ என்பவற்றுக்கு நிகர் ஆக மாட்டா' என்று கூறியிருப்பது யாவரும் உணர்ந்து போற்ற வேண்டியதாகும். எமது முறை அந் நெறி தழுவி நிற்கிறது; இதனை அறிஞர்களும் அரசினரும் கவனித்துத் தக்கதாயின் செயற்படுத்துவார்களாக!

பேராசிரியர்
## மு. உலகநாதன்

---

### பண்டைய மாற்றம்

எழுத்தைப் பொருத்தமட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த வரிவடிவம் எத்தனையோ மாற்றங்களைப் பெற்றிருக்கிறது. உதாரணமாக, 'ஐ' என்ற எழுத்தை 'அய்' என்று எழுதலாம். 'ஔ' என்பதை 'அவ்' என்று எழுதலாம். தொல்காப்பியமே இதை ஏற்றுக் கொள்கிறது.

எ, ஒ, என்னும் குற்றெழுத்துக்களின் நெடுமை எ, ஒ என்று மேலே புள்ளி நீங்கியது. வீரமாமுனிவரின் * உதவியால் புள்ளி நீக்கப் பெற்றுக் கீழே சற்று இழுத்து விடப்பட்டு ஏ, ஓ என்று நீட்டம் பெற்றது. அவ்வரிவடிவம் விலக்கப்படவில்லை; ஏற்றுக் கொள்ளப்பட்டது.

உயிர்மெய் எழுத்துக்களில் நெடுமையைக் குறிக்கப் பக்கத்தில் இடப்பட்ட புள்ளி (க.) முற்றுப்புள்ளிக்கும் அதற்கும் வேறுபாடு காணமுடியாமையால் (ா) என்று காலாகப் புள்ளி மாற்றம் பெற்றது. அதனையும் ஏற்றுக் கொண்டோம்.

---

* இவை வீரமாமுனிவர் (Rev. Beschi) செய்த மாறுதல்கள்; "I also state I have devised another and easier way of distinguishing e and o long from e and o short" Rev. Beschi A Grammar of the common Dialect of the Tamil Language P. 7.

'குற்றியலுகரமும் அற்றென மொழிப' எனப் புள்ளி பெற்ற தொல்காப்பியர் காலக் குற்றியலுகர குற்றியலி கரங்கள், மற்ற உகர இகரங்களைப் போலவே எழுதப் பட்டன. இம்மாற்றமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ம என்பது ப (ப்) என்ற வடிவாகப் பகரத்தின் உள்ளும் ஒரு புள்ளி பெற்று எழுதப்பட்டது. (இது பகர, மகர வரி வடிவ வேறுபாடு கூறுவதா அல்லது மகரக் குறுக்கத்தைக் கூறுவதா என்ற கருத்து வேறுபாடு உணர்த்துவதும் உண்டு.)

ம என்பது உள்ளாற் புள்ளி (ம்) பெற்று நிற்பினும் அதுவும் வரிவடிவ வேறுபாடே. அதுவும் தொல்காப்பிய ரால் கூறப்பட்டு இப்போது வழக்கொழிந்தது எனின் அது வும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனை, "உருபு திரிந்து உயிர்த்தலாவது மேலும் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும், புள்ளி பெற்றும், புள்ளியும் கோடும் உடன் பெற்றும் உயிர்த்த லாம். கி, கீ முதலியன மேல் விலங்கு பெற்றன. கு, கூ முதலியன கீழ் விலங்கு பெற்றன. கா, ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத் தார் காலாக எழுதினார். மகரம் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினார். கொ, கோ, ஙொ, ஙோ, முதலியன புள்ளியும் கோடும் உடன் பெற்றன" என நச்சரும் உரைத் துள்ளார். *

## பிற்கால மாற்றம்

மேலும் பழங்காலத்துக் கணக்கெழுதும் பெரியோர் 'ஈ' என்பதனை 'இ'யில் மேலே சுழித்து எழுதியதையும் 'சுக்கு' என்பதனை 'க்'கையும் கு'வையும் இணைத்தெழுதிய வரி வடிவத்தையும் கண்டுள்ளோம். இன்னும் இதுபோல் சில பல மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுக் கைவிடப் பட்டன.

---

* தொல், எழுத்து. கஎ, சூ

மாற்றங்கள் பெரும்பாலும் எளிமை கருதியும் வசதி கருதியுமே ஏற்படுகிறது என்பது அறிந்த ஒன்று. முயற்சிச் சுருக்கத்தால் விளையும் விபரீதங்களைப்பற்றி இங்குப் பேச்சில்லை.

## ஓசையும் பொருளும்

பெரும்பாலும் உலகத்துப் பொருள்கள் யாவற்றையும் ஓசை பற்றியும் அவ்வோசையின் பொருள் பற்றியுமே அறிந்து கொள்கிறோம். உதாரணமாகக் 'கல்' என்று சொல்லும்போது 'க' என்னும் எழுத்தும் 'ல்' என்னும் எழுத்தும் நம் கண்முன் தோன்றி, ஓகோ 'கல்' போலும் என்று அறிவது இல்லை. 'கல்' என்ற ஒலி கேட்டவுடனேயே அச் சொல்லின் வரிவடிவம் நம் கண்ணுக்குப் புலனாகாமல் அச் சொல்லின் ஒலி வடிவமே நமக்கு அப்பொருளை இன்ன பொருள் என்று உணர்த்துவதால் வரிவடிவிலும் ஒலி வடிவே மிகச் சிறந்தது என்பது புலப்படும். சிறு குழந்தையும் ஓசைகளைக் கேட்டே பொருள்களை அறிகிறதேயன்றி வரிவடிவை மனத்துட்கொண்டு அதன் பின் அப்பொருளை இன்னது என்று அறிவதில்லை. ஆகவே ஒலி வடிவச் சிறப்பும் வரிவடிவச் சிறப்பின்மையும் ஓரளவு புலப்படும். இதனை இலக்கண உரையாசிரியர்களும் நன்கு விளக்கிப் போந்துள்ளனர்.

ஆகவே, வரிவடிவம் மாறி அதன் ஒலி வடிவம் மாறவில்லையென்றால் அதன் பொருளிலும் மாற்றம் இல்லை என்பது உணர்ந்து கொள்ள வேண்டிய ஒன்று.

அதேபோன்று சமீப காலத்தில் சொல்லப்படுகின்ற 'விடுதலெ' என்பதனை 'விடுதலை' என்று எழுதும் சீர்திருத்தமும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. அதனால் தட்டெழுத்துப் பொறி, அச்சு இயந்திரம் போன்றவைகளில் 'முயற்சிச் சுருக்கம்' இலாபமாக அமைவதைக் காணலாம். இலாப நோக்கத்தோடு ஏதேதோ செய்கின்ற மக்கள்' மொழியில் ஏன் எழுத்துச் சுருக்கத்தை விரும்பக்கூடாது?

## விடுதலை — விடுதலய்

'விடுதலெ' என்பதை 'விடுதலை' என்று எழுதுவதால் தட்டெழுத்துப் பொறியில் ஒரு தட்டுக்கோல் மிச்சப்படுகிறது. அது 'லெ' என்பதில் உள்ள மேல் வளைவுக்காக இருக்கும் கோல் என்பதை அறிவோம்.

'விடுதலை' என்றெழுதாமல் மேலும் ஒரு மாற்றத்தோடு எழுதலாம் என்று இங்குப் புதிதாக ஒரு கருத்துக் கூறினால் தமிழுலகம் அதைச் சிந்திக்க வேண்டும் என்று வேண்டுகின்றேன்.

அது 'விடுதலய்' என்பதேயாகும். எனவே எந்த 'ஐகார' இறுதி பெறுகின்ற சொல்லாக இருந்தாலும் யகர மெய் இட்டே தாராளமாக வழங்கின் அதனால் அச்சொல்லின் ஒலி வடிவோ அதிலிருந்து பெறுகின்ற பொருள் முறையோ சிறிதும் மாறப்போவதில்லை. உதாரணமாக 'கலை' என்பதை 'கலய்' என்றும், 'சிலை' என்பதைச் 'சிலய்' என்றும் எழுதுவதால் என்ன பொருள் வேறுபட்டுப் போகிறது? கலையும், சிலையும், முன்போலவே இருக்கிறது. வரிவடிவ மாற்றம் புதுமையாக இருப்பதால் பார்ப்பதற்கு மட்டும் வெறுப்பாகத் தோன்றலாம். ஆனால் ஒலி வடிவில் 'சிலய்' சிலையாகவே ஒலிக்கிறது.

## உயிர்க்குறி (ை) தேவையா?

மேலும் (ை) என்ற துணை எழுத்து தமிழ் மொழிக்கு வேண்டாத ஒரு துணை எழுத்து என்றே கூறவேண்டும். (ை) இத் துணையெழுத்துக்குத் தனித்த ஒரு ஓசை கிடையாது. ஆனால் இது எந்த உயிர் மெய்யெழுத்தோடு சேர்ந்தாலும் ஐகார ஓசையை நல்குவதைக் காணலாம். உதாரணமாகக் கை, பை, தை, வை என்பவற்றில் அவையுண்டு.

(ை) இத்துணையெழுத்தின் தன்மையை வேறு ஒரு எழுத்து ஏற்கனவே உணர்த்தி நிற்குமானால் இவ்வெழுத்தை எடுத்துவிடுவதில் தவறு என்ன? தமிழ் மொழியில் யகர மெய் (ய்) இவ்வோசையை நல்குகிறது.

எனவே அவ்யகர மெய்யே எல்லா இடங்களிலும் பயன் படுத்தி கய் (கை), பய் (பை), தய் (தை), வய் (வை) என்று எழுதுவதனால் தவறில்லை, ஓசையும் பொருளும்கூட மாறுபடுவதில்லை.

## இரண்டில் ஒன்று

யகர மெய்யையே நீக்கிவிட்டால் அது பெரும் தவறாகப் போய்விடும். 'கை' என்று எழுதுவது போன்றே 'ஸெ' (செய்) என்று (ஐ) இத்துணையெழுத்தை ஏன் தமிழ் உலகம் முன்னால் எழுதாது யகர மெய்யின் துணையைப் பின்னால் நாடவேண்டும்? சிறிது சிந்திக்க வேண்டுகின் றேன்.

எனவே செய், பொய், மெய் என்பனவற்றிற்கு (ஐ) இத் துணை எழுத்தின் துணையை முன்னால் நாடுவதில்லை. பதிலாக யகர மெய்யே போடப்படுகிறது. அப்படியானால் பை, கை, தை என்னும் இடங்களிலும் அத்துணையை நீக்கி கய், பய், தய் என்று எழுதுவதே சாலச் சிறந்தது.

'க' என்ற எழுத்தும் உயிர் மெய். 'நெ' என்ற எழுத்தும் உயிர் மெய். இரண்டும் ஐகார ஓசையை உடைய சொல்லாக மாறும்போது 'க'வானது முன்னால் (ஐ) இத்துணையைப் பெற்றுக் 'கை' என்றும், 'நெ' வானது முன்னால் (ஐ) இத் துணையைப் பெற்று (ஸெ) நெய் என்றும் ஆவது எவ் வகையாலும் பொருந்தாது.

## முடிவு

எனவே 'நெய்' என்பது போலவே 'கய்' முதலாகிய சொற்களும் பின்னால் அமைவதே சாலச் சிறந்ததாகும்.

இக்கட்டுரையின் பயனாய்க் கீழ்க்கண்ட வரிவடிவங் களைத் தமிழ் மொழியில் குறைக்கலாம்.

1. ......'ூ' (லூ) என்பதன் மேல் வளைவு.

2......'ஐ' (கை) என்பதன் முன் துணை.

புலவர்
# முத்து எத்திராசன்

உலகம் 'இராக்கெட்' வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழர்களாகிய நாம்தான் எதிலும் முன்னேறுவதற்கு வீறு கொள்ளாமல் தயங்கிக் கொண்டிருக்கின்றோம்?

## அரிய மாற்றம்

தமிழ் எழுத்துகள் கால ஓட்டத்தால் மாறுதல் அடைந்ததை நாம் அறிவோம்.

குழப்பம் தரும் எழுத்தை நமது வசதிக்கேற்ப மாற்றி அமைப்பதில் என்ன தவறு? அதனால் மொழி ஒன்றும் கெட்டுவிடாதே! துருக்கி நாட்டுத் தலைவர் கமால் அத்தாதுர்க் ஒரேயடியாக ரோமன் எழுத்து வடிவத்தைக் கையாளச் சட்டம் செய்தார். நம் அரசு அப்படியா செய்திருக்கிறது? எளிய முறையைத்தானே தந்திருக்கிறது!

## குதிப்பானேன்?

தொல்காப்பியர் சிந்தனைக்கு மாறுபட்டவர்களாகவா எழுத்துச் சீர்திருத்தம் பெற முயல்வோர் இருக்கின்றனர்? இல்லையே!

''அகர இகரம் ஐகாரம் ஆகும்'' தொல் — 54

''அகர உகரம் ஔகாரம் ஆகும்'' தொல்—55 என்று 'ஐ', 'ஔ' என்ற வரிவடிவங்களுக்கு விளக்கந் தரவேண்டிய காரணமென்ன? அய் (அஇ) என்றும், அவ் (அஉ) என்றும் எழுதலாம் என்ற எண்ணத்தைப் பெறவேண்டியன்றோ செய்துள்ளார் தொல்காப்பியர்! அப்படியிருக்கையில் மாற்றம் என்பது இன்று எழுந்தது அல்லவே!

'ஐ', 'ஔ' என்ற எழுத்துகளை 'அய்', அவ்' என்று எழுத வேண்டும் என்பதற்கே இப்படிக் குதித்தெழுகின்ற ஒரு சிலர் மேலும் தேவைப்படுகிற பெருமாற்றத்தை எப்படி ஏற்பரோ!

## எளிமையை நாடுவோம்

கால ஓட்டத்தில் நாம் விரைந்து செல்ல வேண்டு மானால் நம் முன்னேற்றத்திற்கு எதுவும் தடையாய் இருக்கக் கூடாது. ஆகவே, நம்மொழி பிறமொழிபோல்— அதுவும் ஆங்கில மொழி போல் அனைத்துலகும் பரவ வேண்டுமானால் அதனை எளிதான மொழியாக — பிறர் எளிதில் கற்கும்படியாக நாம் செய்ய வேண்டுமெனில், எழுத்துச் சீர்திருத்தம் கட்டாயம் தேவைதான்! நம் குழந்தைகள், வேற்று நாட்டவர்—ஏன், நம் மொழியைக கற்கின்ற எவரும் எளிதில் கற்பதற்கு வழி செய்ய வேண்டும். மேலும், தட்டச்சு, சுருக்கெழுத்து போன்ற சாதனங்களிலும் நம்மொழி எளிதாக்கப்படல் வேண்டும். இல்லையெனில் எளியதை நாடித்தான் மக்கள் செல்வர். அப்பொழுது பண்டைப் பெருமைகளைப் பேசி வருகின்ற நாம், நமது மொழியை இழந்தவர்களாக ஆவோம்!

அப்போது வேற்று மொழி வெகு எளிதில் வருங் காலத் தமிழ் உலகை ஆட்கொள்ளும். அப்போது நாம் காணும் எதிர்காலத் தமிழகம் எப்படி இருக்கும்?

## ஏற்றிடுவோம் சீர்திருத்தம்

எங்கெல்லாம் இருக்க வேண்டிய — எப்படியெல்லாம் வளர வேண்டிய — நடைமுறைப் படுத்த வேண்டிய நம் மொழி, இன்று தத்தளித்துக் கொண்டிருப்பதைக் காண் கின்றோம்! அதனைக் காண்கின்ற ஒவ்வொருவனும்—தமிழ் உணர்வுப் படைத்தவனும் கலங்குகின்றானே! அந்தக் கலக்கம் நீங்க — எதிர் காலம் ஒளிமயமாய் இருக்க மொழிச் சீர்திருத்தத்தை ஏற்றிடுவோம்!

## கி. வா. ஜகந்நாதன்

சமீபத்தில் தமிழக அரசு எழுத்துச் சீர்திருத் ம் பற்றிய ஆணை ஒன்றைப் பிறப்பித்திருக்கிறது. பெரி ர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி, இந்தச் திருத்தத்தை நடைமுறைக்கு உடனே கொண்டுவர வே ண்டு மென்று அரசின் கீழ்ப் பணியாற்றும் எல்லாத் துறைகளுக் கும் உத்தரவிட்டிருக்கிறது.

அந்தச் சீர்திருத்தம் வருமாறு: ஐ, ஔ என்ற இரண்டு எழுத்துக்களுக்குப் பதிலாக அய், அவ் என்பவற்றை எழுதுவது. ணா, றா, னா என்பவற்றை ணா, றா, னா என்று எழுதுவது; ணை, லை, ளை, னை என்பவற்றை ணை, லை, ளை, னை என்று எழுதுவது.

இந்தச் சீர்திருத்தத்தால் அச்சுக் கோக்கும் வேலையும் தட்டெழுத்துப் பணியும் பயன் பெறும் என்பது அரசின் கருத்து.

இந்தச் சீர்திருத்தத்தை இரண்டு வகையாகப் பிரிக்க லாம். ஒன்று எழுத்துக் குறைப்பு; மற்றொன்று எழுத்து வடிவக் குறைப்பு.

முதலில் எழுத்து வடிவக் குறைப்பைப் பற்றிப் பார்த்து விட்டுப் பிறகு எழுத்துக் குறைப்பைப்பற்றி ஆராயலாம்.

உயிர்மெய் எழுத்துக்கள் ஒரு சீராக வடிவம் பெற்றிருந்தால் அச்சுக் கோப்பவர்களுக்கும் தட்டெழுத் தாளர்களுக்கும் பல வடிவங்களை அடுக்கவும் அடிக்கவும் அவசியம் இல்லாமல் போகும்; இதனால் எழுத்தச்சுகள் உள்ள அறைகள் குறையும்; தட்டெழுத்துப் பொறியிலுள்ள எழுத்துப் பலகை (Key Board) சுருக்கம் அடையும்; இவற்றால் பின்னும் விரைவாக அச்சுக் கோக்கும் தொழிலும் தட்டெழுத்துப் பணியும் நடைபெற வழிபிறக் கும் என்ற எண்ணத்தில்தான் பெரியார் இந்த எழுத்து வடிவச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார்.

உயிர் மெய்யெழுத்துக்களில் ஆகாரத்தைக் காட்டப் பெரும்பாலும் ா என்னும் காலை எழுதிவருகிறோம். ஆனால் ணா, றா, னா, என்ற மூன்று எழுத்துக்களும் கால் போடாமல் தமக்கென்று தனிவடிவை உடையனவாக உள்ளன. அவற்றுக்கு அச்செழுத்துப் பெட்டியில் மூன்று அறைகளும், தட்டெழுத்துப் பொறியில் மூன்று தனியிடங்களும் இருக்கின்றன. அந்த மூன்று எழுத்து களையும் மற்ற உயிர் மெய்யெழுத்துக்களைப் போலவே கால் வாங்கி எழுதினால் தனியாக உள்ள அந்த மூன்று அதிகப்படியான அறைகளும், தட்டும் இடங்களும் குறையும்.

அவ்வாறே உயிர்மெய்களில் ஐ காரத்தைக் குறிப்பிடப் பதினான்கு எழுத்துக்களுக்கு ை என்ற குறியீட்டைப் பயன் படுத்துகிறோம். ஆனால் ணை, லை, ளை, னை என்று நான்கு எழுத்துக்களின் வடிவங்கள் தனியே இருக்கின்றன. இவற்றுக்கு இரண்டு சுழிகளையுடைய ை என்ற குறியீட் டைப் போடுவதில்லை. அவற்றுக்கும் மற்ற உயிர் மெய் யெழுத்துக்களின் ஐ காரங்களைப் போல இரண்டு சுழியுள்ள குறியீட்டைப் போட்டால் நான்கு எழுத்து வடிங்கள் குறையும். ஆகவே, இந்த எழுத்துச் சீர்திருத்தத் தால் ஏழு எழுத்து வடிவங்கள் குறைந்து, அச்சுப் பெட்டி யும், தட்டெழுத்துப் பலகையும் சற்றே குறைந்து வேகமாகப் பணியாற்ற உதவும்.

இத்தகைய சீர்திருத்தத்தை உடனே எல்லாத் துறை களிலும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற

ஆணை பிறப்பித்ததனால், பலருக்குச் சிரமம் உண்டாக லாம். பல காலமாகப் பழகிவிட்டமையால் அந்த வடிவங்களை இழக்க மனம் இல்லாமல் இருக்கலாம். தமிழகமேயன்றித் தமிழ் வழங்கும் இலங்கை, பர்மா, மலேசியா முதலிய இடங்களிலுள்ள தமிழர்கள் சற்றே தடுமாறவும் கூடும். ஆதலால் மெல்ல மெல்ல இந்தச் சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதே நலமென்று தோன்றுகிறது. சில துறைகளில் இந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டுவரச் செய்து பிறகு விரிவாக்க லாம். இது உணர்ச்சியோடு தொடர்புடைய காரியமாத லால் ஒரேயடியாக மாற்றத்தைப் புகுத்தாமல் மெல்ல மெல்ல நடைமுறைக்குக் கொண்டு வருவதுதான் நல்லது.

பெரியார் கொண்டுவந்த திருத்தம் என்ற ஒன்றையே நினைத்து இந்த மாற்றத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மாற்றத்தால் அச்சிலோ தட்டெழுத்திலோ புதிய வடிவம் எதையும் சேர்க்கப் போவதில்லை. இருக்கும் வடிவங்களையே பயன்படுத்துவார்கள்.

எழுத்து வடிவத்தைக் குறைத்து ஒரு சீரான குறியீடுகளை அமைக்க வேண்டுமென்ற முயற்சி பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

உயிர் மெய்யில் கி, ஙி முதலிய இகரம் இணைந்த எழுத்துக்களுக்குத் தனியே பதினெட்டு அச்சுக்கள் தேவைப்படுகின்றன; அப்படியே உயிர்மெய் ஈகாரங்களுக் கும் பதினெட்டுத் தனித்தனி அச்சுகள் வேண்டியிருக் கின்றன. அந்த இரண்டு குறியீடுகளையும் உயிர் மெய் யோடு ஒட்டாமல் காலைப் போலவும் இரு சுழிகளைப் போலவும் தனியே அமைத்தால் இரண்டே குறியீடுகள் இருந்தால் போதும். 34 வடிவங்கள் குறைந்துவிடும்.

இரண்டு எழுத்துக்களின் குறியீடுகளாகிய விசிறி களைத் தனியாக்கி அச்சு வார்க்கச் செய்து சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் பயன்படுத்தினார், சுதேசமித்திரன் ஆசிரியர் அமரர் ஸி. ஆர். ஸ்ரீநிவாசன். சில ஆண்டுகள் அந்த முறையை அவர் நடைமுறையில் பயன்படுத்தி னாலும் படிப்பவர்களுக்கு அதில் நாட்டம் எழவில்லை

அதுமட்டும் அன்று; மற்றவர்களும் அந்த முறையைப் பின்பற்றவில்லை.

அச்சுக்கலையும், தட்டெழுத்துத் துறையும் அறிந்த வல்லவர்களுக்கு அதனால் உண்டாகும் நலம் தெரியும். அவர் பெரியார் அல்லவே; ஆகவே அவர் கொண்டு வந்த திருத்தம் நாளடைவில், ஆதரிப்பார் இல்லாமல் மறைந்து விட்டது.

உயிர் மெய் உ கரத்தில் ஒரே சீரான குறியீடுகள் இல்லை. அவை மூன்று வேறு வடிவங்களைப் பெறு கின்றன.

கு, டு, மு, ரு, மு, ளு என்னும் ஆறும் ஒருவகை; ஙு, சு, பு, யு, வு, என்னும் ஐந்தும் ஒரு வகை. ஞு, ணு, து, நு, லு, று, னு என்னும் ஏழும் ஒருவகை.

இவை வெவ்வேருக இருப்பதோடு பிரிக்கமுடியாமல் ஒட்டியுள்ள குறியீடுகளை உடையவையாக இருக்கின்றன. இந்தக் குறியீடுகளிலும் ஒரு சீராகவும் ஒட்டாமல் தனியே அமைவதாகவும் ஒன்று இருந்தால் பதினேழு வடிவங்கள் குறையும்.

இனிமேல் புதிய குறியீட்டை உண்டாக்காமல் உயிர் மெய் ஆ காரத்துக்கும், உயிர்மெய் ஐ காரத்துக்கும் முன்பே இருக்கும் ா, ை என்ற குறியீடுகளைப் போடுவது போல இருந்தால் படிப்பவர்களுக்கும் சிரமம் இராது; புதிய எழுத்தச்சை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. உயிர் மெய் ஊ காரமும் இத்தகையதே.

அப்படி ஒரு குறியீட்டை நாம் நடைமுறையில் ஆண்டு வருகிறோம். ஆனால் தமிழ் எழுத்துக்களில் அல்ல. தமிழில் இணைந்துபோன வடமொழி எழுத்துக்களுக்கு அந்தக் குறியீடுகளைப் பயன்படுத்துகிறோம்.

விஷ்ு, ஹுமாயூன், ஜும்மா மசூதி, பிக்ஷு என்று வருவனவற்றில் உ கரத்தைக் குறிக்க ு என்ற அடையாளத்தை எழுதுகிறோம்.

அப்படியே ஜூன், ஜூலை, முஹூர்த்தம் என்பவற்றைப்போன்ற வார்த்தைகளில் ஊகாரத்தைக் குறிக்க ூ என்ற அடையாளத்தைப் போடுகிறோம்.

இவை உயிர் மெய்யோடு ஒட்டாமல் தனியே உள்ள குறியீடுகள். கிரந்த லிபியில் இந்தக் குறியீடுகளைப் பயன்படுத்துகிறார்கள்.

தமிழ் உயிர்மெய் உகரத்துக்கும் ஊகாரத்துக்கும் இந்தக் குறியீடுகளை அமைத்து கு, ஙு, சு, ஞு என்று வழக்கத்தில் வந்துவிட்டால் அச்செழுத்துப் பெட்டியிலும், தட்டச்சுப் பலகையிலும் பின்னும் சிக்கனம் ஏற்படும். ஆனால் இவை வடமொழிக் குறியீடு என்ற எண்ணமும் அது காரணமாக இவற்றில் வெறுப்பும் தோன்றினால் அவை சீர்திருத்த முயற்சிக்கு இடம் கொடுக்காது. வழக்கம் இல்லாமல் இருப்பதைப் புதியதாகக் கொண்டு வருவதில் தான் அதிகச் சிரமம் இருக்கும்.

கல்வெட்டுக்களிலும், இன்றைய அச்சிலும் இந்த இரண்டு குறியீடுகளும் வழக்கத்தில் வந்துவிட்டன. அவற்றை மற்ற எழுத்துக்களுக்கும் இணைத்தால் எழுத்து வடிவச் சிக்கனம் அமையும்.

உணர்ச்சி காரணமாக இந்தக் குறியீட்டை எதிர்ப்பவர்கள் இருப்பார்கள். இதேபோல மற்ற இரண்டு எழுத்து மாற்றங்களையும் உணர்ச்சி காரணமாக ஏற்றுக் கொள்ளாதவர்களும் இருக்கத்தான் இருப்பார்கள். ஒரு வகையினர் உணர்ச்சியைப் போற்றி மற்றொருவகையான உணர்ச்சியைப் புறக்கணிப்பது நேர்மை ஆகாது.

இனி, உயிரெழுத்துக்களைக் குறைப்பது பற்றிச் சிறிது கவனிக்கலாம். ஐ, ஔ என்ற இரண்டு உயிரையும் எடுத்துவிட வேண்டும் என்பது தமிழக அரசின் ஆணை முன்னே சொன்னவை எழுத்து வடிவச் சீர்திருத்தம். இதுவோ எழுத்தையே குறைப்பது. முன்னே சொன்னது அச்சுத் தொழிலுக்கும் தட்டச்சுப் பொறிக்கும் தொடர்பு

டைய சீர்திருத்தம். இதுவோ இலக்கண வரம்புக்குள் புகும் சீர்திருத்தம்; நெடுங்காலமாக வந்த முறையை மாற்றுவது. 'எழுத்து வடிவமும் நெடுங்காலமாக வந்த தல்லவா?' என்று கேட்கலாம், அப்படி இல்லை. கல்வெட்டுக்களைப் பார்த்தால் எழுத்துக்கள் எப்படியெல் லாம் வடிவம் மாறி வந்திருக்கின்றன என்று தெரிந்து கொள்ளலாம். ஐ, ஔ என்ற உயிரை எடுப்பது அத்தகையது அன்று.

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு என்பது மிக மிகப் பழங்காலமுதல் வந்த வழக்கு. அதை மாற்ற வேண்டியது இன்றியமையாதது அல்ல. தமிழ்ப் புலவர்களைக் கூட்டி அந்தத் திருத்தத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்திருக்க வேண்டும்.

அந்த இரண்டு எழுத்துக்களைக் குறைப்பதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களையும் கவனிக்கத்தான் வேண்டும்.

டாக்டர்

## வா. செ. குழந்தைசாமி

### பொது

தமிழ் நமது ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும், இந்த அறிவு யுகத்தில் (Knowledge era) நமது வாழ்விற்கும், வளத்திற்கும், நாளைய வளர்ச்சிக்கும் தேவையான அறிவுக் கருவூலங்களைத் தன்னுள் கொண்ட களஞ்சியமாகவும் விளங்க வேண்டுமென்பதே நமது நீங்கா ஆசை; நமது நெடுநாள் குறிக்கோள்.

ஆசைகளின் அடிப்படையில், முறையான முயற்சிகளும், திட்டமிட்ட செயல்களும் உருப்பெற்றால்தான், விளைவு உறுதிப்படும்.

நமக்கின்றுள்ள தேவையின் விரிவும், செறிவும் தெரிந்து, தெளிந்து அவற்றை நிறைவேற்றும் பணியில் நாம் தொண்டு மனப்பான்மையுடனும், தொலை நோக்கோடும் ஈடுபட வேண்டும்.

### வளர்ச்சி - மாற்றம்

**வளர்ச்சி என்பது மாற்றம், மாற்றமில்லையேல் வளர்ச்சி இல்லை.** இது இயற்கை விதி. சமுதாய வாழ்வின் எல்லாத் துறைகட்கும் பொருந்திய ஒன்று. இது மொழிக்கும் பொருந்தும். பழமையும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த தமிழ், சொல் வளமும், இலக்கிய வளமும் நிறைந்தது. எனினும்,

இன்றைய பல்வகை அறிவுத் துறைகள், பெரும்பாலும் இனிமேல்தான் முறையாகத் தமிழில் வளர வேண்டும்.

தமிழ் இன்று ஒரு பண்பாட்டு மொழி; இலக்கிய மொழி; இந்த இரண்டு கூறுபாடுகளிலும் இணையில்லாதது. எனினும், இருபதாம் நூற்றாண்டில் நமது சமுதாயத்தின் தேவைகளைத் தீர்க்கும் கல்வி மொழியாக, அது இனிமேல்தான் உருவாக வேண்டும். அதை நாம் உருவாக்கவேண்டும்.

**இந்த வளர்ச்சிப் பயணம் நீண்டது; பல படிகளைக் கொண்டது. அவற்றில் முக்கியமான ஒன்று எழுத்துச் சீரமைப்பு. இதன் தேவை அரை நூற்றாண்டுக் காலமாகவே உணரப்பட்டு, அவ்வப்பொழுது வற்புறுத்தப்பட்டும் வந்திருக்கிறது; ஆனால் செயல் தேங்கி நிற்கிறது. இதுவரை நாம் கணிசமாக இத்துறையில் எதையும் செய்து விடவில்லை.**

### கவனிக்க வேண்டியது

எழுத்துச் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கம் **தமிழ் நெடுங் கணக்கைக்** குறைப்பதல்ல.

உயிர்மெய் ஆகாரத்தில் ஒன்றாகிய 'ணா' என்ற எழுத்து 'ணா' என்று எழுதப்படும் பொழுது, அதன் வடிவம் மாற்றப் படுகிறதே தவிர, எழுத்து விலக்கப்படுவதில்லை.

'ணா' என்ற உயிர்மெய் ஆகாரத்தை 'ணா' என்று எழுது வதன் மூலம், தமிழ் நெடுங் கணக்கில் ஒரு எழுத்துக் குறைவதில்லை. ஆனால், தட்டச்சில் ஒரு எழுத்துக்கு வேண்டிய இடம் குறைகிறது. அச்சு அலுவலகத்தில் ஒரு எழுத்துக்கு வேண்டிய குழி குறைகிறது. கற்போர்க்கு ஒரு குறியீட்டை மனப்பாடம் செய்ய வேண்டிய சுமை குறைகிறது. ஆனால் தமிழ் நெடுங் கணக்கின் எண்ணிக்கை அப்படியே தான் இருக்கிறது. எனவே எழுத்துக் குறைப்பு என்ற வழக்கு என்ன பொருளில் பயன்படுத்தப்படுகிறது என்பதை முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதுவரை பலராலும் பரிந்துரைக்கப்பட்ட முக்கியமான சீர்திருத்தங்களில், ஐகாரம், ஔகாரம் பற்றிய திருத்தங்கள்

மட்டும் நெடுங் கணக்கைப் பாதிக்கக் கூடியவை. மற்ற எதுவும் நெடுங் கணக்கைப் பாதிப்பதில்லை.

இப்பொழுது நாம் கூறுவதெல்லாம், தமிழ் நெடுங் கணக்கிலுள்ள 247 ஒலியெழுத்துக்களை வரிவடிவத்தில் எழுத, 131 குறியீடுகள் தேவையில்லை. மிகக் குறைந்த குறியீடுகளை வைத்துக் கொண்டே, 247 ஒலியெழுத்துக் களையும் வரிவடிவத்தில் எழுதலாம். இதன் மூலம், கற்பது எளிதாகும். அச்சுக் கோப்பதும், தட்டச்சுச் செய்வதும், தனியச்சு, வரியச்சு, தந்தி போன்ற சாதனங் களைப் பயன்படுத்துவதும் எளிதாகும். இதுவே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தின் அடிப்படை. இந்தக் குறிக் கோளை முன் வைத்தே இக்கருத்துரையில் வரும் வாதங் களையும், முடிவுகளையும் அணுக வேண்டும்.

## தமிழ் வரிவடிவம்

ஒரு மொழிக்கு ஒலிதான் அடிப்படை. வரிவடிவம் அந்த ஒலிகட்கு நாம் கொடுக்கும் குறியீடு. இந்தக் குறி யீடுகள் எந்த மொழிக்கும் நிரந்தரமாக இருந்ததில்லை. அவை காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டே வந்திருக் கின்றன. வள்ளுவர் எழுதிய வரிவடிவத்தில் கம்பர் எழுத வில்லை. 19 ஆம் நூற்றாண்டுவரை ஒவ்வொரு நூற்றாண் டிற்கும் இடையில் வரிவடிவத்தில் சில மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதனால் மொழிக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை. மொழியின் அடிப்படைகளில் எந்த மாற்ற மும் நிகழவில்லை; நிகழ ஏதுவில்லை.

வளர்ச்சிக்கு இன்றியமையாத மாற்றங்கள் வரிவடிவத் தில் ஏற்படுவது தேவையான ஒன்று, தவிர்க்க முடியாத ஒன்று, தவிர்க்கக் கூடாததும்கூட.

கி. மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 19-ஆம் நூற்றாண்டு வரை தமிழ் வரிவடிவத்தில் உயிர் எழுத்துகளி லும், மெய்யெழுத்துகளிலும் ஏற்பட்ட மாறுதல்கள் கல் வெட்டுகளின் ஆய்வினடிப்படையில் படம் 1*, படம் 2-இல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

---

* இந்நூல் பக்கம் 102, 103 பார்க்க **கல்சொல்லும் கதைகள்** **வெ. சுந்தரம், சேகர் பதிப்பகம்.**

படம்—2


நூற்றண்டு
க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்
கி.மு. 3
கி.பி. 2
கி.பி. 3
கி.பி. 4
கி.பி. 5
கி.பி. 6
கி.பி. 7
கி.பி. 8
கி.பி. 9


கி.பி. 10
கி.பி. 11
கி.பி. 12
கி.பி. 13
கி.பி. 14
கி.பி. 15
கி.பி. 16
கி.பி. 17
கி.பி. 18
கி.பி. 19

கல்லெழுத்துகளில் ஏற்பட்டது போன்ற மாற்றங்கள் தொடர்ந்து ஏட்டெழுத்துகளிலும் ஏற்பட்டிருக்கின்றன.

இன்று நாம் பயன்படுத்தும் வரிவடிவம், வீரமாமுனிவர் அவர்கள் செய்த சில திருத்தங்களைக் கொண்டது.

## செய்யத் தக்கது

இருபதாம் நூற்றாண்டில், அறிவியல்,தொழில் நுட்பத் துறைகளில் மகத்தான புரட்சிகள் நிகழ்ந்தன. இவற்றின் விளைவுகளாக, உலக மொழிகளில் வரிவடிவம் சீரமைக்கப் பெற்ற மொழிகள் பல. மாற்றங்கள் தேவையென்பதற்கு வெளிப்படையாகத் தெரியும் காரணங்கள் பல, சற்று ஆழ மான அடிப்படைகளையுடைய காரணங்கள் சில. இவை யனைத்தும், ஆயப்பட வேண்டியன; மக்களால் அறியப்பட வேண்டியன.

**"செய்தக்க வல்ல செயக்கெடும்; செய்தக்க**
**செய்யாமை யானுங் கெடும்"**

என்ற குறள், மொழித் துறைக்கும் பொருந்தும். தமிழ் "வரிவடிவம்" நூற்றாண்டுதோறும் மாறியே வந்திருக் கிறது. இனி மாறாது என்ற நிலை ஏற்பட்டு விட்ட தாக யாரும் அறுதியிட்டு விடவில்லை. இதுவரை ஏற் பட்ட மாற்றங்களால் மொழிக்குத் தீமை விளையவில்லை.

ஒலியை அடிப்படையாகக் கொண்டு, அதில் மாற்ற மின்றி, அதற்காகப் பயன்படுத்தும் குறியீடுகளில் காலத் திற்கேற்பச் செய்யும் மாறுதல்கள் மிகச் சாதாரண நிகழ்ச்சி யாகக் கருதப்படவேண்டுபவை. அதையே ஒரு சமுதாயம் மலையாகக் கருதுமானால் அதற்கு வயதாகிவிட்டது மட்டு மல்ல, வயோதிகமும் வந்து விட்டது என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

எனவே, 30 குறியீடுகளின் துணைகொண்டு மட்டுமே எழுதப்படும் எளிமைகொண்ட ஒரு மொழிக்கு 131 குறியீடு களைப் பயன்படுத்தி, கற்பதைச் சுமையாக்கி, பெரும்

பான்மை மக்களிடையே தற்குறித்தனத்தைப் பாது காப்பதை எந்த அடிப்படையில் நாம் ஆதரிக்க முடியும்?

**அரைநூற்றாண்டுச் சிந்தனை**

பல்வகையிலும் தகுந்த காரணங்கள் இருந்ததால்தான் கடந்த 50 ஆண்டுகளாகவே இந்த மாற்றம் தேவை என்பது பலராலும், பல்வேறு சூழ்நிலைகளிலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இன்று நம் முன் இருக்கும் கேள்வி, **எழுத்துச் சீர்திருத்தம் தேவையா என்பதல்ல; அதை எப்படி செய்வது என்பதுதான்**. எனவே, தமிழில் எழுத்துச் சீர் திருத்தம் தேவை என்பதை அடிப்படையாக வைத்து, மேலே என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் ஆராய்வது பொருத்தமாகும்.

எழுத்துச் சீர்திருத்தத்திற்கு இரண்டு வழிகளைப்பற்றி எண்ணலாம். அவையாவன:

**1.** இப்பொழுதிருக்கிற வரிவடிவத்தில் சில தேவை யான மாற்றங்களைச் செய்வது.

**2.** புது வரிவடிவம் ஒன்றை, மாற்று வரிவடிவமாக ஏற்றுக் கொள்வது.

பொதுவாக, தமிழ் வரிவடிவத்தில் மூன்று சிக்கல்கள் குறிப்பிடப்பட வேண்டியன. அவை பின்வருமாறு:

**1.** வரிவடிவங்களின் எண்ணிக்கை அதிகம் (ஆங்கிலத் திற்குப் பயன்படுத்தப்படும் ரோமன் வரிவடிவத்தில் இத்தனை எழுத்துகள் இல்லை).

**2.**, வரிவடிவத்தில் சீர்மையும் (uniformity) பொதுமை யும் குறைவு. (சான்று: உயிர்மெய் ஆகாரத்தில் கா, ஞு, ஆகிய வழக்கும்; உயிர்மெய் ஐகாரத்தில் கை, ணை ஆகிய வழக்கும்; உயிர்மெய் ஆகாரமான கா, ஙா,...இவற்றில் கால் எழுத்துக்கு வலப்பக்கத்திலும், உயிர்மெய் எகரம், ஏகாரத்தின் கொம்புகள் கெ, ஙெ,... கே, ஙே...போல எழுத் துக்கு இடப்பக்கத்திலும், ஒகரம் ஓகாரத்தில் அவை கொ,

ஙொ, கோ, ஙோ...போல இருபக்கங்களிலும் வருகின்ற வழக்கும், உயிர்மெய் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகியவற்றில் எந்தப் பொதுவிதியும் இன்மையும் ஆகும்.)

3. வரிவடிவம், சுழிகளும் கொம்புகளுமாகச் சேர்ந்து எழுதுவதற்குச் சிக்கலானது. (ரோமன் வரிவடிவம் போன்று எழுதுவதற்கு எளிதான அமைப்பு இல்லை.)

**ஆய்தம், உயிர் எழுத்துகள்**

**அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஒ ஓ ஐ ஔ ஃ**

**அ அா இ இா உ உா எ எா எா ஒ ஒா அய்° அவ்° ஃ**

**மெய், உயிர்மெய் எழுத்துகள்**

க கா கி கீ கு கூ கெ கே கொ கோ கை கௌ க்

க கா கı க⁻ க⁻̇ கெ கே கொ கோ கய° கவ° க°

...

...

ண ணா ணI ணİ ண⁻ ண⁻̇ ணெ ணே ணொ ணோ ணய°ணவ• ண⁰

மேற்கண்ட மாற்றங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தமிழ் வரிவடிவத்தின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு அமையும்:

| | |
|---|---|
| அடிப்படை உயிர் எழுத்துகள் | 5 |
| அகர உயிர்மெய் எழுத்துகள் | 18 |
| உயிர்க் குறியீடுகள் | 7 |
| மெய்க்குறி | 1 |
| ஆய்தம் | 1 |
| மொத்தம் | 32 |

தமிழில் அடிப்படை உயிரொலிகள் ஐந்தே. எனவே உயிர் எழுத்துகளை ஐந்து குற்றுயிர்களின் அடிப்படையில் முன்பு கூறியவாறு அமைப்பது பொருத்தமானதே. **இருப்பினும், உணர்வு காரணமாக, ஐகாரமும் ஔகாரமும் தனித் தனியே எழுதப்பட வேண்டும் என்று கொண்டால்கூட மொத்த வடிவெழுத்துகள் 34 ஆகும்** இந்த 34ஐ விட அதிகமான வரி வடிவத்தை இப்பொழுதிருக்கும் தமிழ் ஒலி எழுத்துகட்குப் பயன்படுத்துவதற்கு, மொழியியல்அடிப்படையிலோ, பகுத்தறிவு அடிப்படையிலோ எந்த விதமான காரணமும் இல்லை. தொடர்ந்து 131 வரிவடிவங்களை நாம் பயன்படுத்துவோமானால் அது உண்மையிலேயே கல்வியைச் சுமையாக்கும் "மக்கள் விரோத"ச் செயலாகும்; வளர்ச்சித் தடை அணுகு முறையாகும்.

மேற்கண்ட முறைப்படி ஐகாரத்தையும் ஔகாரத்தையும் தனி எழுத்துகளாகவே ஏற்று அமைக்கலாம்.

இச்சீரமைப்பின்படி மனப்பாடம் செய்ய வேண்டிய குறியீடுகள் 34. அவை பின்வருமாறு:

**அ, இ, உ, எ, ஒ, ஐ, ஃ**

**க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன.**

**ா, ி, ீ, ு, ூ, ெ, ே, ை, °.**

## முழுமையான சீரமைப்பு

மேலே கூறப்பட்ட சீரமைப்பின் மூலம் வரிவடிவச் சிக்கனத்தையும், ஓரளவு வரிவடிவத்தில் சீர்மையையும் (Uniformity) ஏற்படுத்தியிருக்கிறோம் என்றாலும், இன்னும் சற்று அதிகமான ஒருமைப் பாட்டைக் கொணர்வது இயன்றதொன்றே. அதாவது 1934-இல் பெரியார் அவர்கள் குறுகிய அளவில் கையாண்ட அடிப்படைக் கோட்பாடுகளை, தமிழ் வரிவடிவம் முழுமைக்கும் பயன்படுத்துவது, அவர் தொடங்கிய பணியின் தொடர்ச்சியாகும். ஆனால்

அதற்கேற்ற மாற்றத்திற்குத் தமிழுலகம் சமைவாயிருக்கிறதா என்பது எண்ண வேண்டிய ஒன்று. எனினும் கீழ்க்கண்ட வகையில் வரிவடிவத்தை அமைப்பது முழுமை பெற்ற சீரமைப்பாகும்.

இப்பொழுதிருக்கும் வரிவடிவத்திலுள்ள எழுத்துகளை வைத்துக் கொண்டு, தேவையான மாறுதல்கள் செய்வது என்ற முடிவுக்கு வந்த பின், அதிலும் அரைக்கிணறு தாண்டாமல், எவ்வளவு தூரம் வரிவெழுத்துகளைக் குறைக்க முடியுமோ, எவ்வளவு தூரம் பொதுமையை, சீர்மையைப் புகுத்த முடியுமோ, அந்த அளவிற்கு அதை முழுமையாகச் செய்ய நாம் சமைவாக வேண்டும் எனவே மேலும் செய்யப்படக் கூடிய மாற்றங்கள் பற்றி ஆராய்வோம்.

**பொதுவாக எந்தத் துறையிலும், சில அடிப்படை விதிகள் வரையறுக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் செய்முறை அமையுமானால், பயில்வதும், பயன்படுத்துவதும் எளிதாகும் அறிவியல் அணுகுமுறையின் அடிப்படையே இதுவாகும்.**

எனவே, 'தேவை' என்பதை ஒப்புக்கொள்வோமானால் அதைச் 'செய்து முடிப்பது'தான் செயல் திறன் மிக்க ஒரு இனத்தின் தத்துவமாக இருக்க வேண்டுமே தவிர, ஒத்திப் போடுவதும், ஒதுங்கி நிற்பதும் பாராட்டுக்குரிய பாதை ஆகாது. இருக்கின்ற வரிவடிவத்தை எந்த அளவிற்கு மாற்றமில்லாது வைத்துக் கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு வைத்துக் கொண்டு அதே சமயத்தில் முழுமையான ஒருமையையும் சீர்மையையும் தமிழ் வரிவடிவத்திற்குச் சேர்ப்பதற்கான வழிவகைகளை ஆய்வோம்.

## உயிர் எழுத்துகள்

1. அடிப்படை உயிர் வடிவம்......அ

அகரத்தை அடிப்படையாக வைத்து மற்ற உயிர் ஒலிகளை அகரத்திற்கு, குறிகளைச் சேர்ப்பதன் மூலம் உருவாக்கலாம். இக்குறிகளை உயிர்க்குறிகள் என அழைக்கலாம்.

2. உயிர்க்குறிகள்

| | | | |
|---|---|---|---|
| ஆகாரம் | ... | ா | (ஆ = அா) |
| இகரம் ஈகாரம் | ... | I, İ (இ = அI | ஈ = அİ) |
| உகரம் ஊகாரம் | ... | ¬, ¬̇ (உ = அ¬ | ஊ = அ¬̇) |
| எகரம், ஏகாரம் | ... | ρ, ρ̇ (எ = அρ | ஏ = அρ̇ ) |
| ஒகரம், ஓகாரம் | ... | 0, 0̇ (ஒ = அ0 | ஓ = அ0̇) |

3 மெய்க்குறி ... ° (க் = க°)

4 ஆய்தல் ... ஃ

5. அடிப்படை உயிர்மெய் எழுத்துகள்

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன

மேலே குறிப்பிட்ட மாற்றங்களுடன் தமிழ் வரிவடிவம் பின் கண்டவாறு அமையும்.

உயிர் எழுத்துகளும் ஆய்தமும்

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஒ | ஓ | ஐ | ஔ | ஃ |
| அ | அா | அI | அİ | அ¬ | அ¬̇ | அρ | அρ̇ | அ0 | அ0̇ | அய° | அவ° | ஃ |

மெய், உயிர்மெய் எழுத்துகள்

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கொ | கோ | கை | கௌ | க் |
| க | கா | கI | கİ | க¬ | க¬̇ | கρ | கρ̇ | க0 | க0̇ | கய° | கவ° | க° |
| ⋮ | | | | | | | | | | | | |
| ன | னா | னI | னİ | ன¬ | ன¬̇ | னρ | னρ̇ | ன0 | ன0̇ | னய° | னவ° | ன° |

மேற்கண்ட முறையைப் பின்பற்றினால் தமிழ் வரிவடிவம் 30 குறியீடுகளைக் கொண்டதாக இருக்கும். விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| அடிப்படை உயிரெழுத்து | ... | 1 |
| உயிர்க்குறிகள் | ... | 9 |
| அடிப்படை உயிர்மெய் எழுத்துகள் | ... | 18 |
| ஆய்த எழுத்து | ... | 1 |
| மெய்க்குறி | ... | 1 |
| மொத்தம் | ... | 30 |

இச் சீரமைப்பின்படி மனப்பாடம் செய்ய வேண்டிய குறியீடுகள் 30. அவை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| அ ∴ | = | 2 |
| க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன | = | 18 |
| ா I İ ¬ ¬̇ ı ı̇ 0 0̇ ° | | |

## இம்முறையின் குறிப்பிடத்தக்க கூறுபாடுகள்

உயிரெழுத்துகள் யாவும் அகரத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளன. தேவநாகரி வரிவடிவத்தில் 12 உயிர் எழுத்துகளில் 8 எழுத்துகள் அகரத்தை அடிப்படையாக வைத்து, அதற்கு மேலும் சில குறிகளைச் சேர்ப்பதன் மூலமாகவே அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இது பல இந்திய மொழிகட்கும் பொதுவான வழக்கமாகும். தமிழிலும் அ, ஆ, இ — மூன்றும் அகரத்தை அடிப்படையாக வைத்தே எழுதப்படுகின்றன.

உயிர் எழுத்து அமைப்பிலும், உயிர்மெய் எழுத்து அமைப்பிலும் ஒரு ஒற்றுமை உண்டாக்கப்பட்டிருக்கிறது. சான்று:

ஆ = அ + ா = அா
இ = அ + I = அI
க = க் + அ = க
கா = க் + ஆ = க் + அ + ா = க + ா = கா
கி = க் + இ = க் + அ + I = க + I = கI

தட்டச்சுப் பொறி மிகவும் அளவுடன் அமையும். தட்டச்சுச் செய்யும் வேகமும் வெகுவாக அதிகரிக்கும். இவையனைத்தையும்விட, தட்டச்சுச் செய்த படிகள் அழகாக அமையும். இன்று தமிழில் பிழையில்லாது தட்டச்சுச் செய்யப்பட்ட ஒரு பக்கத்தைக் காண்பது அரிது.

தமிழ், ஆங்கிலம் இரண்டிற்கும் தேவையான வரி வடிவத்தை ஒரே தட்டச்சில் அமைத்துக் கொள்வதுகூட சாத்தியமான ஒன்றாகும்.

தமிழ் அச்சு எளிமை அடையும்; அச்சுப் பெட்டியில் குழிகள் குறையும்.

வரியச்சு (Lino-type), தனியச்சு (Mono-type). மேலும் தந்தி போன்ற சாதனங்களைத் தமிழில் பயன்படுத்துவதில் பல சாதகமான சூழ்நிலைகள் உருவாகும்.

### எழுத்துச் சீரமைப்பு ஒரு மகத்தான சாதனை

இந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருக்கும் குறியீடுகள் தான் 'முடிவானவை' என்பதில்லை. இந்த 'அணுகு முறைதான்' கடைசியானது என்பதுமில்லை. ஏதாவது ஒரு முறையான பாதையை வகுத்து, ஏறத்தாழ முப்பது குறியீடுகட்குள் நமது வரிவடிவத்தைச் சுருக்க வேண்டும், சுருக்க முடியும். அதற்கு நாம் குறிப்பிட்டதைவிடச் சிறந்த பாதைகள் இருக்கலாம். இருப்பின் ஏற்கலாம்.

மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், இச்சீரமைப்பு ஒரு சாதாரண மாற்றம் போலவும், சிறு சிறு சிக்கனங் கட்குத் துணை புரியக் கூடிய வசதி போலவும் தோன்றக் கூடும். செயல்படுத்தப்படுமானால், 'எழுத்துச் சீரமைப்பு' ஒரு மகத்தான மாற்றமாக உருப்பெறும், ஒரு வரலாற்றுச் சாதனையாக வளரும்.

ஜப்பான் மட்டும் எழுத்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்த வரை ஒரு விதிவிலக்கு. ரோமன் வரிவடி வத்தைப் பயன்படுத்தும் மற்ற பல ஐரோப்பிய மொழி கட்கும், ஆங்கிலத்திற்கும் 26 எழுத்துகள். ஜெர்மன்

மொழிக்கு 29 எழுத்துகள், இரஷிய மொழிக்கு 33 எழுத்துகள். இன்று உலகில் பெரும்பான்மை மக்களால் பேசப்படும் முதல் 13 மொழிகளில் 8 மொழிகள் முப்பதுக்குப் பக்கமான வரிவடிவங்கள் மட்டுமேயுடையவை. தொல்காப்பியர் கூற்றுப்படி தமிழ் எழுத்துகளும் முப்பதே.

**உயிரையும் மெய்யையும் பயன்படுத்தி, உயிர்மெய் எழுத்துகளை அமைப்பதில் நாம் தேவையில்லாத சிக்கலகளை உருவாக்கிக் கொண்டோம். அதில் நாம் இதுவரை உழன்றது போதும். தொடர்ந்து உழல்வதற்கு எந்தவிதமான காரணமுமில்லை.**

இன்றைய தமிழகம் இந்த மாற்றத்தை ஏற்குமானால் ஒரு பத்தாண்டுகட்குள் தமிழகத்தின் கல்வி நிலையில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படும். தமிழ் மொழியின் முன்னேற்றப் பயண வேகம், சக்கரத்தின் துணையால் தரையில் நகரும் ஊர்தி போல் இருந்த நிலையிலிருந்து மாறி, இறக்கை பெற்ற வான ஊர்தி என வளரும். 'எழுத்துச் சீரமைப்பு' அளவில் ஆலின் விதை போன்றது பயனில், வேரும் விழுதுமாகப் பரவும் 'வளர்ச்சி இயற்கை' யைத் தன்னுள் கொண்டது.

**முடிவுரை**

தமிழகத்து மொழி அறிஞர்களும், தலைவர்களும் நமது மொழி வளர்ச்சிப் பிரச்னையை, இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் உலகின் வளர்ச்சி வேகத்தின் தேவைகளின் அடிப்படையில் நோக்க வேண்டும்.

இவ்வளவு நாளாக இருந்த ஒன்றை ஏன் மாற்ற வேண்டும்?

இப்படிப்பட்ட மாற்றங்களைக் கூற இவன் யார்?

இவனுக்கு என்ன தகுதி? இவனுக்கு என்ன உரிமை? என்பன போன்ற கேள்விகள் எழலாம். முதற்கேள்வி, மாற்றத்தை எதிர்ப்பவர்களால், காலந்தோறும் கேட்கப் பட்ட கேள்வி; காலம் பெரும்பாலும் நிராகரித்துவிட்ட கேள்வி.

இரண்டாவது கேள்வி, தமிழகத்தில், பல துறைகளி லும் எளிதாகக் கேட்கப்படும் ஒன்று. 'வளரும் சமுதாயத்

தில் கருத்துகள் மட்டுமே வாதிக்கப்பட வேண்டும். அவற்றின் நிறை, குறைகள் எடைபோடப்பட வேண்டும். குணம் நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள் மிகை நாடி, மிக்க கொளப்பட வேண்டும். கூறுபவர்களைப் பற்றிய ஆராய்ச்சி, உரிமை பற்றிய வாதம் கருத்துலகில் தேவை யற்றது.

இதுவரை வெளிவந்துள்ள நூல்கள் புது வரிவவடித் தில் இடம் பெற வேண்டுமே என்ற கேள்வி எழலாம்.

நூல்கள் ஏட்டு வடிவத்தில் இருந்த காலத்தில்கூட வரிவடிவத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் அவை மறைந்து படவில்லை. இன்றைய சூழ்நிலையில் பழைய நூல்கள் அனைத்தும் ஒரு சில ஆண்டுகளில் புது வரிவடிவத்தில் இடம் பெற்றுவிடும். இன்று வரை தமிழில் வந்திருக்கும் நூல்களின் எண்ணிக்கை அப்படியொன்றும் மலைக்கத் தக்கதல்ல. தொல்காப்பியத்திலிருந்து நேற்று வரை வெளி வந்துள்ள தமிழ் நூல்கள் அனைத்தும் சேர்ந்தால் கூட, இன்று ஜெர்மனி, அல்லது ஜப்பான் போன்ற ஒரு சிறு நாடு ஓராண்டில் வெளியிடும் நூல்களின் எண்ணிக் கைக்கு ஈடாகாது. எனவே, பழைய நூல்கள் புது வரி வடிவத்தில் வெளியிடப்பட வேண்டுவதை ஒரு தடைக் கல்லாக்க வேண்டுவதில்லை.

## அனைவருடன் கலந்து

இரண்டாவதாக, தமிழ் வழங்கும் மற்ற நாடுகளிலும் இந்த வரிவடிவ மாற்றம் ஏற்கப்பட வேண்டும். இல்லா விட்டால் மொழித் தொடர்பு குறையும், குன்றும் என்ற ஐயம் எழுகிறது. இது எண்ணப்பட வேண்டிய ஒன்று. முடிந்தவரை இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளுடன் தொடர்பு கொண்டு ஒரு பொதுக் குழு அமைத்து அதன் மூலம் இம்மாற்றத்தைச் செய்வது பொருத்தமுடையதாகும்.

## மகத்தான விளைவுகள்

தனது வளர்ச்சிப் பாதையில், தனது முடிவிலாத முன்னேற்றப் பயணத்தில், மானிடம் ஒரு புதிய கட்டத்தை

அடைந்திருக்கிறது. இதில் குறிப்பிடத்தக்கது வளர்ச்சி வேகம். அதற்குத் துணை நிற்பது கல்வி. இதைக் **'கல்வி யுகம்'** என்பதும் பொருந்தும்

இப்பொழுது ஏற்படும் மாற்றங்களின் வேகம் மனித சமுதாயம் அறிந்திராத ஒன்று. நமது முன்னோர்கள் எண்ணியும் பார்த்திராத ஒன்று. இந்த மாற்றங்களினால் ஏற்படும் விளைவுகள் மகத்தானவை. எதிர் பார்க்க இயலாத பரிமாணங்களுடையவை.

புது உலகம் அறிவியல், தொழிலியல் அடிப்படையில் அமைந்த கல்வியின் கருவில் உருவாகி மலரும் ஒன்று. அதற்கு நாம் யாரும் பள்ளி எழுச்சி பாடவேண்டுவதில்லை. நாம் மறுத்தாலும் மலரும்; தடுத்தாலும் மலரும். அதற்கு நம்மைப் பல வழிகளிலும் சமைவாக்கிக் கொள்வதுதான் முன்னோக்குள்ள அணுகுமுறை.

**தலையாய பணி!**

ஒரு இனத்தின் வளர்ச்சி, மொழியின் வளர்ச்சி, அந்த மக்களின் ஆசையின் அளவைப் பொறுத்தது, அவர்கள் தம் கனவுகளைப் பொறுத்தது, கனவுகளின் பரிமாணங் களைப் பொறுத்தது.

**இன்று நமது வறுமை, பொருளாதாரத்தில்தான் என்பதில்லை. நாம் நம் எண்ணங்களில் வறியவர்களாக இருக்கிறோம். நமது ஆசை களில்கூட வறியவர்களாக இருக்கிறோம். நமது கனவுகள்கூடப் பெரியவைகளாக இல்லை.**

இந்த நிலை மாறவேண்டும். இதை மாற்றும் பார்வைப் பரப்பும், சிந்தனைத் தெளிவும், உள்ள உரமும், உண்மைப் பற்றும், உள்ளவர்களை ஒதுக்காது, ஒதுங்கி நிற்க விடாது, இப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். எல்லா விதமான வேறுபாடுகளையும் கடந்து, பகைமை ஊற்று களைத் தூர்த்து, மொழி வளர்ச்சிப் பணியில் ஒருமைப் பாடு காணவேண்டும். இது நம்மை எதிர் நோக்கும் தலை யாய பணி. இன்றைய அவசரத் தேவை.

புலவர்

## ம. அய்யாசாமி

---

வளர்ந்து வருகின்ற உலக முன்னேற்றத்திற்கேற்ப ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழ் எழுத்து வடிவங்கள் மாறிக்கொண்டுதான் வந்திருக்கின்றன.

திருவாளர் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உள்ளுணர்ச்சியை உறுப்புக்களின் மூலம் வெளிப்படுத்தும் சுவையை வடமொழிக்கேற்பவே தமிழில் **பா**வம் என்று பகரத்தைத் தடித்த எழுத்தில் அமைத்துக் காட்டியுள் ளார்கள். அவ்வாறு அமைக்கவில்லையானால் பாவமாகப் போய்விடுகிறது.

இன்றைய நூற்றாண்டு அறிவியல் துறையில் பெரிதும் முன்னேற்றம் அடைந்துள்ளது. பிற நாட்டு நல்லறிஞர் எண்ணங்களையும், புதிய படைப்புக் கருவி களின் நிலைகளையும் நம் தாய் மொழியில் எழுதி அமைக்க வேண்டியவர்களாய் உள்ளோம்.

அறிவியலுக்குப் பயன்படும் வகையில் நம் செம் மொழியை மாற்றத் துணியவேண்டும். மாற்றிப் புதுப் பித்துப் பயன் வளர்க்கவேண்டும். அறிஞர்கள் விரைந்து கூடி முடிவெடுத்தாகவேண்டும். அதற்கு ஒரு நல்ல கால கட்டம் இது.

முன்னேற்றமடைந்த நாடுகள்கூடத் தத்தம் மொழி யில் உள்ள எழுத்துகளின் குறியீடுகளில் மாற்றங்களைச் செய்துள்ளன. •

இக்காலத்து மக்கள் பலர் புறத் தோற்றங்களால் எவ்வளவோ மாற்றங்களைப் பெற்றுள்ளனர்.

பழைமையில் ஊறியவருள் சிலருக்கு இந்த எழுத்துச் சீர்மை உள்ளத்தில் ஏற்றுக் கொள்வதற்குச் சிறிது கடினம் போல் தோன்றினாலும் நாளடைவில் இது மரபாய்விடும் என்று கருதலாம்.

1934 முதல் எழுத்துச் சீர்திருத்தம் தேவைதான் என்று எத்தனையோ தமிழறிஞர்கள், புலவர் குழுக்கள், முதலமைச்சர்கள் மாநாடுகள் அமைத்தார்கள்; தீர்மானங்கள் போட்டார்கள்.

ஆனால் அவை செயற்படுத்தப் படாமல் நின்று விட்டன. தந்தை பெரியார் மட்டும் தொடர்ந்து சீர்திருத்த எழுத்துகளைத் தம் இதழ்களில் பயன்படுத்தி வந்தார்.

இன்றைய நிலையில் தமிழ்ப் பேரறிஞர்களுள் பெரும் பான்மையோரும், பிறதுறை வல்லுநர்களும் இச்செயலுக்கு பெரிதும் ஆதரவு காட்டுகிறார்கள்.

பெரியார் நூற்றாண்டு விழாவின் நினைவாக எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்று ஆணை பிறப்பித்த தமிழக அரசை யும் பாராட்டுவோம். இது தொடக்கப்பணி. தொடர்ந்து, அறிவியல் ஆக்கத்திற்கேற்ப நம் மொழியைப் பயன் படுத்தத் தக்க வகையில் மேலும் புது வழி கண்டாக வேண்டும்.

அச்சு இயந்திரம், தட்டச்சு (Type writer), வரியச்சு (Linotype), தனியச்சு (Monotype), போன்ற பொறிகளும், தந்தியும் தற்போது நடைமுறையில் உள்ளன.

எழுத்து, மொழி ஆகியவற்றை மேற்கண்ட பொறி களில் நாம் பயன்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

புதிய மாற்றத்தைத் துணிந்து ஏற்றுப் பயனுறச் செய்வோமாக!

டாக்டர்

## தி. முத்து கண்ணப்பர்

தமிழ்மொழி மிகப் பழைய மொழி. உயர்தனிச் செம் மொழி. காலங் காலமாய் எண்ணற்ற ஆட்சிகளையும், பல்வகை மொழியாதிக்கத்தையும், வேற்றுமொழிச் சூறாவளிகளையும் கண்டு, சிக்கி, ஈடு கொடுத்து, எதிர்த்து நின்று, வென்று, இளமையும் வளமையும் குன்றாது நிலைத்து நிற்கும் பெருமை படைத்தமொழி.

இத்தகைய சிறப்புமிக்க மொழியின் எழுத்துகளில் காணப்படுகின்ற ஒரு சில முரண்பாடான அமைப்புகளை மாற்ற வேண்டும் என்று அறிஞர் பலர் கருதிப் பேசி வருகிறார்கள்.

அரை நூற்றாண்டாக இப்புரட்சி எண்ணம் எழுந்து உலவுகின்றதே தவிர உருப்படியாக—திட்டமாக—உறுதி யாக எவ்விதச் சீரிய, பொருத்தமான திருத்தமும் இன்னும் ஏற்படவில்லை.

உருப்படியான திருத்தம் இன்னும் ஏற்படவில்லை. நான் குறிப்பிடுவதும், பல நாள்களாக ஈடுபட்டு வருவதும் எழுத்துகளின் வரிவடிவச் சீரமைப்பைப் பற்றித்தான்.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வயது வந்தோர்க்கு எழுதப்படிக்கக் கற்பிக்கும் பணியில் ஆர்வத்

தோடு ஈடுபட்டிருந்தேன். சுருக்க முறையொன்றினை வகுத்து, நாற்பது நாள்களில் வயது வந்தோர் எளிமை யாகத் தமிழ் மொழியில், எழுத்துகளின் உருவ அமைப்பில் இருந்த சிக்கல்களையும் இடர்ப்பாடுகளையும் உணர நேர்ந்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக முதல் வகுப்புக்கு நூல் எழுதும் பொறுப்பை நான் மேற்கொண்டபோது மீண்டும் அச் சங்கட நிலை பெரிதும் உறுத்தியது.

நடைமுறையில் உள்ள வரிவடிவ அமைப்பு முறைகள் தவறானவையா? அவற்றை அமைத்தவர்கள் தெளிவற்ற எண்ணம் உடையவர்களா? பகுத்தறிவுக்கு ஒவ்வாத கண்மூடித்தனமான முறையில் அமைத்துவிட்டார்களா? என்ற வினாக்கள் எழுந்தன.

பழங்காலத்தில் பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதிவந்தனர். தாளில் பென்சில் அல்லது பேனாவினால் எழுதுவதற்கும் எழுத்தாணியால் பனையேட்டில் எழுது வதற்கும் நிரம்ப வேறுபாடுண்டு. ஓலையில் ஓரளவு அழுத்தி எழுதவேண்டும். எழுதுவது சற்றுக் கடின மானதும்கூட.

மூன்று சுழிகளையுடைய ண வை எழுத்தாணியால் எழுதிவிட்டு, எழுத்தாணியைப் பெயர்த்து பக்கத்தில் ா (கால்) போடுவது சற்றுச் சிரமமானது. அதனால் தொடர்ந்து அந்த எழுத்தின் கீழ் நுனியை அடிப்பக்கமாக கால் வட்டம்போல் இழுத்து விடுவது எளிது. எனவே ணகரத்தின் நெடிலைக் கீழே கால்வட்டமாக இழுத்து எழுதி வந்தனர். அக்கோடு **ஆ** என்ற நெடில் ஒலியின் குறியீடு என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். இப்படி **அ** வுக்குக் கால்வட்டம் போன்ற குறியிழுத்து **ஆ** வாகச் செய்வது கி. பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்தே பழக்கத்தில் இருந்து வருகிறது.

இம்முறையே **ற, ண** என்ற எழுத்துகளுக்கும் பின் பேற்றப்படுகின்றது.

இன்னொன்றையும் கவனித்தல் வேண்டும். ண, ற, ன என்ற இம் மூன்று எழுத்துக்களை மட்டுமே முன் காட்டிய வாறு நெடிலாக்க முடியும். மற்ற எந்த எழுத்தையும் அவ்வாறு கீழ்வட்டம் போட்டு நெடிலாக்க முடியாது.

இவ்வாறே சில எழுத்துகளுக்கு எழுதும் எளிமை, வசதி கருதி சிறு சிறு சேர்க்கைப் பகுதிகளுடன் இணைத்து அமைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதனை நன்கு ஊன்றி ஆராய்ந்து பார்க்கும்போது முன்னோர்கள் தெளிவான முறையில் வரிவடிவை அமைத்த சிறப்பு புலனாகும்.

ஆனால் இப்போதுள்ள வசதிகளைக் கொண்டு எழுத்து வடிவங்களை மாற்றியமைக்க முனைதல் நியாயமானதே.

வரிவடிவ அமைப்பு முறையற்றது, மாறானது என்று பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் உணர்ந்து 1935 முதல் அவற்றை மாற்றி அமைத்தார். தமது இதழ்களில் மாற்றிய வடிவிலேயான எழுத்துகளையே பயன்படுத்தி வந்தார்.

பெரியாரின் நூற்றாண்டு விழாவின் நினைவாக அம் முறையைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது. அனைவரும் பின்பற்ற ஆணையும் பிறப் பித்துள்ளது.

அச்சு தட்டச்சு, தொலையச்சு போன்ற சாதனங் களுக்குப் புதியமுறை எழுத்துகள் ஏற்றவை; எளிமையும், விரைவும், சுருக்கமும் உடையவை என்பதில் சிறிதும் ஐயம் இன்று.

இனி, எழுத்துச் சீர்மைக்கு வருவோம். இப்போது வழக்கில் உள்ள உகர உயிர்மெய்யெழுத்துகளைச் (கு, நு...று, னு) சீரமைப்பதுதான் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய செயல. உகர உயிர்மெய்களை ஒரு முறைப்படுத்தவில்லையெனின் எழுத்துச் சீரமைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசாங் கமோ, பிற அறிஞர்களோ எழுத்துச் சீரமைப்புச் செய்து விட்டதாகப் பேசுவதில் பயனில்லை.

தமிழில் உகர உயிர்மெய் எழுத்துகளின் வடிவமைப்பில் பல குழப்பங்களும் முறைகேடுகளும் உள்ளன.

ங, ச, ப, ய, வ: 5 இவற்றின் உகர வடிவங்கள் ஒரு வகை. ஊகார வடிவும் அது போன்ற அமைப்பே.

க, ட, ம, ர, ழ, ள: 6 இவற்றின் உகர, ஊகார வடிவ அமைப்பு மற்றொரு வகையானது.

கு நெடிலாவதற்கு உகரத்தை அதன் காலடியிலே சேர்த்துப் போடுகிறோம். கூ- இது ஒரு அற்புதமாற்றம். தனிவகை.

ஞ, ண, த, ந, ல, ற, ன 7 என்பவை உகர வடிவம் பிறிதொருவகையில் அமைந்திருக்கிறது. இவற்றுக்கு நெடில் காணப் பாதி காலை 'ᒧ' இணைத்துக்கொண்டு (ஞூ, ணூ,) எழுதப்படுகிறது.

தமிழ் எழுத்துகளில் இந்த உகர ஊகார அமைப்புகளைக் கற்கும் நேரம், மற்ற அனைத்து எழுத்துகளையும் ஒருங்கே கற்கும் நேரத்திலும் பன்மடங்கு மிகுதியாகிறது என்பது தெளிவு அதைவிடக் குழப்பமும், சிக்கலும், வெறுப்பும், சலிப்பும் பெருகிக் கற்போரையும் கற்பிப்போரையும் திக்கு முக்காடச் செய்துவிடுகிறது. இது மறுக்க முடியாத உண்மை.

எனவே, உகர ஊகாரக் குறிகளை மற்ற ஒலிகளுக்குப் பயன்படுத்துதல் போன்று ஒரேவகைப்படுத்துதல் இன்றியமையாதது. உடனடியாக, அவசரமாக, அவசியமாகச் செய்ய வேண்டிய செயலாகும். அதற்கு மீண்டும் ஓராண்டு புதிய குறியீடுகளைக் கண்டு பிடிப்பதில் கருத்தைச் செலுத்துதல் வீண் செயல். எனவே உகர ஊகாரங்களுக்கு ஏற்கனவே பழக்கத்தில் உள்ள குறியீடுகளில் உள்ளதை — பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல்தான் அறிவுடைமையாகும்.

அந்நிலையில் ு, ூ, என்ற இரண்டையும் பயன்படுத்துவதே மிகமிகப் பொருத்தமானதும் எளிமையானதும் ஆகும்.

இந்தத் திருத்தத்தை எழுத்துச் சீரமைப்புப்பற்றிக் கூறும் அறிஞர்கள் பலரும் ஏற்றுக்கொள்ள முன்வருவது குறிப்பிடத்தக்கது; மகிழ்ச்சிக்குரியது.

இந்த மாற்றத்தை நான் 1949 ஆம் ஆண்டு 'பாலா கல்வி' என்ற மாத இதழில் 'எழுத்துச் சீர்திருத்தம்'' என்ற தலைப்பில் குறிப்பிட்டிருக்கிறேன்.

இனிச் சீரமைக்க வேண்டிய பிற எழுத்துகளைக் காண்போம்.

பல அறிஞர்கள் பல்வேறு விதமான எழுத்துகளையும், குறியீடுகளையும் படைத்து, அவையே தக்கவை, ஏற்புடையவை என்று கூறி வருகிறார்கள். 30 ஆண்டுகளாகவே நான் சிந்தித்துப் பலமுறை வரிசைப்படுத்திக் காட்டி வந்திருக்கிறேன்.

இன்றைய நிலையில் பின்வருமாறு எழுத்துகள் உருப்பெறுவதே: சரியானது; முறையானது; ஒழுங்கு முறைக்கு உகந்தது என்பது என் பணிவான கருத்து.

உயிர் எழுத்துகளின் ஒலி வடிவு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ | = | ா | எ | = | ெ | ஔ | = ௌ |
| இ | = | [illegible] | ஏ | = | ே | | |
| ஈ | = | [illegible] | ஐ | = | ை | | |
| உ | = | [illegible] | ஒ | = | J | | |
| ஊ | = | [illegible] | ஓ | = | ✓ | | |

இவ்வொலிக் குறியீடுகள் உயிர்மெய்யெழுத்துகளின் இடப்பக்கத்தில், மேல் பகுதியில் பின்கண்டவாறு எழுதப் படல்வேண்டும்.

இந்தச் சீரமைப்பின்படி கீழ்க்கண்ட வாசகம் பின்வருமாறு எழுதப்படும்.

தமிழ்மொழி இந்திய நாட்டின் மிகப் பழைய மொழி.

தம?ழ் மJழி இந்த?ய நாட்ட?ன் ம?கப் பழைய ம✓ழி.

டாக்டர்

# பொன். கோதண்டராமன்

## முன்னுரை

எழுத்துச் சீர்திருத்தம் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்கு முன் உலகில் பொதுவாக இன்று வழக்கில் உள்ள எழுத்து முறைகள் பற்றி ஓரளவாவது அறிந்து கொள்வது நல்லது.

## இருவகை எழுத்து முறை

சீனம், சப்பானியம் போன்ற மொழிகளில் காணும் எழுத்துகள் ஒலியை உணர்த்தாமல் நேரடியாகப் பொருளை உணர்த்துகின்றன. இந்த எழுத்துகள் ஓவியம் அல்லது படங்கள் போல அமைந்திருப்பதால் இவற்றை ஓவிய எழுத்து அல்லது பட எழுத்து என்று கூறுவர். இவற்றை நாம் பொருள்சார் எழுத்து என்று குறிப்போம்.

உலகில் காணும் ஏனைய எழுத்து முறையில்ஒவ்வொரு எழுத்தும் ஒரு ஒலியைக் குறிப்பன என்று பொதுவாகக் கூறலாம். இத்தகைய எழுத்துகளை ஒலிசார் எழுத்து என்று குறிப்போம். பொருள்சார் எழுத்து முறையில் ஒவ்வொரு எழுத்தும் ஒரு பொருளைக் குறிக்கும் என்றும் ஒலிசார் எழுத்து முறையில் ஒவ்வொரு எழுத்தும் ஒரு ஒலியைக் குறிக்கும் என்றும் பொதுவாகக் கூறலாம்;

எனினும் இரண்டிடங்களிலும் விதிவிலக்குகள் உள்ளன என்பதை மறத்தலாகாது.

ஒலிசார் எழுத்து முதலாவதாக ஒலியை உணர்த்தி அதன் வழியாகச் சொல்லை உணர்த்திப் பிறகு பொருளை உணர்த்தும். பொருள்சார் எழுத்து முதலாவதாகப் பொருளை உணர்த்திப் பிறகு சொல்லையும் உணர்த்தும். கீழ்க்காணும் படங்கள் இதனை விளக்கும்.

பொருள்சார் எழுத்து முறை ஆட்சியிலுள்ள மொழிகளில் எழுத்துகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருக்கும். ஒலிசார் எழுத்து முறை ஆட்சியிலுள்ள மொழிகளில் எழுத்துகளின் எண்ணிக்கை அவ்வளவு மிகுதியாக இருப்பதில்லை. இக்கட்டுரையில் ஒலிசார் எழுத்து முறையைப் பற்றியே விரிவாக ஆராய இருக்கிறோம்.

இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் பொதுவா ஒலிசார் எழுத்து முறையினையே காண்கிறோம். தமி மொழியும் இவ்வகையைச் சேர்ந்ததே என்பது சொல்லாமலே விளங்கும்.

## ஒலிசார் எழுத்து முறை

இதனைக் கொள்கை அடிப்படையில் மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு:

1. ஒலியெழுத்து: ஒரு ஒலிக்கு ஒரு எழுத்து என அமைவது.

2. ஒலியன் எழுத்து: ஒரு ஒலியனுக்கு ஒரு எழுத்து என அமைவது.

3. ஒலியசை ஒழுத்து: மெய்யும் உயிரும் சேர்ந்த ஒரு அசைக்கு ஒரு எழுத்து என அமைவது.

இங்கே குறிப்பிட்ட மூவகை முறைகளில் முதலாவது முறை மொழியியல் ஆய்வாளர்கள் ஆராய்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்துகின்ற ஒரு நுட்பமான முறை இது எந்த ஒரு மொழியிலும் வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை,

தமிழில் உள்ள உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும் இரண்டாவது முறைக்கு எழுத்துக் காட்டு. தமிழில் உள்ள உயிர்மெய் எழுத்துகள் மூன்றுவது வகை எழுத்து முறைக்கு எடுத்துக் காட்டு. தமிழில் உள்ள எழுத்து முறை ஒலியன் எழுத்து முறையும் ஒலியசை எழுத்து முறையும் சேர்ந்த ஒரு எழுத்து முறை எனலாம்.

தமிழில் காணும் ஒலியசை எழுத்துகள் ஒலியன் எழுத்துகளின் சேர்க்கையே ஆதலால் ஒலியசை எழுத்துகள் இல்லாமலும் தமிழ் மொழி நன்கு இயங்க முடியும் என்பது இப்போது பலர்க்கும் நன்கு தெளிவான செய்தி.

## தமிழ் எழுத்துகளும் ஏனைய இந்திய மொழி எழுத்துகளும்

தமிழ் மொழியில் காணும் எழுத்து முறையினை ஏனைய இந்திய மொழிகளில் காணும் எழுத்து முறையோடு ஒப்பிட்டு நோக்கும்போதுதான் இதிலுள்ள சிறப்புகள் விளங்குகின்றன. ஏனைய இந்திய மொழிகளில் த்ர், ஸ்த்ர் போன்ற ஒலியன்களைக் கூட்டெழுத்துகளின் துணை கொண்டே எழுதுவர். அவற்றோடு உயிர் சேர்ந்து உயிர் மெய் உருவாகும்போது அவற்றுக்கு உரிய வரி வடிவங்களும் சேர்ந்து அம்மொழிகளில் உள்ள வரிவடிவங்களின் எண்ணிக்கை மேலும் மிகுதியாகிறது. இத்தகைய கூட்டெழுத்து இடர்ப்பாடுகள் தமிழில் இல்லை.[1]

## தமிழ் எழுத்துகளின் அமைப்பு முறை

தமிழ் எழுத்துகளில் அடிப்படை எழுத்துகள் உயிரும் மெய்யும் ஆய்தமும் ஆகிய முப்பத்தொன்று எனலாம். ஈ என்ற எழுத்துக்குப் பதிலாக இ—யைச் சுழித்து எழுதும் முறையும் இருந்தது என்பதை மனதிற் கொண்டு, மேலும் இவற்றை ஆராய்ந்தால் அடிப்படை வரிவடிவங்களின் எண்ணிக்கை மேலும் குறையும். உயிர் மெய் எழுத்துகள் இருநூற்றுப் பதினாறும் ா, ? முதலாய உயிர்க்குறிகளின் துணை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.*

உயிர்க்குறிகள் மெய்யெழுத்துகளுடன் மேலும் கீழும் இடத்திலும் வலத்திலும் இணைகின்றன என்பதையும் இவை மெய்யெழுத்துகளோடு ஒட்டிச் சேர்த்து எழுதப் படுதலும் தனியே எழுதப்படுதலும் உண்டு என்பதையும் நினைவிற் கொள்க.

## வரலாற்று நோக்கில் சில குறிப்புகள்

தொல்காப்பியர் காலத்தும் அதற்கு முன்பும் ஐகாரத் துக்குப் பதிலாக அஇ என்றும் ஔகாரத்துக்குப் பதிலாக அவ் என்றும் எழுதுவது ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு முறையாகத் தெரிகிறது மகரமும் எகர ஒகரங்களும் தொல்காப்பியர் காலத்தில் பெற்றிருந்த வரிவடிவங்களும் இக்காலத்தில் பெற்றுள்ள வரிவடிவங்களும் வேறு வேறு என்ற செய்தியும் இங்கே நினைவிற் கொள்ளத் தக்கது. தமிழ் நெடுங்கணக்கில் காலத்தின் தேவைக்கேற்ப வரி வடிவ மாற்றங்கட்கு இடமளித்திருக்கிறார்கள் நம் தமிழ்ச் சான்றோர்கள். எனவே இன்றைய நிலையில் தேவையான எழுத்துச் சீர்திருத்தத்துக்கு இடமளிப்பது எல்லாவகை யிலும் பொருத்தமேயாம்.

## சீர்திருத்தம் தேவைதானா?

இப்போது உள்ள எழுத்து முறை பலவகையில் சிறப் பானதே எனினும் இதில் காணும் ஒரு சில குறைகளை நீக்குவது வரவேற்கத் தக்கது. இருக்கின்ற எழுத்து களையே பயன்படுத்திக் கொண்டு வழக்கம்போல் தமிழை எழுதலாமே! எழுத்துச் சீர்திருத்தம் செய்யாமல் தமிழில் எழுத முடியாதா என்றுகூடச் சிலர் கேட்கலாம். நாம் கை யாளும் கருவிகளைப் புதுமைப்படுத்திச் செம்மையாக்கிக் கொண்டால்தான் நாம் மேற்கொண்ட காரியங்கள் எளிதாக வும் சிறப்பாகவும் விரைவாகவும் நடக்கும். உலகம் விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கும்போது நாமும் நமது செயல் வேகத்தைச் சற்று மிகுதிப்படுத்த வேண்டும்.

அதற்கு நாம் நமது கருவிகளைச் சீர்திருத்திக் கொள்வது மிகவும் இன்றியமையாதது.

எனவே எழுத்துச் சீர்திருத்தத்தை நாம் எவ்வளவு விரைவில் நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்றுவது நல்லது.

## தேவையான சீர்திருத்தம்

உயிரெழுத்துகளில் குறில் நெடிலின் வரிவடிவங்களிடையே இகர ஈகாரம் தவிர ஏனையவற்றில் ஒருவிதமான பொதுத் தன்மையைக் காண்கிறோம். ஈ என்பதற்குப் பதிலாக இ என்ற வடிவையே ஏற்றுக் கொண்டால் இங்கும் அந்தப் பொதுத் தன்மை காக்கப்படும். ஊ என்ற எழுத்துக்குப் பதில் உா என்றோ அல்லது வேறு வகையிலோ ஒரு எழுத்தை அமைப்பது தகும்.

உயிர் மெய்களைப் பொறுத்த வரையில் ஆ, உ, ஊ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய உயிர்கட்குரிய உயிர்க்குறிகளில் மாற்றம் தேவை என்பதை மேற்காட்டிய அட்டவணையிலிருந்து எளிதில் உணரலாம். இதைப்பற்றி முன்பே எண்ணிப் பார்த்த பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ஆ, ஐ, ஒ, ஓ, ஆகிய உயிர்கட்குரிய உயிர்க்குறிகளில் ஒரு ஒழுங்கை ஏற்படுத்தி அதை விடுதலை என்ற நாளிதழிலும் அவர் வெளியிட்ட நூல்களிலும் நடைமுறைப்படுத்தி வெற்றி பெற்றிருக்கிறார். ஆ, ஐ, ஒ, ஓ, ஆகிய உயிர்களைப் பொறுத்தவரை அவர் அறிமுகப்படுத்தியுள்ள சீர்திருத்தத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம்.

உ, ஊ, ஔ ஆகிய உயிர்களில் ஔகாரத்தை அவ் என்று எழுதிக்கொண்டால் ஔ சேர்ந்த உயிர் மெய்ச் சிக்கல் தாமே மறைந்துவிடும். உ, ஊ என்ற இரண்டு உயிர்கட்கும் ு, ூ ஆகிய உயிர்க்குறிகளை முறையே பயன் படுத்தலாம் என்று பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் வழி கூறியுள்ளார்கள்.[8] அவற்றை ஆளத்தயங்கினால் இன்று உகர ஊகாரங்கள் ஏறிய உயிர் மெய்களில் பெரும்பான்மையாக ஆளப்படும் ு, ூ ஆகிய உயிர்க்குறிகளை எல்லா மெய்கட்கும் பயன்படுத்திக்

கொள்ளலாம். அல்லது புலவர் குழந்தை பரிந்துரைத்த ஌, ஍ ஆகிய குறிகளைப் பயன்படுத்தலாம.[6]

இங்கே நாம் குறிப்பிட்ட உயிர்க்குறிகளை மெய்களோடு ஒட்டிச் சேர்த்து எழுதாமல் எகரம் ஏறிய உயிர் மெய்களில் எழுதுவது போலத் தனித்தனியே இடமாகவும் வலமாகவும் எழுதிக் கொள்ளலாம்.

இந்தச் சீர்திருத்தங்களுக்குப் பிறகு தமிழ் வரிவடிவம் கீழ்க்காணும் நெறியில் அமையும்.

**உயிர்**

அ ஆ இ ஈ உ ஍

எ ஏ ஐ ஒ ஓ அவ்

**ஆய்தம்**

ஃ

மெய்

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம்

ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

| உயிர் | உயிர்க்குறி | ஏற்கும் மெய்கள் |
|---|---|---|
| அ | புள்ளி நீக்கம் | எல்லா மெய்களும் |
| ஆ | ா | ,, |
| இ | ি | ,, |
| ஈ | ী | ,, |
| ஊ | ு | ,, |
| | ூ | ,, |
| எ | ெ | ,, |
| ஏ | ே | ,, |
| ஐ | ை | ,, |
| ஒ | ொ | ,, |

உயிர் மெய்

(எடுத்துக் காட்டாகக் ககர வரிசை)

க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே,
கை, கொ, கோ, கௌ

இப்போது நாம் பரிந்துரைத்துள்ள முறையில் மிகுதியான திருத்தமோ குழப்பமோ இல்லை. எனினும் இந்த மாற்றங்களை உடனடியாக ஒரே மூச்சில் செய்ய முயலாமல் பல்வேறு எளிய படிநிலைகளில் செய்வது நல்லது.[5]

(1) முதலாவதாகப் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் அறிமுகப்படுத்திய மாற்றங்களை அப்படியே ஏற்றுச் செயற்படுத்தலாம். அவை வருமாறு:

ணா றா னா
ணை னை லை ளை
ணொ றொ னொ
ணோ றோ னோ

(2) ஈ என்ற எழுத்துக்குப்பதிலாக இ ீ என்ற எழுத்து பரிந்துரைக்கப்பட வேண்டும். உகர ஊகாரங்கட்கு உரிய உயிர்க்குறிகளையும் இந்த இரண்டாவது படிநிலையிலேயே சீர்திருத்தம் செய்து அறிமுகப்படுத்தலாம். ஊ என்பதற்குப் பதிலாக ௶ என எழுதுவதையும் இங்கே கருதிப் பார்த்து நடை முறைப்படுத்த வேண்டும். புலவர் குழந்தை, பேராசிரியர் தெ.பொ.மீ. ஆகியோரின் பரிந்துரைகளையும் இங்கே எண்ணிப் பார்த்துத் தகுந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

(3) ஐ, ஔ ஆகிய எழுத்துகளையும் ஐ, ஔ ஏறிய உயிர் மெய்களையும் தமிழ் நெடுங்கணக்கிலிருந்து அறவே நீக்கிவிட்டு ஐ என்பதை அய் என்றும் ஔ என்பதை அவ் என்றும் எழுதிக் கொள்ளலாம்.[6] இந்த மாற்றம் மூன்றுவது படி நிலையில் இடம் பெற வேண்டும்.

இங்கே குறிப்பிட்ட படி நிலைகளை அறிஞர்கள் தம் கருத்திற்கேற்ப எண்ணிப் பார்த்து மிகுதிப்படுத்தலாம்; அல்லது மேலும் குறைக்கலாம். வரிவடிவங்களிலும் அறிஞர்கள் பரிந்துரை செய்த வடிவங்களை எண்ணிப் பார்த்துப் பொருத்தமானவற்றை ஏற்கலாம்; அல்லது புதிய வரிவடிவங்களை ஆக்கலாம்.

தமிழ் வரிவடிவில் எங்கெங்கே சீர்திருத்தம் தேவை என்பதையும் எப்படிச் சீர்திருத்தம் செய்யலாம் என்பதையும் இக்கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளோம். இவை ஒருபுறமிருக்க உலக மொழிகளில் காணும் ஒலியன்களைத் தமிழ் வரிவடிவ அடிப்படையில் எப்படி எழுதிக் காட்டலாம் என்பதையும் எழுத்துச் சீர்திருத்தக்குழு எண்ணிப் பார்ப்பது தகும்.[7]

## குறிப்புகள்

1. மேலும் விளக்கங்கட்குக் காண்க.
   செந்தமிழ் ப—ம், 23—24
2. காண்க தொல். எழுத்து. 14, 16, 54, 55.
3. காண்க *"Script Reform in Tamil", Prof. T. P. M's 60th Birth day Commemoration volume.*
4. காண்க **தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்**
5. காண்க *"Script Reform im Tamil", Seminar on Sociolinguistics (Mimeo, Seminar papers)*
6. காண்க இலக்கண உலகில் புதிய பார்வை,
   ப—ம் 34—46
7. காண்க செந்தமிழ், ப—ம். 42

## உசாத்துணைக் குறிப்புகள்

புலவர் குழந்தை, (1968)
தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், ஈரோடு.
பொன். கோதண்டராமன், (1974)
செந்தமிழ், சென்னை.
,, (1973)
இலக்கண உலகில் புதிய பார்வை, சென்னை.
தொல்காப்பியர் (பதிப்பு. கழகம்)
*P Kothandaraman (1972)*
*Studies in Tamil Lingutstics, Madras.*
,, *(1977)*
*"Script Reform in Tamil", Seminar on Sociolinguistics (Mimeo), Annamalainagar.*
*T. P. Meenakshisundaran (1961)*
*"Script Reform in Tamil", Prof T.P.M.'s. 60 th Birthday Commemoration Volume, Annamalainagar.*

டாக்டர்

## சி. பாலசுப்பிரமணியன்

எழுத்துச் சீர்மை குறித்து வெளியிடப்படும் கருத்துரைகளை எண்ணவே அஞ்சும் மனம் ஏனோ தோன்றியுள்ளது. பழைமையில் மாற்றம் ஏன்? காலம் காலமாக வழங்கி வரும் எழுத்து அமைப்பில் மாற்றம் ஏன்? முன்னவர்கள் ஒன்றும் அறியாதவர்களா? என்பதைப்போன்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டு புதியன பற்றி எண்ண மறுப்பது அறமாகாது. பழைமை போற்ற வேண்டுவதுதான். பழைமைக்குரியவர்களும் போற்றுதலுக்குரியவர்கள்தான்.

எத்தனையோ புதுமைகளைக் காணுகின்றோம்—வரவேற்கின்றோம். அந்தப் புதுமைகளும் தொடர்ந்த முயற்சியால் மாற்றங்கள் பெறுவதும் உண்டுதானே! குறித்த வேகம் கொண்ட ரயில் வண்டிகளிலேயே பயணம் செய்து கொண்டிருந்த நாம் இன்று 'தமிழ்நாடு எக்ஸ்பிரஸி'லும் 'வைகை எக்ஸ்பிரஸி'லும் செல்லவில்லையா? முன்பிருந்த வேகம் போதாதா? மேலும் வேகம் ஏன்? மிகுந்த வேகம் ஆபத்தைத் தராதா? என்றெல்லாம் எண்ணிக் கொண்டு, பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளுகிறோமா! இந்த மனநிலை ஏன் எழுத்துச் சீர்மையில் வரக்கூடாது?

தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி நம் மொழி வளர்ச்சிக்குக் கிடைத்த நல்வாய்ப்பே இந்த

எழுத்துச் சீர்மை குறித்த சிந்தனை. 'குடத்தில் விளக்காக' சிந்தனையாளர் உள்ளத்தே நெடுங்காலமாக உறங்கிக் கிடந்த உணர்வு இன்று விழிப்பு நிலை பெற்றுவிட்டது. வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் எழுத்துச் சீர்மை குறித்து எழுதி வந்தவர்கள், தங்கள் சிந்தனையில் வேகம் கொண்டு புது நெறி காட்டத் தொடங்கிவிட்டார்கள்.

வரவேற்கத் தகுந்த எழுச்சி இது.

கல்வெட்டு எழுத்துகளும் பனையோலை எழுத்துகளும் காலப்போக்கில் எழுத்துகள் பெற்று வந்த வளர்ச்சியைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். அவற்றையே போற்றிக் கொண்டிருப்பதால் பயனேதும் விளையப் போவதில்லை. எழுத்துக்களின் பரிணாம வளர்ச்சியைக் காணமட்டும் அவற்றைத் துணையாகக்கொள்ளவேண்டும்.

கல்வெட்டு எழுத்துகள் செதுக்குவோரின் முயற்சிச் சுருக்கத்தின் காரணமாக அமைந்தவை என்பதும் பொருந் தாது. சில கல்வெட்டுகள் செதுக்கியவனின் பெயரையும் கொண்டுள்ளன. கல்வெட்டிற்குரிய மன்னரின் ஆணைக் கேற்பத்தான் எழுத்துகள் அமைந்திருக்க வேண்டுமே அல்லாமல், செதுக்கியவனின் முயற்சிச் சுருக்கம் கருதி அமைக்கப்பட்டவை அவை என்று கொள்வது சரியாகுமா? எனவே, கல்வெட்டு எழுத்துகளைக் காணும்போது, எழுத்து கள் காலப்போக்கில் மாற்றம் பெற்றுத்தான் வந்துள்ளன என்ற தெளிந்த முடிவினைப் பெறுகிறோம்.

இன்று கல்லிலும் பனை ஓலையிலுமா எழுதுகிறோம்? தட்டச்சும், வரியச்சும் (Linotype), தனியச்சும் (Monotype) பெருகியுள்ள இக்காலத்தில் வரிவடிவத்தில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்று. இந்நிலையில், கண் மூடித்தனமான பழைமைப் பற்று குறுக்கிட்டு வளர்ச்சிக்குத் தடையாகிவிடக் கூடாது.

ஒலியை அடிப்படையாகக் கொண்டு குறியீடுகளில் மாற்றம் பெறுவதுதான் எழுத்துச் சீர்மை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான்

முழுமையான—நிறைவான போக்கில் எழுத்துச் சீர்மையை ஏற்கும் மனவளமை உண்டாகும்.

உலக அரங்கில் போட்டியிட்டு முன்னேற நமக்குதவும் 'போர்க்கருவி' மொழியாகும். இந்த முன்னேற்றம் பழைமையான போர்க்கருவிகளால் பெற்றுவிடக் கூடியதா? வில்லும் வாளும் ஈட்டியும் கேடயமுமா இன்றைய போர்க் கருவிகள்? தொல்பொருள் அரங்கில் அல்லவா அவை அடங்கிக்கிடக்கின்றன? இமைகளின் அசைவிற்குள் நிலத் தின் பெரும் பகுதி அழியும் அளவுக்குப் போர்க்கருவிகள் பற்றிய 'சிந்தனைப் போர்' பெருகியுள்ள காலமல்லவா இது? அமைதி விரும்பும் நாடுகள்கூடப் புதுமைக் கருவிகள் படைப்பதில் ஆர்வம் காட்டி வரும் இக்காலத்தில், உள்ளபடியே நமக்குத் துணையாகும் மொழி வளர்ச்சிக்குப் புதுமைக் கோலம் புனைவதில் ஏன் தயக்கம் தோன்ற வேண்டும்?

தமிழ் எழுத்துச் சீரமைப்பின் முதற்கட்டத்தை—பெரி யார் அவர்கள் புகுத்திய மாற்றத்தைக் கடந்த இரு நூறாண்டுத் தமிழ் வளர்ச்சியில் போற்றத் தக்க கட்டம் என்று கொண்டாடலாம். இம்மாற்றத்தின் விளைவாக வரிவடிவத்தில் எட்டு எழுத்துகள் ஞ, ரு, ஞு, ணை, லை, ளை, னை, ஐ குறைகின்றன. இதனால் எட்டு எழுத்துகளைக் கூடுதலாகக் கற்கும் சுமை குறைகின்றது.

இப்பொழுதுள்ள வரிவடிவ எழுத்துகளைக் கொண்டு, வேண்டும் மாறுதல்கள் செய்து சீர்மையைப் புகுத்த நாம் முனைந்தாக வேண்டும். சில அடிப்படை விதிகள், நடை முறை நிலைகள் வரையறுக்கப்பட வேண்டும். தமிழ் வரி வடிவ அமைப்பில், உயிர்மெய் எழுத்துகளை உருவாக்கு வதில் சீரான முறையைப் பின்பற்ற முடியும். ஆனால் அந்த முயற்சிக்கு நாம் நம்மை நெருக்கிக் கொள்ளவில்லை. இது குறித்துப் பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்கள் கூறுவதைக் காண்போம்.

"இன்னுமொரு குறையும் களைய வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது, மெய் வடிவிற்கு

பிறகு உயிர்க் குறியீடு அமைவதே உலக மொழிகள் எல்லா வற்றிலும் உள்ளது. கன்னடம், தெலுங்கு ஆகிய திராவிட மொழிகளிலும் உள்ளது. ஆனால் இதற்கு மாறான— பொருத்தமும் இல்லாத ஒரு முறை எவ்வாறோ தமிழில் புகுந்துள்ளது.

கெ, ஙெ, செ, ஞெ, டெ, ணெ

கே, ஙே, சே, ஞே, டே, ணே

முதலியவற்றில் மெய்க்குப் பின் வரவேண்டிய உயிர்க் குறியீடு, மெய்க்கு முன் வருகிறது.

கொ, ஙொ, சொ, ஞொ, டொ, ணொ

கோ, ஙோ, சோ, ஞோ, டோ, ணோ

முதலியவற்றில் உயிர்க் குறியீடு மெய்க்கு முன்னும் பின்னுமாகிய இரண்டிடத்தும் வருகிறது. இந்தக் குறையைக் களைதல் கடமை என்று செயலில் முற்படுவ தற்குக் காலம் ஆகலாம், பிறகு கருதுவோம் என்று இது ஒத்திவைக்கப்படலாம். ஆனால் இது குறை என்று இன்றே உணர்தல் அறிஞர் கடமை ஆகும்.''*

'இந்தக் குறையைக் களைதல் கடமை' என்று டாக்டர் மு. வ. அவர்கள் கூறிய கருத்தினை ஏற்று, செயல் திறன் கொண்டு மாற்றத்தைப் ஒத்திப் போடாமல் மாற்றத்தைக் கண்டு ஒதுங்கி நிற்காமல் புதுமை சேர்க்க வேண்டும்.

புதுமை புதுமை என்று இதுகாறும் பல நிலைகளில் பல செய்திகளைப் பற்றிக் கூறிப் பெருமைப்பட்டு வந்துள் ளோம் நாம். உள்ளபடியே இப்போதுதான் புதுமையைக் காணுகின்றோம்.

---

*எழுத்துச் சீர்திருத்தம், கட்டுரைத் தொகுப்பு, பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடு, திருச்சி—17, 1948

மனித சமுதாயம் கண்டு வந்துள்ள மாற்றங்கள் ஏராளம். பழைமையோடு பின்னிப் பிணைந்து மாற்றங்கள் படிப்படியாகத்தான் ஏற்பட்டு வந்துள்ளன. இன்றோ விரைந்து கொள்ளத்தக்க நிலையில் எழுத்துச் சீர்மை உள்ளது.

உலக அரங்கில் புகழ் கொண்டு நிற்கத்தக்க வாய்ப்பினை இன்று எழுத்துச் சீர்மையின் வழியாக பெற உள்ளோம். இதனால், மொழி நலம் கெடும் என்று எவரும் அஞ்சவேண்டுவதில்லை. யார் சொல்வது? ஏன் இந்தத் திருத்தம்? என்றெல்லாம் எண்ணி, பழைமையே போதும் என்று எண்ணாமல், விளையவிருக்கும் நன்மைகளை எல்லோர்க்கும் சொல்லுவது நமது கடமை. மொழி வளர்ச்சிக்கு உரிய நல்ல தொண்டாக இதனைக் கருதுவோம்.

சிலம்பொலி
## சு. செல்லப்பன்

எழுத்துச் சீர்திருத்தம் எல்லா மொழிகளிலும் நிகழ்ந்து வந்துள்ளது. நிகழ்ந்து வருகிறது. நிகழ்ந்து வரும்.

26 எளிய எழுத்துக்களை மட்டுமே கொண்ட ஆங்கிலத்தில்கூட இன்றும் எழுத்துச் சீர்திருத்தம் நிகழ்ந்து கொண்டு வருவதை நாம் காண்கிறோம். ஆங்கிலத்தில் கையெழுத்து, அச்செழுத்து என்று இரண்டு வடிவங்களும் ஒவ்வொன்றிலும் பெரிய் எழுத்து, சிறிய எழுத்து என்று இரண்டு வடிவங்களும் இருந்து வந்தன. அவற்றைக் குறைக்கும் நோக்கோடு இன்று அச்செழுத்தில் உள்ள 21 வடிவத்தை நீக்கிவிட்டு 'a' என்னும் கையெழுத்து வடிவ எழுத்தை இரு வடிவங்களிலும் கையாளும் சீர்திருத்தப் போக்கு நிகழ்ந்து வருகிறது. இது போன்று வேறு சில எழுத்துக்களையும் திருத்தி அமைத்து அவர்கள் நால்வேறு வடிவ நிலைகளில் உள்ள $26 \times 4 = 104$ எழுத்துக்களை இருவேறு வடிவ நிலைகளில் $26 \times 2 = 52$ எழுத்துக்களுள் அடக்கிச் சீர்திருத்தம் செய்து வருகின்றனர்.

இதுபோல நம்முடைய தமிழ் மொழியிலும் எழுத்துச் சீர்திருத்தங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன.

எழுத்துச் சீர்திருத்தங்கள் மூன்று வகையான அடிப் படை நோக்கங்களில் நிகழ்ந்து வந்துள்ளன.

'ஊ' என்னும் எழுத்து கல்வெட்டுகளில் மேல் நிலை யிலிருந்து தொடங்கி இணை நிலைகளில் சேர்த்து இங்குக் காட்டப்பட்டுள்ள வடிவம்போல் எழுதப்படாமல் தொடக் கச் சுழியும் வளைவும் இணையெழுத்து 'ல' வரிக்கு இணை யாகவே தொடங்கிச் சேர்த்து எழுதப்பட்டுள்ளதைக் காண் கிறோம். வரிக்குச் சற்று மேலே தொடங்கும்போது மேலே உள்ள வரியில் கீழ்விலங்கு பெற்று வரும் எழுத்துக்களோடு மோதிக் கொள்ளும் இடர்ப்பாட்டைத் தடுக்க இதுபோன்று எழுதப்பட்டு வந்தது. இத்தகைய சீர்திருத்தத்தைத் **தொழில் கண்ணோட்டச்(Technical) சீர்திருத்தம்** எனலாம். நிலை களிலும் கல்வெட்டுகளிலும் மெய்யெழுத்துகள் புள்ளி யின்றி எழுதப்பட்டிருப்பதும், ஆய்த எழுத்திற்கு மூன்று புள்ளிகள் இடவேண்டியிருப்பதால் அப்புள்ளிகளை 'நடுவு வாங்கியிட்டு, அதாவது, மூன்று சிறு கோளங்கள் இட்டு எழுதுவதும் இத்தகைய தொழில் நோக்கு அடிப்படையி லேயே நிகழ்ந்ததாகும்.

மூன்றாவதாக அமைந்த எழுத்துச் சீர்திருத்தம் அறிவியல் நோக்குடையதாகும். எகரமும், ஏகாரமும் புள்ளி வைத்து எழுதப்பட்டதைத் தொல்காப்பியம் தெரிவிக் கிறது. மெய்யெழுத்துகள் எல்லாம் புள்ளியுடன் எழுதப் பட்டன. உயிர் எழுத்துகளில் பிற பத்து எழுத்துக்களுக் குப் புள்ளி இல்லை. அப்படியிருக்க உயிரெழுத்துகளில் அந்த எழுத்துகளுக்கு மட்டும் புள்ளி ஏன்? என்ற வினாவை எழுப்பி எகரத்திலுள்ள புள்ளியை நீக்கி அதனை எகரம் ஒலிக்காக்கியும், எகரத்தில் இடப்பக்கம் தாழும் சரிவுக் கோடு சேர்த்து அதனை ஏகார ஒலிக்கு ஆக்கியும் கால்டு வெல் அவர்கள் சீர்திருத்தம் செய்தார்கள். இதனை அறிவியல் நோக்குச் ***(Scientific)*** சீர்திருத்தம் எனலாம்.

தமிழி (Brahmi) எழுத்துக்களிலும், வட்டெழுத்துக்களி லும் கே கோ முதலான எழுத்துக்களெல்லாம் ஒரே குறியீடு

பெற்றிருந்த நிலையை மாற்றிக் 'கே' என்று இரு குறியீடு களாலும் 'கோ' என்று மூன்று குறியீடுகளாலும் எழுதிய சீர்திருத்தப்பாங்கு தமிழர்கள் தாங்களே செய்து கொண்ட அறிவியல் நோக்குச் சீர்திருத்தம் ஆகும்.

இந்த வகையில் இதுவரையில் தமிழ் எழுத்துக் குறி யீடுகளில் நிகழ்ந்து வந்துள்ள சீர்திருத்தங்களே பல வாகும்.

## மேலும் எழுத்துச் சீர்திருத்தம் வேண்டுமா?

வேண்டுமா வேண்டாவா என்று முடிவு செய்யும் வலிமை தனி மனிதன் கையில் இல்லை. சூழலுக்கேற்ப அது நிகழும். மக்களின் மனப்பாங்கிற்கேற்ப அது வெற்றி பெறும் அல்லது தோல்வி அடையும்.

இந்த நிலையில் தனி மனிதன் செய்ய வேண்டியது என்ன? எழுத்துச் சீர்திருத்தம் செய்யும்போது பெரியார் 'ஐல — லை' எழுத்துச் சீர்திருத்தம் செய்ததுபோல வெற்றி பெறும் அளவுக்குச் செய்ய வேண்டும். 'அய்—கய், லய்' என்ற முறையில் அமையாமல் அய்—கை—லை என்ற முறையில் அமைந்து 'அய்' சீர்திருத்தத்தில் தோல்வி அடையக் கூடாது.

## எழுத்துச் சீர்திருத்தம் செய்வோர் கருத்திற் கொள்ளவேண்டியவை.

1. தமிழுக்கென்று தொன்று தொட்ட மரபு உண்டு. அந்த மரபை முற்றிலும் மாற்ற எண்ணக் கூடாது.

2. எல்லாச் சீர்திருத்தங்களையும் ஒரே சமையத் தில் திடீரெனச் செய்யக் கூடாது, படிப்படி யாகச் செய்ய வேண்டும்.

3. எண்ணிக்கைச் சுமையைக் குறைப்பதாக இருக்க வேண்டும்.

4. எழுதும் முயற்சியில் எளிமையாய் அமைவதாக இருக்க வேண்டும்.
5. இடச் சுருக்கம் தருவதாய் இருக்க வேண்டும்.
6. அழகுடையதாய் இருக்க வேண்டும்.

இவை போன்ற அடிப்படைக் கருத்துக்களை மனதிற் கொண்டு எழுத்துச் சீர்திருத்தம் செய்வோர் முயன்றால் மக்களின் அரவணைப்பைப் பெற்று வெற்றி பெறலாம்.

தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் ரு—றா—, சீர் திருத்தங்களைச் செய்து ஏழு எழுத்துக்களில் சுமையைக் குறைத்துள்ளார். இதனால், ஆகார வரிசை உயிர்மெய் வடிவிலும் பத்து எழுத்துக்கள் திருத்தி அவ்வரிசையிலுள்ள பிற எழுத்துக்களைப் போன்றே ஒரே மாதிரியாக அமைந்து விட்டன.

இந்தச் சீர்திருத்தத்தை இன்றைய தமிழக அரசு ஆணை வழியே செயல் முறைக்குக் கொண்டு வந்திருப்பது பாராட்டுதலுக்கு உரியது.

இந்தச் சீர்திருத்தம் உருவ எண்ணிக்கைச் சுமையைக் குறைக்கும் நன்னோக்கோடு, புதிய உருவங்கள் எதனையும் அமைக்காமல், மரபு வழியில் நின்ற குறியீடுகளைக் கொண்டே அமைந்ததால் மக்களாலும், அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. போற்றப்படுகிறது.

ஐ—அய்— ஔ—அவ் எழுத்துச் சீர்திருத்தம்அறிவியல் நோக்கிலும் (Sceintific Approach) மொழியியல் அடிப்படையிலும் (Lingustic Approach) சரியானதே; ஒரு வகையில் மரபு நிலையைக் கூடப் பின்பற்றியதேயாகும். அப்படியிருப்பினும் இன்று அறிஞர்களால் இச்சீர்திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. காரணம் இதில் செயல் நோக்குஓர்மை (Technical Approach) காணப்படவில்லை.

**இனி நாம் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள்**

ணா, னா, ளா, றா, ணை, லை, ளை, ஆகிய ஏழு எழுத்துருச் சீர்திருத்தங்களும் நம்மால் ஏற்றுக் கொள்ளப்

பட்டவை. இதற்கு மேலும் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் என்னென்ன என்று பார்ப்பது நாம் இனி நமது கடமை.

இந்தக் கடமையில் முதல்படியாக அமைய வேண்டியது மேலும் சீர்திருத்த வேண்டிய எழுத்து உருவங்களைப் பற்றியது.

இப்போதுள்ள உயிர் மெய் வடிவங்களில், அ, ஆ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய எட்டு உயிரேறியுள்ள உயிர் மெய் வடிவங்கள் ஓர்மை நிலையைப் பெற்றுவிட்டன. இனிப் பெற வேண்டியவை எஞ்சிய நான்கே. இந்த நான்கிற்கும் நான்கு தனித்தனிக் குறியீடுகள் அமைந்துவிட்டால் எல்லா உயிர்மெய்களும் உயிர்நோக்கு வரிசையில் ஓர்மை நிலையைப் பெற்றுவிடும்.

இந்த நான்கில் இகர, ஈகார வரிசை உயிர்மெய்கள் டி, டீ, என்ற இரு எழுத்துக்கள் நீங்கலாக ஏனையவை முன்பே ஓர்மை நிலையைப் பெற்றுள்ளன. இந்த இரண்டு எழுத்துகளுக்கும் பிற எழுத்துகளுக்கு இடுவதுபோல வ குறியீடுகளை அமைப்பதால் இவ்விரு வரிசைகளில் ஓர்மை நிலையை எளிதாக உண்டாக்கி விடலாம்.

உகர ஊகார உயிர்மெய் வரிசை எழுத்துருவங்களில் தான் இன்றைய நிலையில் பல சிக்கல்கள் உள்ளன. இந்தச் சிக்கல்களை நீக்கப் புதிய இரண்டு குறியீடுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே அமைத்து வலப்பக்கம் இணைத்து விடுவதன் வாயிலாக எளிதாக ஓர்மையைக் காண முயலலாம். சிலர் ு, ூ என்று முன்பே ஓரளவு பழக்கத்தில் உள்ள கிரந்த எழுத்துக் குறியீட்டைப் பயன் படுத்தலாம் என்பர். இந்தக் குறியீடுகள் ஓர் எழுத்தின் வரிசையில் மேலே உள்ள பாதி இடத்தில் மட்டும் அமைந்து கீழ்ப்பாதி இடத்தை வெற்றிடமாக நிறுத்தி வரியின் அழகைக் குலைக்கின்றன. மேலும் எழுத்து அமையும் இடத்தில் குத்துவாக்கிலுள்ள இடத்தின் அழகினை இவ்வாறு கெடுப்பதோடு பக்கவாட்டில் நீண்டு இடத்தை வீணாக்கவும் செய்கின்றன. இவற்றோடன்றி, 'ூ' குறியீடு வரிசைக்குமேலும் செல்லும் உருவினையும் பெற்றுள்ளது. எனவே இக்குறைபாடுகளை நீக்க நாம் புதிய வடிவங்களைச் சேர்த்துக் கொள்வது நல்லது.

## கெ, கே, கொ, கோ

இந்த எழுத்துகளில் உயிரொலி மாற்றத்தைக் குறிக்கும் குறியீடு கா, கி, கு என்ற முறையில் நாம் வலப் புறம் அமைப்பதுபோல் அமையாது இடப்புறமும், இருபுறமுமாக அமைந்துள்ளன. "மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே" என்ற மொழியியல் மரபை கா முதலான குறியீடுகள் தெரிவித்து நின்று மொழிக்குப் பெருமை தருவது போலவே தனித்தியங்க இயலாத மெய்யைத் தழுவிக் கொண்டு இரண்டறக் கலந்து நிற்பதே உயிர்மெய் என்னும் உண்மையை முன்னும், பின்னும் (மேலும், கீழும், உள்ளும் புறம்பும்) உள்ள குறியீடுகள் உணர்த்தி நிற்பதால் இப்போதைக்குப் பெரிய அளவில் சீர்திருத்தம் செய்து தமிழின் எழுத்துருவங்களை இருவேறு துருவங்களாகச் செய்வது நலமன்று என விடுக்கலாம்.

## மெய்யெழுத்துப் புள்ளியை நீக்குதல்

மெய்யெழுத்துக்கு இடப்படும் புள்ளிகள் களையப்பட வேண்டியவை. இதன் இடர்ப்பாட்டை உணர்ந்து கல்வெட்டுக்களிலும், ஓலைச்சுவடிகளிலும் நம் முன்னோர் கள் கடைப்பிடிக்காது விட்டுவிட்டனர். ஆனால், அவர்கள் அதற்கு மாற்று ஏற்பாடாக எதையும் செய்ய வில்லை. இதனால் படிப்போருக்குச் சில இடர்ப்பாடுகள் நேர்ந்தன. இதனைப் போக்க அச்செழுத்துகள் வந்தவுடன் மீண்டும் புள்ளியிட்ட தொன்மை வடிவம் தோன்றியது. இன்றைய நிலையில் இது தட்டச்சுப் பொறியில பின்புறம் பல புள்ளிகளை உண்டுபண்ணி எழுத்துப் படிகளைச் சீர்குலைக்கிறது. எனவே இதனை நீக்கவும் நாம் கடமைப் பட்டுள்ளோம். எப்படி நீக்குவது?

புள்ளியில்லாது இன்று க, ய என்று காணப்படும் எழுத்துக்களை க், ங், என்று படித்துக் கொள்வது. பிற உயிர்மெய் எழுத்துக்களுக்குத் தனித்தனிக் குறியீடுகள் அமைத்தெழுதுவதுபோல் அகர வரிசை உயிர்மெய்க்கும் தனித்ததொரு குறியீடு அமைத்து வழங்குவது என்ற முறையில் இந்தச் சீர்திருத்தத்தை நாம் மேற்கொள்ளலாம்.

இந்தக் குறியீடு ஒரு குத்துக் கோடாக ' | ' என்று அமைவது போதுமானது. ஆகார வரிசைக்கு 'ா' அமைந் திருப்பதனோடு தொடர்புடையதாய் இதுஅமைந்திருக்கும்.

## ஐ, ஔ — நீககம்

இந்த எழுத்துகள் மொழியில் முதலிலோ, இடை யிலோ, இறுதியிலோ யாண்டு வரினும் தங்கட்கு இயல் பாக உள்ள இரண்டு மாத்திரையில் குறுகி ஒன்றரை மாத் திரையாக ஒலிக்கும் என்பதை இலக்கண நூல்களும், மொழியியல் நூல்களும் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன.

இந்த எழுத்துகளுக்கு இரண்டு மாத்திரைகளும் ஒன்றரை மாத்திரைகளும் எவ்வாறு அமைந்தன? 'ஐ' என்பதை 'அஇ' என்று எழுதும்போதும், 'ஔ' என்பதை 'அஉ' என்று எழுதும்போதும் இரண்டு மாத்திரை அமைகின்றன. இவற்றை முறையே 'அய் , 'அவ்' என் எழுதும்போது ஒன்றரை மாத்திரைகள் அமைகின்றன. 'தங்கையின் கை கைப்பது உப்புக் சாக்கை எடுத்தபா லேயே' இந்தத் தொடர் மொழியில் 'கை' என்னும் எழுத்து நான்கு இடங்களில் வந்துள்ளதைக் காணலாம். இவற்றுள் இரண்டாவதாகத் தனி மொழியில் வந்துள்ள 'கை' நீங்க லாகப் பிறவெல்லாம் ஒன்றரை மாத்திரைகள் உடையனவே. இரண்டாவதாகத் தனி மொழியிலுள்ள கையையும், மெய், செய், நெய், கொய், மொய், பொய் என்பன போல 'கய்' என்று ஒலித்தால் பொருள் விளங்காமல் போய்விடுமா என்ன? எனவே எழுத்துருவிலும் அதனைக் கடைப் பிடிக்கலாம். இந்த விளக்கத்தை 'ஔவை' என்பதை 'அவ்வை' என்று எழுதுவது போன்றனவற்றிலும் ஏற்க லாம்.

## பிறமொழி எழுத்தொலிகள்

புத்தொலிகள் அமைப்பதில் தமிழொலி சீர்திருத்தம் மேலே கூறப்பட்டது. இனி நாம் நோக்க வேண்டியது பிற மொழி எழுத்தொலிகள். பிற ஒலி எழுத்துகளைத் தமிழில் மேற்கொள்ளும் போது அதாவது பிற மொழிச்

சொற்களைத் தமிழில் எழுதும்போது தமிழின் இயல்புக்கேற்ப மாற்றி வழங்குதல் வேண்டும் என்று தமிழ் இலக்கண நூல்கள் கூறுகின்றன.

ஒரு மொழி காப்பாற்றப்பட வேண்டுமானால், அதன் பாங்கு நிலைத்து வாழ வேண்டுமானால் இத்தகைய ஒலிப் பெயர்ச்சி போற்றப்பட வேண்டியதேயாகும். 'தமிழ்' என்ற சொல்லை 'Thamilz' என்று ஒலிக்காமல் Tamil என்பது அம்மொழியின் ஒலிக்கேற்ப ஒலி மாற்றம் செய்து வழங்குவதைக் காண்கிறோம். பிற மொழிகளிலும் இந்த நிலை உண்டு. நாமும் நம் தமிழ் மொழியில் இந்த மொழி நெறியைக் கடைப்பிடித்துப் பேச வேண்டும். எனினும் அறிவியல் கருத்துகளும், கலைச் சொற்களும் விரைவாகப் பல்கி வரும் இந்த நாளில் எல்லாச் சொற்களையும் ஒலி மாற்றம் செய்து வழங்கத் தலைப்பட்டால் தமிழ் மக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு சொற்களை அறிய வேண்டிய நிலை நேரும்.

அறிவியல் மாணவர்களுக்குத் தனித்தனிக் கலைச் சொற்களே பல்கியுள்ள நிலையில் பெருஞ்சுமையாய் அமைந்திருக்கும் இந்தக் காலத்தில் ஒவ்வொரு கலைச் சொல்லுக்கும் இரண்டு சொற்களை மனத்தில் நிறுத்துவது சுமையே. இந்த வீணான சுமையைக் குறைத்துக் கொள்ள இன்றியமையாத சில சொற்களை உருமாற்றம் செய்யாமல் வழங்கி ஒலி மாற்றம் செய்யாமல் வழங்குவது தான் நல்லது. இவ்வாறு வழங்கும் போது வழக்கத்தில் வலிந்து புகுத்திக் கொண்டிருக்கும் ஸ, ஷ, க்ஷ, ஜ, ஹ ஆகிய எழுத்துகளின் நிலை என்ன என்பதே நாம் எழுத்துச் சீர்திருத்தத்தில் நோக்கவேண்டிய செய்தியாகும்.

| | | |
|---|---|---|
| பாஸ்பரம் | —பாஃச்பரம் | /ஸ்—/ஃச்/ |
| கிரஷ் | —கிரச்ஃ | /ஷ்/—/ச்ஃ/ |
| பக்ஷி | —பட்சி | /க்ஷ/—/ட்ச/ |

(வழக்கிழந்து விட்டது)

ஜனவரி—ஃச்ஃனவரி |ஜ|—|ஃச|

ஹைடிரஜன்—கஃயடிரஃசஃஸ் |ஹ|—|கஃ|

என்ற முறையில் ஒலி பெயர்ச்சி செய்து எழுதலாம். மற்றும்

Bridge — பிரிட்ஃச்ஃ B|—|ஃப்

முதலான ஒலிப்பெழுத்து முறைகளையும் வரையறைப் படுத்தலாம்.

மேலே கூறிய எழுத்துச் சீர்திருத்தங்களில் டி — டீ, உகர—ஊகார உயிர்மெய் வடிவங்கள் தொடர்பான சீர் திருத்தம் முதலிலும், மெய்யெழுத்துப் புள்ளி நீக்கம் இரண்டாவதாகவும், ஐ, ஔ நீக்கம் மூன்றாவதாகவும் போதியகால இடைவெளிகளுக்குப் பின்னர் படிப்படியாக மேற்கொள்ள வேண்டும். பிற மொழிகளுக்கு ஒத்த குறியீடுகளைஅமைத்து வரையறைப்படுத்தும் சீர்திருத்தத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

பேராசிரியர்

## மா. ரா. இளங்கோவன்

---

### அறியாத குறைதான்

எழுத்துச் சீர்மை, எப்படி? என்ற கேள்வியைக் கேட்டவுடன், 'மெல்ல தமிழ் இனிச் சாகும்' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுபவர்களும் இருக்கின்றார்கள். எழுத்துகள் காலந்தோறும் வளர்ச்சி பெற்றே வந்துள்ளன என்பதை அறியாத குறையா அதற்குக் காரணம்? என்று எண்ணத் தோன்றுகிறது.

ஒலி நிலையில் மாற்றம் இல்லை — வரிவடிவங்களில் **தான்** மாற்றம் என்றறிந்தும் தயக்கம்! இன்றுள்ள தமிழ் எழுத்துகளைக் கொண்டா திருவள்ளுவரும் கம்பரும் எழுதினார்கள் என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டால், (காண்க. புலவர் தாமரைக்கண்ணன் கட்டுரை, தினமணி கதிர், மார்ச் 2, 1979) நம் வழிமுறையினர்க்கு இன்றுள்ள தமிழ் எழுத்துகள் 'பழைய வாடை'யைத்தான் தரட்டுமே!

### புதுமையும் இளமையும்

புதுமையை விரும்பாத மனங்களா? நம்மிடையே உடையில்தான் எவ்வளவு மாற்றம்? முடியில்தா எவ்வளவு மாற்றம்? மகளிர் உடையலங்காரங்களை ஒப்பனைகளை—தோற்ற நிலையை எல்லோரும் தொடக்

கத்திலேயே விரும்பி ஏற்றதுண்டா? முணுமுணுப்பும் முகச்சுளிப்பும் இல்லையென்று சொல்லமுடியுமா? 'நமக்கு அடுக்குமா இதெல்லாம்' என்னும் முதுமைக் குரல்களை மறுக்கமுடிமா? 'அது முதுமை உளறல்' என்று சொல்லி? இளமை புதுமையோடு ஒட்டுறவு கொள்ளவில்லையா, முதுமையா இளமையா ஆணா பெண்ணா என்ற வேறு பாடே காணமுடியாத காட்சிகளைக் காணும்போது, என்ன செய்துவிட முடிகிறது? உலகத்தோடு ஒட்ட ஒழுகவேண்டும் என்ற வள்ளுவரின் குறளைச்சொல்லி, நிம்மதி பெற்று அவர் காலமும் இப்படித்தான் இருந்திருக்குமோ என்ற 'தொல்லாய்வு'க்கும் சென்றுவிடுறோம்.

## தெய்வத் தமிழ்!

இவையெல்லாம் உண்மையாகும்போது, எழுத்துச் சீர்மை என்றால் மட்டும் ஏன் தயக்கம் கொள்ளவேண்டும்? மொழியே அழியும் என்று ஏன் அஞ்சவேண்டும்? தெய்வத் தமிழாயிற்றே நம் மொழி, நம்மாலா அது அழிந்துவிடும்? வீரமாமுனிவர் செய்த மாற்றங்கள் இவை என்று சுட்டிச் சொல்லும் நாம், அவர் செய்த மாற்றங்களை ஏற்றுள்ள நாம் காலத்திற்கேற்ப புதுமைகள் செய்யலாம்—மொழி வளம்பெறும்—புதுமை பெறும்—உலகோடு நிமிர்ந்து உறவாடலாம் என்றெல்லாம் நிலையிருக்கும் போது ஏன் தயக்கம் காட்டித் தடையாக எண்ணவேண்டும்?

துருக்கியின் தந்தை கமால் அத்தாதுர்க் செய்த எழுத்துச் சீர்திருத்தத்தையும், பேரறிஞர் பெர்னார்ட்ஷா எழுத்துச் சீர்மையைப் போற்றி வாழ்ந்த வாழ்வையும் பெரிதாகப் பாராட்டும் நாம், நம்மொழிக்கு நல்லகாலம் பிறக்கின்றது என்றால் மட்டும் கதவடைத்துக் கொண்டு எதையோ இழக்க நேர்ந்ததுபோல இருக்கவேண்டுமா?

தந்தை பெரியார் அவர்கள் 'காட்டுமிராண்டித் தமிழ், என்று சினந்து சொன்னது, பழைமைப் போர்வைக்குள் இறுக்கமாகிவிட்ட நம் நிலைகண்டு, 'கிளர்ந்தெழ மாட்டாதா இந்தத் தமிழினம்?' என்று கொண்ட ஆர்வ நிலையின் அடிப்படையில்தான் — கடிதோச்சி மெல்ல எறியும் பாங்கில்தான்.

## அன்றே மலைச்சாலை

இன்று, தமிழில் புதுமைகள் பெருகவேண்டும் என்று எண்ணுவோருள் சிலர் MOUNT ROADஐ **மலைச்சாலை** யாக்கித் தமிழ் வடிவு கொடுத்து, புரட்சியே செய்ததாக எண்ணி மகிழ்ந்ததும் உண்டு.

ஆனால் 1904-ஆம் ஆண்டில் வெளிவந்த **விவசாய தீபிகை** என்னும் திங்கள் இதழில் ஆசிரியர்—வெளியிடுவோர் பற்றிய பகுதியில்,

> "சென்னை **மலைச்சாலை** வைசயந்தி அச்சகத்தில்
> அச்சிட்டு வெளியிடப்பட்டது"[1]

என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணும்போதும்,

அவ்வாறே 1909-ஆம் ஆண்டில் வெளிவந்த **கிருஷிகன்** என்னும் திங்கள் இதழில்,

> "சென்னை **மலைச்சாலை** கார்டியன் அச்சகத்தில்
> அச்சிட்டு வெளியிடப்பட்டது"[2]

என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணும்போதும்,

மொழியாக்கத்துறையில் சொல்லாமல் செயல்பட்டவர்களைக் காணமுடிகிறது.

## விடுதலையும், சுதேசமித்திரனும்

இப்படி அவரவர்களுக்குத் தோன்றும் புதுமைகளைச் சொல்லியும் சொல்லாமலும், சொல்லிய பின்பும் கேளாதவர்களே இருந்தமையால் தாமே சொன்னதைச் செய்தும் வந்தவர்களாலேயே நம் மொழி செம்மொழியாக இருந்து வந்துள்ளது என்பதை நாம் உணரவேண்டும். பெரியார் அவர்களின் கருத்துக்கு இசைவாக எழுத்துத் துறையில் தம்

---

1. *புத்தகம் 1, இதழ் 9—10*
2. *புத்தகம் 1, பிரதி 2.*

பங்கைச் செய்த பெருமைக்குரியவர் திரு.சி.ஆர். சீனிவாசன் அவர்கள். விடாப்பிடியாக அவர் சுதேசமித்திரனில் இந்தப் புதுமையை — புதுமையின் பயனை உணர்ந்தமையால், விரும்பி மேற்கொண்டார்.

உயர்ந்த தமிழ், முன்னேற்றம், புதுமை, புரட்சி என்றெல்லாம் முழங்கியவர்கள் எத்தனை எத்தனை பேர்! முழக்கம் என்ன செய்தது? **விடுதலையும் சுதேசமித்திரனும்** தானே தமிழின் பொலிவுக்கும் புதுமைக்கும், காரணமாக வீறுகொண்டன.

## எங்கே தமிழ் ?

சிறிது எண்ணுவோம் — ஆமாம் எண்ணத்தான் வேண்டும். நம் மொழியைத் தெய்வத்தமிழ் என்று சொல்லி மூலத்தானத்துக்குள்ளேயே இருத்த முயல்கிறோமே! அந்தத் 'தெய்வத் தமிழ்', 'தந்தி'த் தமிழாகியதா? 'டெலக்ஸ்' தமிழாகியதா? அறிவியல் தமிழாகியதா? **'லேனோ'**வுக்கும் **'மோனோ'**வுக்கும் உரியதானதா? எங்கே இருக்கிறது? உலக அரங்கில் உலவவில்லையே! அந்நிலை பெற நாம் செய்ததென்ன ?

என்ன காரணம்? சிந்தனை வறுமைதான் காரணம். புதுமையைக் கண்டு அஞ்சும் மனம்தான் காரணம். நமக்கென்ன என்று ஒதுங்குவதுதான் காரணம். மாற்றம் அழிவுக்குக் காரணமாகிவிடுமோ என்ற அறியாமைதான் காரணம்.

## தேமதுரத் தமிழோசை

இவையெல்லாவற்றையும் நீக்கிவிட்டு, வருங்கால நம் வழியினர் சுமையின்றி மொழி கற்க, எண்ணங்கட்கெல்லாம் புதுப்பொலிவு கூட்ட உலகெலாம் தமிழ் ஒலி பரவ நமக்குத் தோன்றும் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வோம். ஒல்லும் வகையெலாம் துணை நிற்போம். இல்லையென்றால் மொழி நலம், மொழி பாதுகாப்பு என்றெல்லாம் கூறி மொழித்துறை அறிஞர்களின் ·கருத்து வளத்துக்கும் செயலாற்றலுக்கும்

தடையாக இல்லாமலிருப்போம்! அதுதான் தமிழ் உலகத் தொடர்புடையதாவதற்கு நாம் செய்யக்கூடிய 'அணில் தொண்டு'.

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதிலோர் மகிமையில்லை' என்பதை உணர்ந்து செயல்படவேண்டும்.

தமிழ் நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் வேற்று மொழி களில் பெயர்த்துவிட்டால் போதுமா? அதனால் மொழியா பரவுகிறது? கருத்துதானே பரவுகிறது? மொழி பரவ என்ன செய்தோம்? மொழி வழித் தொடர்பு கொள்ளத்தான் இன்று எழுத்துச் சீர்திருத்தம் வேண்டப்படுகிறது. சீர்மையும் பொதுமையும் எழுத்தளவில் ·அமைந்துவிட்டால் மொழித் தொடர்பு காணலாம்.

இதை உணர்வோம். சில நூற்றாண்டு வரலாறுடைய ஆங்கிலம் அகிலமாளும்போது, காலமே சுட்டமுடியாத பெருமையுடைய தமிழ் மொழியும் அந்நிலை பெற, இன்று தோன்றியுள்ள புதுமை எண்ணத்துக்கு உரமாவோம். இல்லையென்றால் திருப்புன்கூர் நந்தியாகி, பீடுநிலையைப் பிறர் காணத் துணையாவோம்! தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவக் காரணமான புகழ் கொள்வோம்!

தாய்மொழித் தமிழ்

வாய்மொழித் தமிழாக

வீட்டிலிருக்கிறது

வீதியிலிருக்கிறது

நாட்டிலிருக்கிறது

ஏட்டிலுமிருக்கிறது —

ஆனால்

உலக உறவுக்குத் துணையாகவில்லை.

இன்றைய எழுத்து வடிவே அதற்குக் காரணம்

சீர்மையும் பொதுமையும் சேர்ந்தால் போதும்

உலக உறவு உறுதியாகிவிடும்.

எனவேதான்

கருத்தைச் சொல்லி, 'மனக் கதவைத்

தட்டுகிறார்கள்' அறிஞர்கள்.

பாவேந்தர் குரலும் கேட்கிறது

"உலகமொழி உனதுதாய் மிக உயிர்வாதை அடைகிறாள்
உதவாதினி ஒருதாமதம் உடனேவிழி தமிழா!"

கருத்துக் கோவை எங்கள் படைப்பு

செயலாக்கம் உங்கள் பொறுப்பு !